# எங்கிருந்தோ வந்தான்...

பிரேமா





# எங்கிருந்தோ வந்தான்

## முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே,

உங்களை என்னுடைய பதினொன்றாவது நாவலில் சந்திப்பதில் சந்தோஷம் கொள்கிறேன். உங்களின் தொடர் ஆதரவிற்கு என்னுடைய மன மார்ந்த நன்றிகள்.

ஆடுகளத்தில் விளையாடும் வீரர்களுக்கு இடையே புரிதல் இருந்தால் தான் அந்த அணி கோப்பையை வெல்லும். வாழ்க்கையும் ஒரு ஆடுகளம் தான். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே புரிதலும் பரஸ்பர நம்பிக்கையும் இருந்தால், அவர்களது வாழ்வில் எத்தகைய இடர்பாடு வந்தாலும் அவற்றைத் தகர்த்து எறிந்து அவர்கள் வெற்றி பெறுவார்கள்.

இந்தக் கதையில் உள்ள நிறை குறைகளை premaarumugam@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்குத் தெரியப்படுத்தி நான் மேலும் வளர் வதற்கு உதவி புரியுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு ஊக்கமும் ஆதரவும் அளித்து வரும் 'அருணோதயம்' திரு. அருணன் ஐயா அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன்.

அன்புடன்

**பிரேமா**

# எங்கிருந்தோ வந்தான்



1

"ஈஸ்வரி மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்க!" என்று உள்நோக்கி தன் மனைவிக்குக் குரல் கொடுத்த பரந்தாமன் மாப்பிள்ளை வீட்டினரை வரவேற்க வாசலுக்கு விரைந்தார்.

ஈஸ்வரி தன் மகள் சாருமதியிடம், "நீ இங்க இரு குட்டிம்மா. நான் கூப்பிடும்போது வெளியே வா. நான் போய் வந்தவங்களை வரவேற்கப் போறேன்." என்று கூறிவிட்டு வெளியேறினார்.

சாருமதிக்கு இருபத்தி மூன்று வயதாகிறது. அவள் படித்து முடித்த இந்த இரு ஆண்டுகளில் பரந்தாமன் மகளுக்கு ஏகப்பட்ட வரன் பார்த்தார். ஆனால்

ஒருவரையும் தன் மகளைப் பெண் பார்க்கவென்று வீட்டிற்கு வரவிட்டதில்லை.

பையன் பிடிக்கவில்லை, ஜாதகம் பொருந்தவில்லை, பையனின் குடும்பம் சரியில்லை... இவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கூறி வருகின்ற வரன்களை எல்லாம் அவரே தட்டிக் கழித்தார். முதன் முறையாக இந்த வரனைத் தேர்ந்தெடுத்து அவர்களை வீட்டிற்கும் அழைத்திருக்கிறார்.

அவர் தேர்ந்தெடுத்திருக்கும் இந்த மாப்பிள்ளையின் பெயர் சஞ்சய். வயது இருபத்து எட்டு. வீட்டிற்கு ஒரே பிள்ளை.

சஞ்சய் தன் தாய் கோமளத்துடனும் தந்தை ராதாகிருஷ்ணனுடனும் சாருமதியைப் பெண் பார்க்க வந்திருந்தான்.

ஏற்கனவே இரு வீட்டினரும் போட்டோவைப் பார்த்து விட்டனர். ஜாதகமும் பொருந்திப் போய் இருந்தது. அதனால் இந்த சம்பந்தம் கிட்டத்தட்ட முடிவான நிலை தான்.

அனைவரையும் வரவேற்பறை சோபாவில் அமர வைத்த பரந்தாமன் தன் மனைவியிடம் திரும்பி, ''குட்டிம்மாவைக் கூட்டிட்டு வா!'' என்றார்.

''ஏன்பா நாம பொண்ணைத் தானே பார்க்க வந்தோம்? இவரு எதுக்குக் குட்டி, அவங்க அம்மான்னு யார் யாரையோ வரச் சொல்லுறார்?'' என்று சஞ்சய் தன் தந்தையிடம் கிசுகிசுக்க,



'சும்மா இருடா!' என்பது போன்ற பார்வையை ராதாகிருஷ்ணன் தன் மகன் மீது வீசினார்.

சாருமதி அங்கு வந்து நின்றதும், 'நீ தானா அந்தக் குட்டிம்மா?' என்று சஞ்சய் நினைத்துக் கொண்டான்.

கோமளம் அவளை தன் அருகே அமர வைத்துக் கொண்டார். பொருத்தமான ஜோடி என்று பெரியவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

காபி பலகாரத்திற்குப் பின்பு, ''பொண்ணும் மாப்பிள்ளையும் தனியா பேசிப் பார்க்கட்டும்,'' என்று ராதாகிருஷ்ணன் கூறினார்.

அவரது பேச்சினைத் தட்ட முடியாத பரந்தாமனும் தன் மகளைத் தனியே சென்று பேசுமாறு கூறினார்.

அவர்கள் இருவரும் பெரியவர்களின் கண் பார்வையில் சற்று தள்ளிச் சென்று பேச ஆரம்பித்தார்கள்.

பேச்சை எப்படித் தொடங்குவது என்று விழித்த சஞ்சய், ''நீங்க என்ன படிச்சிருக்கீங்க?'' என்று கேட்டான்.

''VKKL'' என்று சாருமதி கூற, 'அப்படி ஒரு படிப்பா?' என்று முதலில் குழம்பிய சஞ்சய், ''நீங்க B.E. (Arch) படிச்சிருக்கிறதா எங்க அப்பா சொன்னார்.'' என்றான்.

''அதான் உங்களுக்கே தெரிஞ்சிருக்கே!'' என்று சாருமதி கூறவும்,

'ஆகா! இவ நம்மளைக் கலாய்க்கிறாளா? சஞ்சய் உஷார்!' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

''இஞ்சினியருக்கு படிச்சிட்டு என் ரெண்டு வருஷமா வேலைக்குப் போகலை? உங்களுக்கு வேலைக்குப் போக ஆசை இல்லையா?''

''எனக்கு வேலைக்குப் போகணும்னு ஆசை இருக்கு. ஆனா எங்கப்பாக்கு இஷ்டமில்லை. கல்யாணத்துக்கு அப்புறமா மாப்பிள்ளை வீட்டிலே சம்மதிச்சா வேலைக்குப் போனால் போதும்னு சொல்லிட்டார். நீங்க...'' என்றவள் அதற்கு மேல் கேட்கத் தயங்க,

''உனக்கு இஷ்டம்னா நீ வேலைக்குப் போகலாம்.'' என்று சஞ்சய் சட்டென்று ஒருமைக்கு தாவினான்.

'என்னடா டமால்னு நீ என்று சொல்லிட்டே!' என்று கேட்ட மனசாட்சியிடம், 'அதான் பொண்ணு ஒத்துக்கிடுச்சே!' என்றான்.

'எப்போ?' என்று கேட்ட மனசாட்சியிடம், 'வேலைக்கு போகட்டுமான்னு என்கிட்ட பெர்மிஷன் கேட்டா... அதானே அர்த்தம்!' என்றான்.

''உனக்கு வெளியே போய் தான் வேலை பார்க்கணுமா?''

''அப்படி இல்லை.''

''நான் ஏன் கேட்கிறேன்னா நானும் அப்பாவும் சிவில் இஞ்சினியர்ஸ் என்றும் நாங்க ரெண்டு பேரும் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி வச்சிருக்கிறதும் உனக்குத் தெரிஞ்சிருக்கும், உன்னோட படிப்பும் எங்க பீல்டுக்கு ஏத்த படிப்பா இருக்கிறதால உனக்கு



இஷ்டம்னா எங்க கூடவே சேர்ந்து வேலை செய்யலாம்.''

''எனக்கு வீட்டில் சும்மா இல்லாமல் எதையாச்சும் உபயோகமா செஞ்சால் போதும்.''

சிறிது நேரம் பேசியவர்கள் தங்களின் பெற்றோர்களிடம் வந்து தங்களுடைய சம்மதத்தைத் தெரிவித்தனர்.

சாருமதியின் தந்தை பரந்தாமனுக்கு சென்னையில் சொந்தமாகத் திருமண மண்டபம் இருந்தது. சஞ்சயின் ஜாதகத்தையும் அவரது குடும்பத்தையும் பார்த்து திருப்தி அடைந்தவர் தன் மகள் திருமணத்திற்கென்று ஏற்கனவே இரு வேறு முஹூர்த்த நாட்களை தேர்ந்தெடுத்து அந்த நாட்களில் வேறு யாருக்கும் மண்டபத்தை வாடகைக்குக் கொடுக்க வேண்டாம் என்று கூறி இருந்தார்.

ஒருவேளை மாப்பிள்ளை வீட்டினருக்கு இந்த சம்பந்தம் பிடிக்கவில்லை என்றால் கடைசி நிமிடத்தில் ஏதாவது நிகழ்ச்சி நடத்தக் கேட்பவர்களுக்கு மண்டபத்தை வாடகைக்கு விட்டுக் கொள்ளலாம். தனக்குப் பெரிதாக நஷ்டம் வரப் போவதில்லை என்று நினைத்தார்.

அதனால் அடுத்த இரண்டாவது மாதத்திலேயே ஒரு நல்ல நாளை திருமண நாளாய் குறித்தார்கள்.

அடுத்த வார இறுதியில் சில முக்கிய உறவினர்களின் மத்தியில் வீட்டில் வைத்து நிச்சய விழாவை நடத்தினார்கள்.

பத்திரிக்கை அடிப்பது, புடவை எடுப்பது, நகை வாங்குவது என்று நாட்கள் இறக்கை கட்டி பறந்தன.

பெண் பார்த்துவிட்டுச் சென்றதில் இருந்து சாரு மதியும் சஞ்சயும் தினமும் பேசிக் கொண்டனர்.

அப்படிப் பேசுகையில்...

''உன்கிட்ட ஒரு விஷயம் கேட்கணும்னு நினைச் சேன் சாரு. ஆனா போனை வச்ச பிறகு தான் எனக்கு ஞாபகமே வருது.''

''ஞாபகம் வந்த உடனே திரும்ப போன் போட்டுப் பேச வேண்டியது தானே!''

''போன் போட்டதும் உன் குரலைக் கேட்ட உடனே சொல்ல வந்த விஷயம் மறந்து போயிடுது.''

''நீங்க இப்ப என்ன சொல்ல வரீங்க? என் குரல் இனிமையா இருக்குன்னா இல்ல கர்ண கொடூரமா இருக்குன்னா?''

''உண்மையெல்லாம் ஓபனா சொல்ல முடியாதுடா சாரு.''

''அப்படிங்களா சார்? நேரிலே பார்க்கும்போது உங் களைக் கவனிச்சுக்கிறேன்.'' என்று அவள் செல்லமாய் மிரட்டினாள்.

''பார்த்தியா... இப்பவும் பேச்சு டிராக் மாறிப் போயி டுச்சு. இப்படித் தான் நான் கேட்க வந்ததைக் கேட்க முடியுறதில்லை'' என்றவன்,

''என்னோட டவுட். உன்னை எதுக்கு உங்க வீட்டிலே குட்டிம்மான்னு கூப்பிடுறாங்க?'' என்று கேட்டான்.



''இதெல்லாம் ஒரு டவுட்டா?''

''கேட்ட கேள்விக்கு பதிலைச் சொல்லு.''

''எங்க அப்பா அம்மாவுக்கு நான் சின்னப் பொண்ணு. அதனால செல்லமா குட்டிம்மான்னு கூப்பிடுறாங்க.''

''உன்னைப் பார்த்தா சின்ன பொண்ணு மாதிரி தெரியலையே.''

''அப்புறம் நான் என்ன குண்டு பூசணிக்காயா?''

''கற்பூரமா இருக்கணும் சாரு. நான் அப்பவே என்ன சொன்னேன்? உண்மையெல்லாம் ஓபனா சொல்லக் கூடாதுன்னு சொன்னேன் இல்ல.''

''உங்களை...'' என்று அவள் பற்களை நறநறக்க,

''கூல் சாரு!'' என்று அலட்டாமல் கூறியவன், ''குட் டிம்மா! குட்டிம்மா!'' என்று இரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

''இந்தப் பேரு நல்லாவே இல்லை சாரு.'' என்றான்.

''உங்களை யாரும் அப்படிக் கூப்பிடச் சொல்ல லையே!'' என்று அவள் நக்கல் பண்ண,

''நான் வேணா உன்னை பெரியம்மான்னு கூப் பிடட்டுமா?'' என்று அவன் சிரிக்காமல் கேட்க,

''ஏன் பாட்டிம்மான்னு கூப்பிட வேண்டியது தானே?'' என்று அவள் இடக்காகக் கேட்டாள்.

''தாங்கஸ் சாரு. தாங்க் யூ சோ மச். எனக்காக ஒரு சூப்பர் பேரு செலக்ட் பண்ணிக் குடுத்திருக்க.'' என்று அவன் சந்தோஷக் கூச்சலிட,

"AVP" என்றாள்.

"AVPயா? அப்படின்னா என்ன? ஹேய்! அதுக்கு முன்னாடி இன்னொரு விஷயம் சொல்லு. அன்னைக்கு நான் பொண்ணு பார்க்க வந்த போதும் இதே மாதிரி எதையோ சொல்லி தானே என்னைக் கலாய்ச்சே. யெஸ். எனக்கு ஞாபகம் வந்துடுச்சு. VKKL அதுக்கு என்ன அர்த்தம்னு சொல்லு."

"இப்ப சொல்ல முடியாது. வேணா கல்யாணத்துக்கு அப்புறமா சொல்லுறேன்."

"அடிப்பாவி! அந்த அளவுக்கு என்னை மோசமா கலாய்ச்சு இருக்கியா? இப்பவே சொல்லு."

"முடியாது" என்று அவள் திட்டவட்டமாக மறுத்து விட்டாள்.

"உன்கிட்ட நான் கேட்ட முதல் கேள்விக்கே என்னை அந்த அளவு கலாய்ச்சு இருக்கேன்னா நீ வெரி டேஞ்சரஸ் ஃபெல்லோவா சாரு? அடடா! சஞ்சய் ஆழம் தெரியாமல் காலை விட்டுட்டியே!" என்று அவன் வாய் விட்டுப் புலம்ப, அவள் சிரிக்க ஆரம்பித்தாள்.



## 2

கல்யாண நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

சஞ்சய் தன் வருங்கால மனைவியைச் சந்திக்க ஆசைப்பட்டான். அதுவும் மாறுவேடம் அணிந்து சென்று அவளைக் கிண்டல் பண்ண முடிவு செய்தான்.



தன் நண்பனின் உதவியோடு வெள்ளை நிறத் தாடி, வெள்ளை நிற விக் வைத்துக் கொண்டான். வேஷ்டி சட்டை அணிந்து ஒரு முதியவர் போல் தன்னை மாற்றிக் கொண்டவன் சாருமதி வீட்டின் கதவைத் தட்டினான்.

அவளது பெற்றோர் அந்த நேரம் வீட்டில் இருக்க மாட்டார்கள் என்று அறிந்து கொண்டே வந்திருந்தான்.

அவன் சாருமதி வந்து கதவைத் திறப்பாள் என்று காத்திருக்க, கதவைத் திறந்ததோ ஈஸ்வரி!

'அத்தை வெளியே போகலையா? ஆகா! சாருவைக் கலாய்க்க தானே நான் டயலாக் எழுதி மனப்பாடம் செய்தேன். அத்தை வந்து நிக்கிறாங்க. இப்ப என்ன செய்யுறது? இவங்ககிட்ட என்ன சொல்லணும்?' என்று பேந்தப் பேந்த விழித்தான்.

"என்ன வேணும்?" என்று ஈஸ்வரி கேட்க,

"வணக்கம்." என்று கை கூப்பியவன், "நான் சாருமதியைப் பார்க்க வந்திருக்கேன்." என்றான்.

"உள்ள வந்து உட்காருங்க. என்ன சாப்பிடுறீங்க?" என்று கேட்டவர் அவனது பதிலை பெற்றுக் கொண்டு மாடியேறிச் சென்றார்.

'இந்த அத்தை சரியான லூசா இருப்பாங்க போல! வயசுப் பொண்ணை வீட்டிலே வச்சுக்கிட்டு புதுசா

வந்து நிக்கிறவனை யாரு என்னன்னு சரியா விசாரிக்காம வீட்டு ஹாலில் உட்கார வச்சுட்டுப் போறாங்க' என்று தன் மாமியாரை மனதில் திட்டிக் கொண்டான்.

ஈஸ்வரி மாடிக்கு வந்து தன் மகளிடம், ''மாப்பிள்ளை உன்னைப் பார்க்க வந்திருக்கார் சாரும்மா. அவங்க கம்பெனியில ஏதோ டிராமா போடுறாங்க போல. தாத்தா வேஷத்திலே வந்திருக்கார். நீ போய் பேசிக்கிட்டு இரு. நான் கொஞ்ச நேரத்திலே வரேன்.'' என்றார்.

சாருமதி ஒரு துள்ளலோடு கீழே இறங்கி வந்தாள்.

''வாங்க சஞ்சய். என்ன உங்க ஆபீஸிலே ஏதாச்சும் ஃபங்ஷனா? டிராமாவிலே பார்ட்டிசிபேட் பண்ணப் போறீங்களா? ஃபங்ஷன் முடிஞ்சிடுச்சா? இல்ல இனிமேல் தானா? ஆனா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியிலே டிராமா போடுற அளவுக்கு என்ன விழா கொண்டாடுவீங்க?'' என்று அவள் கேள்விகளை அடுக்க,

சஞ்சயின் முகமோ விளக்கெண்ணெயைக் குடித்தது போல் மாறியது.

''நீ எப்படி என்னைக் கண்டு பிடிச்சே?'' என்று அவன் பரிதாபமாகக் கேட்க,

''எப்படிக் கண்டு பிடிச்சேனோ? என்ன சொல்லுறீங்க?'' என்று சில நொடிகள் விழித்தவள்,

''ஓ! நீங்க என்னை ஏமாத்த தான் இந்த வேஷத்திலே வந்தீங்களா?'' என்று கேட்டு வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்தாள்.



''மனசிலே பெரிய முருகப் பெருமான் என்ற நினைப்பு. தாத்தா வேஷம் போட்டு வள்ளியை மிட் பண்ண வந்துட்டார்'' என்று கூறி மீண்டும் சிரித்தாள்.

''குழந்தாய்! என்னை மணம் செய்து கொள்கிறாயா அப்படின்னு டயலாக் பேசலாம்னு வந்தீங்களா?'' என்று அவள் கேட்டதும்,

''ஆனாலும் இது டூ மச். என் வேஷம் தான் பெயில் ஆகிடுச்சுன்னு பார்த்தா என் டயலாக் பேப்பர் கூட அவுட் ஆகிடுச்சா?'' என்று அவன் பரிதாபமாகக் கேட்டதும், அவள் மீண்டும் நகைத்தாள்.

மகள் கீழே இறங்கிச் சென்றதில் இருந்து சிரித்துக் கொண்டே இருக்கவும் ஈஸ்வரி கீழே இறங்கி வர ஆரம்பித்தார்.

'இவ பாட்டுக்கு அவரைப் பார்த்துச் சிரிச்சுக்கிட்டே இருக்காள். மாப்பிள்ளை கோபிச்சுக்கப் போறார்'' என்று கவலைப்பட்டார்.

''நீ எப்படி என்னைக் கண்டு பிடிச்சேன்னு சொல்லவே இல்லையே!'' என்று சஞ்சய் மீண்டும் கேட்க,

''நான் எங்கே உங்களை கண்டு பிடிச்சேன். எங்க அம்மா என்கிட்ட வந்து மாப்பிள்ளை உன்னைப் பார்க்க வந்திருக்கார். ஏதோ டிராமாவிலே நடிக்கிறார் போல. வேஷத்தைக் கலைக்காமல் வந்திருக்காருன்னு சொன்னாங்க.'' என்றாள்.

''அத்தையா? அப்படின்னா அவங்க என்னைக் கண்டு பிடிச்சுட்டாங்களா? எப்படி?''

''அதை அவங்ககிட்ட தான் கேட்கணும்.'' என்றவள் ஈஸ்வரியைப் பார்த்துவிட்டு,

''இவரோட வேஷத்தை எப்படிக் கண்டு பிடிச்சீங்கன்னு கேட்கிறார்ம்மா.'' என்றாள்.

நம்மளை கண்டுபிடிச்சதுக்கு அப்புறம் இந்த விக்கும் தாடியும் எதுக்கு என்று நினைத்தவனாய் சஞ்சய் அவற்றை அகற்றினான்.

''நான் நல்லா வேஷம் போடலையா அத்தை?''

''வேஷம் நல்லா கரெக்ட்டா இருந்துச்சு மாப்பிள்ளை.''

''அப்புறம் எப்படி கண்டுபிடிச்சீங்க?''

''நீங்க வந்த உடனே என்னைக் கைகூப்பிக் கும்பிட்டு வணக்கம் சொன்னீங்களே மாப்பிள்ளை.''

''அதை வச்சா கண்டு பிடிச்சீங்க? ஏன் வேற யாருமே கை எடுத்துக் கும்பிட மாட்டாங்களா?'' என்று அவன் குழப்பத்தோடு கேட்க,

தனக்கு வந்த சிரிப்பை வாய்க்குள் அடக்கிய ஈஸ்வரி, ''அப்படி நீங்க கும்பிட்ட போது, உங்க கை மட்டும் எப்படி இவ்வளவு இளமையா இருக்குன்னு உத்துப் பார்த்தேனா, அப்பதான் உங்க கையிலே இருக்கிற உங்க நிச்சயதார்த்த மோதிரத்தைப் பார்த்தேன். அதை வாங்க நானும் தானே நகை கடைக்குப் போனேன். அதனால எனக்கு அதை நல்லா அடையாளம் தெரிஞ்சது.'' என்றதும், சஞ்சய் அசடு வழிந்தான்.



''அது மட்டுமில்ல மாப்பிள்ளை...'' என்று தொடங்கிய ஈஸ்வரி சொல்லலாமா வேண்டாமா என்று தயங்க,

''அதான் வேஷம் போடத் தெரியாம சுப்பரா சொதப்பி, உள்ளே வந்த அடுத்த செகன்டே மாட்டிக்கிட்டேன்னு சொல்லிட்டீங்களே. இன்னும் வேற எப்படிச் சொதப்பினேன்? அதையும் சும்மா சொல்லுங்க.'' என்றதும்,

அவர் புன்னகைத்துக் கொண்டே, ''என்ன சாப்பிடுறீங்கன்னு கேட்டேன். அதுக்கு நீங்க காபி குடுங்க அத்தைன்னு சொன்னீங்க.'' என்றதும்,

சஞ்சய் தன் தலையில் அடித்துக் கொண்டான். சாருமதி அடக்க மாட்டாமல் சிரித்தாள்.

''சாரும்மா உஷ்!'' என்று ஈஸ்வரி அவளை அடக்க முயன்று தோற்றார்.

சஞ்சய் சிறிது நேரம் அவர்களிடம் பேசிவிட்டுக் காபி பலகாரம் சாப்பிட்டுவிட்டுச் சென்றான்.

அவனது அப்பாவித்தனத்தை எண்ணி எண்ணி சாருமதி அன்று முழுவதும் சிரித்துக் கொண்டிருந்தாள்.



# 3

ஒரு வாரம் கடந்தது. அன்று காலை ஆறரை மணிக்கே சாருமதி எழுந்து கீழே வந்தாள். சொந்தக் காரர்களுக்கு பத்திரிக்கை வைப்பதற்காக பரந்தாமனும் ஈஸ்வரியும் கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

''பத்திரமா இரும்மா. நாங்க நைட் கொஞ்சம் லேட்டா தான் வருவோம். ஆனா கண்டிப்பா நைட் வந்துடுவோம்.'' என்று பரந்தாமன் கூற,

''ஒண்ணும் பிரச்சனை இல்லப்பா. நீங்க போயிட்டு வாங்க.'' என்று அனுப்பி வைத்தாள்.

அவர்கள் கிளம்பிய அரை மணி நேரத்தில் அவளது கைபபேசிக்கு புதிய எண்ணில் இருந்து அழைப்பு வந்தது.

''காலங்கார்த்தாலயே ராங் நம்பரா?'' என்று அலுத்துக் கொண்டே அவள் அந்த அழைப்பை எற்றுக் காதில் வைத்து, ''ஹலோ!'' என்றாள்.

எதிர்முனை மௌனம் காத்தது. அவள் மீண்டும் இரு முறை ஹலோ என்க,

''ஹலோ சாரு!'' என்று கரகரப்பான ஆண் குரல் கேட்டது.

''யாரு பேசுறீங்க?''



''ஐ லவ் யூ சாரு!'' என்று கூறியவன் அழுத்தமாய் ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டு அழைப்பைத் துண் டித்தான்.

சாருமதிக்கு வியர்க்க ஆரம்பித்தது.

''பொறுக்கி. நான் திட்டுறதை கேட்கிறதுக்கு கூட தைரியம் இல்லாத கோழை.'' என்று திட்டினாள்.

திருமணம் நிச்சயம் ஆகி இருக்கும் இந்த நேரத்தில் இது என்ன புதுக் குழப்பம் என்று குழம்பிப் போனாள்.

அடுத்த அரை மணி நேரம் கழித்து அதே எண் ணில் இருந்து அவளுக்கு குறுஞ்செய்தி ஒன்று வந்தது.

அன்புள்ள மான்விழியே! ஆசையில் ஓர் கடிதம்! ஏய்! நீ ரொம்ப அழகா இருக்க. அழகே உன்னை ஆரா திக்கிறேன். உன்னைப் பார்த்த நாள் முதல். உனக்காக என் காதல். உன்னையே கல்யாணம் பண்ணிக்கிறேன். ஆஸ்திக்கு ஒரு ஆணும் ஆசைக்கு ஒரு பொண்ணும். வாழ்ந்து பார்க்கலாம் வா. ஆயிரம் முத்தங்கள். ஆசைக் காதலன்.

''இந்த இடியட்டுக்கு தமிழ் சரியாத் தெரியாது போல! பிச்சு பிச்சு எழுதி இருக்கான்.'' என்று திட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

'ஒருவேளை இதெல்லாம் சினிமா படப் பெயரோ?' என்று நினைத்துக் கூகுள் ஆண்டவரை கேட்க, அவர் ஆமாம் என்றார்.

''வேலை வெட்டி இல்லாம தேடிப் பிடிச்சு அனுப்பி இருக்கான். லூசுப் பய! அந்தக் காலத்து டெக்னிக்கை யூஸ் பண்ணுறான்.'' என்று திட்டியவள்,

'''ஒரு வேளை வயசான ஆளோ? இதை இப்படியே விடக் கூடாது சாரு!''' என்று முடிவு கட்டியவளாய், தனது கைப்பேசியை எடுத்து ஒருவரை அழைத்து சிறிது நேரம் பேசினாள்.

அன்று மாலை வரை அந்த எண்ணில் இருந்து வேறு அழைப்போ குறுஞ்செய்தியோ வரவில்லை.

அன்று இரவு ஏழு மணி போல் அவள் கேட்ட தகவல் அவளை வந்து சேர்ந்தது. மீண்டும் அந்த புதிய எண்ணில் இருந்து வரும் அழைப்பிற்காக காத்திருக்கலானாள்.

அன்று இரவு ஒன்பது மணிக்கு அந்த எண்ணில் இருந்து அழைப்பு வந்ததும் எடுத்து உற்சாகமாகப் பேசினாள்.

''என்ன சஞ்சய் சார்! ரொம்ப வெட்டியா இருக்கீங்க போல! என்கிட்ட நேத்து போனிலே பேசும்போது கூட வேலை விஷயமா மும்பை போறேன். கல்யாண வேலை வேற இருக்கு. நான் ரெம்ப (ரொம்ப என்று சொல்லாமல் அவனைக் கிண்டல் அடிக்கும் விதமாக ரெம்ப என்றாள்) பிஸினு சொன்னீங்க? இதான் நீங்க பிஸியா இருக்கிற லட்சணமா?'' என்று கிண்டல் செய்தாள்.

அந்தப் பக்கத்திலிருந்து பதில் ஒன்றும் வரவில்லை. அவள் அதைக் கண்டு கொள்ளாது,



''ஆமா இந்த எஸ்.எம்.எஸ்'ல சினிமா பட டைட்டிலை அனுப்புற ஐடியாவை எந்தத் தாத்தாகிட்ட இருந்து கடன் வாங்கினீங்க?'' என்று நக்கல் பண்ணியதும்,

''எப்படிக் கண்டுபிடிச்சே?'' என்று சஞ்சய் பரிதாபமாகக் கேட்டான்.

''அதை அப்புறமா சொல்லுறேன். முதல்ல நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லுங்க. இதெல்லாம் சினிமா படமாங்கிறதையே நான் கூகுளில் பார்த்துதான் தெரிஞ்சுக்கிட்டேன். நீங்க எங்கே இருந்து இத்தனை பட டைட்டிலையும் பிடிச்சீங்க? ஒரு வேளை அதுக்கு பதினொரு பேர் கொண்ட குழு வச்சிருக்கீங்களோ?'' என்று கேட்டு அவள் நகைக்க,

'எல்லாம் என் நேரம்!' என்பதாய் அவன் அமர்ந்திருந்தான்.

''எப்படிக் கண்டு பிடிச்சேன்னு கேட்டேனே!''

''ம்ம்ம்... எங்க மாமனார் இருக்காரில்ல...''

''யாரு எங்கப்பாவா?''

''என் மாமனார் உங்கப்பா இல்லாமல் வேற யாரு?''

''ம்ம்ம்... சொல்லு.''

''அவரோட ஃப்ரண்டு தானே நம்ம சிட்டி கமிஷனர் ஆஃப் போலீஸ். அதனால மாமாக்கு போன் பண்ணி விவரம் சொன்னேன். சாயந்திரத்துக்குள்ள உங்க ஜாதகத்தைக் குடுத்துட்டாரு. வாய்ஸ் மாத்தி என்

கூட விளையாடத் தெரிஞ்ச உங்களுக்கு சிம் கார்டு வேற ஒருத்தங்க பேரிலே வாங்கத் தெரியலையே. அதான் ஈஸியா டிராக் பண்ணிட்டாங்க.''

''உனக்கு ஒரு பிரச்சனைன்னா என்னைக் கூப்பிட்டுச் சொல்லணும்னு உனக்கு தோணலையா சாரு?'' என்று ஆழ்ந்த குரலில் அவன் கேட்க, அவள் துணுக்குற்றாள்.

''சாரிங்க. எனக்கு அது தோணாமல் போச்சு.'' என்று அவள் கேலியை விட்டுவிட்டு ஒரு வித பதட்டத்துடன் பதில் அளித்தாள்.

''நான் உன்னைத் தப்பா நினைப்பேன்னு நினைச்சியா சாரு?''

''கண்டிப்பா அப்படி இல்லைங்க. அப்படி நான் நினைச்சிருந்தா இந்தப் பிரச்சனையை மாமாகிட்ட கொண்டு வந்திருக்க மாட்டேன். எங்க அப்பாகிட்ட தான் கொண்டு போய் இருப்பேன். கமிஷனர் மாமாவோட ஃப்ரண்டு என்பதால நேரா அவர்கிட்டயே சொல்லிட்டேன்.''

அவன் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தான்.

''நீங்க கேட்ட பிறகு தான் என்னோட தப்பு புரியுது. ஐயம் சாரி.''

''சாரி எல்லாம் சொல்லாதே சாரு. நான் தான் சாரி சொல்லணும். உன்னை சும்மா ஒரு ரெண்டு மணி நேரம் தவிக்க விடலாம்னு தான் ப்ளான் பண்ணி



னேன். ஆனா வேலை பிஸியில சுத்தமா மறந்துட்டேன். சாரிடா சாரு.'' என்று அவனும் தன் பங்கிற்கு மன்னிப்பை வேண்ட,

''ரெண்டு பேர் பண்ணின தப்புக்கும் சரியாப் போச்சு. அதனால அதை மறந்துடுவோம். ஆமா எதுக்கு இப்படி கி... லூ... புது ஐடியா டிரை பண்ணு நீங்க?''

''கிறுக்குத்தனமா... லூசுத்தனமா.. இன்னும் என்னென்ன சொல்ல நினைச்சியோ எல்லாத்தையும் சொல்லு.'' என்று அவன் அலுத்துக் கொண்டான்.

அவள் புன்னகைத்துக் கொண்டே, ''நான் என் வாயால எதையுமே சொல்லலைங்க.'' என்றாள்.

''அதான் வாய் வரைக்கும் வந்துடுச்சே!'' என்று அவன் கூறிக் கொண்டு இருக்கும்போதே ராதாகிருஷ்ணன் அவனருகே நடந்து வந்தார்.

'யாருடா போனில்?' என்று சைகை செய்தார்.

''சாருகிட்ட பேசிக்கிட்டு இருக்கேன்பா'' என்று சஞ்சய் கூறவும்,

''என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாமில்ல சஞ்சய். இப்ப பாரு நானே உன்னை மாட்டிவிட்டுட்டேன்'' என்று அவர் கூறியது சாருமதிக்குத் தெள்ளத் தெளிவாகக் கேட்டது.

அவள் சப்தமாக நகைக்க ஆரம்பித்தாள். அவளது சிரிப்பு சப்தம் ராதாகிருஷ்ணனுக்கும் கேட்டது.

''மதி! என் பிள்ளை பாவம். அவனைக் கொஞ்சமா கிண்டல் பண்ணு.'' என்று சப்தமாகக் கூறிவிட்டு அந்த இடம் விட்டு நகர்ந்தார்.

''உங்க எல்லோருக்கும் நான் காமெடி பீஸ் ஆகிட்டேன் இல்ல?'' என்று பரிதாபமாகக் கேட்டவன்,

''லவ் பண்ணி தான் கல்யாணம் பண்ணலை. கல்யாணம் பண்ணப் போற பொண்ணுகிட்டயாவது இது மாதிரி விளையாடலாம்னு நினைச்சேன். என்னோட எல்லா ப்ளானும் டோட்டல் ஃப்ளாப்.'' என்று புலம்பினான்.

''உங்க ப்ளான் பெயிலாகாமல் இருக்க நான் உங்களுக்கு ஒரு ஐடியா தரட்டா?''

''என்ன ஐடியா? சொல்லு.''

''நீங்க என்ன செய்ய நினைக்கிறீங்களோ அதை முதல்லயே என்கிட்ட சொல்லிடுங்க. நானும் அதுக்கு ஏத்த மாதிரியே ஆக்டிங் குடுக்கிறேன். உங்க ப்ளான் சக்சஸ் ஆகிடும்.''

''வேணாம் தாயே! நான் இனிமே ஆணியே புடுங்கப் போறதில்லை.'' என்று அவன் நொந்து போன குரலில் கூற, அவள் புன்னகைத்துக் கொண்டாள்.

''மும்பைக்கு எப்ப போறீங்க?''

''நாளைக்குக் காலையில சாரு. காலையில சீக்கிரம் எழுந்துக்கணும். வேலை செம டைட்டா இருக்கு.



ரெஸ்டே இல்லாத மாதிரி போகுது. அதான் காலையில உனக்கு திரும்ப போன் பண்ணி உண்மையைச் சொல்லணுங்கிற ஞாபகமே இல்லை. சாரி சாரு.''

''பரவாயில்லைங்க.''

''குட் நைட் சாரு. நான் அப்புறமா பேசுறேன்.''

''டேக் கேர். குட் நைட்'' என்று கூறி அழைப்பைத் துண்டித்தாள்.

அவன் எந்த அளவிற்கு அசதியாய் இருக்கிறான் என்பது அவனது குரலிலேயே தெரிந்தது. அவனை நினைத்தால் அவளுக்குப் பாவமாக இருந்தது.

அவ்வளவு வேலைக்கு நடுவிலும் தன்னை ஏமாற்றுவதற்காக திரைப்படப் பெயர்களை அவன் தேடிச் சேகரித்த விதத்தை நினைத்துப் பார்த்தவள்,

''என்ன கஷ்டப்பட்டு என்ன பிரயோஜனம்? கோட்டை விட்டுட்டாரே!'' என்று கூறி புன்னகைத்துக் கொண்டாள்.



# 4

திருமண நாளும் இனிதே விடிந்தது. இரு வீட்டிலும் நடக்கும் முதலும் கடைசியுமான திருமணம் என்பதால் மிகப் பிரம்மாண்டமாக நடத்தினர்.

தாலி கட்டி முடித்து, அக்னியை வலம் வந்து, பெற்றவர்களிடம் ஆசி பெற்று, புகைப்படத்திற்கு போஸ் கொடுத்து என்று நேரம் அதிவேகமாகக் கடந்தது.

சஞ்சய் தனக்குக் கிடைத்த முதல் தனிமையில்...

''கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் VKKLனா என்னன்னு சொல்லுறேன்னு சொன்ன இல்ல. இப்ப சொல்லு.'' என்றதும்,

'விளக்கம் கேட்கிறதுக்கு நல்ல நேரம் பார்த்தீங்க!' என்று ஒரு பார்வை பார்த்தவள் அமைதியாக இருந் தாள்.

''சொல்லு சாரு.''

''AVP.''

''நான் விளக்கம் கேட்டா அன்னைக்கு போன் பேசும்போது சொன்ன ஷார்ட் ஃபார்மை சொல்லுறே.'

''அதுக்கு இதுதான் பதில். நான் அப்புறமா நாம தனியா இருக்கும்போது சொல்லுறேன்.''

''தனியா இருக்கிறப்பவா, அப்ப வேற வேலை இருக்குமே!'' என்றதும் அவள் முறைத்தாள்.

''சரி அப்புறமாவே கேட்கிறேன்,'' என்றவன் அப்போதைக்கு அமைதியானான்.

முதல் இரவு அறைக்குள்ளே வெட்கத்தோடு நுழைந் தவளை கைபிடித்து அழைத்துச் சென்று படுக் கையில் அமர வைத்தவன்,



''இப்ப சொல்லு சாரு VKKLனா என்ன?'' என்ற தும்,

சாருமதி தன் தலையில் அடித்துக் கொண்டு, ''கஷ்ட காலம்டா சாமி! ஷப்பா! முடியலை.'' என்று அலுத்துக் கொண்டாள்.

''நீ பாட்டுக்கு அப்புறமா தான் சொல்லுவேன்னு சொல்லிட்ட. அது என்னவா இருக்கும்னு நான் ரெண்டு மாசமா என் மண்டையைப் போட்டு உடைச்சுக்கிட்டு இருக்கேன் தெரியுமா?'' என்று அவன் சிறு குழந்தை போல் அவள் மீது புகார் படிக் கவும்,

''பொண்ணு பார்க்க வந்த போது, முதல் முதல்ல பேசுறதுக்கு வேற விஷயமா இல்லைன்னு நினைச்சு வேற கேள்வி கேளுடா லூசுன்னு (Vera Kelvi Keluda Loosu) சொன்னேன்'' என்று விளக்கினாள்.

''அடிப்பாவி! பார்த்த முதல் நாளே என்னை லூசுன்னா சொன்னே? உனக்கு எவ்வளவு தைரியம்!'' என்று அவளது காதைப் பிடித்து வலிக்காமல் திரு கியவன்,

''அப்போ AVPனா என்ன?'' என்றான்.

''அடி வாங்கப் போறீங்கன்னு அர்த்தம்.''

''அடி வேற குடுப்பியா? உனக்கு அப்படி ஒரு நினைப்பு வேற இருக்கா?'' என்று கிண்டலாகக் கேட் டவன், ''இனிமே இது மாதிரி ஷார்ட் ஃபார்ம் உப யோகப்படுத்தக் கூடாது!'' என்று கட்டளையிட்டான்.

''எனக்கு முதன் முதலா ஒரு பொண்ணுகிட்ட எப்படிப் பேச்சைத் தொடங்கிறதுன்னு தெரியலை. அதான் என்ன படிச்சிருக்கேன்னு ஆரம்பிச்சேன். எடுத்த உடனே எனக்கு ஒரு கிஸ் குடுன்னா கேட்க முடியும்.''

''கேட்டு தான் பார்க்கிறது...'' என்று படு நக்கலாகக் கூறியவள், ''எங்கப்பா உங்களைக் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளி இருப்பார்.'' என்றாள்.

''எங்கே. இப்ப வந்து அப்படிச் செய்யச் சொல்லு பார்ப்போம்.'' என்று வீறாப்பாக மொழிந்தவன், ''எனக்கு ஒரு கிஸ் குடு சாரு.'' என்றான்.

அவள் வெட்கப்பட்டுக் கொண்டு அமைதியாக இருக்கவும், அவளது புறங்கையில் தனது முதல் முத்தத்தைப் பதித்தான்.

''அன்னைக்கு நான் உன்னைக் கேள்வி கேட்டதுக்குப் பதிலா ஒரு பாட்டு பாடச் சொல்லி இருக்கணும் சாரு. அப்படிக் கேட்காமல் போய் தான் உன் கிட்ட லூசு பட்டம் வாங்கி இருக்கேன்.''

''பாடச் சொல்லி இருந்தீங்கன்னா, நல்ல ஒரு ஐட்டம் சாங் பாடி இருப்பேன்ல.'' என்று அவள் நக்கல் பண்ணினாள்.

''என்னது ஐட்டம் சாங்கா? இப்ப பாடு சாரு. நாட் ஒன்லி பாட்டு. பாடிக்கிட்டே ஆடு.'' என்று கூறி அவன் கண்ணடித்ததும், அவள் செல்லமாக இரண்டு அடிகளை அவனுக்குக் கொடுத்தாள்.



''சும்மா உல்லுலாயிக்கு தான் சொன்னியா?'' என்று அலுத்துக் கொண்டவன், ''சரி இப்பவாச்சும் ஒரு கிஸ் குடு.'' என்றான்.

அவள் அமைதியாக இருக்கவும்,

''நானே தரேன்.'' என்றவன், அவளது இதழ்களில் தன் முத்திரையை அழுத்தமாகப் பதித்தான். அந்த நீண்ட முத்தத்திற்கு பின் அவள் காதில்,

''நான் கிஸ் கேட்டதையும் குடுத்ததையும் உங்க அப்பாகிட்ட சொல்லு. அவர் என்னை மட்டும் இல்லை உன்னையும் சேர்த்து வீட்டை விட்டு வெளியே அனுப்பி வைப்பார், ஹனிமூனுக்கு.'' என்றதும் அவள் வெட்கத்துடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

அவர்கள் தங்கள் வீட்டிலேயே தேனிலவைக் கொண்டாட ஆரம்பித்தார்கள்.



# 5

மறுநாள் இருவரும் சாருமதியின் வீட்டிற்கு விருந்திற்குச் சென்றார்கள். அன்று மாலையே அவன் அங்கிருந்து கிளம்பவும் சாருமதி முகம் வாடினாள்.

''ஒரு நாளாவது எங்க வீட்டிலே இருந்துட்டுப் போகக் கூடாதா?''

''அப்புறமா இன்னொரு தடவை வந்து தங்கு றேன்டா.'' என்று சஞ்சய் கூறினான்.

பரந்தாமனும் தன் மகளிடம், ''பொறுமையா இன்னொரு தடவை வந்து தங்கிக்கோங்க குட்டிம்மா.'' என்று கூறிவிட்டார். வேறு வழியின்றி சாருமதி மாமியாரின் வீடு வந்து சேர்ந்தாள்.

அதற்கு அடுத்த நாள் காலை சஞ்சய் வெளியே செல்ல உடை அணிந்து வந்ததைக் கண்ட சாருமதி, ''நாம வெளியே போறோமா?'' என்று கேட்டாள்.

''இல்லைடா சாரு.''

''அப்ப நீங்க மட்டும் போறீங்களா? எங்கே? ஆபீஸ்கா?''

''ஆமா சாரு.''

''பத்து நாளைக்கு ஆபீஸ் போக மாட்டேன்னு சொன்னீங்க.'' என்று அவள் கோபத்துடன் கேட்க,

''ஒரு அர்ஜென்ட் வொர்க். போயிட்டு வந்துடு றேன்.''

''ஒன் அவரிலே வந்துடுவீங்களா?''

''ஒரு மணி நேரத்திலே வர முடியாது சாரு. சாயங் காலமா வர டிரை பண்ணுறேன்.''

''ஓ! டிரை பண்ணுவீங்களா? எதுக்கு வீணா டிரை பண்ணிக்கிட்டு, பேசாம ஒரு பெட் வாங்கிப் போட்டு அங்கேயே தங்கிக்கோங்க.'' என்று அவள் முறைத்துக் கொண்டே சொல்லவும்,



''இந்த வேலையை மட்டும் முடிச்சிடுறேன் சாரு. அப்புறமா நான் பத்து நாளைக்குப் போக மாட்டேன்.'' என்று கூறிக் கொண்டே அவளை இழுத்து அணைக்க முயற்சித்தான்.

அவனது பிடிக்குள் சிக்காமல் அவள் கோபமாய் வெளியேறினாள். அவன் காலை உணவை முடித்துக் கொண்டு அலுவலக வேலையைப் பார்ப்பதற்கு வெளியேறினான்.

'இவர் இங்கே இருந்தால் தானே ஆபிஸ்க்கு ஓடுவார். பேசாமல் இவரை ஹனிமூன் என்ற பேரிலே வேற ஊருக்குக் கடத்திட்டுப் போயிடலாம்'', என்று சாருமதி திட்டம் தீட்டினாள்.

''எனக்குத் தோணுற இந்த ஐடியா அவருக்கு ஏன் தோணலை? நல்லா தானே சம்பாதிக்கிறார். என்னைக் கூட்டிட்டு ஹனிமூன் போகணும்னு தோணுச்சா பாரு! கஞ்ச மகா பிரபு சஞ்சய்!'' என்று திட்டிக் கொண்டாள்.

''நாமளே சர்ப்ரைஸ் குடுப்போம்.'' என்று நினைத் தவளாய் தன் மடிக்கணினியை வைத்துக் கொண்டு சில வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள்.

மாலையில் கணவனின் வருகைக்காகக் காத்திருந் தாள். சஞ்சய் ஆறு மணிக்கு மேல் வீட்டிற்கு வந் தான். தங்களது அறைக்குள் நுழைந்தவன்,

''சாரிடா சாரு. லேட் ஆகிடுச்சு.'' என்றான்.

''நான் எதுவுமே உங்களைக் கேட்கலையே!'' என்று அவள் கிண்டலாக உரைக்க, அவன் அவளை ஒரு பார்வை பார்த்தான்.

அருகே வந்து சமாதானம் செய்வான் என அவள் காத்திருக்க, அவனோ தன் அலமாரியைத் திறந்து துணிகளை எடுத்துக் கொண்டு நேராகக் குளியலறைக்குள் சென்று மறைந்தான்.

''நான் ஒண்ணும் கோபமா இல்லைன்னு கிண்டலா சொன்னதை அவர் புரிஞ்சுக்கலையா? தத்தி!'' என்று திட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

குளித்து முடித்து தன் தலையைத் துவட்டிக் கொண்டு வந்தவன் அவளருகே வந்து, ''இப்ப சொல்லுடா. உன் கோபம் குறைய நான் என்ன செய்யணும்?'' என்று கேட்டான்.

''ஏன் இப்பவே வந்து கேட்கிறீங்க? நாளைக்கு வந்து கேட்டிருக்கலாம் இல்ல!'' என்று அவள் இடக்காக மொழிய,

அவள் திமிறத் திமிற அவளை இழுத்து அணைத்துக் கொண்டே, ''அசோக் நகரிலே நாம ஒரு பில்டிங் கட்டுறோமில்ல... அந்த சைட்டுக்குப் போயிருந்தேன்டா. மண்ணு, சிமெண்ட், செங்கல்னு ஒரே தூசி. அந்த தூசியோட உன் பக்கத்திலே வர வேண்டாமேன்னு குளிக்கப் போனேன். இப்ப சொல்லு சஞ்சய் என்ன செய்யணும்? அடியேன் செய்யக் காத்திருக்கிறேன்.'' என்றான்.

''கல்யாணம் ஆன ரெண்டாவது நாளே வேலைக்குப் போனவர் கூட எனக்கு என்ன பேச்சு வேண்டி இருக்கு.'' என்று அவள் முறுக்கிக் கொண்டாள்.



''பேச்சு வேண்டாம் சஞ்சய். ஆக்ஷனிலே காட்டுன்னு சொல்லுறியா சாரு?'' என்று கேட்டுக் கொண்டே அவள் கழுத்து வளைவில் முத்தம் பதிக்க அவள் அவனைத் தள்ளி விட்டாள்.

''நாளைக்கு ஆபிஸ் போக மாட்டேன் சாரு. அதுக்காக இப்படியெல்லாம் என்னைத் தள்ளி விடக் கூடாது.''

''நீங்க இங்க இருந்தா தானே ஆபிஸ் போவீங்க? நாம தான் ஹனிமூனுக்கு போறோமே!'' என்று சிறு குழந்தை போல் அவள் கூறினாள்.

''அடிப்பாவி! நான் ஒரு பேச்சுக்கு உங்க அப்பா கிட்ட சொல்லு. நம்மளை அவரே ஹனிமூனுக்கு அனுப்பி வைப்பாருன்னு சொன்னா... நீ நிஜமாவே அவர்கிட்ட சொல்லிட்டியா?''

''சீ! சீ! அதைப் போய் யாராவது அப்பாகிட்ட சொல்வாங்களா?''

''அப்புறம் எப்படி ஹனிமூன் போறதா சொல்லுறே?''

''ஏன் என்னால அரேஞ்ச் பண்ண முடியாதா?''

''நீயா? நீ என்ன அரேஞ்ச் பண்ணின?'' என்று அவன் குழப்பத்துடன் கேட்க,

''யெஸ். நானே தான்! நாம கோவா போறதுக்கு எல்லா ஏற்பாடும் செஞ்சுட்டேன்.''

''கோவா? இந்த மாசமா?''

''எதிர்த்து எதுவும் சொல்லக் கூடாது. போய் உங்க பெட்டியைக் கட்டுங்க. நாம காலையிலே போகணும்.''

''இல்லைடா சாரு. நான் சொல்றதைக் கேளு.''

''உங்க மனைவியானதுக்கு அப்புறம் ஆசையா கேட்கிறேன். இதைக் கூடச் செய்ய மாட்டீங்களா?'' என்று அவள் சிணுங்கலுடன் கேட்க, அவன் அதற்கு மேல் அவளிடம் எதிர்த்து எதையும் கூறவில்லை.

''என் பணத்தை வச்சு ஹோட்டல் ரூம் புக் பண்ணிட்டேன். கடைசி நேரத்திலே ஃபிளைட் டிக்கெட் கிடைக்காதுங்கிறதால நான் டிராவல் ஏஜென்ட்கிட்ட சொல்லி டிக்கெட் எடுக்கச் சொன்னேன். வீட்டிலே கொண்டு வந்து குடுத்துட்டு பணம் வாங்கிக்கிறதா சொன்னார். டிக்கெட் விலை எகிறிடுச்சு. அவ்வளவு பணம் என்கிட்ட இல்லை. அதனால நீங்க தான் பணம் தரணும்.'' என்று கூறியவள்,

அவன் முன் தன் கையை நீட்டினாள். அவன் அவளது கையில் தன் லாக்கர் சாவியை வைத்தான்.

''எவ்வளவு வேணுமோ எடுத்துக்கோடா.'' என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

தன் தந்தையிடமும் தாயிடமும் சென்று தனது கோவா பயணத்தைப் பற்றிக் கூறினான்.

மறுநாள் காலை அவர்கள் விமானத்தில் கோவா சென்று அடைந்தார்கள். சாருமதி தங்குவதற்கு



ஏற்பாடு செய்திருந்த ஹோட்டலுக்கு சென்று இறங்கினார்கள்.

''முதல்ல சாப்பிடலாம். அப்புறமா சுத்திப் பார்க்கலாம்.'' என்று அவள் கூறியதும், அவளை ஒரு உணவகத்திற்கு அழைத்துச் சென்றான்.

''நான் நான்-வெஜ் சாப்பிடப் போறேன். உங்க பக்கத்திலே உட்கார்ந்து சாப்பிட்டால் உங்களுக்கு கஷ்டமா இருக்குமா? ஐ மீன் உங்களுக்குப் பிடிக்காத சாப்பாடு என்பதால் அதைப் பார்க்கும் போது சங்கடமா இருக்குமா?''

'பார்க்கிறது பிரச்சனை இல்லை. உன்னை கிஸ் அடிக்கிறதிலே தான் பிரச்சனை வரும்னு நினைக்கிறேன்' என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

'அவளுக்குப் பிடித்த உணவை அவள் சாப்பிடட்டும்' என நினைத்து, ''ஒண்ணும் பிரச்சனையில்லை.'' என்று மட்டும் சொன்னான்.

''நான் புதுசா டிரை பண்ணப் போறேன். எப்ப பார்த்தாலும் நம்ம ஊரிலே சிக்கன் - 65 இல்லைன்னா பட்டர் சிக்கன் சாப்பிட்டு போரடிக்குது.'' என்றவள் வாய்க்குள் நுழையாத பெயரில் உள்ள உணவை வரவழைத்தாள்.

''தெரியாததை எதுக்குடா ஆர்டர் பண்ணுறே? அப்புறம் ஒத்துக்காமல் போயிடப் போகுது.''

''அப்புறம் அதை நான் எப்ப தான் தெரிஞ்சுக்கிறது?'' என்று அவள் கேட்டதும் அவன் அமைதியாகி விட்டான்.

சஞ்சய் சைவம் என்பதால் அவன் தனக்கான சை உணவை வரவழைத்துச் சாப்பிட ஆரம்பித்தான் முதல் வாயை ஆசையாக வைத்த சாருமதிக்கு அந் சிக்கனை சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஆனால் கணவனிடம் ஜம்பமாகக் கூறிவிட்டு அதை அப்ப டியே ஒதுக்கிவிட மனமில்லாதவளாய் கஷ்டப்பட்டு விழுங்கினாள்.

சஞ்சய் தனக்கு வந்த கைப்பேசி அழைப்பை ஏற்று பேசிக் கொண்டிருந்ததால் அவளது முகச் சுளிப்பை அவன் கவனிக்கவில்லை. அவன் பேசி முடித்து அந்த அழைப்பை துண்டித்த பின்பே அவளது சங்கடத்தையும் அவளது உணவில் இருந்து வந்த வித்தியாசமான மணத்தையும் கவனித்தான்.

''பிடிக்கலைன்னா வச்சிடுடா சாரு. வேற வேண வாங்கிக்கோ.'' என்று அவன் கூறியதும்,

'இதை அப்பவே சொல்லி இருக்கலாமே!' என்று நினைத்துக் கொண்டவள் வேகமாக அந்தத் தட்டைத் தள்ளி வைத்தாள்.

''வேற ஏதாச்சும் ஆர்டர் பண்ணவா?''

''இல்லை வேண்டாம்.'' என்று மறுத்து விட்டாள்.

சாப்பிட்டு முடித்தவர்கள் தாங்கள் தங்கி இருந்த அறைக்குத் திரும்பினார்கள். சாருமதி அந்த சிக்கனை சாப்பிட்டதில் இருந்து நிலை கொள்ளாமல் தவித் தாள்.



''என்னடா சாரு? என்ன செய்யுது?''

''வந்து...'' என்று எதையோ சொல்ல ஆரம்பித் தவள் சொல்லாமல் தயங்கினாள்.

''நான் ஒண்ணும் திட்டமாட்டேன்டா. சும்மா சொல்லு.''

''அந்த சிக்கன் சாப்பிட்டேனில்ல... அதிலே இருந்து என்னமோ போல இருக்கு.''

''அதிலே வைன் ஊத்தி சமைச்சிருப்பாங்கன்னு நினைக்கிறேன்டா சாரு. ஒருவேளை உனக்கு அந்த டேஸ்ட் ஒத்துக்கலையா இருக்கும்.'' என்று அவன் கூறவும்,

''வைனா?'' என்று அதிர்ந்தவள் வேகமாகக் குளியலறையை நோக்கி ஓடினாள்.

அவன் அவளைப் பின் தொடர்ந்தான். அவள் குளிய லறையை தாழ் போட்டு இருந்ததால் அவனால் உள்ளே நுழைய முடியவில்லை. அவள் உள்ளே வாந்தி எடுக்கும் சப்தம் கேட்டது.



# 6

**சஞ்சய்** குளியலறை வாயிலில் நின்று கொண்டு தவித்துக் கொண்டிருந்தான்.

'உண்மையைச் சொல்லி இருக்கக் கூடாதோ? பெரிய உண்மை விளம்பி மாதிரி உளறி

விட்டேனோ!'' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டான்.

'சாப்பிட்டதெல்லாம் வெளியே வந்துடுச்சுன்னா அவ வயித்துக்கு வேற எந்த ப்ராப்ளமும் வராது' என நினைத்த சஞ்சய், ஹோட்டலில் உள்ள உண வகத்தை இன்டர்காம் மூலம் அழைத்து ஒரு எலு மிச்சை சாறு கொண்டு வரச் சொல்ல நினைத்தான். ஆனால் இன்டர்காம் வேலை செய்யவில்லை.

தள்ளாடிக் கொண்டே வெளியே வந்தவளை கைத்தாங்கலாக அழைத்துச் சென்று படுக்கையில் அமர வைத்தான்.

''உங்களுக்கு அங்கேயே தோணுச்சா?'' என்று பரிதாபமாகக் கேட்டவளிடம்,

''ஆமாடா. அதனால தான் உனக்குப் பிடிக்க லைன்னா சாப்பிடாதேன்னு சொன்னேன்.'' என்றான்.

அவன் மறந்தும் 'இதுக்கு தான் உனக்கு நல்லாத் தெரிஞ்ச உணவை வாங்கிச் சாப்பிடுன்னு சொன் னேன்' என்று கூறவில்லை.

''லெமன் ஜூஸ் குடிச்சால் கொஞ்சம் பெட்டரா ஃபீல் பண்ணுவே. இன்டர்காம் வொர்க் ஆகலை. கீழே ரெஸ்டாரண்ட்க்கு போய் நான் வாங்கிட்டு வரேன். நீ ரூமிலே இருக்கியா?''

''இல்ல.. நானும் வரேன்.'' என்றவள் கீழே இறங்கிச் சென்றாள். உணவகத்தில் நல்ல கூட்டம் இருந்தது.



''இங்கேயே சாப்பிட்டு இருக்கலாம் போல!'' என்று சாருமதி புலம்பினாள்.

சஞ்சய் ஒரு எலுமிச்சை சாறைக் கொண்டு வரச் சொன்னான். அவர்கள் காத்திருந்த நேரத்தில் சஞ் சய்க்கு கைப்பேசியில் அழைப்பு வந்தது. எடுத்துப் பேசியவன்,

''சிக்னல் சரியா கிடைக்கலை. கொஞ்சம் தள்ளிப் போய் பேசிட்டு வரேன்.'' என்று கூறி வெளியேறி னான்.

பக்கத்து டேபிளுக்குக் கொண்டு போய் வைக்க வேண்டிய வோட்காவை தவறுதலாக அந்த சர்வர் சாருமதியின் முன்பு வைத்துவிட்டுச் சென்றான்.

'என்ன லெமன் ஜூஸ் இவ்வளவு க்ளியரா இருக்கு?' என்று சாருமதி நினைத்துக் கொண்டே அதை வாயில் வைத்து ஒரு மிடறு விழுங்கினாள்.

சஞ்சய் வந்து அவளது கையில் இருப்பதைப் பறிப்ப தற்கும் அந்த சர்வர் வந்து, ''சாரி மேடம்! டேபிள் மாத்தி வோட்காவைக் கொண்டு வந்து வச்சிட்டேன். இந்தாங்க உங்க லெமன் ஜூஸ்.'' என்று நீட்டுவ தற்கும் சரியாக இருந்தது.

''என்னது வோட்காவா?'' என்று கேட்டுக் கொண்டே சாருமதி தன் அறை நோக்கி ஓடினாள்.

''ஓ காட்! ஏன் வந்ததில் இருந்து தப்பாவே நடக் குது?'' என்று புலம்பிய சஞ்சய் பில்லுக்கான பணத்தைக்

கொடுத்துவிட்டு அந்த எலுமிச்சை சாறை எடுத்துக் கொண்டு அவள் பின்னோடு சென்றான்.

சாருமதி தங்களது அறையில் உள்ள குளியலறைக்குச் சென்று மீண்டும் ஒரு முறை வாந்தி எடுத்தாள். வெளியே வந்தவளிடம் சஞ்சய் அந்த எலுமிச்சை சாறை கொடுத்து பருகச் சொன்னான்.

''எனக்கு வேண்டாங்க.'' என்று அவள் மறுக்க,

''நான் டேஸ்ட் பண்ணிப் பார்த்துட்டேன்டா. இது லெமன் ஜூஸ் தான்!'' என்றதும், அவனிடம் இருந்து பெற்றுக் கொண்டாள். அதைப் பருகி முடித்ததும் சாருமதி படுத்துக் கொண்டாள்.

படுக்கையில் சோர்வாகப் படுத்திருந்தவளின் அருகே சென்று அவன் அமர்ந்ததும் எழுந்து அவன் மேல் சாய்ந்து அவனை அணைத்துக் கொண்டாள். அவளது உடல் நடுங்கிக் கொண்டிருந்ததை அவனால் உணர முடிந்தது.

தேனிலவிற்கு என்று வந்த இடத்தில் ஒரு மனைவி தன் கணவனைப் பிரியாமல் அணைத்துக் கொண்டால் ஒரு கணவனுக்கு அதைவிட வேறு என்ன வேண்டும்? சந்தோஷத்தில் அவளை இறுக அணைத்து திக்குமுக்காட வைத்து விட மாட்டானா?

ஆனால் இங்கோ சஞ்சயால் அப்படி சந்தோஷப்பட முடியாத வகையில் சாருமதி பயத்தால் அல்லவா அணைத்துக் கொண்டிருக்கிறாள். சஞ்சய் அவளது வருத்தத்தை போக்க நினைத்தான்.



''என்னாச்சுடா சாரு? ஏன் இப்படி பயப்படுறே?''

''நான்... நான்...'' என்று அவள் திக்கினாள்.

''என்னன்னு சொல்லுடா?''

''நான் வைன்.. வோட்கா... உங்களை போனிலே தண்ணி... அன்னைக்குக் கேட்டேனே...'' என்று அவள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் கூறினாள்.

'என்ன சொல்ல வருகிறாள்?' என்று சஞ்சய் யோசனையில் ஆழ்ந்தான். அவனுக்கு அவள் சொல்ல வருவது ஒருவாறு புரிபட்டது.

''நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி நான் தண்ணி அடிப்பேனான்னு என்கிட்ட போனிலே துருவித் துருவி விசாரிச்சியே. அதையா சொல்ல வரே?''

ஆமாம் என்று தலை ஆட்டினாள்.

''அப்படி என்னைக் கேள்வி கேட்டுட்டு இன்னைக்கு நீ வைன் அன்ட் வோட்கா டேஸ்ட் பண்ணிட்டியேன்னு ஃபீல் பண்ணுறியா?'' என்று கேட்டதும் அவனிடம் மேலும் ஒண்டிக் கொண்டாள்.

''நிமிர்ந்து என்னைப் பாரு சாரு!'' என்று அவளது தலையை நிமிர்த்தப் பார்த்தான். அவள் பிடிவாதமாய் தன் தலையை நிமிர்த்த மறுத்தாள்.

''நான் டிரிங்க்ஸ் அடிப்பேனான்னு நீ அன்னைக்கு சந்தேகப்பட்டு கேள்வி கேட்டதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் இருக்குடா? என்னமோ பாரிலே போய் தண்ணி அடிச்சுட்டு வந்த மாதிரி இல்ல ஃபீல்

பண்ணுறே? உனக்குத் தெரியாமல் வைன் கலந்த சிக்கனையும் வோட்காவையும் டேஸ்ட் பண்ணிட்டே! அவ்வளவுதானே! அதிலே தப்பு ஒண்ணும் இல்லைடா!''

''அன்னைக்கு நான் உங்களை எப்படியெல்லாம் கேள்வி கேட்டேன். ஆனா இன்னைக்கு நானே...'' என்று அவள் தேம்ப ஆரம்பிக்க,

''ஒண்ணை நல்லாப் புரிஞ்சுக்கோடா சாரு. நீ இந்த சஞ்சயை என்ன வேணா கேள்வி கேட்கலாம். அதுக்கான முழு ரைட்ஸ் உனக்கு... உனக்கு மட்டும் தான் இருக்கு. அதனால நீ அன்னைக்கு என்னைக் கேள்வி கேட்டதிலும் எந்தத் தப்பும் இல்லை. இன்னைக்கு நீ தெரியாமல் சாப்பிட்டதிலும் எந்தத் தப்பும் இல்லை. தேவையில்லாமல் கில்டியா ஃபீல் பண்ணாதே!''

''நாம ஊருக்கு...'' என்று தொடங்கியவள், ''ஒண்ணுமில்லை.'' என்று மட்டும் கூறினாள்.

''எதைப் பத்தியும் யோசிக்காமல் கொஞ்ச நேரம் தூங்கு. தூங்கி எழுந்தா சரியாப் போயிடும்'' என்று கூறி அவளது முதுகை அவன் வருடிக் கொடுக்க அவள் தூங்க ஆரம்பித்தாள்.

அவள் தூங்கியதும் அவளைப் படுக்கையில் படுக்க வைத்தவன் அறையைப் பூட்டிக் கொண்டு வெளியேறினான்.

மாலை ஐந்து மணிக்கு அவளை எழுப்பினான்.



''சாரு! கெட் அப்! முகம் கழுவிட்டு வா. நாம வெளியே போகலாம்.''

அவள் மெதுவாக எழுந்து சென்று முகம் கழுவி வந்து தலை வாரியதும், ''வா! கிளம்பலாம். டாக்ஸி வெயிட் பண்ணுது.'' என்று அவளை அறைக்குள் இருக்க விடாமல் தள்ளிக் கொண்டு வெளியேறினான்.

''எங்கே போறோம்?''

''பீச்சுக்கு. கடல் காற்று மேல பட்டதும் ஃப்ரஷ் ஆகிடுவே!'' என்று கூறி ஒரு கடற்கரைக்கு அழைத்துச் சென்றான்.

அவன் சொன்னது போல் வண்டியில் செல்லும் பொழுது முகத்தில் மோதிய இயற்கை காற்றை சுவாசித்தவள் சற்று தெம்பாக உணர்ந்தாள். ஆனால் கடற்கரையை அடைந்ததும் அவளுக்கு அங்கு இருக்க சுத்தமாகப் பிடிக்கவில்லை.

இரைச்சல் எதுவும் இல்லாமல் அமைதியாய் மெரீனா கடற்கரையின் இயற்கையை ரசித்துப் பழகியவளுக்கு இங்கு நான்கு அடி உயரத்தில் வைக்கப் பட்டிருந்த ஸ்பீக்கரில் இருந்து சப்தமாக ஒலித்த புரியாத பாடல் தலைவலியை உண்டாக்கியது. அனைவரின் கைகளிலும் இருந்த மதுக்கோப்பை எரிச்சலை மூட்டியது. அவளால் சிறிது நேரத்திற்கு மேல் அங்கே இருக்க முடியவில்லை.

அவளுக்கு கோவாவை சுத்தமாகப் பிடிக்கவில்லை. வந்து இறங்கிய சில மணி நேரத்திலேயே மனதுக்குப்

பிடிக்காத காரியங்கள் நடந்ததில் இருந்து அவளுக்கு கோவாவில் இருக்கப் பிடிக்கவில்லை. இன்னும் மூன்று நாட்கள் இங்கே கழிக்க வேண்டுமே என்று நினைக்கும் பொழுதே ஆயாசமாக இருந்தது.

பேசாமல் சென்னைக்கே திரும்பி விடலாமா என்று தோன்றியது. இதைத் தான் அறையில் இருக்கும் போதும் அவள் கேட்க நினைத்தாள். ஆனால் சஞ்ச யிடம் சொன்னால் திட்டுவானோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது.

''ஊருக்குப் போகலாமாங்க?'' என்று மெதுவான குரலில் கேட்டாள்.

''என்னடா சாரு கேட்ட?''

''ரூமுக்குப் போகலாமான்னு கேட்டேன்.'' என்று மாற்றிக் கூறினாள்.

''போகலாம்டா சாரு.'' என்றவன் ஒரு தென்னிந் திய உணவகத்தின் முன்பு வண்டியை நிறுத்தச் சொன்னான்.

''நீ மதியமே சாப்பிடலை. இட்லி சாப்பிடு.'' என்று அவன் கூறியதை அப்படியே ஏற்றுக் கொண்டாள்.

ஏடாகூடமாக எதையாவது சாப்பிட்டு இன்னொரு முறை அவஸ்தைப் படக்கூடாது என்ற பயமே அதற்குக் காரணம்.

அவர்கள் சாப்பிட்டு முடித்து வண்டியில் ஏறிய போது மணி ஏழரை ஆனது. வண்டியில் ஏறியவள்



பத்து நிமிடங்கள் மட்டுமே பேசிக் கொண்டு இருந் தாள். அதன் பின் அவன் தோளில் சாய்ந்து கொண்டு தூங்க ஆரம்பித்தாள்.

அவளை சஞ்சய் உலுக்கி எழுப்பிய பின்பே எழுந்தாள். அந்த வாடகை கார் விமான நிலையத்தில் நுழைந்தது.

''இன்னமுமா ரூம் வரலை?'' என்று கேட்டுக் கொண்டே அவள் கண் விழித்தாள்.

சஞ்சய் கீழே இறங்கி தங்களது பெட்டிகளை இறக்கினான். அந்த ஓட்டுநருக்கு பணம் கொடுத்து அவரை அனுப்பி வைத்தான்.

அவளைப் பார்த்து புன்னகைத்த சஞ்சய், ''வாங்க மேடம்! சென்னைக்குப் போகலாம்.'' என்றதும் அவளது முகம் பிரகாசமாகியது.

''வீட்டுக்குப் போறோமா? சூப்பர்! நான் அப்பவே சொல்லலாம்னு நினைச்சேன்.''

''ஆனா நான் திட்டுவேனோன்னு பயம். அதான் சொல்ல ஆரம்பிச்சவள் சொல்லாமல் முழுங்கிட்ட. அப்படித்தானே? என்கிட்ட உனக்கு எதுக்குடா பயம்?''

''பயமில்லை. நான் தானே ப்ளான் பண்ணி எல்லாத் தையும் அரேஞ்ச் பண்ணினேன். அதான்...'' என்றவள் சுற்றித் தன் பார்வையைச் சுழலவிட்டு,

''என்னங்க ஏர்போர்ட் வேற மாதிரி இருக்கு. வரும் போது சின்னதா இருந்துச்சு.'' என்று குழம்பினாள்.

''வேற ஏர்போர்ட்க்கு வந்தா வேற மாதிரி தான்டா இருக்கும் சாரு.''

''வேற ஏர்போர்ட்டா? கோவா என்ன அவ்வளவு பெரிய ஊரா? டொமஸ்டிக் ஏர்போர்ட்டே ரெண்டு வச்சுக்கிற அளவுக்கு?'' என்று வியந்தாள்.

சரியாக அவனது கைப்பேசி சிணுங்க 'இந்நேரத் திலே யாரு?' என்று நினைத்துக் கொண்டே எடுத்துப் பார்த்தான். ராதாகிருஷ்ணன் அழைத்திருந்தார்.

சஞ்சய் ஏற்கனவே தனது பெற்றோரை அழைத்து தான் சென்னை திரும்பப் போவதாக கூறி இருந் தான். வோட்கா விஷயம் தவிர்த்து சாருமதியின் மனநிலையை அவன் விளக்கிச் சொன்னதால் அவர் களும் அவனை உடனே அங்கிருந்து கிளம்பச் சொல்லி விட்டார்கள்.

கைப்பேசியை இயக்கி காதில் வைத்தவன், ''சொல்லுங்கப்பா! நீங்க தூங்கலையாப்பா?'' என்றான்.

''இல்ல சஞ்சய். நீ ஏர்போர்ட் வந்துட்டியான்னு தெரிஞ்சுக்க தான் போன் பண்ணினேன்.''

''ஏர்போர்ட் வந்துட்டோம்பா. நீங்க தூங்குங்க.''

''டிரைவரை காரோடு அனுப்பி வைக்கிறேன் சஞ்சய்.''

''ஒகேப்பா.'' என்று கூறி சஞ்சய் அழைப்பைத் துண்டித்தான்.



அவன் போர்டிங் பாஸ் வாங்குவதற்காக வரிசையில் சென்று நின்றான். சாருமதிக்கு தூக்கம் கண்களைச சுழற்றியது. அவள் ஒரு ஓரமாய் அமைதியாய் நின்றிருந்தாள்.

போர்டிங் பாஸ் வாங்கிக் கொண்டு வந்தவனிடம், ''நான் போய் பேஸ் வாஷ் பண்ணிட்டு வரேன்.'' என்று கூறிச் சென்றாள்.

அங்கிருந்த பெண்கள் பல் தேய்ப்பதைப் பார்த் தவள், 'வாயெல்லாம் எப்படியோ இருக்கு. நாமளும் பிரஷ் பண்ணுவோம். நல்ல வேளை நம்ம பிரஷ் ஹேண்ட் பாக்கிலே இருக்கு' என்று நினைத்துக் கொண்டவள் தனது கைப்பையில் இருந்து பிரஷை எடுத்து தேய்க்க ஆரம்பித்தாள்.

அப்போது அருகே நின்று கொண்டிருந்த பெண் ணைப் பார்த்து சிநேகமாய் சிரித்தாள்.

''எங்க போறீங்க?'' என்று சாருமதி கேட்டதும் அந்தப் பெண், ''கோவா போறேன்.'' என்றாள்.

''இதான் கோவா. நீங்க எங்கே போறீங்க?'' என்று சாருமதி கேட்டதும் அந்தப் பெண் இவளை ஒரு மாதிரி பார்த்துவிட்டு ஒன்றும் கூறாமல் தன் முகத் தைத் திருப்பிக் கொண்டாள்.

'நல்லா தானே முதல்ல சிரிச்சா? நான் கேட்ட கேள்விக்கு லூசு மாதிரி பதில் சொன்னதும் இல்லாமல் என்னை வேற ஒரு மாதிரியா பார்க்கிறாள்' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே சாருமதி முகம் கழுவ ஆரம்பித்தாள்.

முகம் கழுவிவிட்டு கணவனை நோக்கிச் சென்றாள். சஞ்சய் தான் போய் முகம் கழுவிவிட்டு வருவதாகக் கூறிச் சென்றான். அவன் ரெஸ்ட் ரூம் நோக்கி நடக்கும்போது சற்று முன் சாருவிடம் பேசிய பெண் எதிரே வந்தாள்.

அவள் சஞ்சயிடம், ''அவங்க உங்க கூட வந்த வங்களா?'' என்று சாருமதியைக் காட்டிக் கேட்டாள்.

''ஆமா என் வைஃப்.'' என்று சஞ்சய் கூறவும்,

''மை டீபெஸ்ட் கண்டோலன்ஸ் டு யூ!'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

ஒன்றும் புரியாத சஞ்சய் தன் தோளைக் குலுக்கிக் கொண்டு முகம் கழுவச் சென்றான். அவன் திரும்பி வந்ததும் அவர்கள் செக்யூரிட்டி செக்கும் முடித்த பின் கேட் திறப்பதற்காக காத்திருக்க ஆரம்பித் தார்கள்.

''யாரு அவ?'' என்று மொட்டையாக சாருமதி கோபத்துடன் கேட்க,

''யாரைக் கேட்கிறே?'' என்று சஞ்சய் சுற்றிலும் தன் பார்வையைச் சுழலவிட்டான்.

''அப்போ உங்ககிட்ட வந்து பேசினாளே! அவளைக் கேட்டேன்.''

'எப்போ வந்து யார் பேசினா?' என்று சஞ்சய் புரி யாது விழிக்க... சாருமதி தன் கணவனை முறைத்துக் கொண்டே,



''நீங்க முகம் கழுவப் போன போது உங்ககிட்ட வந்து பேசினாளே! அவளைப் பத்தி கேட்கிறேன்.'' என்று அழுத்தத்துடன் கேட்டாள்.

''ஓ! அந்தப் பொண்ணா? எனக்குத் தெரியாது சாரு. அவ உன்னைக் காட்டி யாருன்னு கேட்டாள். மை வைஃப்னு சொன்னேன். அவ்வளவு தான்.''

''நிஜமாவே அவ்வளவு தானா?''

''வேற என்ன இருக்குன்னு நினைச்சு சாரு மேடம் இவ்வளவு கோபமா இருக்காங்க?'' என்று சஞ்சய் இலகுவாக புன்னகைத்துக் கொண்டே கேட்க,

''அந்தப் பொண்ணு ரெஸ்ட் ரூமிலே என்னை ஒரு மாதிரி மேலும் கீழும் பார்த்தாள்'' என்று சாருமதி அவள் மீது புகார் வாசித்தாள்.

''அப்படியா? ஏன்?'' என்று வியப்புடன் சஞ்சய் விசாரித்தான்.

''தெரியலை. எங்கே போறீங்கன்னு கேட்டேன். கோவா என்று சொன்னாள். நான் இதான் கோவா என்று சொன்னதும்...'' என்று சாருமதி முடிக்கும் முன்பே சஞ்சய் அடக்க மாட்டாமல் சிரித்தான்.

சுற்றிலும் உள்ளவர்கள் இவர்கள் புறம் திரும்பிப் பார்க்க,

சஞ்சய், ''சாரி! எக்ஸ்க்யூஸ் மீ.'' என்று கூறியவன் தனது சிரிப்பை அடக்கப் படாத பாடுபட்டான்.

சாருமதி தன்னால் முடிந்த மட்டும் கணவனை முறைத்துப் பார்த்தாள்.

''சாரி சாரு! நீ அப்பவே என்கிட்ட கேட்ட! உனக்கு பதில் சொல்லும் முன்னாடி அப்பாகிட்ட இருந்து போன் வந்துச்சா... அதுல மறந்துட்டேன். நாம இப்போ பெங்களூரு ஏர்போர்ட்டிலே இருக்கோம்டா!''

''என்ன சொல்லுறீங்க?'' என்று குழப்பத்தோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உன் ஹேண்ட் பேக்ல உள்ள உன்னோட வாட்ச் இல்லைன்னா செல்போனிலே மணி பாரு!'' என்றதும் அவள் எடுத்துப் பார்த்தாள்.

மணி ஐந்தாக ஐந்து நிமிடம் என்று காட்டியதை பார்த்தவள் அதிர்ந்தாள்.

''அப்போ நான் விடிய விடிய தூங்கிட்டேனா? அதான் வாயெல்லாம் ஒரு மாதிரியா இருந்துச்சா? கோவாவிலே இருந்துக்கிட்டே கோவா போகப் போறேன்னு சொல்லுறாளே... அந்தப் பொண்ணு லூசு போலன்னு நினைச்சேன். கடைசியில் நான் தான் அந்த லூசா?'' என்று புலம்பினாள்.

''அந்தப் பொண்ணு என்கிட்ட என்ன பேசினாள்னு கேட்டே இல்லே... உங்களுக்கு என்னோட ஆழ்ந்த அனுதாபங்கள்னு சொல்லிட்டுப் போனாள். அதுக்கு அர்த்தம் அப்போ எனக்குப் புரியல, இப்ப தான் புரியுது.'' என்று கூறிக் கொண்டே அவன் தன் சிரிப்பை அடக்கினான்.

''ஏன் பெங்களூரு வந்திருக்கோம்?''

''கோவாவில் இருந்து சென்னைக்கு ஃப்ளைட் டிக்கெட் கிடைக்கலை. பெங்களூரு'ல் இருந்து தான்



ஃப்ளைட் டிக்கெட் கிடைச்சது. அதான் கோவாவில் இருந்து இங்க டாக்ஸியிலே வந்தோம்.''

''என்னால உங்களுக்கு தண்டச் செலவு ஆகிடுச்சு இல்ல? சாரி.''

''பணம் போனாப் போகுது விடுடா. இதுக்கு எதுக்கு சாரி சொல்லுறே?''

''கோவா இப்படி இருக்கும்னு நான் நினைக்கவே இல்லைங்க.''

''இப்போ அங்க பீக் சீசன். தண்ணி அடிக்க மட்டுமே கும்பல் வரும் நேரம். இதே நீ சம்மரில் வந்து பாரு... ஃபாமிலியா கூட்டம் கூட்டமா குட்டீஸோட வருவாங்க. அப்ப உனக்கு வித்தியாசமா தெரியாது. நாமளும் சம்மரிலே கோவா போகலாம்டா.''



# 7

அவர்கள் சென்னை வந்து சேர்ந்தனர். பெட்டியை எடுப்பதற்காக காத்திருந்த வேளையில் சாருமதி யிடம் வந்து யாரோ ஒருவன் பேசினான்.

பெட்டியை எடுத்து டிராலியில் வைத்து தள்ளிக் கொண்டு சாருமதியை நோக்கி நகர்ந்த சஞ்சய் முதலில் அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டான். ஆனால் சாருமதியின் வெளிறிய முகத்தை கண்டவன் அவளருகில் விரைந்தான்.

''யாரு சாரு?'' என்று சஞ்சய் விசாரிக்க,

''என் காலேஜ் சீனியர் ஜோசப்!'' என்று சாருமதி ஒரு தயக்கத்துடனே அறிமுகம் செய்து வைத்தாள்.

அவனிடம் கை குலுக்குவதற்காக சஞ்சய் தன் கரத்தை நீட்டுவதற்குள் அந்த ஜோசப் சாருமதியிடம், ''உன்னை லவ் பண்ணுறேன்னு எத்தனை தடவை உன்கிட்ட சொன்னேன். அதை காதிலே வாங்காமல் இவனை கல்யாணம் பண்ணி இருக்க. அப்படி என்கிட்ட இல்லாத எது இவன்கிட்ட இருக்கு?'' என்று கேட்டான்.

சஞ்சய் தன் புருவத்தை உயர்த்தினான். சாருமதி ஜோசப்பின் பேச்சினால் மிரண்டாள். கணவன் தன்னைத் தவறாக எடுத்துக் கொள்வானோ என நினைக்கும் போதே அவளுக்கு வியர்க்க ஆரம்பித்தது. சாருமதியை முந்திக் கொண்டு சஞ்சய் பதிலளித்தான்.

''என் மாமனாருக்கு லவ் மேரேஜ் பிடிக்காது. அதனால சாருவுக்கு யாரையும் லவ் பண்ணுற எண்ணம் இல்லை. நீங்க கிறிஸ்டியன் என்பதால அவங்க அப்பா ஏத்துக்க மாட்டார். அதான் சாரு உங்களுக்கு நோ சொல்லி இருப்பாள்.'' என்று பொறுமையாக எடுத்துரைத்தான்.

இப்போது ஜோசப் நேராக சஞ்சயிடமே மோத ஆரம்பித்தான்.

''அப்போ நீ ஹிந்து என்பது தான் உனக்கான தகுதியா?''



''இல்லை. நீங்க ஒன் சைடா லவ் பண்ணிய பொண்ணுக்கு கல்யாணம் ஆகிடுச்சுன்னு தெரிஞ்சும் ஒதுங்கிப் போகாமல் அவ ஹஸ்பண்ட் முன்னாடியே அநாகரீகமா பேசிக்கிட்டு இருக்கிற உங்ககிட்ட கூட... நான் பொறுமையா விளக்கம் சொல்லிக்கிட்டு இருக்கேனே! அந்தப் பண்பு தான் எங்க மாமனாருக்கு ரொம்பப் பிடிச்சுப் போய் தன் பொண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணிக் குடுத்திருக்கார்.''

சாருமதி கணவனின் பேச்சை கேட்டு இயல்பு நிலைக்குத் திரும்பினாள்.

''ஆனா பாருங்க மிஸ்டர். ஜோசப் நான் எல்லா நேரமும் இப்படி அமைதியா போக மாட்டேன். இன்னொரு தரம் இது மாதிரி ஏதாச்சும் உளறிக்கிட்டு என் முன்னாடி வந்து நின்னா...'' என்று கடுமையான குரலில் சஞ்சய் மிரட்டிக் கொண்டிருக்கும் போது,

''ஹாய் சஞ்சய்!'' என்ற குரல் அவன் பின்னால் கேட்டது. அங்கே சிட்டி கமிஷனர் நின்று கொண்டு இருந்தார்.

''ஹலோ அங்கிள்!'' என்று சஞ்சய் அவருடன் பேச ஆரம்பித்தான். அவர் கமிஷனர் என்பதை தெரிந்து வைத்திருந்த ஜோசப் அங்கிருந்து நழுவினான்.

'தொடை நடுங்கிப் பயல்!' என்று சஞ்சய் தன் மனதில் திட்டிக் கொண்டான். அவர்கள் கமிஷனரிடம் இருந்து விடைபெற்று வெளியே வந்தார்கள்.

அவர்கள் தங்கள் காரில் ஏறி வீட்டை அடையும் வரை சாருமதியால் டிரைவரின் முன்னிலையில் சஞ்ச யிடம் எதுவும் பேச முடியவில்லை. சஞ்சய் தன் அலுவலகப் பேச்சுக்களை கைப்பேசியில் பேசிக் கொண்டே வந்தான்.

தங்களது அறைக்குள் நுழைந்ததும் சஞ்சய் குளிய லறைக்குள் சென்று மறைந்தான். வெளியே வந்தவன்,

''நீ போய் குளிச்சிட்டு வா சாரு. சாப்பிடலாம்.'' என்றதும் மறுபேச்சு பேசாமல் அவளும் குளிக்கச் சென்றாள்.

சாப்பிட்டு முடித்து தங்கள் அறைக்குள் வந்ததும், ''அந்த ஜோசப்...'' என்று சாருமதி சொல்லத் தொடங்க,

''அவனை விட்டுத் தள்ளுடா. அவன் வீரம் எவ்வளவுன்னு பார்த்தே இல்ல.'' என்றான்.

''நான் அவனை லவ் பண்ணலைங்க.''

''இப்ப எதுக்கு தேவையில்லாமல் எனக்கு விளக்கம் சொல்லுறே? எனக்கு உன்னை தெரியும்டா சாரு.''

அவள் அமைதியாக இருப்பதை கண்டவன், ''டயர்டா இருக்கா? தூக்கம் வந்தா தூங்கு.'' என்றான்.

கணவன் பேச்சை மாற்ற விரும்புகிறான் என்று சாருமதி புரிந்து கொண்டாள்.

''தூக்கம் வரலைங்க.''



''எப்படி வரும்? விடிய விடிய பெங்களூரு வந்தது கூடத் தெரியாமல் இல்ல தூங்கி இருக்க!''

''உட்கார்ந்துகிட்டே எப்படிங்க அசந்து தூங்கி னேன்?''

''உட்கார்ந்துகிட்டேவா? என் மடியிலே தலை வச்சு ஹாயா தூங்கிட்டு வந்தே. இந்த சஞ்சய் பாவம் தெரியுமா? விடிய விடிய உன்னை என் மடி தாங்கி இருக்கேன். என்னை ஸ்பெஷலா கவனிக்க மாட்டியா?'' என்று அவன் பாவம் போல் கேட்க,

''கவனிச்சிட்டா போச்சு!'' என்றவள் பொத்தென்று அவன் மடி மீது ஏறி அமர்ந்தாள்.

''ஆ!'' என்று வலியில் அலறியவன் அவளை படுக்கையில் உருட்டிவிட்டான்.

அவன் தன்னை நக்கல் பண்ணுகிறான் என்று தான் அவள் முதலில் நினைத்தாள். ஆனால் அவன் தன் தொடையை தடவிக் கொடுப்பதைக் கண்டவள்,

''நிஜமாவே வலிக்குதாங்க?'' என்று அதிர்ச்சி யுடன் கேட்டாள்.

''எட்டரை மணி நேரம்டா சாரு. அசையாமல் படுத்து இருந்தியா, அதான் கொஞ்சம் ஒரு மாதிரி இருக்கு. நீ பொத்துன்னு வந்து அந்த இடத்திலே உட்கார்ந்தியா...'' என்றதும்,

''சாரிங்க.'' என்று கூறி சாருமதி பொல பொல வென்று கண்ணீர் விடலானாள்.

''இப்ப எதுக்கு சாரு வீணா அழுதுக்கிட்டு இருக்க, கொஞ்ச நேரம் ஆனா தானே சரியாகிடப் போகுது. நீ கண்ணீர் விடுற அளவுக்கெல்லாம் வலிக்கலை. அழுகையை நிறுத்து!'' என்று கண்டிப்புடன் கூறி அவளது அழுகையை அடக்கினான். அவள் சமாதானம் ஆனவுடன்,

''ஒண்ணுமே இல்லாததுக்கு போய் வீணா அலட்டு றாள்.'' என்று அவன் முணுமுணுக்க,

''சஞ்சய் சார்க்கு கிஸ் குடுக்கலாம்னு நினைச்சேன். ஆனா சார் வலி ஒண்ணும் பெருசா இல்லைன்னு சொல்லிட்டார்'' என்று அவள் இழுக்கவும்,

''வலிக்கலைன்னு நான் எப்போ சொன்னேன்? நானே டாக்டர்கிட்ட போய் பெயின் கில்லர் வாங்க லாமான்னு யோசிச்சுக்கிட்டு இருக்கேனாக்கும்.'' என்று வேக வேகமாக மொழிந்தவன்,

''சாரு டாக்டர்! எனக்கு ஸ்பெஷல் பெயின் கில்லர் தாங்களேன்.'' என்று தன் கன்னத்தை அவள் புறம் திருப்பிக் காட்டினான்.

''வலி தொடையில தானே?'' என்று அவள் சந்தேகம் கேட்கவும்,

''இப்ப கைவலி கால்வலி வரும் போது மாத்திரையை கையும் காலுமா முழுங்குது? அது மாதிரி தான் இதுவும்!'' என்றதும்,

''லாஜிக்கு?'' என்று நக்கல் பண்ணியவள், ''பிழைச் சுக்குவீங்க!'' என்றாள்.



சாருமதி அவன் கன்னத்தில் முத்தம் பதிக்க அவனருகே நெருங்க, அவன் சரியாக அந்த நேரம் தன் முகத்தை திருப்பி அவள் தந்த முத்தத்தை தனது உதட்டில் வாங்கிக் கொண்டான்.

''இது போங்காட்டம்!'' என்று அவள் சிணுங்க,

''காதலிலே எல்லாமே சரி தான்.'' என்றவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

சிறிது நேரம் கழித்து அவன் அலுவலகம் செல்வ தற்காக கிளம்பவும் அவள் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.

''ரெண்டே நாள் மட்டும் வேலைக்கு போயிட்டு வரேன்டா சாரு. ப்ளீஸ்!'' என்று கூறி விடைபெற் றவன் தனது பெற்றோரிடம் சென்றான்.

''ஆபிஸ் வரியா சஞ்சய்?'' என்று ராதாகிருஷ்ணன் மகனிடம் கேட்டார்.

''ஆமாம்பா.''

''மதி என்னடா சொல்லுறா?''

''ஒரே புலம்பல் தான். பணம் வேஸ்டா போச் சேன்னு.''

''எல்லாம் உன்னால தான் சஞ்சய். நீ மட்டும் ஹனி மூன் பத்தி முதல்லயே சொல்லி இருந்தா இப்படி நடந்திருக்காது இல்ல?'' என்று ராதாகிருஷ்ணன் மகனைக் கடிந்து கொண்டார்.

''சர்ப்ரைஸ் குடுக்கலாம்னு நினைச்சேன்பா.''

''என்ன சர்ப்ரைஸோ? பணம் வேஸ்ட். அலைச்சல். மனக் கஷ்டம். சர்ப்ரைஸ் குடுக்கிறேன் பேர்வழின்னு நீ உண்மையைச் சொல்லாமல் விட்டுட்ட. ஆனா புலம்பறது என்னவோ அவள்! பணம் போனா போகுது. புலம்பாமல் இருக்கச் சொல்லு. இனிமே எதையும் யோசிச்சு செய்யணும்னு பாடம் கத்துக்கிட்டு இருப்பா இல்ல. அது போதும்!'' என்று கூறிக் கொண்டே கோமளம் அறையை விட்டு வெளியேறினார்.

''அதை சொல்லுறது யாருன்னு பாருடா. வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பேசுற உங்க அம்மா!'' என்று ராதாகிருஷ்ணன் தன் மனைவியைக் கிண்டல் பண்ணினார்.

''ஆனா அம்மா நம்ம ரெண்டு பேர்கிட்ட தான்பா இப்படி நினைச்சதை எல்லாம் பேசுறாங்க. மத்த வங்ககிட்ட அது மாதிரி பேசி நீங்க பார்த்து இருக் கீங்களா?''

''அது என்னமோ வாஸ்தவம் தான்டா. நம்ம ரெண்டு பேரையும் தான் ஆட்டி வைப்பாள். மத்த வங்ககிட்ட எல்லாம் அவங்க பேசுறதுக்கு எதிர் பேச்சு பேசாமல் சாந்த சொரூபின்னு பேர் வாங்கிடு வாள்.''

''நம்ம கிட்டவாச்சும் இயல்பா இருக்காங்களே! அநியாயமா என்னைக்கும் பேசினது இல்லை. தனக்கு நியாயம்னு பட்டதை பட்டுன்னு யோசிக்காமல் சொல்லுவாங்க.''



''மதி ரொம்ப புலம்புறான்னா நீ அவ கூட வீட்டி லேயே இரேன்டா.''

''இல்லைப்பா. கொஞ்சம் சைட் வரைக்கும் போயிட்டு அதுக்கு அப்புறமா வேணா வீட்டுக்கு வரேன்.''

''சரி வா ஆபீஸ் கிளம்பலாம்.''

அவர்கள் இருவரும் அலுவலகம் சென்றனர்.



# 8

புகுந்த வீட்டிற்குள் நுழைந்த மூன்றே நாளில் தன்னால் பணம் வீணானதால் தன் மாமியார் ஏதேனும் சொல்வாரோ என சாருமதி பயந்தாள். ஆனால் கோமளம் தன் மருமகளிடம் கோவா போய் வந்ததை பற்றி ஒன்றுமே கேட்கவில்லை என்றதும் நிம்மதி யானாள்.

அன்றும் சஞ்சய் நேரம் சென்றே வீடு திரும்பி னான். மறுநாள் காலையும் அவன் அலுவலகம் கிளம்ப முற்பட,

'இது தான் பத்து நாளைக்கு என் கூட இருக்கிறது போல!' என்று சாருமதி நினைத்துக் கொண்டாள். வருத்தத்தோடு அவர்கள் அறைக்குள் உலவினாளே தவிர கணவனிடம் எதையும் கேட்கவில்லை.

அவளை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே அலுவலகம் கிளம்பிக் கொண்டிருந்த சஞ்சய் புன்னகைத்துக் கொண்டான். அவள் முன் வந்து நின்றவன்,

''என்கிட்ட ஏதாச்சும் கேட்க நினைக்கிறியா சாரு?'' என்றான்.

''இல்ல, எதுவும் கேட்க நினைக்கலை.''

''நான் ஆபிஸ் போகும் முன்னாடி மறக்காமல் கமிஷனர் அங்கிளை மீட் பண்ணி ஒரு கம்ப்ளைண்ட் எழுதி குடுக்கணும்.''

''கம்ப்ளைண்டா? எதுக்கு?''

''என் வைஃபை காணலை. டிவியிலே பேப்பரிலே எல்லாம் விளம்பரம் குடுத்து தேடப் போறேன்.'' என்று சிரிக்காமல் அவன் கூறினான்.

''அப்ப நான் யாரு?''

''கண்டிப்பா நீ என் வைஃப் இல்லை.'' என்றதும் அவள் முறைத்தாள்.

''பார்த்த முதல் சந்திப்பிலேயே என்னை லூசுன்னு சொன்ன சாரு எங்கே போனாள்னு தெரியலை. இப்ப ரெண்டு நாளா மனசிலே உள்ளதை வாய்விட்டுக் கேட்காமல் வெறும் காத்து தாங்க வருதுன்னு சொல்லுற தேவர் மகன் ரேவதி இல்ல இங்க இருக்காங்க.''

''இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்லு நீங்க?''



''என்னை நிக்க வச்சு நீ கேட்க நினைக்கிறதை பட்டுன்னு கேட்க வேண்டாமா!'' என்றதும் அவன் சட்டை காலரை கொத்தாகப் பற்றியவள்,

''பத்து நாள் என் கூட இருக்கேன்னு சொன்னீங்களே! இதான் கூட இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''சூப்பர்டா சஞ்சய்! ஒரே நிமிஷத்திலே யாரோட ஹெல்பும் இல்லாமல் உன் வைஃபை தேடிக் கண்டு பிடிச்சிட்ட!'' என்று தன் தோளில் தானே தட்டிக் கொண்டான்.

அவள் அவனது சட்டை காலரை விட்டதும் அவளை கைப்பிடித்து அழைத்துச் சென்று படுக்கையில் அமர வைத்து தானும் அவள் அருகில் அமர்ந்தான்.

''பத்து நாள் உன் கூடவே தான்டா இருக்கப் போறேன் சாரு. நாளை மறுநாள் அதிகாலையிலே நாம விஷ்...'' என்று ஒலி எழுப்பியவன் தனது வலது கையால் விமானத்தில் பறப்பது போல் செய்து காண்பித்தான்.

''ஃப்ளைட்டிலே போறோமா?'' என்று அவள் ஆச்சரியத்துடன் கேட்க,

''யெஸ். நாம ரெண்டு பேரும் பறக்கப் போறோம்.''

''எங்கே?''

''ஹனிமூனுக்கு. ஸ்விசர்லாண்ட்.''

''வாட்ட்ட்ட்?!'' என்று அவள் ஏகத்துக்கும் அதிர்ச்சி காட்ட,

''மெதுவா மெதுவா...'' என்று சிரித்துக் கொண்டே கூறினான்.

''ஸ்விசர்லாண்டுக்கா ஏற்பாடு பண்ணி இருக்கீங்க? அவ்வளவு தூரம் ஏன்?''

''நீ ஒரு தடவை போனிலே பேசும் போது என்ன சொன்னே... என்றென்றும் புன்னகை படத்தோட கொஞ்ச சீன்ஸ் ஸ்விஸ்'லே ஷூட் பண்ணி இருந்தாங்க. பார்க்க சூப்பரா இருந்துச்சுன்னு சொன்னே இல்ல. அதான்.''

''நான் நல்லா இருக்குன்னு சொன்னதுக்காகவா அங்க போறதுக்கு அரேஞ்ச் பண்ணுனீங்க? நான் என்ன ஆசைப்பட்டாலும் நிறைவேத்துவீங்களா?''

''என்னால முடிஞ்சா கண்டிப்பா நிறைவேத்துவேன்!'' என்று அவன் அழுத்தத்துடன் உரைக்க, அவனை இமைக்க மறந்து பார்த்தாள்.

அவள் கண் முன்னே சொடக்குப் போட்டவன், ''ஃப்ரீஸ் ஆகிட்டியா சாரு?'' என்று கேட்டான்.

''விசா வாங்கிட்டீங்களா? என் பாஸ்போர்ட் எப்படி கிடைச்சது?''

''என் மாமனார் என்னை நம்பி தன் பொண்ணையே தரும் போது பாஸ்போர்ட்டை தர மாட்டாராடா சாரு?''

''அப்ப எங்க அப்பாவுக்குத் தெரியுமா?''

''உன்னைத் தவிர எல்லோருக்கும் தெரியும். உனக்கு சர்ப்ரைஸ் குடுக்கலாம்னு நினைச்சேன்டா சாரு.



அதான் இத்தனை நாளா உன்கிட்ட ஹனிமூன் பத்தி பேசலை. தொடர்ச்சியா லீவு எடுக்க முடியாதுங்கிறதால தான் கல்யாணம் முடிஞ்சு ஒரு நாலு நாள் கொஞ்சம் வேலையை பார்த்து வச்சுட்டு கிளம்பலாம்னு நினைச்சேன். அதனால தான் மறுவீட்டுக்கு போன போது கூட உங்க வீட்டிலே தங்கலை.''

''ஐயோ! என்னால நம்பவே முடியலைங்க'' என்று ஆர்ப்பரித்தவள், ''அங்க குளிர் ஜாஸ்தியா இருக்குமே. ஜெர்கின் வாங்கணுமே.'' என்றாள்.

''இவ்வளவு வாங்கத் தெரிஞ்சவனுக்கு அதை வாங்கத் தெரியாதா? எல்லாம் ரெடி. பெட்டியை கட்டிட்டு கிளம்ப வேண்டியது தான் பாக்கி.''

''நீங்க இவ்வளவு தூரம் ஏற்பாடு பண்ணியது தெரியாமல் நான் வேற தனியா ஏற்பாடு பண்ணி, சூப்பரா சொதப்பி...'' என்று அவள் வருத்தப்பட,

''போதும் சாரு! இனிமேல் நீ கோவா டிரிப் பத்தி எதுவும் பேசக் கூடாது. யூ ஆர் மை வைஃப். என் பணமெல்லாம் உனக்கு தான். தெரியாமல் ஒரு முறை தப்பு பண்ணிட்டே. அதை இனிமே ரிபீட் பண்ணாமல் பார்த்துக்கிறதை விட்டுட்டு அதையே நினைச்சு புலம்பக் கூடாது. இந்த சஞ்சயும் அவன் சம்பாதிக்கிறதும் உனக்கு மட்டும் தான்.''

''உங்க அம்மா கேட்டா கோவிச்சுக்கப் போறாங்க.''

''ஏற்கனவே அம்மா என்னை தான் திட்டுறாங்க. நீ சர்ப்ரைஸ் குடுக்கிறேன்னு சொல்லி அந்தப் பொண்ணை புலம்ப வச்சுட்டியேடான்னு.''

''நான் அதை சொல்லலை. உங்க பணமெல்லாம் எனக்கு தான் என்று சொன்னீங்க இல்ல. அதுக்கு சொன்னேன்.''

''எங்க அம்மா திட்ட மாட்டாங்க. ஆனா எங்க அப்பா தான் உன் மேல கோவிச்சுக்குவார். ஏம்மா மதி என்னால என் வைஃபுக்கு சம்பாதிச்சு குடுக்க முடியாதுன்னு நினைச்சுட்டியா? ஐயம் ஸ்டில் யங் யூ நோ?! அப்படின்னு சொல்லுவார்.'' என்றதும் சாருமதி புன்னகைத்தாள்.

''அப்புறம் மேடம் உத்தரவு குடுத்தீங்கன்னா நான் வேலைக்கு கிளம்புவேன்.''

''இங்க எதுக்கு வெட்டியா நின்னு கதை பேசிக் கிட்டு இருக்கீங்க. கிளம்புங்க! கிளம்புங்க!'' என்று விரட்டியவளின் கன்னத்தில் முத்தமொன்றை பதித்து விட்டு விடைபெற்றான்.

''வேஷம் போடுறதிலே சொதப்பினாலும் இதிலே தெளிவா தான் இருக்கார்.'' என்று சாருமதி தன் கணவனை பாராட்டிக் கொண்டாள்.

அவர்கள் இருவரும் ஸ்விசர்லாந்து சென்று இறங்கி னார்கள். அந்த ஊரின் இயற்கை அழகைக் கண்டு சாருமதி சந்தோஷத்தில் குதியாட்டம் போட்டாள்.

''சோ லவ்லி!'' என்று அவள் வியந்ததும்,



''இந்த சஞ்சயை பார்த்துக் கூட நீ அப்படி சொல்ல லாம்டா சாரு!'' என்றான்.

''நீங்களா? லவ்லியா? நெவர்!'' என்று கூறி சிரித் தவள் இயற்கையை ரசிக்க ஆரம்பிக்க, சஞ்சய் அந்த இடத்திலேயே அமர்ந்து கொண்டான்.

''என்ன பண்ணுறீங்க? எழுந்துக்கோங்க!''

''நோ! நீ ஐ லவ் யூ சொன்னால் தான் நான் எழுந் துக்குவேன்.'' என்று அவன் அடம் பிடித்தான்.

''அச்சோ! எல்லோரும் பார்க்கிறாங்க.''

''பார்த்தா பார்க்கட்டும். இவங்க எல்லாம் என் மாமன் மச்சானா என்ன? ஏன் சஞ்சய் இப்படி அழிச்சாட்டியம் பண்ணுறேன்னு என்கிட்ட வந்து கேட்கவா போறாங்க?'' என்று கூறி எழுந்து கொள்ள மறுத்தான்.

''ப்ளீஸ் சஞ்சய். கெட் அப்!''

''நீ சொல்லு. அதுக்கு அப்புறம் நான் எழுந்துக் கிறேன்.''

''நீங்க எழுந்திருங்க. நான் சொல்லுறேன்'' என்றதும் எழுந்து நின்றான்.

அவன் எதிர்பார்ப்போடு அவளையே பார்த்திருக்க, அவள் அவனது கண்களை நேராக நோக்கினாள். அவள் கண்களில் பளீரிட்ட காதலே போதும் என்று அவனுக்குத் தோன்றியது. இருப்பினும் அவளது வாய்மொழியாக வெளிப்படும் காதலை அறிந்து கொள்வதற்காக அமைதியாக நின்றான்.

"எனக்கு சர்ப்ரைஸ் குடுக்கிறேன்னு வேஷ
போட்டு, புது நம்பரில் இருந்து வாய்ஸ் மாத்திமாத்
போன் பண்ணி, நீங்க செஞ்ச சின்னச் சின்ன
கோமாளித்தனமான விஷயங்கள் எல்லாம் நீங்க எ
மேல வச்சிருக்கிற அன்பை எனக்கு உணர்த்துச்சு.

"அன்னைக்கு ஏர்போர்ட்டிலே ஜோசப் வந்தப்போ
அவனை பத்தி நான் உங்ககிட்ட ஒண்ணுமே சொன்ன
தில்லை. ஆனாலும் என் மேல நீங்க வச்ச நம்பிக்கை,
நீங்க என்னை எந்த அளவுக்கு நம்புறீங்க, காதலி
கிறீங்கன்னு எனக்கு காட்டுச்சு. நான் அந்த அளவுக்
உங்களால காதலிக்கப்படுறேன்னு உணரும் போது
ஐ ஃபீல் கிரேட்"

அவள் தன் காதலை மூன்றே வார்த்தையி
தெரிவிப்பாள் என நினைத்து அவன் காத்திருக்க
அவள் நீளமாகப் பேசியதை சஞ்சய் ரசித்துக் கேட்டு
கொண்டிருந்தான்.

"I love you, not only for what you are, but fo
what I am when I am with you." என்று கூறியவ
அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

சஞ்சயின் மனம் நிறைந்தது. அவளது காதில்
"தாங்க்ஸ்டா சாரு!" என்று குரல் தழுதழுக்க
கூறினான்.

அவர்கள் தேனிலவை முடித்துக் கொண்
சென்னை திரும்பினார்கள்.





# 9

சஞ்சய் தன் மனைவியை தங்களது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றான்.

"ஆபிஸில் உனக்கு தனி கேபின் வேணும்னா ஏற்பாடு பண்ணுறேன் சாரு. இல்ல என் ரூமிலேயே உனக்கு ஒரு ஓரமா இடம் ஒதுக்கி தரேன். இல்ல நம்ம வீட்டிலே இருந்துக்கிட்டே கூட நீ உன் வேலையை பார்க்கலாம். தேவைன்னா மட்டும் ஆபிஸ்க்கு வந்தா போதும். உன் இஷ்டப்படி செய்." என்றான்.

"என்னால வேலை செய்ய முடியுமாங்க? எனக்கு முன் அனுபவம் இல்லையே."

"நான் ஹெல்ப் பண்ணுறேன். கவலைப்படாதே சாரு." என்றதும் தலையாட்டினாள்.

சாருமதி ஒரு நாள் முழுவதும் அவன் கூடவே இருந்து பார்த்தாள். அவன் வேலை செய்யும் நேர்த்தியையும், அடுத்தவரை தட்டிக் கொடுத்து வேலை வாங்கும் விதத்தையும், அவனது கூரிய அறிவாற்றலையும் கண்டவள் அதிசயித்தாள்.

தன்னிடம் விளையாட்டு பிள்ளையாய் காட்சி அளிக்கும் கணவனின் இன்னொரு முகத்தை கண்டவள், 'இவன் என் கணவன்!' என பெருமையுடன் நினைத்துக் கொண்டாள்.

அவள் வீட்டிலிருந்தபடியே தன் கணவனுக் உதவியாக வேலை செய்ய ஆரம்பித்தாள். தேவை ஏற்பட்டால் மட்டும் கணவனின் அலுவலகத்திற்கு கட்டுமான பணி நடக்கும் இடத்திற்கும் சென் வந்தாள்.

திருமணமாகி இரு மாதங்கள் கடந்தன. அன் சஞ்சய் சீக்கிரமே அலுவலகம் சென்றுவிட்டான்.

காலைச் சிற்றுண்டியை சாப்பிட்டு முடித் சாருமதி தங்களது அறைக்குத் திரும்பினாள். சாப்பிட் உணவு அனைத்தையும் அவள் வாந்தி எடுத்தாள்.

தனக்குள் கணக்கிட்டுப் பார்த்தவள் தான் கர்ப் மாக இருக்கக் கூடும் என்று நினைத்தாள். மருத்துவ மனைக்கு சென்று பரிசோதிக்க விரும்பி வெளியே செல்லத் தயாராகி வந்தாள்.

''கொஞ்சம் வெளியே போயிட்டு சீக்கிரமா வந்து றேன் அத்தை '' என்று சாருமதி கோமளத்திட கூறவும்,

எங்கே போகிறாய் என்று விசாரிக்காமல், ''பத்திரம போயிட்டு வாம்மா. செல்போன் வச்சிருக்க இல்ல? என்று மட்டும் அவர் கேட்டார்.

''இருக்கு அத்தை. போயிட்டு வரேன்.'' என்று கூறி கிளம்பியவள் மருத்துவமனைக்கு சென்று அங்கிருந் பெண் மருத்துவரிடம் தன் சந்தேகத்தை கூறினாள்.

அவரும் அவளை சோதித்துப் பார்த்துவிட்டு அவளத சந்தேகம் உண்மை தான் என்று ஊர்ஜிதப்படுத் தினார்.



அந்த நல்ல விஷயத்தை தன் கணவனிடம் தான் முதலில் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்தவள் வீட்டிற்கு விரைந்து செல்ல எண்ணினாள். அதற்கு முன் தன் கணவனை வீட்டிற்கு வரச் சொல்ல நினைத்தாள்.

அவள் மருத்துவமனை வாயிலில் நின்று கொண்டு தனது கைப்பேசியை எடுத்துக் கொண்டு நிமிர்ந்த போது, சஞ்சயின் கார் எதிரே உள்ள மாலுக்குள் நுழை வதை கண்டாள்.

''அட சூப்பர்!'' என்று கூறிக் கொண்டவள், அவனை அழைக்காமல் அந்த கட்டிடத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அந்த மாலுக்குள் நுழைந்தவள் 'எங்கே போனார்?' என்று சுற்றிலும் தன் பார்வையை சுழலவிட்டாள். தூரத்தில் சஞ்சய் எஸ்குலேட்டரில் ஏறிப் போவதை பார்த்தவள் அவனை பின் தொடர்ந்தாள்.

அவன் அங்கே உள்ள உணவகத்தை நோக்கிப் போனான். இவளும் பின் தொடர நினைக்க, சஞ்சய் ஒரு பெண்ணின் அருகே அமர்ந்து பேச ஆரம்பித் தான்.

'இவ யாரு? இவளை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே!' என்று யோசித்துப் பார்த்தாள். அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

'யாரா வேணா இருந்துட்டுப் போகட்டும்' என்று தனது தோளை குலுக்கியவள் கணவன் அருகே செல்வதா வேண்டாமா என்று குழம்பினாள்.

அவனது அலைபேசிக்கு அழைத்தவள், ''எங்கே இருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''முக்கியமான மீட்டிங்கிலே இருக்கேன் சாரு.'' என்று அவன் தன் குரலை தழைத்துக் கொண்டு கூற,

'இவ கூடப் பேசுறது தான் இவருக்கு முக்கியமாப் போச்சா!' என்று சாருமதிக்கு எரிச்சல் தலை தூக்கியது.

''நீங்க உடனே வீட்டுக்கு வாங்க!'' என்று உத்தரவு பிறப்பித்தாள்.

''இப்ப உடனே வர முடியாது சாரு.''

''இல்ல நீங்க வந்து தான் ஆகணும்.''

''என்ன விஷயம்னு சொல்லு?''

போனில் அந்தத் தகவலை சொல்ல மனமில்லாமல், ''நீங்க வீட்டுச்கு வாங்க. நான் அப்புறமா சொல்லுறேன்.'' என்று அவள் அடம்பிடிக்க,

''நான் கொஞ்சம் பிஸியா இருக்கேன். புரிஞ்சுக்கோ சாரு. நான் அப்புறமா பேசுறேன்.'' என்று கூறி அவன் அழைப்பை துண்டிக்கவும்,

'உங்களுக்கே விஷயத்தை தெரிஞ்சுக்கிறதிலே இன்ட்ரஸ்ட் இல்லைன்னா எனக்கு என்ன வந்துச்சு?' என்று கணவனை மனதிற்குள் திட்டிக் கொண்டே வீட்டிற்கு திரும்பிச் சென்றாள்.

ஒரு மணி நேரம் கழித்து அழைத்தவன், ''எதுக்கு சாரு கூப்பிட்டே?'' என்று கேட்டான்.



''ஒண்ணுமில்ல. சும்மா தான் கூப்பிட்டேன்.'' என்று மட்டுமே கூறினாள்.

''ரொம்ப பிஸியா இருக்கேன் சாரு. நைட் சீக்கிரமா வரப் பார்க்கிறேன்.'' என்று கூறிவிட்டு போனை வைத்தான்.

மாலையில் கோமளத்திடம் வந்தவள், ''கோவிலுக்கு போவோமா அத்தை?'' என்று கேட்டாள்.

எப்போதும் எங்கே செல்லப் போகிறேன் என்று சொல்லிவிட்டுச் செல்லும் மருமகள் இன்று காலையில் ஒன்றுமே சொல்லாமல் சென்றதை ஏற்கனவே கோமளம் தன் மனதில் குறித்து வைத்திருந்தார்.

அவளது முகத்தில் இருந்த சோர்வையும் கவனித்துக் கொண்டு தான் இருந்தார். அவள் கோவிலுக்கு போவோமா என்று கேட்டதும் மருமகள் உண்டாகி இருக்கக் கூடும் என அவர் கணக்கிட்டார்.

மகனிடம் சொன்ன பிறகு தன்னிடம் கூறுவாள் என எதிர்பார்த்தவர் அவளிடம் ஒன்றும் கேட்காது அவளை கோவிலுக்கு அழைத்துச் சென்றார்.

திரும்பி வந்த சாருமதி தன் அறையில் தன் படுக்கையில் அமர்ந்து கொண்டு 'குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்?' என யோசிக்க ஆரம்பித்தாள்.

தங்கள் இருவரின் பெயர்களில் உள்ள எழுத்துக்களை கொண்டு ஏதாவது பெயர் வைக்க முடியுமா என்று ஒரு பேப்பரில் எழுதிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சஞ்சய் வீட்டிற்குள் நுழைந்தான். கோமளம் தன் மகனுக்கு விபூதியை பூசிவிட்டார்.

''என்னம்மா கோவிலுக்கு போனீங்களா?''

''மதி கோவிலுக்கு கூப்பிட்டாள். கூட்டிட்டு போயிட்டு வந்தேன்.''

மகனது முகத்தில் சந்தோஷக் களை தெரிகிறதா என்று அவனை உற்றுப் பார்த்தார். அவர் எதிர்பார்த்த மலர்ச்சி இல்லை என்றதும் அமைதியானார்.

அறைக்குள் நுழைந்த சஞ்சய், ''என்ன செய்யுறீங்க மேடம்?'' என்று கேட்டான்.

அவன் தன்னருகே வந்ததும் சாருமதி தான் எழுதிக் கொண்டிருந்த பேப்பரை படுக்கையில் வைத்தாள். அதன் மேல் ஒரு தலையணையை வைத்து அதை மறைத்தாள்.

''என்ன எழுதிக்கிட்டு இருக்கே?''

''ஒண்ணுமில்ல.''

அவன் படுக்கையில் ஏறி தன் மனைவியின் மடியில் படுத்துக் கொண்டான். அவள் பேசாது அமைதியாக அவனை பார்த்திருக்க,

''சாரு மேடம் ரொம்பக் கோபமா இருக்காங்க போல!'' என்றான்.

அவன் அவளது முகத்தையே பார்த்திருக்க, அவள் அவனிடம் சொல்லலாமா வேண்டாமா என்பது போல் தவித்துக் கொண்டிருந்தாள்.



''மேடத்தோட கோபத்தை குறைக்க இந்த சஞ்சய் என்ன செய்யணும்னு எதிர்பார்க்கிறாங்க?''

''..........''

''தோப்புக்கரணம் போடணுமா? இல்ல வேற ஏதாச்சும் பனிஷ்மெண்ட் எனக்குக் காத்திருக்கா?''

அவள் அதற்கும் பதில் சொல்லாமல் அமைதியாக இருக்கவும்,

சஞ்சய் அவளது புடவையை விலக்கி அவளது வயிற்றில் ஒரு முத்தம் பதித்து, ''குட்டி! நீங்க அப்பா வுக்காக அம்மாகிட்ட ரெகமண்ட் பண்ணக் கூடாதா?'' என்று கேட்டான்.

அவனது முகத்தை தனது வயிற்றில் இருந்து விலக்கினாள். தனது கோபத்தை கைவிட்டவளாய்,

''ஹேய்! உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது?'' என்று உற்சாகமாய் கூவினாள்.

அவன் எழுந்து அமர்ந்து அவளது இரு கன்னத் திலும் முத்தம் பதித்து, ''கங்கிராட்ஸ் சாரு. ஐயம் சோ ஹாப்பி!'' என்றவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ஸ்வீட் எடு கொண்டாடு.'' என்று அவன் சாக் லெட் ஒன்றை நீட்டவும், அதை வாங்கிக் கொண் டவள்,

''உங்களுக்கு எப்படித் தெரியும்னு கேட்டேனே'' என்றாள்.

''ஒண்ணும் ஒண்ணும் ரெண்டுன்னு இந்த சஞ்சய்க்கு நல்லாவே கணக்குப் போடத் தெரியும்டா சாரு.''

''கால்குலேட்டர் இல்லாமலேவா? பாருடா இந்த அதிசயத்தை!'' என்று நக்கல் பண்ணியவள், ''ப்ச்... சொல்லுங்க!'' என்று சிணுங்கினாள்.

''மூணு நாளா ரொம்ப சோர்வா இருக்க... என்னைக்கும் இல்லாத திருநாளா அன்டைமிலே வீட்டுக்கு வாங்கன்னு அடம் பிடிச்சே! வீட்டுக்கு வந்தா நீயும் அம்மாவும் கோவிலுக்கு போனதா அம்மா சொல்லுறாங்க. அம்மா என்னையவே குறுகுறுன்னு வேற பார்த்தாங்க. அவங்களே கண்டுபிடிச்சு இருப்பாங்கன்னு நினைக்கிறேன். ரூமுக்குள்ள வந்தா மேடம் இப்பவே பேர் வைக்க டிரை பண்ணிக்கிட்டு இருக்கீங்க.''

''இதை வச்சே கண்டுபிடிச்சுட்டீங்களா?''

''ஐயாவோட சாமர்த்தியத்தை என்னன்னு நினைச்சே? எனக்கு பொய்யைச் சரியா சொல்லத் தெரியலை. ஃப்ராடு வேலை செஞ்சு பழக்கம் இல்லை. அதான் நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி அப்படி சொதப்பினேன். அதுக்காக உன் ஹஸ்பண்ட் ஒண்ணுத்துக்கும் லாயக்கில்லாதவன்னு நினைச்சியா? ஹி இஸ் எ ப்ரிலியண்ட் மேன் யூ நோ?'' என்றதும் அவள் புன்னகைத்துக் கொண்டாள்.

''எல்லாம் தெரிஞ்சும் நீங்க உடனே வீட்டுக்கு வரலை இல்ல...'' என்று அவள் முறுக்கிக் கொண்டதும்,



''கொஞ்சம் டவுட் இருந்துச்சுடா. வீட்டுக்கு வந்து தானே நானே கன்ஃபர்ம் பண்ணினேன்.'' என்று அவளைச் சமாதானம் பண்ண முயன்றான். அவள் ஒன்றும் பேசாமல் இருக்கவும்,

''நிஜமாவே வேலை ரொம்ப இருந்துச்சுடா சாரு.'' என்றான்.

''நான் காலையில கூப்பிட்ட போது என்ன செஞ்சீங்க?''

''அதான் முக்கியமான மீட்டிங்குன்னு சொன்னேனே.''

''ஆபிஸிலா?''

''இல்லடா மால்'ல தான் மீட்டிங். நம்ம கமிஷனர் அங்கிள் பொண்ணு மித்ரா இல்ல, அவளைப் பார்க்க போனேன்.''

'ஓ! அவள் கமிஷனர் அங்கிள் பொண்ணா? அதான் பார்த்த மாதிரி இருந்துச்சா?' என்று நினைத்துக் கொண்டாள்.

''அவ யாரையோ லவ் பண்ணுறதா அங்கிளுக்கு சந்தேகம். துப்பறிய வெளி ஆளுங்களை அனுப்புறதிலே அவருக்கு இஷ்டமில்லை. அதான் அங்கிள் என்னைத் தேர்ந்தெடுத்து அவகிட்ட பேசிப் பார்க்கச் சொன்னார். விஷயமும் வெளியே தெரியாது இல்லையா?''

''அவ உங்களுக்கு ரொம்ப க்ளோஸ் ஃப்ரண்டா?''

''அப்படிச் சொல்ல முடியாது. நானும் அவளும் நேரில் பார்த்தா நல்லாப் பேசிக்குவோம். ஆனா அடிக்கடி மீட் பண்ணிக்கிட்டது கிடையாது.''

''நீங்க அவகிட்ட அவ லவ் பத்தி கேட்டீங்களா? என்ன சொன்னாள்?''

''அவ அங்க போறதை தெரிஞ்சுக்கிட்டு நானும் போனேன். தற்செயலாப் பார்த்த மாதிரி அவகிட்ட பேச ஆரம்பிச்சேன். என் ஃப்ரண்டு ஒருத்தனுக்கு அவ மேல இன்ட்ரஸ்ட் இருக்கிறதா சொன்னேன். இல்ல நான் வேற ஒருத்தரை லவ் பண்ணுறேன்னு டக்குன்னு சொல்லிட்டாள்.''

''நிஜமாவே உங்க ஃப்ரண்டுக்கு இன்ட்ரஸ்ட் இருக்கா?''

''சும்மா கப்ஸா.''

''ஒருவேளை மித்ரா அந்த ஃப்ரண்டை வரச் சொல்லுங்கன்னு சொல்லி இருந்தா என்ன செஞ்சு இருப்பீங்க? என்கிட்ட அசடு வழிஞ்ச மாதிரி அவ கிட்டவும் அசடு வழிய நின்னிருப்பீங்களா?''

''சே! சே! அது சாரு ஸ்பெஷல். வேற யாருகிட்டவும் ஐயா அசடு வழிய மாட்டேன்.'' என்றதும் அவள் புன்னகைத்தாள்.

''கமிஷனர் அங்கிளைப் பத்தி நீ என்ன நினைச்சே? இந்த சஞ்சயே உன் விஷயத்தை நீ சொல்லாமலே இவ்வளவு கண்டுபிடிச்சேன்னா, ஐ.பி.எஸ் படிச்சவரு எவ்வளவு கண்டுபிடிப்பாரு? கமிஷனர் அங்கிள் அவ



யாரையோ லவ் பண்ணுறதா உறுதியா நம்பினார். ஆனா அவ அதை சொல்லாததில் இருந்தே பையன் சைட் கொஞ்சம் வீக்குன்னு ஃபீல் பண்ணினார்.

''அவர் சொன்னது தான் நிஜம். பையன் வசதியில்லாத வீட்டிலே பிறந்திருக்கான். ஆளும் பார்க்க ரொம்ப சுமாரா இருக்கான். ஆனா நல்லா டிரஸ் பண்ணினா இன்னும் கொஞ்சம் பெர்சனாலிட்டியா தெரிவான்.''

''மித்ரா பையனைப் பத்தி என்ன சொன்னாள்?''

''அவன் செம மூளை உள்ள ஆளு. அவனுக்கு பிரைட் ஃப்யூச்சர் இருக்கு. அது மட்டுமில்லாம ரொம்ப அன்பானவன்னு சொல்லுறாள்.''

''அங்கிள்கிட்ட சொல்லிட்டீங்களா?''

''ம்ம்ம் அப்பவே சொல்லிட்டேன். விசாரிச்சு பார்த்துட்டு அவன் நல்லவன்னு மனசுக்கு பட்டா ஓகே சொல்லிடுவார்னு தான் நினைக்கிறேன்.''

''வா அம்மாகிட்ட போய் நம்மளோட இந்த குட் நியூஸ் பத்தி சொல்லுவோம். நாம எப்படா வெளியே வருவோம்னு காத்துக்கிட்டு இருப்பாங்க.'' என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வெளி யேறினான்.

அவன் கூறியது போல் ராதாகிருஷ்ணனும் கோமளமும் இவர்கள் இருவரையும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். சஞ்சய் அவர்களைப் பார்த்துச் சிரித் ததும்,

''நான் சொன்னேன் இல்லங்க...'' என்று உற்சாக மாய் கூறிய கோமளம் இனிப்பு டப்பாவை திறந்து அவர்கள் முன் நீட்டினார்.

''நான் சொல்லாமலே நீங்களே கண்டுபிடிச்சுட் டீங்களா அத்தை? எப்படி?'' என்று சாருமதி கேட் கவும், கோமளம் தான் யூகித்த காரணங்களைக் கூறினார்.

''உங்க அம்மாக்கு போன் பண்ணி பேசும்மா.'' என்றார்.

விஷயமறிந்த பரந்தாமனும் ஈஸ்வரியும் மறுநாளே மகளைத் தங்களது வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்தார்கள்.

''பத்து நாளைக்கு நம்ம வீட்டுக்கு வாம்மா.'' என்று பரந்தாமன் சாருமதியை அழைத்தார்.

''அவர்கிட்ட கேட்டுட்டு வரேன்பா.'' என்று சாருமதி தந்தையிடம் கூறிவிட்டு,

தங்களது அறைக்குச் சென்று கணவனிடம், ''அம் மாவும் அப்பாவும் என்னை எங்க வீட்டுக்கு கூப்பிடு றாங்க.'' என்றாள்.

''உனக்குப் போக ஆசையா இருந்தா போயிட்டு வாடா.''

''பத்து நாளைக்கு வரச் சொல்லுறாங்க.''

''தாராளமா போயிட்டு வா.''

''அப்ப நீங்க?''



''நான் தினமும் நைட் வரேன்.'' என்றதும் சாருமதி சந்தோஷமாகக் கிளம்பிச் சென்றாள்.

மாதங்கள் உருண்டோடின. சாருமதி ஆறு மாத கர்ப்பமாக இருந்த போது...

பரந்தாமனின் நண்பர்கள் சிலர் வட இந்தியாவிற்கு ஆன்மீகச் சுற்றுலா செல்ல முடிவெடுத்தனர். அவர்கள் பரந்தாமனையும் ஈஸ்வரியையும் உடன் வருமாறு அழைத்தனர்.

ஆனால் மகள் கர்ப்பமாய் இருப்பதால் அவர்கள் சென்னையை விட்டு நகர மறுத்தனர். அந்த நண்பர்கள் விஷயத்தை சாருமதியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். சஞ்சய் குடும்பத்தினர் அவர் களை சம்மதிக்க வைத்து அனுப்பி வைத்தனர்.

''நல்லா ரெஸ்ட் எடு சாரு. தினமும் வாக்கிங் போ. நல்லா சாப்பிடு. சந்தோஷமா இரு!'' என்று சொல்லி விட்டு அவர்கள் கிளம்பிச் சென்றனர்.

மகளது வாழ்க்கையில் புயல் வீசப் போவது தெரிந்தால் சுற்றுலா செல்வதை தவிர்த்து இருப்பார் களோ?

அவர்கள் சென்ற நான்காம் நாள் மித்ராவின் திருமணத்திற்காக ராதாகிருஷ்ணனும் கோமளமும் மதுரைக்கு கிளம்பினார்கள்.

கமிஷனர், தன் மகள் மித்ரா காதலித்த பையனைப் பற்றி விசாரித்ததில் அவருக்கு முழு திருப்தி உண் டானதால் அவனையே தன் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

சாருமதியை வீணாக அலைக்கழிக்க வேண்டாம் என நினைத்து அவளையும் சஞ்சயையும் சென்னையிலேயே இருக்கச் சொல்லிவிட்டு ராதாகிருஷ்ணனும் கோமளமும் திருமணத்திற்குக் கிளம்பிச் சென்றார்கள்.

இரயிலில் ஏற்கனவே முன்பதிவு செய்திருந்தார்கள். அதனால் இரயிலில் பயணம் செய்து மதுரை வந்து சேர்ந்தார்கள். மித்ராவின் திருமணமும் இனிதே நடந்து முடிந்தது. கோமளத்திற்கு திருச்செந்தூர் முருகனை தரிசிக்கும் ஆவல் வந்தது.

அதனால் சென்னைக்கு ஒரு நாள் தள்ளிக் கிளம்பலாம் என அவர்கள் முடிவு செய்தனர். மதுரையில் இருந்து திருச்செந்தூருக்குச் சென்று முருகனை தரிசித்தார்கள். அந்தச் சிங்கார வேலனின் அழகை கண்டு பரவசமடைந்தார்கள்.

முருகன் அவர்களுக்கு அருளப் போவது வரமா? சாபமா?



## 10

கடைசி நேரத்தில் பயணம் மாறிப் போனதால் அவர்களால் சென்னைக்கு இரயிலில் திரும்ப முடியாமல் போனது.

கோமளத்திற்கு விமானப் பயணம் பிடிப்பதில்லை. ஒரே ஒரு முறை மட்டுமே அதில் சென்றார். ஒரு நாள்



முழுவதும் அவரது காது அடைத்துக் கொண்டதில் அதற்கு பின்பு அவர் விமானப் பயணம் என்றால 'நான் வரவில்லை' என்று கூறி ஒதுங்கி விடுவார்.

அதனால் அவர்கள் பேருந்தில் தங்களது பயணத்தை மேற்கொண்டனர். பேருந்து சென்னையை நோக்கிப் புறப்பட்டது. கோமளத்தால் உட்கார்ந்த நிலையிலே தூங்க முடியவில்லை. ரொம்பவே அவதிப்பட்டார். பின்னிரவில் அயர்ந்து தூங்கிவிட்டார்.

''தாம்பரம் யாராச்சும் இறங்கணுமா? இறங்க வேண்டியவங்க எழுந்து வாங்க!'' என்று ஒரு பையன் குரல் கொடுக்கவும் கோமளமும் ராதாகிருஷ்ணனும் விழித்துக் கொண்டார்கள்.

''என்னங்க நல்லாத் தூங்கினீங்களா?''

''நான் தூங்குறது இருக்கட்டும் கோமளா, உன் கால் எப்படி இருக்கு? வீங்கிடுச்சா?'' என்று அவர் அக்கறையாகக் கேட்டார்.

''கொஞ்சமா தான் வீங்கி இருக்கு. கொஞ்ச நேரத்திலே சரியாகிடுங்க.''

குனிந்து மனைவியின் கால்களை பார்வையிட்டவர், ''இனிமே டிரைனில டிக்கெட் கிடைச்சா மட்டும் தான் நீ வெளியூருக்கு போகணும்!'' என்று கடுமையான குரலில் உத்தரவு பிறப்பித்தார்.

அவரது குரலில் ஒலித்த கடுமை அக்கறையால் என்பதைப் புரிந்து கொண்ட கோமளம் தன் தலையை ஆட்டி அவரது கருத்துக்கு உடன்பட்டார்.

அருகே இருந்த இளைஞன் இறங்குவதற்கா எழுந்து முன்னால் சென்றான்.

''என்ன தம்பி குழந்தையை விட்டுட்டு போறீங்க?'' என்று அவன் அருகே இருந்த இருக்கையில் தூங்கி கொண்டிருந்த குழந்தையை காட்டி கோமள விசாரிக்க,

''குழந்தை என்னோடது இல்லைங்கம்மா. எ பக்கத்து சீட் காலியா தான் இருந்தது. மது தாண்டினதும் நான் நல்லா தூங்கிட்டேன். நடுவி தான் யாரோ இங்க கொண்டு வந்து தூங்க வ சிருப்பாங்கன்னு நினைக்கிறேன்.'' என்று அவ கூறினான்.

ராதாகிருஷ்ணனும் அவனது கருத்தை ஆதரி தார்.

''தம்பி சொல்லுறது சரி தான் கோமளா. பின்னா இருக்கிற யாரோ இங்க சீட் காலியா இருக்குன்னு தன்னோட குழந்தையை இங்கே படுக்க வச்சிரு பாங்களா இருக்கும்.'' என்றார்.

தனியார் பேருந்துகளில் சிறு குழந்தைகளுக் டிக்கெட் வாங்காமல் அவர்கள் தூங்கிய பின் தன யில் படுக்க வைப்பார்கள். இல்லாவிடில் இது போன் காலி இருக்கையில் படுக்க வைப்பார்கள்.

''சின்னக் குழந்தை தூங்கும் போது கீழ விழுந்து சுன்னா என்ன செய்வாங்க? இப்படியா பொறுப்பில் லாமல் யார் பக்கத்திலோ படுக்க வைப்பாங்க.'' என் கோமளம் தன் கணவரிடம் அங்கலாய்த்தார்.



''கீழே விழாமல் தானே கோமளா தூங்கிக்கிட்டு இருக்கான். பாவம் அவங்களும் எவ்வளவு நேரம் தான் குழந்தையை மடியிலே வச்சுக்கிட்டு வருவாங்க?'' என்று ராதாகிருஷ்ணன் அந்தக் குழந்தையின் பெற்றவர்களுக்குப் பரிந்து பேசினார்.

அந்தப் பேருந்து கோயம்பேடை அடைவதற்கு முன் முக்கால்வாசிப் பேர் இறங்கிவிட்டார்கள். ஆனால் அந்தக் குழந்தை மட்டும் தனியாகத் தூங்கிக் கொண்டு இருந்தது.

கோமளா அந்த கண்டக்டர் பையனிடம் அந்தக் குழந்தையைப் பற்றிக் கூறினார். அவன் பேருந்தில் மீதம் இருந்தவர்களிடம் விசாரிக்க, அனைவருமே அது தன்னுடைய குழந்தை இல்லை என்று தெரிவித்துவிட்டனர்.

''அட ராமா! பஸ் மாறி ஏறிடுச்சோ? இதை காணாமல் அவங்க பெத்தவங்க எப்படித் தவிக்கிறாங்கன்னு தெரியலையே!'' என்று கோமளத்தின் தாய் மனம் பதறியது.

கோமளம் தனக்கு முதுகு காட்டித் தூங்கிக் கொண்டிருந்த அந்தக் குழந்தையை அதன் தூக்கம் கலையாமல் மெதுவாக நிமிர்த்திப் பார்த்தார். பார்த்தவர் தன்னை மின்சாரம் தாக்கியது போல் அதிர்ந்தார்.

''என்னங்க!'' என்று அவர் அலற, ராதாகிருஷ்ணன் தனது இருக்கையில் இருந்து எழுந்து வந்தார்.

''என்னாச்சு கோமளா? எதுக்கு இப்படிக் கத்துறே?'' என்று கேட்ட ராதாகிருஷ்ணனும் குழந்தை பார்த்து பேய் அறைந்த தோற்றத்தில் அப்படியே நின்றுவிட்டார்.

''என்ன சார் உங்களுக்குத் தெரிஞ்ச குழந்தையா?'' என்று அந்தக் கண்டக்டர் பையன் கேட்க, பதில் கூற முடியாமல் ராதாகிருஷ்ணன் அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றார்.

''எங்க வீட்டுக் குழந்தை தான். ஆனா எப்படி பஸ்ஸிலே வந்துச்சுன்னு தெரியலை.'' என்று கோமளா கூறவும்,

''அப்ப நீங்களே பத்திரமா கூட்டிட்டுப் போயிடு கம்மா.'' என்று அவன் கூறிவிட்டுச் சென்றான்.

சிக்கல் இல்லாமல் பிரச்சனை சுலபமாக முடிந்து விட்டது என்ற நிம்மதி அவனது குரலில் அப்பட்ட மாக வெளிப்பட்டது. அந்தக் கண்டக்டர் பையனுக்கு மிஞ்சிப் போனால் பதினைந்து வயது தான் இருக்கும்.

அதனால் தான் 'தங்கள் பேருந்தில் இருக்கும் குழந்தைக்கு தாங்கள் தான் பொறுப்பு. அதை முன் பின் தெரியாதவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது காவல் நிலையத்தில் ஒப்படைத்தால் தான் தன்னுடை முதலாளிக்கு இதனால் சிக்கல் ஏற்படாது' என்று தோன்றவில்லை.

அவன் நடந்ததை ஓட்டுநரிடம் தெரிவித்து இரு தால் அவர் கோமளத்திடம், ''நாங்க போலீஸ்கிட்ட



ஒப்படைச்சிடுறோம். நீங்க அவங்ககிட்ட கேட்டு உங்க கூட கூட்டிக்கிட்டு போங்க.'' என்று சொல்லி இருப்பார்.

அந்தப் பையன் ஓட்டுநரிடம் சொல்லாததால் தூங்கும் குழந்தையையும் தங்களது பெட்டிகளையும் தூக்கிக் கொண்டு ராதாகிருஷ்ணனும் கோமளமும் கோயம்பேட்டில் இறங்கினார்கள். குழந்தையை எழுப்ப முயற்சித்தனர். அவன் சிணுங்கினானே தவிர, தூக்கத்தில் இருந்து எழவில்லை.

''இப்ப என்னங்க பண்ணுறது? எனக்கு ஒரே படபடப்பா இருக்கு.''

''கொஞ்ச நேரம் அமைதியா இரு கோமளா. நாம போலீஸ் ஸ்டேஷன் போய் ஒரு கம்ப்ளைண்ட் எழுதிக் குடுத்துட்டு இந்தக் குழந்தையை அவங்ககிட்ட ஒப் படைக்கலாம்.''

''இந்நேரத்திலே எந்த போலீஸ் ஸ்டேஷன் போவீங்க? வாங்க நாம முதல்ல நம்ம வீட்டுக்கு போவோம்.''

''போலீஸில் சொல்லாமல் யாருன்னு தெரியாத குழந்தையை தூக்கிக்கிட்டு அப்படி போக முடியாது கோமளா.''

''அதுக்காக நாம நடுரோட்டிலேயே எவ்வளவு நேரம் நிக்க முடியும்?''

ராதாகிருஷ்ணன் ஒரு ஆட்டோவை அமர்த்திக் கொண்டு தங்களது வீட்டிற்கு செல்லாமல் ஒரு ஹோட்டலுக்கு சென்று அறை எடுத்தார். காலை

ஒன்பது மணிக்கு மேல் குழந்தையை தூக்கி கொண்டு காவல் நிலையம் செல்லலாம் என நினை தார்.

அந்தக் குழந்தையை அங்கிருந்த படுக்கையி படுக்க வைத்தனர். அதன் பின் ராதாகிருஷ்ண தனது மகனை அவனது கைப்பேசியில் அழைத்தா

''எங்கே இருக்க சஞ்சய்?''

''நான் வீட்டிலே தான்பா இருக்கேன். நீங்க எங் இருக்கீங்க? இன்னும் சென்னை வந்து சேரலையா?

''ஒரு சின்ன சிக்கல் சஞ்சய். பக்கத்திலே ம இருக்காளா?''

''இல்லைப்பா. சொல்லுங்க. என்ன சிக்கல்?''

''நீ உடனே கிளம்பி நான் சொல்லுற ஹோட்ட லுக்கு வா!'' என்று அவர் தான் தங்கி இருக்கு ஹோட்டலின் முகவரியை கொடுத்தார்.

''என்னப்பா சென்னை அட்ரஸை குடுக்கிறீங் அப்படின்னா சென்னை வந்துட்டீங்களா? நே வீட்டுக்கு வர வேண்டியது தானே?''

''ஒரு சின்ன சிக்கல் இருக்குன்னு சொன்னேன் சஞ்சய். நீ உடனே கிளம்பி வா. நாங்க சென்னை வந்துட்டதா மதிகிட்ட எதுவும் சொல்லாதே.''

''சரிப்பா. நான் இன்னும் கொஞ்ச நேரத்திலே அங்கே இருப்பேன்.'' என்றவன் அழைப்பை துண்டி தான்.



மனைவியை தேடிச் சென்றவன், ''நான் கிளம்பு றேன்டா சாரு. ஒரு அர்ஜென்ட் வொர்க் வந்துடுச்சு.'' என்றான்.

''அத்தையும் மாமாவும் இன்னும் வரலையே! பஸ் லேட்டா?''

''தெரியலைடா. போன் பண்ணிக் கேட்டுக்கிறேன்.''

தன் தந்தை வீட்டிற்கு வராததற்கு தான் ஒரு பொய் சொல்லி, இவளிடம் தன் தந்தை வேறு ஒரு பொய் சொன்னால் மாட்டிக் கொள்வோம் என நினைத்தே அவன் பொய் உரைத்தான்.

மனைவியின் கன்னத்திலும் மணி வயிற்றிலும் முத்தத்தை பதித்துவிட்டு, ''ரெஸ்ட் எடு. நான் உனக்கு அப்புறமா போன் பண்ணுறேன்.'' என்று கூறிவிட்டு கிளம்பினான்.

தன் தந்தை வரச் சொன்ன அந்த ஹோட்டலுக்கு சென்று அவரது அறையில் நுழைந்தவன், ''என்னாச் சுப்பா உங்க குரலே சரியில்லை. என்ன நடந்துச்சு?'' என்று விசாரித்தான்.

அவர் பதிலளிக்கும் முன் கோமளம் முந்திக் கொண்டு, ''என்ன நடந்துச்சுன்னு நீ தான்டா சொல்லணும்'' என்று கோபமாக இரைந்தார்.

''எதுக்கும்மா இவ்வளவு கோபம்? அதுவும் என் மேல? நான் என்ன தப்பு பண்ணினேன்?''

''என்ன தப்பு பண்ணினேன்னா கேட்கிற? இங்க வந்து பாருடா! நீ செஞ்ச தப்பு என்னன்னு உனக்கே

புரியும்.'' என்று அழுகுரலில் கூறிய கோமளம் எழுந்து நின்றார்.

அவரது பின்னால் தூங்கிக் கொண்டிருந்த குழந் தையை கண்டவன் தன் புருவங்களை உயர்த்திய வாறு அதன் அருகில் சென்றான்.

அதன் முகத்தை கண்டவன் தீச்சுட்டாற் போல் பதறி விலகினான்.

அவர்கள் மூவருமே அவ்வாறு அதிர்வதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

அந்தக் குழந்தை அப்படியே சஞ்சயை அச்சில் வார்த்தது போல் இருந்தது. சாருமதி அடிக்கடி புகைப் படத்தில் பார்க்கும் சிறு வயது சஞ்சய் அப்படியே உயிரோடு வந்தது போல் இருந்தான் அந்தக் குழந்தை!

மூன்று அல்லது நான்கு வயது மதிக்கத்தக்க அந்தக் குழந்தை தன்னைச் சுற்றி நடப்பதை அறி யாது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது.

''எப்படிப்பா?'' என்று அதிர்ந்த குரலில் சஞ்சய் கேட்க,

''எப்படின்னு எங்களை கேட்டால்... நீ தான்டா சொல்லணும்.'' என்று கோமளம் மகனை அதட்டினார்.

''கொஞ்ச நேரத்துக்கு பேசாமல் இரு கோமளா!'' என்று ராதாகிருஷ்ணன் தன் மனைவியை அதட்டி னார்.



''என்னை ஏங்க திட்டுறீங்க? உங்க பையனை திட்டுங்க. இந்தக் குழந்தை நம்ம வீட்டு வாரிசுங்க.'' என்று கோமளம் புலம்ப,

''அப்படின்னா என்னை சந்தேகப்படுறீங்களாம்மா?'' என்று நம்ப முடியாத குரலில் சஞ்சய் கேட்டான்.

''உன்னைச் சந்தேகப்படாமல் உங்கப்பாவையா சந்தேகப்பட முடியும்?''

''அம்மா!'' என்று சஞ்சயும்,

''கோமளா! என்ன பேச்சுப் பேசுற?'' என்று ராதா கிருஷ்ணனும் ஒருங்கே அதிர்ந்தனர்.

அவர்களின் ஓங்கிய குரலால் அந்தக் குழந்தை யின் நித்திரை கலைந்தது. அது சிணுங்கிக் கொண்டே படுக்கையில் எழுந்து அமர்ந்தது.

ராதாகிருஷ்ணனையும் கோமளத்தையும் பார்த்து மிரண்டு போய் விழித்தது. அழுவதற்கு தயாராய் அதன் உதடுகள் பிதுங்க அந்த அறையை வலம் வந்த அதன் கண்கள் மூன்றாவதாய் நின்று கொண் டிருந்த சஞ்சயை பார்த்ததும்,

''டாடி!'' என்று கூவிக் கொண்டே அவனிடம் தாவியது.

சஞ்சய் அதிர்ச்சியின் உச்சக்கட்டத்தில் இருந்தான்.

'திருச்செந்தூருக்கு சென்றதால் தானே இரயிலில் பயணம் செய்ய முடியாமல் பஸ்ஸில் வந்தோம். மதுரையில் இருந்து திருச்செந்தூருக்குச் செல்லாமல்

நேராகச் சென்னை சென்றிருந்தால் இந்தப் பிரச்சனை வந்திருக்காதோ?

சிறு குழந்தையை அனுப்பி முருகன் தன் தந்தையை போல் திருவிளையாடல் நடத்த விரும்புகிறானா?' என்று ராதாகிருஷ்ணன் தன் மனதில் கேட்டுக் கொண்டார்.

'இந்தக் குழந்தை என் குடும்பத்தை சுட்டெரிக்கப் போகும் சூரியனா இல்லை குளிர் நிலவா?' என்று குழம்பினார்.



## 11

தூங்கி எழுந்த குழந்தை சஞ்சயை டாடி என்று அழைத்ததோடு இல்லாமல் அவன் அருகே சென்று அவனை அணைத்துக் கொண்டு நின்றது.

"என்னப்பா இது?" என்று சஞ்சய் பரிதாபமாக தன் தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

"அதான் உன்னை அப்பான்னு தெளிவா சொல்லுறானே!" என்று கோமளம் கடுப்பானார்.

அந்தச் சிறுவனிடம், "உன் பேர் என்னப்பா?" என்று கோமளம் விசாரிக்கவும் செய்தார்.

"கெவின்"

"உங்க அப்பா பேரு என்ன?"



"டாடி பேரு சஞ்சய்." என்று அந்தக் குழந்தை கூறியதும் சஞ்சய்க்குத் தலை சுற்ற ஆரம்பித்தது.

அவன் அந்தப் படுக்கையில் அப்படியே அமர்ந்து விட்டான். ராதாகிருஷ்ணனுக்கு என்ன சொல்வதென்றும் தெரியவில்லை. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்றும் புரிபடவில்லை.

கெவின் சஞ்சயிடம், "மம்மி எங்கே டாடி?" என்று கேட்டான்.

'எனக்கு நீயே யாருன்னு தெரியலை. இதுல உங்க அம்மாவுக்கு நான் எங்கடா போவேன்?' என்று சஞ்சய் விழித்தான்.

ஆண்கள் இருவரும் அமைதியாக தங்களுக்குள் மூழ்கிவிட்டனர். கோமளம் உணவினை வரவழைத்து தன் பேரனின் பசியை போக்கினார்.

"நான் உன் பாட்டிடா." என்று தன் உறவு முறையை அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

"இவங்க என் பாட்டியா டாடி?" என்று கெவின் சஞ்சயிடம் கேட்க, அவன் ஒன்றும் சொல்லாமல் நிற்கவும் கோமளம் மகனை அதட்டினார்.

"ஆமான்னு சொல்லுறதுக்கு என்னடா?" என்று அவர் ஒரு அதட்டல் போட சஞ்சயின் தலை ஆமாம் என்பதாய் ஆடியது.

கோமளம் அங்கிருந்த இரு ஆண்களையும் கண்டு கொள்ளாது தன் பேரனைக் கொஞ்சிக் கொண்டிருந்

தார். என்ன நடந்தது என்று ராதாகிருஷ்ணன் மகனுக்கு விவரித்தார்.

''இப்ப என்னப்பா செய்யலாம்?''

''சஞ்சய்! அப்பா கேட்கிறேன்னு தப்பா நினைக்காதே. காலேஜ் படிக்கிற போது நீ யாரையாச்சும் லவ் பண்ணினாயா?''

''என்னப்பா என்னைப் பார்த்து இப்படி கேட்டுட்டீங்க. சத்தியமா இந்தக் குழந்தை என்னோடது இல்லப்பா. என் வாழ்க்கையில இருக்கிற ஒரே பொண்ணு என் சாரு தான்பா. ப்ளீஸ் என்னை நம்புங்க.'' என்று மன்றாடும் குரலில் கூறினான்.

மகனது முதுகில் தட்டிக் கொடுத்த ராதாகிருஷ்ணன், ''போலீஸ்க்கு இன்ஃபார்ம் பண்ணிட்டு ஏதாச்சும் ஆசிரமத்திலே கொண்டு போய் விட்டு விடுவோமா?'' என்று கேட்டார்.

பேரனை கொஞ்சிக் கொண்டிருந்தாலும் இவர்களின் பேச்சிலும் தன் கவனத்தை வைத்திருந்த கோமளம் கணவர் கூறிய யோசனையில் வெகுண்டு எழுந்தார்.

''அதுக்கு நான் கண்டிப்பா சம்மதிக்க மாட்டேன். என் பேரன் என்ன அநாதையா? அவனை எதுக்கு ஆசிரமத்திலே விடணும்? அவன் என் கூட என் வீட்டுக்கு தான் வருவான்!'' என்று ஆணித்தரமாய் அறிவித்தார்.

''என்ன பேச்சு பேசுற கோமளா! மதியை பத்திக் கொஞ்சமாச்சும் யோசிச்சுப் பார்த்தியா. அவ இருக்கிற



நிலைமையில இப்படி ஒரு அதிர்ச்சியை அவளுக்கு குடுக்க முடியுமா?''

''அதை உங்க புள்ளை யோசிச்சு இருக்கணும். அவன் பண்ணின தப்புக்கு என் பேரன் ஏன் சங்கடப் படணும்? இப்பவே கிளம்புங்க. நாம வீட்டுக்கு போகலாம்.''

''கோமளா கொஞ்சம்...'' என்று தொடங்கிய ராதாகிருஷ்ணனிடம்,

''போலீஸ் ஸ்டேஷன் கூட போக வேண்டாம். அதான் என் பேரன் தெளிவா சொல்லிட்டானே. வீட்டுக்கு கிளம்புங்க!'' என்று கோமளம் உத்தரவிட்டார்.

ராதாகிருஷ்ணன் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் கோமளம் தனது பிடியில் இருந்து சற்றும் இறங்கவில்லை. சஞ்சயால் தன் தாயின் பக்கம் திரும்பி ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. கோமளம் அவனை அந்த அளவிற்கு வறுத்தெடுத்தார்.

வேறு வழியில்லாமல் கெவினை அழைத்துக் கொண்டு அவர்கள் வீடு வந்து சேர்ந்த போது மணி பதினொன்று ஆனது. அதற்குள் கெவின் மீண்டும் தூங்க ஆரம்பித்துவிட்டான்.

தன் தோளில் தூங்கும் குழந்தையுடன் உள்ளே வந்த கோமளத்தை கண்ட சாருமதி, ''வாங்க அத்தை. ஏன் இவ்வளவு நேரமாச்சு? பஸ் ரொம்ப லேட்டா? உங்க ரெண்டு பேர் போனும் ஸ்விட்ச் ஆஃப்ன்னு வந்துச்சு. என்னாச்சு?'' என்று விசாரித்தாள்.

''ஆமாம்மா லேட் ஆகிடுச்சு. நீ சாப்பிட்டியா? உனக்கு உடம்பு நல்லா இருக்கா?'' என்று மருமகளின் நலனைப் பற்றிக் கோமளம் விசாரித்தார்.

''நான் நல்லா இருக்கேன் அத்தை. இது யார் குழந்தை அத்தை?''

''உன். புருஷனையே கேளு!'' என்று கடுப்பாய் மொழிந்துவிட்டு அவர் தனது அறைக்குள் சென்று மறைந்துவிட்டார்.

'அத்தைக்கு எதுக்கு இவ்வளவு கோபம்?' என்று குழப்பம் அடைந்த சாருமதி தன் கணவனை பார்வை யிட்டாள். அவனது முகம் இருளடைந்து இருந்ததைக் கண்டவள் குழம்பிப் போனாள்.

சஞ்சய் அவளது கை பிடித்து தங்களது அறைக்கு அழைத்துச் சென்றான். அவளை படுக்கையில் அமர வைத்துவிட்டு தானும் அவளருகில் அமர்ந்து கொண் டான்.

'எங்கே இருந்து தொடங்குவது? அவளிடம் என்னவென்று விளக்குவது! தன்னை அவள் புரிந்து கொள்வாளா?' என்று ஒன்றும் புரியாமல் அமைதியாக அமர்ந்திருந்தான்.

''என்ன ஆச்சுங்க? ஏதாவது பிரச்சனையா? ஏன் உங்க முகம் இவ்வளவு வாடியிருக்கு? எதுவா இருந்தாலும் நாம சமாளிக்கலாங்க. நான் உங்க கூட இருக்கேன்.'' என்றதும் அவன் அவளை பாவமாய் ஒரு பார்வை பார்த்தான்.



'நான் விஷயத்தை விளக்கி முடித்த பின்பும் இதே போல் எனக்கு ஆதரவு கரம் நீட்டுவாயா?' என்ற கேள்வி அவனது மனதில் ஓடியது.

அவளது கரங்களை தனது கரங்களுக்குள் சிறை பிடித்தான். அவனது கைகளின் நடுக்கத்தை உணர்ந் தவள்,

''எந்தப் பிரச்சனையா இருந்தாலும் சமாளிக்கலாம். எதுக்குப் பயப்படுறீங்க?'' என்று தன் கணவனுக்குச் சமாதானம் சொல்ல முயன்றாள்.

''நான் இப்பச் சொல்லப் போறதைக் கேட்டு அதிர்ச்சி ஆகக் கூடாது சாரு. நீ இவ்வளவு நேரம் சொன்னதை தான் நான் உனக்குந் திருப்பிச் சொல்லப் போறேன். எதுவா இருந்தாலும் சமாளிப்போம். சரியா?'' என்று வன் அவள் தன் தலையை ஆட்டினதும் காலையில் இருந்து நடந்தவற்றை அவளுக்கு விளக்கினான்.

''உங்களை மாதிரியே இருக்கானா?!'' என்று அதிர்ந்தவள் அவன் அடுத்தடுத்து கூறியவைகளைக் கேட்டு குழப்பத்தின் உச்சிக்கே சென்றாள்.

அவளது வயிற்றில் கை வைத்து, ''நீ என்னை நம்புறியா சாரு? சத்தியமா உன்னைத் தவிர என் வாழ்க்கையில வேற யாருமே இல்லைடா.'' என்று தழுதழுப்பான குரலில் கூறினான்.

சாருமதி கணவனின் கண்களை உற்றுப் பார்த்தாள். அவனது கண்களில் கலக்கம் தெரிந்ததே தவிர பொய்யின் சாயல் தெரியவில்லை. கணவன்

தன்னிடம் பொய் சொல்லவில்லை என்று அவள் உறுதியாக நம்பினாள்.

அவன் தன் குழந்தை மீது செய்த சத்தியமும் அவளை அவ்வாறு நம்ப வைத்தது.

''நான் உங்களை நம்புறேங்க!'' என்ற அவள் உறுதியுடன் கூறவும் சஞ்சய்க்கு காலையில் இருந்து தன் கண் முன் மலை போல் தோற்றம் அளித்த பிரச்சனை மளமளவென்று சரிந்ததை போல் இருந்தது.

''நீ என்னை நம்புற தானேடா சாரு? நம்புற தானே?'' என்று அவன் பரிதவிப்புடன் கேட்ட தையே மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருந் தான்.

''நான் ஏன் உங்களை நம்பாமல் இருக்கப் போறேன்?''

''ஆனா அம்மா என்னை நம்பலை சாரு.'' என்று உள்ளே போன குரலில் கூறினான்.

''ஓ! அதான் அத்தை கடுப்பா இருக்காங்களா? நாம அவங்களுக்குப் புரிய வைக்கலாம். வாங்க...'' என்றவள் அவனை வெளியே அழைத்துச் சென்றாள்.

கோமளமும் ராதாகிருஷ்ணனும் வரவேற்பறை சோபாவில் அமர்ந்திருந்தார்கள். சாருமதி அழுது கொண்டு அறையிலேயே அமர்ந்திருப்பாள் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க,



அவள் திடமாக வெளியே வந்ததை பார்த்தவர் களுக்கு அதிர்ச்சியே!

சாருமதி நேராக தன் மாமனாரிடம் சென்று, ''என்ன மாமா செய்யலாம்?'' என்று கேட்டாள்.

''நீ என்னம்மா மதி நினைக்கிறே?''

''உங்களுக்கு பிசினெஸ் எதிரி யாராச்சும் உங் களுக்குப் பிரச்சனை தர இது மாதிரி பண்ணுறாங்களா மாமா?''

''பிசினெஸிலே எங்களுக்கு போட்டியா நிறையப் பேர் இருக்காங்க. ஆனா இதுவரைக்கும் நாங்க யாரையுமே பகைச்சுக்கிட்டது இல்லை. அதனால பெருசா விரோதின்னு சொல்லுறதுக்கு யாருமில் லைன்னு தான் சொல்லணும்.''

''உங்களுக்கே தெரியாமல் உருவாகி இருக்க லாமே.''

''இருக்கலாம்மா.'' என்று அவர் குழப்பமாய் தலையாட்டினார்.

''இந்தக் குழந்தைக்கு மூணு இல்ல நாலு வயசு இருக்குமா? மூணு வயசு குழந்தையை பொய் சொல்ல வச்சிருக்காங்கன்னு சொல்லுறியா?'' என்று கோமளம் வெடுக்கென்று கேட்டதும்,

''இருக்கலாம் அத்தை. இந்தக் காலத்திலே எது வேணா நடக்கலாம்.'' என்றாள்.

''எது வேணா நடக்கலாம்னு நீயே சொல்லுற. அப்படின்னா உன் புருஷனே தப்பு பண்ணி இருக் கலாமில்ல?''

சஞ்சய் தனது கண்களை மூடி அமைதி காத்தான். கணவனது வாடிய முகத்தை கண்டவள் கோம ளத்தின் புறம் திரும்பி,

''உங்க புள்ளை மேல உங்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். ஆனா எனக்கு என் ஹஸ் பண்ட் மேல நம்பிக்கை இருக்கு. அதனால இனி ஒரு தரம் என் முன்னாடி அவரை சந்தேகப்பட்டு எந்த வார்த்தையையும் சொல்லாதீங்க.'' என்று அழுத்த மாகக் கூறினாள்.

அவளது வார்த்தைகளைக் கேட்டு சஞ்சய் மட்டு மின்றி ராதாகிருஷ்ணனும் தெம்பு வரப் பெற்றார்.

''நீ சஞ்சயை நம்பறியாம்மா?'' என்று ராதா கிருஷ்ணன் தன் மருமகளிடம் வினவினார்.

மருமகள் திடமாக தன் முன் வந்து நின்ற போதே அவள் தன் மகன் சஞ்சயை நம்புகிறாள் என்ற விஷயம் ராதாகிருஷ்ணனுக்குப் புரிந்து தான் இருந்தது. இருப்பினும் அதை அவள் வாய்மொழியாக அறிய விரும்பினார்.

''கண்டிப்பா மாமா. அவர் இப்படி ஒரு தப்பை பண்ணி இருக்க மாட்டார். உங்க வளர்ப்பு பொய்யாப் போகாது. இந்தப் பிரச்சனையில் இருந்து எப்படி வெளியே வருவதுன்னு நாம யோசிப்போம்.''

''அப்படின்னா இவன் என் பேரன் இல்லைங் கிறீங்களா?'' என்று இப்பொழுதும் கோமளம் இடை புகுந்தார்.



''கோமளா! உனக்கு பேரப் புள்ளை வேணும்னா கொஞ்ச நாள் பொறுத்துக்கோ. மதி உன் பேரனை பெத்து உன் கையிலே குடுப்பா. அதுக்காக ஊரிலே உள்ள பிள்ளைகளை எல்லாம் உன் பேரனா மாத்த முயற்சி பண்ணாதே!'' என்று ராதாகிருஷ்ணன் மனை வியை அதட்டினார்.

''நான் ஒண்ணும் யாரோட பிள்ளைக்கோ சொந்தம் கொண்டாட முயற்சிக்கலை. எப்படி அவன் நம்ம சஞ்சயை டாடின்னு கூப்பிட்டான்? யாரும் சொல்லிக் கொடுத்திருந்தால் அதை அவனுக்கு ஞாபகப்படுத்த யாராச்சும் பக்கத்திலே இருந்திருக்கணும். தூங்கி எழுந்த பிள்ளை தானா அப்படிக் கூப்பிடாது.''

''ஒருவேளை அவனோட அப்பாவுக்கு இவரோட சாயல் இருக்கலாம் அத்தை.''

''அவனோட டாடி பேரு சஞ்சய் என்று சொன் னானே! அது எப்படி? அவர் பேரும் உன் புருஷன் பேரும் ஒண்ணா இருக்கலாம்னு சொல்லுவியா?'' என்று கோமளம் இடக்காகக் கேட்க,

''இருக்கலாம் அத்தை. ஆயிரத்தில் ஒண்ணா இப்படி எல்லா விஷயமும் ஒத்துப் போகலாம்.'' என்று சாருமதி பதில் அளித்தாள்.

அதற்கு மேல் இரு நிமிடங்களுக்கு அங்கே அமைதி நிலவியது.

மனைவியின் வார்த்தைகள் கொஞ்சம் இதம் கொடுத்துக் கொண்டிருக்கும் போதே கோமளத்தின்

குத்தல் பேச்சு சஞ்சயின் மனதை வாடி வதங்க
செய்தது.

''நான் போய் அவனை பார்த்துட்டு வரேன்.'' என்று கூறிய சாருமதி மாமியாரின் அறைக்குள் நுழைந்து படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்த கெவினை பார்த்தாள்.

அவளுக்கு தன் கணவனே குழந்தை உரு கொண்டு படுத்திருப்பதாகத் தோன்றியது.

'இவ்வளவு உருவ ஒற்றுமை இருக்க போய் தான் அத்தை இந்த அளவிற்கு கடுப்பாகப் பேசுகிறார்கள்' என்று நினைத்துக் கொண்டாள்.

'முருகா! சிக்கலை உண்டாக்கியே நீயே இதில் இருந்து தப்பிக்கும் மார்க்கத்தை எனக்கு அருள்வாயாக!' என்று கடவுளை உளமார வேண்டிக் கொண்டாள்.

'டேய் குட்டிப் பையா! உன்னை யார் இங்க அனுப்பி வச்சாங்க? எங்கிருந்தோ வந்த நீ கண்ணனா? இல்லை கள்வனா?' என்று தன் மனதிற்குள் கேட்டுக் கொண்டாள்.



# 12

கெவினை பார்த்துவிட்டு அறையை விட்டு வெளியே வந்தவளிடம், ''இப்ப என்ன சொல்லுற? இன்னமும் உன் புருஷன் தப்புப் பண்ணி இருக்க



மாட்டான்னு சொல்லப் போறியா?'' என்று கோமளம் கேட்டார்.

''இப்ப மட்டுமில்ல அத்தை. நான் எப்பவுமே அவரை நம்புவேன். அவர் கண்டிப்பா தப்பு பண்ணி இருக்க மாட்டார்!'' என்று அவள் மீண்டும் உறுதிபடக் கூறினாள்.

''ஆனா எனக்கு அந்த நம்பிக்கை இல்லை!'' என்று கோமளம் கூறவும்,

''உங்களுக்கு நம்பிக்கை வரணும்னா பேசாமல் ஒரு டி.என்.ஏ டெஸ்ட் எடுத்துப் பார்த்திடலாம். அதுக்கு அப்புறமாச்சும் இவரை நம்புவீங்கல்ல?'' என்று அவள் கேட்டதும் ராதாகிருஷ்ணனும் மருமகளது கருத்தை ஆதரித்தார்.

''மதி சொல்லுறது சரி தான் கோமளம். ஒரு டி.என்.ஏ டெஸ்ட் எடுத்துப் பார்த்தால் பிரச்சனை முடிஞ்சிடும்.'' என்று அறிவித்தார்.

சாருமதி தன் அறையை நோக்கிச் சென்றாள். சாருமதியை பின் தொடர்ந்து சஞ்சயும் அறைக்குள் நுழைந்தான்.

அவள் படுக்கையில் சாய்ந்து அமர்ந்தாள். அவளது மடியில் தலை வைத்து அவன் படுத்துக் கொண்டான்.

''அவனை பார்த்தியா சாரு? உருவ ஒற்றுமை ரொம்ப இருக்கில்ல...''

''ம்ம்ம்... உங்க சின்ன வயசு போட்டோவை பார்க்கிற மாதிரியே இருந்ததுங்க.''

''இது எப்படி சாத்தியம்னு எனக்குப் புரியலை சாரு.''

'''மனசைப் போட்டு ரொம்ப குழப்பாதீங்க. அதான் டெஸ்ட் எடுக்கலாம்னு முடிவு பண்ணிட்டோமில்ல. இதுவும் கடந்து போகும் கதை கேள்விப்பட்டதில்லையா?

''நம்மளோட வாழ்க்கையில் கஷ்டமும் சரி இன்பமும் சரி நிலையானதில்ல. எல்லாமே கடந்து போகக் கூடியவை தான். இப்ப சந்தோஷம் நம்மை கடந்து போயிருக்கு. அதே மாதிரி இந்த துன்பமும் நம்மை கடந்து போகும். கவலைப்படாதீங்க!'' என்றவள் அவனது முடியை கோதிக் கொடுத்தாள்.

அவளது முடி கோதலும் ஆறுதல் வார்த்தைகளும் அவனது மனக் கொதிப்புக்கு எந்த ஒரு இதத்தையும் அளிக்கவில்லை.

தனது கண்களை மூடி அமைதியாக சில நொடிகள் இருந்தவன் அவளது மேடான வயிற்றில் பார்வையை பதித்து, ''குட்டி! நீயும் அம்மா மாதிரி அப்பாவை நம்புவ இல்ல? இல்லைன்னா உங்க பாட்டி மாதிரி குத்தம் சொல்லுவியா? நான் உன் அப்பாடா! உனக்கு மட்டுமே அப்பா!'' என்று ஒரு குழந்தையாய் மாறி இன்னும் வெளிவராத தன் குழந்தையிடம் பேசிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு எத்தகைய ஆறுதல் வார்த்தைகளை அளிப்பது என்று புரியாமல் சாருமதி கலங்கிக் கொண்டிருந்தாள். அவர்களது அறைக்கதவு தட்டப் படவும். சஞ்சய் எழுந்து சென்று கதவை திறந்தான்.



''லேபிலே போய் டெஸ்ட்க்கு குடுத்திட்டு வந்திட லாம் சஞ்சய். டெஸ்ட் ரிசல்ட் வந்தா தான் நாம நிம்மதியா இருக்க முடியும்.'' என்று ராதாகிருஷ்ணன் கூறியதை அவனும் ஏற்றுக் கொண்டான்.

சஞ்சயை தொடர்ந்து சாருமதியும் அறையை விட்டு வெளியே வந்தாள்.

''நாங்க போய் அந்த டெஸ்டுக்கு குடுத்திட்டு வரோம்.''

''மாமா, நீங்க போகும் போது கெவினையும் தூக்கிக்கிட்டு போங்க. எங்களை பார்த்து அழுதால் அப்புறம் சமாளிக்கிறது கஷ்டம்.'' என்று சாருமதி கூற,

தூங்கிக் கொண்டிருந்த கெவினை தூக்கிக் கொண்டு ராதாகிருஷ்ணனும் சஞ்சயும் கிளம்பினார்கள்.

சாருமதி தன் குரலை தழைத்துக் கொண்டு, ''அத்தை சொல்லுறாங்கன்னு நாம போலீஸிலே இன்ஃபார்ம் பண்ணாமல் இருக்க முடியாது மாமா. ஒரு வேளை இந்தக் குழந்தையை தொலைச்சவங்க இதைக் காணாமல் தேடிக்கிட்டு இருக்கலாமில்ல? அதனால உங்க கமிஷனர் ஃப்ரண்டுகிட்ட சொல்லி ஒரு கம்ப்ளைண்ட் குடுத்துட்டு வாங்க மாமா.'' என்று சாருமதியின் யோசனையை ராதாகிருஷ்ணன் ஏற்றுக் கொண்டார்.

''மித்ரா கல்யாணம் முடிஞ்சு ரெண்டு நாள் தான்மா ஆகுது. அவர் டியூட்டிலே ஜாயின் பண்ணிட்டா ரான்னு தெரியலை. நான் போன் பண்ணி விசாரிக் கிறேன்.''

அவர்கள் மூவரும் கிளம்பிச் சென்றதும் சாருமதி பூஜை அறையை தஞ்சம் அடைந்தாள். திக்கற்றவர் களுக்குத் தெய்வம் தானே துணை!

கோமளம் தன் மருமகளிடம், ''டி.என்.ஏ டெஸ்ட்ன்னு சொன்னியே. அப்படின்னா என்ன மதி?'' என்று கேட்டார்.

''அது ஒரு மருத்துவ பரிசோதனை அத்தை. இப்ப உங்க பிள்ளைக்கும் அந்த கெவினுக்கும் நாம அந்த டெஸ்ட் எடுத்தோம்னா அவன் இவர் பிள்ளையா இல்லையான்னு தெரிஞ்சு போயிடும். உருவ ஒற்றுமை யாருக்கு வேணா ஒத்துப் போகலாம். ஆனா டி.என்.ஏ ஒத்துப் போகாது. அந்த பரிசோதனை முடிவு வந்தால் அந்தப் பையன் இவருக்கு பிறந்தவன் இல்லைன்னு உண்மை தெரிஞ்சிடும்.'' என்றாள்.

சஞ்சயும் கெவினும் மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு விட்டு கமிஷனர் ஆபிஸ் சென்று அவரது நண்பரையும் சந்தித்துவிட்டு காரில் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

கெவின் ஏதேதோ கேட்டுக் கொண்டே வந்தான். ராதாகிருஷ்ணனும் சஞ்சயும் பொறுமையாக அவ னுக்கு பதில் சொல்லிக் கொண்டு வந்தார்கள்.



எய்தவன் எங்கோ இருக்க, அம்பான சிறு குழந்தை யிடம் எதற்கு பகைமை பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் இருவருக்கும்.

தனது கைப்பேசியை எடுத்து ஆராய்ந்த ராதா கிருஷ்ணன், ''மதி நிறைய தடவை கூப்பிட்டு இருக்காள்.'' என்று கூறிக் கொண்டிருக்கும் போதே,

''டாடி! என் வயித்திலே தண்டர் கேட்குது.'' என்றான் கெவின்.

''வயித்திலே இடி இடிக்குதா? அப்படின்னா என் னடா அர்த்தம்?'' என்று சஞ்சய் புரியாது கேட்க,

''அதுக்குள்ள மறந்துட்டீங்களா டாடி? நான் அன்னைக்கே உங்களுக்கு சொல்லிக் குடுத்தே னில்ல'' என்று கெவின் சிணுங்கினான்.

''என்னைக்கு எதை சொல்லிக் குடுத்தே?'' என்று சஞ்சய் வாய்விட்டுப் புலம்ப,

''எனக்கு பசிக்குது டாடி. அதை தான் சொல்லு றேன்.'' என்று அவன் கூறவும்,

''வயிறு சத்தம் போடுதுன்னு சொல்லுறான் போலடா.'' என்று ராதாகிருஷ்ணன் எடுத்துக் கொடுத் தார்.

''வீட்டுக்கு போக நேரம் ஆகும் சஞ்சய். அதனால வழியிலே ஏதாச்சும் ரெஸ்டாரண்டிலே வண்டியை நிறுத்து. நான் மதிக்கு போன் போடுறேன்.'' என்றவர் சாருமதியின் கைப்பேசிக்கு அழைத்தார்.

''சொல்லும்மா மதி.''

''ரொம்ப நேரமா கூப்பிட்டுக்கிட்டு இருந்தேன் மாமா. ஏன் நீங்க போனை எடுக்கலை?''

''கமிஷனர் ஆபிஸிலே போனை சைலன்ட் மோடிலே வச்சோம். அதான்.''

''கமிஷனர் அங்கிள் ட்யூட்டிக்கு வந்துட்டாரா மாமா?''

''இன்னைக்கு தான் வந்து ஜாயின் பண்ணி இருக்கார் மதி. ஏதோ எமர்ஜென்ஸி கேஸ் போல. அதனால வேற வழியில்லாமல் லீவை கேன்சல் பண்ணிட்டு வந்திருக்கார். ரொம்ப டென்ஷனில் இருக்கார். எங்க ளால சரியாப் பேச முடியலை. கம்ப்ளைண்ட் எழுதிக் குடுத்திருக்கோம்மா.''

''டெஸ்ட்க்கு குடுத்துட்டீங்களா மாமா?''

''குடுத்துட்டோம் மதி. ரிசல்ட் வர ரெண்டு நாளாகும்னு சொன்னாங்க.''

''அந்தக் குழந்தையை சாப்பிட வச்சீங்களா மாமா?''

மருமகளின் கேள்வியால் அதிர்ந்தவர் சில நொடிகள் அமைதியானார்.

''மாமா லைனிலே இருக்கீங்களா?''

''ம்ம்ம் லைனிலே இருக்கேன் மதி. இப்ப தான் பசிக்குதுன்னு சொன்னான். அதனால சாப்பிட பக்கத்திலே இருக்கிற ஹோட்டலுக்கு போய்க்கிட்டு இருக்கோம் மதி.''



''நீங்க ரெண்டு பேரும் அங்கேயே சாப்பிட்டு விடுங்க மாமா. வீட்டுக்கு வரதுன்னா லேட் ஆகிடும்.''

''சரிம்மா நாங்களும் சாப்பிட்டு விடுறோம். நீயும் அத்தையும் சாப்பிடுங்க.''

''சரிங்க மாமா.''

''சஞ்சய்கிட்ட பேசுறியாம்மா?''

''அவர் டிரைவ் பண்ணிக்கிட்டு தானே இருக்கார்?''

''ஆமா மதி.''

''அதனால தான் மாமா நான் உங்களுக்கு போன் போட்டேன். வீட்டுக்கு வந்ததும் பேசிக்கிறேன். இல்லைன்னா அவரை ஹோட்டலுக்கு போனதும் போன் பண்ணச் சொல்லுங்க.'' என்றவள் அழைப்பை துண்டித்தாள்.

''என்னப்பா சொல்லுறா?'' என்று சஞ்சய் கேட்க,

''நீ டிரைவ் பண்ணிக்கிட்டு இருக்கிறதால வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறமா பேசுறேன்னு சொன்னாள். இல்லைன்னா சாப்பிடும் போது உன்னை போன் பண்ணச் சொன்னாள்.''

''நடுவிலே எதுக்கு நீங்க அதிர்ச்சியானீங்க?''

''கெவின் சாப்பிட்டானான்னு விசாரிச்சாள். எனக்கு அப்படியே ஷாக் ஆகிடுச்சுடா.'' என்றார்.

''இந்தக் கடவுள் ஓரவஞ்சனைகாரன்டா சஞ்சய். ஆண்களுக்கு உடலிலே வலிமையை மட்டும் தந்துட்டு மீதி எல்லா நல்ல விஷயத்தையும்

பெண்களுக்கே தந்துட்டான். தாய்மைங்கிறது எவ்வளவு அற்புதமான விஷயம்!

''பெத்தால் தான் ஒரு பெண்ணுக்கு தாய்மை உணர்வு வரும் என்பது கிடையாது. காலையில இருந்து நடக்கிற எல்லாப் பிரச்சனைக்கும் காரணமானவன் இவன்னு தெரிஞ்சும் இந்தக் குழ்ந்தை சாப்பிட்டானான்னு அக்கறையா கேட்கிறாள் பாரு. அது தான்டா தாய்மை!

''தடி தடியா ரெண்டு ஆம்பிளைங்க இவன் கூடவே சுத்தினோம். ஆனா அவனா பசிக்குதுன்னு தன் வாயை திறந்து கேட்கிற வரைக்கும் நமக்கு அவன் பசியை பத்தின எண்ணமே வரலை பாரு. ரியலி மதி இஸ் க்ரேட்!'' என்று ராதாகிருஷ்ணன் தன் மருமகளுக்கு பாராட்டுப் பத்திரம் வாசித்தார்.

சஞ்சய் அந்த உணவகத்திற்கு சென்றதும் தன் மனைவியை அழைத்துப் பேசினான். வழக்கமான விசாரிப்பிற்கு பின்னர்,

''டிரைவ் பண்ணும் போது எதை பத்தியும் யோசிக்காதீங்க. பாதையில கவனமாக இருங்க!'' என்று அவள் அறிவுரை கூறவும்,

''உன்னையும் நம்ம பிள்ளையையும் பார்த்துக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்குடா சாரு. அதுக்காக அட்லீஸ்ட் நான் ரொம்ப கவனமா இருப்பேன்டா. நீ என்னைப் பத்தி கவலைப்படாதே. நீ டென்ஷன் ஆகாமல் இரு.'' என்று கூறி அழைப்பை துண்டித்தான்.



கார் சஞ்சயின் வீட்டிற்குள் நுழைந்ததும், ''இது யார் வீடு டாடி? இங்க எதுக்கு நாம வந்திருக்கோம்?'' என்று கெவின் கேட்டான்.

'அடப் போடா! நீ கேட்கிற கேள்விக்கெல்லாம் என்கிட்ட பதிலும் இல்லை. பதில் சொல்லுறதுக்கான தெம்பும் இல்லை' என்று மனதிற்குள் நொந்து கொண்ட சஞ்சய் அமைதியாக இருந்தான்.

''இது இந்த தாத்தா வீடு கெவின். கொஞ்ச நாளைக்கு நீ என் கூட இருக்கியா?'' என்று ராதா கிருஷ்ணன் கேட்டார்.

''உங்க வீடா தாத்தா? டாடி இங்க இருப்பாரா?''

''ஆமா உன் டாடி இங்க தான் இருப்பார்.''

''ஓகே தாத்தா. டாடி இருந்தா நானும் இருப்பேன்.''

'சஞ்சய் தான் போகும் இடத்துக்கெல்லாம் இவனை கூட்டிட்டா போக முடியும்?' என்று ராதாகிருஷ்ணன் மனதிற்குள் புலம்பிக் கொண்டார்.

காரில் இருந்து இறங்கிய கெவின், ''என்னை தூக்குங்க டாடி.'' என்று தன் இரு கைகளையும் விரித்துக் காட்டினான்.

சஞ்சய் வேறு வழியின்றி அவனை தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான். அவர்கள் வீட்டிற்குள் நுழைந்த பொழுது இரு பெண்களுமே வரவேற்பறையில் அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் இருவரையும் இது போல் ஒரு சேரப் பார்ப்பவர்கள் கண்டிப்பாக சஞ்சயிடம் 'இது உங்க

குழந்தையா சார்?' என்று கேட்காமல் இருக்க மாட்டார்கள். காலையில் இருவர் அவ்வாறு கேட்கவும் செய்தார்கள்.

கோமளம் அருகில் இருக்கும் மருமகளை கண்டு கொள்ளாது. "அப்படியே ஒண்ணு போல இருக்கானுங்க. கேட்டா என் பிள்ளை இல்லைங்கிறான். கண்ணு இருக்கிற எவனும் அதை நம்ப மாட்டான்." என்றார்.

சாருமதிக்கு அவரை எதிர்த்து எதுவும் கூறவும் முடியவில்லை. அருகில் அமர்ந்திருக்கவும் பிடிக்கவில்லை. அதனால் அவள் தன் அறைக்குச் செல்ல எண்ணி எழுந்து நின்றாள்.

உள்ளே வந்த கெவின் கோமளத்தை பார்த்து, "பாட்டி! நீங்க இங்க தான் இருக்கீங்களா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

காலையில் அவன் இந்த வீட்டிற்கு வரும் போது தூங்கிக் கொண்டு இருந்ததால் அவனுக்கு தான் கோமளத்தோடு அவர் வீட்டிற்கு வந்தது தெரியவில்லை.

"ஆமாடா. இது உன் பாட்டி வீடு தான்." என்று கோமளம் பதில் அளித்துக் கொண்டிருக்கும் போதே கெவினின் பார்வை சாருமதியின் புறம் திரும்பியது.

அவளை பார்த்தவன் சஞ்சயின் கையில் இருந்து நழுவி இறங்கி அவளருகே ஓடினான். ஓடிச் சென்று அவளது கால்களை கட்டிக் கொண்டு,



"சாரும்மா! நீங்க ஏன் கெவினை பார்க்க இத்தனை நாளா வரலை?" என்று கேட்கவும் செய்தான்.

அனைவருமே அவனது கேள்வியில் ஸ்தம்பித்துப் போயினர்!

குழந்தையான கெவின் சாருவின் வாழ்க்கையில் முள் பாதையாக இருக்கப் போகிறானா? இல்லை மலர் பாதையாக பா?



## 13

கெவின் சாருமதியை அம்மா என்று அழைத்ததும் அனைவருமே அதிர்ந்து போய் பேச்சற்று நின்றனர். எள் விழுந்தால் கூட சப்தம் கேட்கும் அளவிற்கு அங்கே நிசப்தம் நிலவியது.

'இது என்னடா புதுக் குழப்பம்?' என்று சஞ்சய் வருத்தப்பட்டான்.

'ஏற்கனவே நான் பிரச்சனையிலே மாட்டிக்கொண்டு முழிப்பது பத்தாதுன்னு இவளையும் உள்ளே இழுக்கிறானே! கர்ப்பமா இருக்கும் போது இப்படிப் பிரச்சனைக்கு மேல பிரச்சனையா வந்தா அவ தாங்குவாளா?' என்று நொந்து போனான்.

"சாரும்மா உங்களுக்கு கெவினை பிடிக்காதா?"

தன் கால்களை கட்டிக்கொண்டு... தன் கணவனின் சிறு வயது பதிப்பாய்... தனக்கு எப்படி ஒரு குழந்தை

பிறக்க வேண்டும் என்று அவள் இதுநாள் வரை ஆசைப்பட்டாளோ... அதே உரு கொண்ட குழந்தை தனது கண்களை உருட்டிக் கொண்டு, தன்னை அம்மாவென்று அழைக்கவும் சாருமதி உருகித் தான் போனாள்.

அவள் மீண்டும் சோபாவில் அமர்ந்தாள். அந்தக் குழந்தையின் கன்னங்களை தாங்கி,

''உன்னை பிடிக்காமல் போகுமாடா?'' என்ற கேள்வியை அவளையும் அறியாமல் அவளது வாய் உதிர்த்தது.

''அப்ப ஏன் கெவினை பார்க்க வரலை?''

இதுக்கு என்ன பதிலைச் சொல்வது என்று அவள் விழித்துக் கொண்டு இருக்க, ''டாடி, நீங்க சாரும்மா கிட்ட கேளுங்க.'' என்றான்.

சஞ்சய் பரிதாபமாக நின்று கொண்டிருந்தான்.

''சாரு பேரை நாம யாருமே இவன்கிட்ட சொல்லவே இல்லையே! நீ ஹோட்டலில் வச்சு அவகிட்ட தனியா போய் தானே பேசிட்டு வந்தே! இவ பேரு எப்படிடா அவனுக்கு தெரிஞ்சிருக்கும்?'' என்று ராதாகிருஷ்ணன் மெல்லிய குரலில் முணுமுணுத்தார்.

அவரது மனைவி கோமளமோ சப்தமாக வாய் விட்டே கேட்டார்.

''இவ உன் சாரும்மாவா கெவின்?''



''ஆமா பாட்டி. இதான் எங்க சாரும்மா.''

''அப்படின்னு உனக்கு யாரு சொல்லித் தந்தா?''

''என் மம்மி.''

''உங்க அம்மாவே சொல்லித் தந்தாளா?'' என்று சப்தமாக கேட்ட கோமளம்,

''சாதாரணமா எல்லோரும் குழந்தைங்ககிட்ட அதனோட அப்பன் பேரை சொல்லிக் குடுத்து வளர்ப்பாங்கன்னு கேள்விப்பட்டு இருக்கேன். இங்க என்னடான்னா ஒருத்தி அப்பனோட பொண்டாட்டி பேரை எல்லாம் சொல்லிக் குடுத்து வளர்த்திருக்கா!'' என்று முணுமுணுத்தார்.

சஞ்சய்க்கு சுறுசுறுவென்று கோபம் ஏறியது.

''உங்க அம்மா பேரு என்ன?'' என்று கோமளம் கேட்டார்.

''எங்க அம்மா பேரு மேரி.''

''மேரி... இந்தப் பேரிலே யாரையாவது உனக்கு தெரியுமா சஞ்சய்?'' என்று ராதாகிருஷ்ணன் கேட்க அவன் தனது தலையை இடவலமாக ஆட்டினான்.

சாருமதி தன் கணவனையே பார்த்துக் கொண்டிருக்க... கெவின் அவளது தாடையை பற்றி தன் பக்கம் திருப்பிக் கொண்டே,

''சாரும்மா! நான் கேட்டதுக்கு நீங்க இன்னும் பதிலே சொல்லலை.'' என்றான்.

''சாரும்மாவுக்கு உடம்பு சரியில்லை கெவின். அதான்...'' என்று சாருமதி இழுக்க,

''சாரும்மா உங்க வயித்திலே பாப்பா இருக்கா? அதான் என்னைப் பார்க்க நீங்க வரலையா?'' என்று அவனே அவளது மேடான வயிற்றில் பார்வையை பதித்துக் கேட்டான்.

அவள் ஆமாம் என்று தன் தலையை ஆட்டினாள்.

''அப்படின்னா கெவின் அண்ணாவா? எனக்கு தம்பி பாப்பா பிறக்கப் போகுதா?'' என்று உற்சாகமாகக் கேட்டவன் கோமளத்திடம் சென்று,

''கெவின் பிக் பாய் ஆகிட்டேன் பாட்டி. அண்ணாவாகிட்டேன். எனக்கு தம்பி பாப்பா வரப் போகுது.'' என்று பெருமை அடித்துக் கொண்டான்.

கள்ளமில்லாத அந்த மழலையின் பேச்சை அவர்களால் ரசிக்க முடியவில்லை. அதே சமயம் அவர்களுக்கு அவன் மீது கோபமும் வரவில்லை.

சாருமதி 'சஞ்சய் - மேரி' என்ற பெயர்களை கொண்ட கணவன் மனைவி யாரையேனும் தனக்கு தெரியுமா என்று தன் நினைவலையில் தேடிப் பார்த்துத் தோற்றாள்.

கெவின் மட்டுமே பேசிக் கொண்டு இருந்தான். அவன் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் யாரேனும் ஒருத்தர் பதில் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

''மம்மி எங்கே சாரும்மா? பஸ்ஸிலே என் கூட தானே வந்தாங்க.''

''பிள்ளையை சேர்க்க வேண்டிய இடத்திலே சேர்த்துட்டுப் போயிருப்பாள்.'' என்று கோமளம் வழக்கம் போல் இடக்காக மொழிந்தார்.



''மம்மி ஆபீஸ் போயிட்டாங்களா?'' என்று கெவினே கேள்வியையே கேட்க சாருமதியும் ஆமாம் என்று தலையை ஆட்டினாள்.

''இவன் ஊரு என்னன்னு விசாரிச்சீங்களா மாமா?''

''கமிஷனர் ஆபிஸிலே வச்சு விசாரிக்க டிரை பண்ணினோம் மதி. ஆனா இவன் போலீஸ்காரங்களை பார்த்துட்டு பயந்து போய் அழ ஆரம்பிச்சுட்டான். வீட்டிலே போய் விசாரிச்சிட்டு எனக்கு தகவல் சொல்லுங்கன்னு கமிஷனர் சொன்னார். காரிலே வரும் போது சஞ்சய் உங்க அம்மா பேரு என்னன்னு கேட்டான். ஏன் உங்களுக்கு தெரியாதா டாடின்னு திருப்பி கேட்டவன் பதில் ஒண்ணும் சொல்லலை. அதனால அவனை நாங்க எந்தக் கேள்வியும் கேட்கலை. அவன் அம்மா பேரையே இப்ப தான் சொல்லி இருக்கான்...''

அவனிடம் விசாரித்தால் ஏதேனும் உண்மை தெரிய வரலாம் என்று நினைத்த சாருமதி அவனை அருகே அழைத்து கேள்விகளை கேட்க ஆரம்பித்தாள்.

''கெவின்! நீ குட் பாய் தானே? சாரும்மா உன் கிட்ட என்ன கேள்வி கேட்டாலும் கரெக்ட்டா பதில் சொல்லுவ தானே?''

''அதுக்கு பேரு க்ளவர் பாய் சாரும்மா. குட் பாய் இல்ல.'' என்று அவன் கிண்டல் பண்ண,

அந்த சூழ்நிலையிலும் அவனது புத்திசாலித்தனம் அவளது இதழில் சிறு புன்னகையைத் தோற்று வித்தது.

''ஓகே. கெவின் க்ளவர் பாய் தான்.'' என்று ஒத்துக் கொண்டவள்,

''கெவினோட டாடி பேரு என்ன?'' என்று கேட் டாள்.

''என் டாடி பேரு சஞ்சய்.'' என்று அவன் சஞ்சய் புறம் கைகாட்டிச் சொன்னான்.

சஞ்சய் தனது கைகளில் முகத்தை புதைத்துக் கொண்டு அமர்ந்து விட்டான். கணவனின் கலக்கத்தை காணப் பொறுக்காத சாருமதி தன் கேள்வியின் திசையை மாற்ற எண்ணினாள்.

''நீ சாரும்மாவை இதுக்கு முன்னாடி பார்த்து இருக்கியா கெவின்?''

''ஓ! பார்த்து இருக்கேனே.''

''எங்கே எப்போ பார்த்தே?''

''போட்டோவிலே பார்த்து இருக்கேன்.''

''அந்த போட்டோவிலே வேற யார் இருந்தா? உங்க டாடி சாரும்மா பக்கத்திலே இருந்தாரா?''

''இல்ல.. சாரும்மா மட்டும் தான் இருந்தாங்க.''

''இவங்க யாரு?'' என்று தன் மாமனாரையும் மாமி யாரையும் காட்டி அவள் கேட்க,

''தாத்தாவும் பாட்டியும்.'' என்றான்.



''அப்படின்னு உங்க மம்மி சொன்னாங்களா?''

''இல்ல. காலையில டாடி தான் சொன்னார்.''

''இவங்களை நீ போட்டோவில பார்த்து இருக் கியா?''

''இல்ல.''

அப்படியென்றால் குழந்தைக்கு தன்னையும் தன் கணவனையும் மட்டுமே அடையாளம் தெரிகிறது என்று சாருமதி நினைத்துக் கொண்டாள்.

''கெவின் ஸ்கூலுக்கு போவியா?''

''நான் அடுத்த வருஷம் தான் போவேன்.''

''அப்போ கெவின் ஸ்கூலுக்கு போனதே இல் லையா?''

''மம்மி ஆபீஸ் போகும் போது நான் ப்ளே ஸ்கூ லுக்கு போவேன்.''

''உன் ப்ளே ஸ்கூல் எங்க இருக்கு?''

''மம்மியோட ஆபீஸ் பக்கத்தில இருக்கு.''

''அதில்லைடா கெவின். எந்த ஏரியாவில இருக்கு? உனக்குப் புரியற மாதிரி எப்படிக் கேட்கிறதுன்னு எனக்குத் தெரியலையே!'' என்று வாய் விட்டுப் புலம்பியவள் வேறு கேள்விகளை கேட்போம் என நினைத்து,

''உங்க டாடி ஆபீஸ் போவாரா?'' என்று கேட்டாள்.

''ம்ம்ம்... டாடி ஆபிஸிலே தான் இருப்பார். பாதி நாள் டாடி வீட்டுக்கே வர மாட்டார். நானும் மம்மியும் தனியா தான் இருப்போம்.''

''உங்க டாடி என்னவா இருக்கார்? அதாவது உங்க டாடி டாக்டரா? இல்லை போலீஸ் மேனா?''

''நோ. எங்க டாடி இஞ்சினியர்.''

அவன் தனது தந்தை ஒரு மருத்துவன் என்று சொல்லிவிட மாட்டானா என்று சாருமதி வெகுவாக ஆசைப்பட்டாள். மருத்துவன் என்று இல்லை... பொறியாளர் என்ற ஒன்றை தவிர வேறு ஏதேனும் அவன் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டு இருக்க... அவனோ சஞ்சய் மாதிரியே தன் தந்தையும் ஒரு பொறியாளர் என்றதும் நொந்து போனாள்.

''உன் டாடி ஒரு சிவில் இஞ்சினியரா?''

''அப்படின்னா?''

தன் தந்தை பொறியாளர் என்று மட்டுமே அந்த சிறு குழந்தை தெரிந்து வைத்திருக்கக் கூடும் என நினைத்த சாருமதி வேறு கேள்விகளைக் கேட்க முடிவு செய்தாள்.

''நீயும் உன் மம்மியும் எங்கே தங்கி இருக்கீங்க?''

''எங்க வீட்டிலே.''

'ஆகா! இவன்கிட்ட இருந்து விஷயத்தை வாங்கிறதுக்குள்ளே என்னை தலையால தண்ணி குடிக்க வச்சிடுவான் போல' என்று சாருமதி நொந்து போனாள்.

''உங்க வீடு எங்க இருக்கு?''

''பிங்கி வீட்டுக்கு பக்கத்திலே.''



'இப்போ பிங்கி வீடு எங்க இருக்குன்னு கேட்டால் எங்க வீட்டுக்கு பக்கத்திலேன்னு நமக்கே பல்பு குடுத்தாலும் குடுப்பான்' என நினைத்த சாருமதி அதை கேட்காது விடுத்தாள்.

''பிங்கி யாரு கெவின்?''

''மேரா தோஸ்த்.'' என்று அவன் கூறவும் அவளது முகத்தில் பிரகாசம் வந்தது.

''கெவினுக்கு ஹிந்தி தெரியுமா?''

''கெவினுக்கு ஹிந்தி கொஞ்சம் தெரியும்.''

''எப்படி ஹிந்தி தெரியும்? நீ தான் ஸ்கூலுக்கே போகலையே.''

''என் ப்ளே ஸ்கூலிலே எல்லோரும் அதான் பேசு வாங்க. முதல்ல நான் தமிழ் மட்டும் பேசுவேனா... என்னை எல்லோரும் மதராஸின்னு சொன்னாங்க.''

''அப்படின்னா நீ டில்லில இருந்தியா கெவின்?''

''டில்லின்னா என்ன?''

அவனது கேள்வியை புறந்தள்ளிவிட்டு, ''உன்னோட ஊரு மும்பையா?'' என்று சாருமதி அடுத்த கேள்வியை கேட்டதும்,

''நானும் மம்மியும் மும்பையில தான் இருக்கோம்'' என்றான்.

'அப்பாடா! ஒரு வழியாக அவனோட ஊரை தெரிஞ்சுக்கிட்டேன்' என்று அவள் தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

"நீ வேலை விஷயமா அடிக்கடி மும்பைக்கு தானேடா போவாய்?" என்று கோமளம் கேட்க சஞ்சய் விருட்டென்று எழுந்து உள்ளே சென்றான்.

மும்பையில் நண்பர் ஒருவருக்காக கட்டிட வேலை ஒன்றை ஒத்துக் கொண்டிருப்பதால் சஞ்சய் அடிக்கடி மும்பை சென்று வருவான். இப்படி அனைத்து விஷயமும் சஞ்சய்க்கு எதிராகவே இருந்தது.

கெவின் சஞ்சய்க்கு மகனா? இல்லை எமனா?



## 14

தன் மாமியார் தன் கணவன் மீது பழி சொல்லவும்...

'இவங்க வேற... எந்நேரம் எதைப் பேசுறதுன்னு தெரியாம... மனுஷங்களை மேல மேல நோகடிக்கிறாங்க' என்று தன் மாமியாரை மனதிற்குள் திட்டிய சாருமதி கெவினிடம்,

"நீ பாட்டி கூட விளையாடிக்கிட்டு இரு கெவின்." என்று கூறிவிட்டு எழுந்தவள் கணவனின் பின்னே சென்றாள்.

தனது கைகளால் சுவற்றில் ஓங்கிக் குத்திக் கொண்டிருந்தவனின் அருகே சென்று அவனை தடுத்தவள், "இன்னும் ரெண்டு நாளைக்கு உங்க அம்மா பேசுற எந்தப் பேச்சையும் காதிலே போட்டுக்காதீங்க.



அவங்க விவரம் தெரியாமப் பேசுறாங்க." என்று அவனை தேற்ற முயன்றாள்.

"பெத்த புள்ளை மேல கொஞ்சம் கூடவா நம்பிக்கை இருக்காது?"

"நம்பிக்கை இல்லாமல் இல்லைங்க. நம்மளை சேர்ந்தவங்களை யாராச்சும் திட்டினா நமக்கு பிடிக்காது தானே? உங்க அம்மாவுக்கு தன் பையன் மத்தவங்க திட்டுற மாதிரி நடந்து விட்டானோங்கிற பரிதவிப்பு... ஒரு ஆதங்கம்.

"அவங்க படிக்காததால வேற வழியில யோசிக்கவே மாட்டேங்கிறாங்க. தப்பை நீங்க தான் பண்ணி இருப்பீங்க அப்படிங்கிற கோணத்திலேயே யோசிக்கிறாங்க. நானும் மாமாவும் படிச்சிருக்கதால... தப்பு எந்தப் பக்கம் நடந்திருக்கும்னு அலசி ஆராயுறோம். அவ்வளவு தான்.

"ஒரு வயசுக்கு மேல பெத்தவங்களுக்கு புள்ளை பாசம் போயிடும். பேரன் பேத்திங்க மேல பாசம் வந்திடும். இப்ப அத்தை அந்தக் கட்டத்திலே தான் இருக்காங்க. ரெண்டு நாள் அமைதியா இருங்க. அதுக்கு அப்புறமா எல்லாப் பிரச்சனையும் ஒரு முடிவுக்கு வந்துடும்." என்றதும் சஞ்சய் அமைதியாகச் சென்று படுக்கையில் அமர்ந்தான்.

"கெவினுக்கு என்னையும் தெரிஞ்சிருக்கு. ஒரு வேளை என் காலேஜ் சீனியர் ஜோசப் கெவினை செட் அப் பண்ணி என்னை பழி வாங்க நினைக்கிறானா?" என்று சாருமதி வருத்தப்பட,

''அவனுக்கு இந்த அளவுக்கு தைரியம் கிடையாது சாரு. நான் அப்பவே அவனை பத்தி விசாரிச்சுட்டேன் சாரு. அவனுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிடுச்சு. இப்போ என்ன வேலை தெரியுமா செய்யுறான்? ஒரு பணக்கார வைஃபுக்கு ஹஸ்பண்டா இருக்கான்.''

''என்ன ஹஸ்பண்டா இருக்கானா? அப்படின்னா?''

''நிஜமா தான்டா சாரு. ஒரு அடிமை மாதிரி இருக்கான். அந்த கடுப்பிலே தான் உன்கிட்ட வந்து அன்னைக்கு அப்படிப் பேசிட்டு போனான்.''

''அவன் வைஃப் அவ்வளவு கெத்து காட்டுற வங்களா?''

''ஆமாடா சாரு! அன்னைக்கு நாம கமிஷனர் அங்கிள்கிட்ட பேசிக்கிட்டு இருக்கும் போது நான் அவனையே தான் பார்த்துக்கிட்டு இருந்தேன். அப்போ அவன் வைஃப் உன்னை காட்டி ஏதோ கேட்டாள். அவன் என்ன சொன்னானோ... பப்ளிக் ப்ளேஸ்னு கூட பார்க்காம விட்டாள் பாரு ஒரு அறை!''

''ஓ!'' என்று திகைப்புடன் கணவன் கூறியதை சாருமதி கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அது மட்டுமில்லை உன்னை பழி வாங்குறதுக் காக அவனால எப்படி அச்சு அசலா என்னை மாதிரியே இருக்கிற ஒரு குழந்தையை ரெடி பண்ண முடியும்?'' என்று சஞ்சய் கேட்டான்.

ஜோசப் தான் அப்படி செட் பண்ணி அனுப்பி இருப்பான் என்று பழியை அவன் மேல் போட்டு



விட்டு மனைவியிடம் இருந்து தப்பித்துக் கொள்ள நினைக்காமல் 'எப்படி கெவினுக்கு என் சாயலை வர வைக்க முடியும்?' என்று உண்மையை எடுத்துக் கூறி தனக்கே ஆப்பு வைத்துக் கொள்ளும் கணவனின் செயலை கண்ட சாருமதிக்கு சஞ்சயின் மீது நம்பிக்கை இன்னும் கூடியது.

ராதாகிருஷ்ணன் தன் மருமகள் சேகரித்த விவரங் களை தன் கமிஷனர் நண்பரிடம் பகிர்ந்தார்.

''பேசாமல் கெவினை ஒரு போட்டோ எடுத்து பேப்பரிலே போடலாமா?''

''சின்னப் பிள்ளை விவகாரம் கிருஷ்ணா! கொஞ்சம் ஜாக்கிரதையா தான் ஹேண்டில் பண்ணனும். நான் இப்பவே அவன் போட்டோவை மும்பையிலே உள்ள எல்லா போலீஸ் ஸ்டேஷனுக்கும் அனுப்ப சொல்லு றேன். மிஸ்ஸிங்னு யாராச்சும் புகார் குடுத்திருக் காங்களான்னு பார்ப்போம். இவன் இங்க கிடைச்ச தால இங்கேயும் சொல்லி வைக்கிறேன்.'' என்று கமிஷனர் கூறியதை ராதாகிருஷ்ணனும் ஏற்றுக் கொண்டார்.

அன்று இரவு வரை வேறு எந்தப் பிரச்சனையும் பெரிதாக எழவில்லை.

இரவு தூங்கச் செல்லும் பொழுது கெவின் சாருமதி யுடன் தூங்க வேண்டும் என ஆசைப்பட்டான். அவளும் சரியெனக் கூறி அவனை அழைத்துச் சென்றாள்.

படுக்கையில் ஏறி அவளருகே படுத்தவன், ''சாரும்மா நீங்க கதை சொல்லுவீங்களா?'' என்று கேட்டான்.

''பெட் டைம் ஸ்டோரீஸா கெவின்? சாரும்மா நாளைக்கு சொல்லட்டுமா?''

''ஓ.கே நாளைக்கு கண்டிப்பா சொல்லணும்.''

அப்போது சஞ்சய் அந்த அறைக்குள் நுழைந்தான்.

''நீங்க எதுக்கு டாடி இங்க வந்தீங்க?''

''தூங்கிறதுக்கு வந்தேன்டா.''

''நீங்க சாரும்மா பக்கத்திலே எல்லாம் தூங்கக் கூடாது.''

''நீ மட்டும் உங்க சாரும்மா பக்கத்திலே தூங்க லாமா?''

''இங்கே ப்ளேஸ் இல்ல. அதனால் நீங்க பாட்டி கூடப் போய் தூங்குங்க. நீங்க இங்க வரக் கூடாது.'' என்றதும் சஞ்சய்க்கு ஆத்திரம் தலைக்கேறியது.

'என் வைஃப் பக்கத்திலே தூங்கக் கூடாதுன்னு சொல்லுறதுக்கு நீ யாருடா?' என்று கத்திக் கூச்சலிட வேண்டும் போல் ஆத்திரம் வந்தது.

கோபத்தில் அவன் கத்துவதற்கு வாய் திறக்க சாருமதி அவனை அமைதியாய் இருக்குமாறு சைகை செய்தாள்.

தன் கணவன் இருக்கும் மனநிலையில் இன்று அவன் தனியாகத் தூங்குவது நல்லதிற்கில்லை என உணர்ந்த சாருமதி கெவினிடம் திரும்பி,



''நீ பாட்டி பக்கத்திலே படுத்துக்கிறியா கெவின்?'' என்று கேட்டாள்.

''இல்ல.. நான் சாரும்மா பக்கத்திலே தான் படுப்பேன்.'' என்றான்.

''சாரும்மா வயித்திலே பாப்பா இருக்கில்ல. நீ தூங்கும் போது அதை மிதிச்சிட்டா பாப்பாக்கு வலிக்கும். அதனால நீ தூங்கும் போது மட்டும் பாட்டி கூட இருக்கியா?'' என்று கேட்டதும் மனமே இல்லாமல் சரியெனத் தலை அசைத்தான்.

''நீ அங்கிள் கூட பாட்டி ரூமுக்கு போ.'' எனறு தன் கணவனை கைகாட்டி அவள் கூற,

''இவர் அங்கிள் இல்ல சாரும்மா. டாடி.'' என்று அவளை அவன் திருத்தினான்.

'இவனுக்காக இவரை டாடி என்று குறிப்பிட்டால் இவர் மனம் வாடுவார். கெவின் ஒவ்வொரு முறை டாடி என்று கூப்பிடும் பொழுதும் அவரது மனம் எந்த அளவிற்கு வேதனைப்படும்?' என நினைத்துப் பார்த்தவள் கெவின் சஞ்சயை அழைக்கும் முறையை மாற்ற எண்ணினாள்.

''நாம உன் டாடிக்கு வேற பேரு வைக்கலாமா கெவின்?''

''எதுக்கு வேற பேரு?''

''இல்ல... மம்மி வரும் வரைக்கும் நாம டாடியை வேற பேர் சொல்லிக் கூப்பிடுவோம். அப்ப தான் நீ என்ன கேட்டாலும் டாடி வாங்கித் தருவார்.''

''அப்படியா டாடி?'' என்று அவன் சஞ்சய் புறம் திரும்பிக் கேட்க,

அவன் அமைதியாக நின்றான். ஆமாம் என்று சொல்லுங்களேன் என்று சாருமதி சைகை செய்ய சஞ்சய் தன் வாயை திறந்து எதுவும் சொல்லவில்லை. மாறாகத் தன் தலையை மட்டும் ஆட்டினான்.

''ஓகே. அப்படின்னா கெவின் இனிமே டாடியை எப்படிக் கூப்பிடணும்?''

''சாருப்பான்னு கூப்பிடுறியா?'' என்று சாருமதி கேட்டாள்.

அந்தக் கேள்வியை கேட்டுவிட்டு அவள் ஊரில் உள்ள தெய்வங்களுக்கு எல்லாம் கெவின் சரியெனச் சொல்லிவிட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தாள்.

அவளது வேண்டுதலின் பலனாக, ''சாருப் பான்னே கூப்பிடுறேன்.'' என்று அவனும் ஒத்துக் கொண்டு சாருமதியின் வயிற்றில் பால் வார்த்தான்.

''சாருப்பா! வாங்க பாட்டிகிட்ட போகலாம்'' என்று அவனது கையை பிடித்துக் கொண்டு அறையை விட்டுச் சென்றான்.

பரிசோதனை முடிவு வர இன்னும் இரு நாட்கள் ஆகும். அதுவரை இவனை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என நினைத்து சாருமதி கவலையடைந் தாள்.



கெவினை தன் தாய் தந்தையரின் பொறுப்பில் விட்டுவிட்டு தங்கள் அறைக்கு வந்த சஞ்சய் மனைவியின் அருகில் சென்று படுத்துக் கொண் டான்.

''எதைப் பத்தியும் யோசிக்காமல் தூங்குங்க. நீங்க நிம்மதியா இருந்தா தான் நானும் குட்டியும் நிம்மதியா இருப்போம்.'' என்றதும் அவள் மேல் தன் கையை போட்டுக் கொண்டு தூங்க முயற்சித்தான்.

'ஏன் இப்படி நடந்தது? அடுத்து என்ன நடக்கும்? இதை எப்படி சமாளிப்பது? நான் எங்கே என்ன தப்பு பண்ணினேன்?' என்று பலவற்றை சுற்றி வந்த அவனது மூளை ஒரு கட்டத்தில் வேலை நிறுத்தம் செய்தது. தன்னையும் அறியாது தூங்கிப் போனான்.

மறுநாள் காலை சாருமதி எழுந்த போது சஞ்சய் அவளருகே இல்லை. சஞ்சய் தன் தந்தையுடன் அலுவலக அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந் தான்.

சாருமதி அங்கே சென்ற போது அவர்கள் பேசிக் கொண்டிருந்தது அவளது காதிலும் விழுந்தது.

''சரியா தூங்கலையா சஞ்சய்? கண்ணெல்லாம் சிவந்து போய் இருக்கு.''

''ப்ச்... தூக்கம் வரலைப்பா. சாரு...'' என்று தொடங்கியவன் ஒன்றும் சொல்லாமல் நிறுத்த,

''மதி ஏதாச்சும் சொன்னாளா? உன் மேல கோபிச் சுக்கிட்டாளா?'' என்று அவன் தந்தை கேட்டார்.

''அப்படி கோபிச்சுக்கிட்டா பரவாயில்லைன்னு தோணுதுப்பா.''

''நீ சொல்ல வருவது எனக்குப் புரியலை சஞ்சய்.''

''அவளும் அம்மா மாதிரி என்னை நம்பாமல் பேசி இருந்தாக் கூட எனக்குக் கோபம் தான் வந்து இருக்கும். என்னடா இவ நம்ம மேல கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லாம இருக்காளேன்னு. ஆனா அவ என்னை முழுசா நம்புறாப்பா...''

''அது சந்தோஷப்பட வேண்டிய விஷயம் தானேடா?''

''அவளோட ஹஸ்பண்டா சந்தோஷம் மட்டுமில்ல... எனக்கு பெருமையாவும் இருக்கு.''

''அப்புறம் என்ன தான்டா உன் பிரச்சனை?''

''குற்றம் சாட்டப்பட்ட மனுஷனா இருக்கேனே... அதை நிரூபிக்கிற வரைக்கும் என்னால எப்படிப்பா நிம்மதியா இருக்க முடியும்? அவ முகம் பார்த்து என்னால பேச முடியலைப்பா. மனசு உறுத்தலா இருக்கு.

''எனக்காக இல்லைன்னாலும் அவளுக்காகவாச்சும் நான் தப்பு செய்யலைன்னு நிரூபிக்கணுமேன்னு பதட்டமா இருக்கு. அவ கர்ப்பமா இருக்கிற இந்த நேரத்திலே என்னால அவ கஷ்டப்படுறாளேன்னு நினைக்கிறப்ப ரொம்பக் கஷ்டமா இருக்குப்பா.''

''உனக்கு ஒரு கதை சொல்லுறேன் கேளு'' என்ற ராதாகிருஷ்ணன் கதை கூற ஆரம்பித்தார்.

''இது புத்தரோட தலைமை மடாலயத்தில் நடந்த ஒரு சம்பவம். அடிப்படை சன்னியாசப் பயிற்சியை



வெற்றிகரமாக முடிச்ச சன்னியாசிகள் தியானத்தை மக்களுக்குக் கத்துக் குடுத்து சேவை செய்யுறதுக்காக நாட்டின் பல பகுதிகளுக்குச் செல்லத் தயாரானாங்களாம்.

அதுல ஒரு சன்னியாசி புத்தர் கிட்ட போய் இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு தான் செல்ல விரும்புவதா சொன்னாராம்.

அதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த புத்தர், 'அந்தப் பகுதிக்கா? அங்கே வாழும் மனிதர்கள் முரட்டுத்தனமானவங்க. சின்னச் சின்ன பிரச்சனைக்கெல்லாம் அடிதடி சண்டையில இறங்குவாங்க. கொஞ்சம் கூட பக்தியோ, தியான உணர்வோ இல்லாதவங்க. இப்படிப்பட்ட பொல்லாதவர்கள் இருக்கும் இடத்துக்கா போக விரும்புறேன்னு' கேட்டாராம்.

ஆமாம்னு தைரியத்தோடு சொன்ன சீடனிடம் புத்தர், 'நான் உன்கிட்ட மூணு கேள்வி கேட்பேன். அந்த மூணு கேள்விக்கும் நீ சரியான பதிலை சொல்லிட்டா நீ அந்தப் பகுதிக்கு போகலாம்னு' சொன்னாராம்.

முதல் கேள்வி... 'அங்க போன பிறகு அந்த மக்கள் உன்னை வரவேற்பதுக்கு பதிலா அவமானப்படுத்தினா நீ என்ன செய்வாய்னு' புத்தர் கேட்டாராம்.

'ரொம்ப ஆனந்தப்படுவேன். ஏன்னா அவங்க என்னை அடிக்கலை, உதைக்கலை. திட்டுறதோட நிறுத்திக்கிட்டாங்களே. அந்த மக்கள் மிகவும் நல்ல

வர்கள்னு நான் அவங்களுக்கு நன்றி சொல்வேன்னு சீடர் சொன்னாராம்.

ரெண்டாவது கேள்வி.... 'ஒரு வேளை திட்டாமல் அடித்து உதைத்தால் நீ என்ன செய்வாய்னு' புத்தர் கேட்டாராம்.

'அவங்க மிகவும் நல்லவர்கள். அதனால தான் என்னைக் கொல்லாமல் விட்டுட்டாங்கன்னு ஆனந்தப் படுவேன்னு' அந்த சீடர் சொன்னாராம்.

மூணாவது கேள்வி... 'ஒரு வேளை உன்னைக் கொன்றுவிட்டால் என்ன செய்வாய்னு' புத்தர் கேட்டாராம்.

'மொத்தமாக இந்த வாழ்க்கையில் இருந்தே எனக்கு சுதந்திம் தந்து விட்டார்களே! இனி எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லைன்னு நினைச்சு இன்னும் ஆனந்தப்படு வேன்னு' அந்த சீடர் சொன்னாராம்.

'அங்கு மட்டுமல்ல... நீ எங்கு போனாலும் வாழ்ந்து விடுவாய். எதனாலும் இனி உன்னை வீழ்த்த முடியாது. எப்போதும் ஆனந்தமாயிருக்க பக்குவப்பட்டு விட்டாய். எங்கு சென்றாலும் நன்றாக இருப்பாய் போய் வான்னு' ஆசீர்வாதம் பண்ணி புத்தர் அந்த சீடனை அனுப்பி வச்சாராம்.''

''இப்ப எதுக்குப்பா இந்தக் கதையை சொல்லு றீங்க?''

''மனசு நிறைய குழப்பம் இருந்தா சாதாரண விஷயம் கூடப் புரியாதுன்னு சொல்றது சரி தான்டா



சஞ்சய். நான் சொல்ல வருவது உனக்குப் புரிய லையா?''

''ஒன்னும் புரியலைப்பா. புத்தி ஒரே இடத்தி லேயே நிலைச்சி நின்னுடுச்சு.''

''வாழ்க்கையில் எது நடந்தாலும்... அதிலே ஒரு பாஸிட்டிவான விஷயத்தை நாம எடுத்துக்கணும். அது தான் இந்தக் கதையோட தத்துவம்.''

''இப்ப நடக்கிற பிரச்சனையில என்ன பாஸிட்டிவ் விஷயங்கள் இருக்குப்பா?''

''ஒன்னு இல்ல. நிறைய இருக்கு.''

''ஒன்னு ஒண்ணா சொல்லுங்க.''

''இப்படி ஒரு சூழ்நிலையில் கூட உன் மனைவி உன் மேல நம்பிக்கை வச்சிருக்கா. இதனால உங்க ரெண்டு பேருக்கிடையில புரிதல் இன்னும் அதிக மாகும். அன்பும் பாசமும் வளரும்.''

''அடுத்தது என்னப்பா?''

''இப்படி ஒரு துன்பம் வந்துடுச்சேன்னு நீ நிலை குலைஞ்சு போய் நிக்குறே. கர்ப்பமா இருக்கிற உன் மனைவியையும் குழந்தையையும் பத்தி கவலைப் பட்டுக்கிட்டு இருக்க. அவங்க கவலையை போக்க ணும்னா நீ திடமா நிக்கணும். அதை நீ உணர ஆரம் பிப்பாய். அந்த திடம் உனக்குள்ள வந்துடுச்சுன்னா ஸ்தம்பிச்சு போய் இருக்கிற உன் மூளை யோசிக்கத் தொடங்கிடும். இந்தப் பிரச்சனையில் இருந்து நீ சுலபமா வெளியே வந்துடுவே.

''இந்தப் பிரச்சனையை நீ சுலபமா சமாளிச்சதுக்கு அப்புறமா உன் வாழ்க்கையில் எந்தக் கஷ்டம் வந்தாலும் இதெல்லாம் என்ன பெரிய பிரச்சனை... தூசி மாதிரி ஊதி தள்ளிட மாட்டேன்னு சொல்லுற அளவுக்கு உன் மனோ தைரியம் வளரும். அது தான் உனக்கு கிடைக்கப் போகிற ப்ளஸ் பாயிண்ட்.''

''ம்ம்ம்.''

''உன்னோடஅம்மா...''

''அம்மாவுக்கு எது ப்ளஸா அமையப் போகுது?''

''நம்ம பிள்ளையை நாமளே நம்பலைன்னா... வேற யாரு நம்புவாங்கங்கிற பாடத்தைக் கத்துக் குடுக்கும். இந்தப் பழிச் சொல்லில் இருந்து நீ மீண்டு வந்ததுக்கு அப்புறம் உன்னோட அம்மா முழுசா மாறுவாடா. இனிமேல் எதையுமே யோசிக்காமல் பேசக் கூடா துங்கிற ஒரு முடிவுக்கு வருவாள்.''

தந்தையின் பேச்சைக் கேட்டதற்குப் பின்பு அவனது மனக் கவலை கொஞ்சம் குறைந்தது. சாருமதி வந்த சுவடு தெரியாமல் தனது அறைக்குத் திரும்பினாள்.

'மாமா கூறுவது போல் வருங்காலததில் எனக்கும் இவருக்கும் இடையில் அன்பும் காதலும் அதிகரிக் குமா? இல்லை இந்தப் பிரச்சனையால் எங்கள் இருவருக்கும் இடையில் இடைவெளி உண்டா குமா?' என்று சாருமதி யோசித்தாள்.

சாருமதிக்கும் சஞ்சய்க்கும் இடையில் கெவின் எழுப்பப் போவது சீனப் பெருஞ் சுவரா? இல்லை பாசச் சுவரா?





# 15

ராதாகிருஷ்ணன் தன் மகனுக்கு புத்தரின் கதையை கூறி முடித்த பின் ஐந்து நிமிடங்களுக்கு அங்கே அமைதி நிலவியது.

அதன் பின்பு அவர் தன் மகனிடம் ''ஹவ் டு யூ ஃபீல் நவ்?'' என்று கேட்டார்.

''பெட்டரா ஃபீல் பண்ணுறேன்பா.''

தன்னுடைய பேச்சைக் கேட்ட உடனே மகன் சந்தோஷமாக நடனமாடுவான் என்று ராதாகிருஷ் ணன் எதிர்பார்க்கவில்லை.

அனுபவசாலியான அவருக்கு ஒரு விஷயம் நன்கு தெரியும். பிரச்சனையில் சம்பந்தப்படாதவர்கள் வெளியில் இருந்து ஆயிரம் அறிவுரைகள், தன்னம் பிக்கை கதைகள் என்று எடுத்துச் சொல்லலாம். ஆனால் பிரச்சனைக்கு உரியவர்களால் அதை அப்படியே ஏற்றுக் கொள்வது என்பது நடவாத ஒரு விஷயம்.

அவர்களின் மனநிலையில் சிறிதளவு மாற்றம் ஏற்படலாமே ஒழிய அவர்களின் கவலைகள் முற்றிலு மாக மறையாது.

பல்வலியும் தலைவலியும் தனக்கு வந்தால் தான் தெரியும் என்று முன்னோர்கள் சும்மாவா பழமொழி சொல்லி வைத்திருக்கிறார்கள்.

அன்று காலை உணவிற்காக அனைவரும் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்திருந்தார்கள்.

சஞ்சய் தான் கெவினின் தந்தை இல்லை என்பதை நிரூபிக்க எண்ணி அவனது தந்தையின் பிடித்தம் மற்றும் பிடித்தமின்மை பற்றி விசாரிக்க விரும்பினான்.

''கெவின்!'' என்று சஞ்சய் அழைத்ததும்,

''சொல்லுங்க சாருப்பா.'' என்று அவன் கூற, ராதாகிருஷ்ணன் புருவம் உயர்த்தினார்.

''சாரு கத்துக் குடுத்தாள்பா.'' என்று சஞ்சய் விளக்கவும், கோமளம் எதையோ சொல்வதற்காக தன் வாயை திறந்தார்.

''கோமளா! நான் நேத்து உன்கிட்ட என்ன சொன்னேன்? கொஞ்ச நாளைக்கு உன் வாயை சாப்பிடறதுக்கு மட்டும் திறந்தால் போதும்!'' என்று ராதாகிருஷ்ணன் கூறவும் கோமளம் அமைதியாகி விட்டார்.

சஞ்சய் கெவினிடம் திரும்பி, ''சாப்பிடுற விஷயத்தில் உன் டாடிக்கு என்ன பிடிக்கும் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''எனக்குத் தெரியும்.''

''உன் டாடிக்கு பிடிச்ச சாப்பாடு எது?''

''சாம்பார் சாதம்.''

''உன் டாடிக்கு சிக்கன் பிடிக்குமா?''

''டாடி சிக்கன் மட்டன் எதுவுமே சாப்பிட மாட்டார். அதனால மம்மி அதை வீட்டிலே சமைக்கவே மாட்டாங்க.''



''உங்க டாடிக்கு ஸ்வீட்ஸ் பிடிக்குமா இல்லைன்னா காரமா?'' என்று சற்றே இறங்கிய குரலில் சஞ்சய் கேட்டான்.

சஞ்சய் குரல் எப்படி சப்தமாக வெளி வரும்? கெவின் முதலில் கூறிய இரண்டு பதில்களுமே சஞ்சய்க்கு மிகச் சரியாகப் பொருந்திப் போகிறதே!

''ஸ்வீட்ஸ் தான் ரொம்பப் பிடிக்கும்.'' என்று கெவின் கூறவும் சஞ்சய் பேசாமல் அமைதியாக இருந்தான். ஏனென்றால் அந்தப் பதிலும் கூட சஞ்சய்க்கு பொருந்திப் போனது.

இதற்கு மேலும் கேள்விகளைக் கேட்டு சொந்த செலவில் அவன் சூனியம் வைத்துக் கொள்ளப் பிரியப்படவில்லை. அருகே அமர்ந்திருந்த சாருமதி கணவனின் கையை இறுக்கிப் பிடித்து ஆறுதல் அளித்தாள்.

கோமளம் தன் கணவனின் ஆணைக்கு இணங்கி வாய் திறந்து எதுவும் சொல்லவில்லை. ஆனால் அவரது பார்வையில் எள்ளல் அப்பட்டமாக மின்னியது.

ராதாகிருஷ்ணனும் சஞ்சயும் அலுவலகத்திற்கு கிளம்ப முடிவு செய்தார்கள்.

''தனியா சமாளிச்சிடுவியா சாரு?'' என்று சஞ்சய் கேட்க,

''மூணு வயசு குழந்தையை சமாளிக்க என்னால முடியாதாங்க? அவன் என்னை எதிரி மாதிரி

பார்த்தாலோ... என்கிட்ட இருக்க மாட்டேன்னு சொன்னாலோ நீங்க பயப்படலாம். பாசமா சாரும்மான்னு கூப்பிட்டு என்கிட்ட ஒட்டிக்கிறான். அதனால நீங்க பயப்படாம போயிட்டு வாங்க.''

''அவன் வாயைத் திறந்து எது பேசினாலும் அது எனக்கு வில்லங்கமாகவே வந்து முடியுதே சாரு! அதான் என் கவலையே. டைனிங் டேபிளில் என்ன நடந்துச்சுன்னு பார்த்தே இல்ல...''

அவள் ஆமாம் என்பதாய் தலையாட்டினாள்.

''இதுக்கு நான் என் வாயை வச்சுக்கிட்டு சும்மாவே இருந்திருக்கலாம்னு உனக்கு தோணுதா சாரு?''

''இல்லைங்க. கண்டிப்பா அப்படி இல்லை. நேத்தெல்லாம் சோர்ந்து போய் இருந்தீங்க. இன்னைக்கு உங்களை நிரூபிக்க என்ன வழின்னு யோசிக்க ஆரம்பிச்சு இருக்கீங்களே. அதை நினைச்சு எனக்கு சந்தோஷம் தான்.''

''என்ன முயற்சி பண்ணி என்ன பிரயோஜனம்?'' என்று அவன் பெருமூச்சு விட,

''அப்படி நினைச்சிடாதீங்க. நம்மளோட ஏதோ ஒரு முயற்சியிலே நமக்கு சாதகமான பாயிண்ட் நிச்சயமா கிடைக்கும். ஏதோ ஒரு சின்ன விஷயத்தை நாம கோட்டை விடுறோம்னு நான் நினைக்கறேன். யோசிச்சுப் பார்ப்போம்.'' என்று அவனுக்கு நம்பிக்கை தரும் விதமாய் பேசினாள்.

''எனக்கு உன்னை தனியா விட்டுட்டு ஆபீஸ்க்கு போக பிடிக்கலை சாரு.''



''வயசு பொண்ணு வந்து நடு வீட்டிலே உட்கார்ந்துகிட்டு நான் தான் சஞ்சய் வைஃப்னு சொன்னா... நீங்க கவலைப்படுறதிலே ஒரு அர்த்தம் இருக்கு.''

''எதையாவது சொல்லாதே சாரு. அப்புறம் அது அப்படியே பலிச்சிடப் போகுது. நான் தான் கெவினோட அம்மான்னு ஒருத்தி நிஜமாவே வந்து நின்னுடப் போறாள்.'' என்று அவன் கூற, வானத்தில் இருந்த தேவதைகள் ததாஸ்து (அப்படியே ஆகுக!) என்று சொல்லி அவனது வாக்கை மெய்பிக்க தயாரானர்கள்.

''எங்க அம்மாகிட்ட அதிகமா பேச்சு வச்சுக்காதே. அவங்க என்னை காயப்படுத்துறதா நினைச்சு எதையாவது சொல்லுவாங்க. அது உன்னை காயப்படுத்தும்னு யோசிக்க மாட்டாங்க.'' என்று எச்சரித்துவிட்டுக் கிளம்பிச் சென்றான்.

தேவதைகளின் வாழ்த்துப்படி வந்து இறங்கப் போகும் மேரியின் வருகையால் சஞ்சயின் சஞ்சலங்கள் தவிடு பொடியாகுமா? இல்லை கற்பாறையாய் மேலும் கடினமாகுமா?



## 16

ராதாகிருஷ்ணனும் சஞ்சயும் அலுவலகம் கிளம்பிச் சென்றார்கள். கெவின் தொலைக்காட்சியை

பார்த்துக் கொண்டு இருந்தான். சற்றுத் தள்ளி கோமளமும் சாருமதியும் அமர்ந்திருந்தார்கள்.

''கெவின்... இது என்ன பேருன்னு இப்படி ஒரு பேரு வச்சிருக்காங்க!'' என்று கோமளம் வாய் விட்டுப் புலம்பினார்.

''கிறிஸ்டியன் பேரு அத்தை.''

''கிறிஸ்தவ பேரா? அதான் வித்தியாசமா இருக்கா? அவ அம்மா கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவள்னு அந்தப் பேரை வச்சுட்டாள் போல!''

''பேரில என்ன அத்தை இருக்கு? கூப்பிடத் தானே பேரு.''

''பேரு மட்டுமா அப்படியே வச்சிருப்பா. சாமி கூட அவ மதத்துபடி தான் கும்பிடச் சொல்லிக் கொடுத் திருப்பாள்.'' என்று கோமளம் குற்றம் சாட்டினார்.

கணவனின் ஆணைப்படி மாமியாரிடம் தேவைக்கு மட்டுமே பேச வேண்டும் என்ற முடிவினை சாருமதி எடுத்திருந்தாள். ஆனால் அவரது இந்தக் கருத்திற்கு பதில் கூறாமல் இருக்க அவளால் முடியவில்லை.

''சாமியை எந்த மதத்துபடி வேணா கும்பிடலாம் அத்தை. கடவுள்னு ஒருத்தர் இருக்காருங்கிற நம் பிக்கை பெரியவங்க எதுக்கு தெரியுமா நமக்குள்ள விதைக்கிறாங்க?

''கண்ணுக்கு தெரியாத அந்த சக்திக்கு பயந்து நாம செய்யுற செயல்களில் ஒரு நேர்மையை கடைபிடிக் கணும் என்பதற்காக. நாம தப்பு செஞ்சால் அதுக்கான



தண்டனையை கடவுள் தருவார்னு நாம நம்பினா கெட்டது செய்யப் பயப்படுவோம்னு நினைச்சு தான்.

''சோதனை காலம் வரும் போது நம்மளோட கஷ்டங்கள் நம்மை விரக்தி அடைய செய்யும். நம்ம பிரச்சனையை கடவுள் தீர்த்து வைப்பாருன்னு நம்புறவங்க தங்களோட பாரத்தை கடவுள் சன்னி தானத்திலே இறக்கி வைக்கிறாங்க. அதனால அவங்களோட விரக்தியின் அளவு குறையுது.

''முருகனை கும்பிட்டாலும் இந்த பலன் தான். இயே சுவை வழிபட்டாலும் அதே பலன் தான். கடவுளை அடைய நாம பின்பற்றுகிற வழியும் வழிபாட்டு முறையும் தான் வெவ்வேறு. ஆனால் கடவுள் ஒருவரே!'' என்றவள் எழுந்து பூஜை அறைக்குள் சென்றாள்.

'என் கணவருக்கு வந்திருக்கும் சோதனை தீர வழி சொல் முருகா!' என்று வேண்டிக் கொண்டு கற்பூரம் காட்டினாள்.

அவளைப் பின்பற்றி கோமளமும் அங்கே வந்து கை கூப்பி நின்றார். சாருமதி கற்பூர தட்டை அவர் முன் நீட்டினாள். அவர் தொட்டு வணங்கவும் சாருமதி திரும்பப் போனாள்.

''சாரும்மா நானு!'' என்ற குரல் கேட்டு ஒரு புன் னகையுடனே கெவின் முன் நீட்டினாள்.

அதைத் தொட்டு தன் கண்களில் ஒற்றிக் கொண் டவன் தனது இரு கைகளையும் கூப்பி வணங்க

ஆரம்பித்தான். அதன் பின்பு மண்டியிட்டு அமர்ந்தவன் சிலுவை போடவும் சாருமதி அகலமாகப் புன்னகைத்தாள்.

கெவினின் தாய் அவனை கிறிஸ்துவ மத வழக்கப்படி தான் இறைவனை வணங்க சொல்லித் தந்திருப்பாள் என்று நம்பிக் கொண்டிருந்த கோமளம் இதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்.

இரு தினங்கள் எப்படியோ கடந்தன.

இதுவரை கெவினை காணவில்லை என்று மும்பை காவல் நிலையத்திலோ அல்லது சென்னை காவல் நிலையத்திலோ யாருமே புகார் அளிக்க வில்லை. கெவினை தேடிக் கொண்டோ அவனைப் பற்றி விசாரித்துக் கொண்டோ யாருமே சஞ்சயை அணுகவில்லை.

"நான் போய் டி.என்.ஏ டெஸ்ட் ரிசல்ட் வாங்கிட்டு வரேன்." என்று கூறி சஞ்சய் விடைபெற்றான்.

அத்தையின் குத்தல் பேச்சுக்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிடலாம் என்று சாருமதி நிம்மதியாக அமர்ந்திருந்தாள்.

"சாரும்மா, எனக்கு போர் அடிக்குது. என் கூட விளையாடுங்க." என்று கெவின் அவளை தொல்லை செய்து கொண்டிருந்தான்.

"சாரும்மா வயித்திலே பாப்பா இருக்கும் போது விளையாட முடியாது கெவின். உன் கூட விளையாட ஒரு குட்டிப் பாப்பாவை வரச் சொல்லி இருக்கேன்.



இப்ப அவ வந்துடுவாள்." என்று சாருமதி சொல்லிக் கொண்டு இருக்கும் போதே.

அவர்கள் வீட்டு வேலைக்காரப் பெண்மணி தன்னுடைய பேத்தியுடன் உள்ளே நுழைந்தார்.

கெவின் சஞ்சயை டாடி என்று அழைக்காமல் சாருப்பா என்று அழைத்ததால் வேலைக்காரர்கள் மத்தியில் கேள்வி எழும்பவில்லை என்று சொல்லி விட முடியாது. அந்த அழைப்பினால் அவர்களின் வாயை மூடிவிட முடியுமா என்ன?

உருவ ஒற்றுமை என்ற மிகப் பெரிய ஓட்டையை எந்த சாந்து கொண்டு அடைக்க முடியும்?

ஆனால் வேலையாட்கள் யாரும் துணிந்து இவர்களிடம் வந்து கேள்வி கேட்கவில்லை. இப்போதைக்கு அதுவே போதும் என்று வீட்டினரும் நினைத்துக் கொண்டனர்.

விலை அதிகம் இல்லை என்றாலும் சுத்தமான துணி அணிந்து படிய வாரிய தலையுடன் வந்து நின்ற அந்தக் குழந்தையை சாருமதிக்கு பிடித்துப் போனது.

"உன் பேரு என்னம்மா?" என்று சாருமதி அந்தக் குழந்தையிடம் விசாரிக்க,

"ரோசா!" என்றது அந்தக் குழந்தை.

"நீ எங்க கெவின் கூட விளையாடுறியா ரோஜா?" என்று சாருமதி கேட்கவும் அவள் தலையாட்டினாள்.

"போய் அவ கூட விளையாடு." என்று கெவினை அவளுடன் அனுப்பிவிட்டு சாருமதி ஒய்வாக சோபாவில் அமர்ந்தாள்.

ஐந்து நிமிடங்கள் கடந்து போது. "நோ சாரும்மா நான் இந்தப் பாப்பா கூட விளையாட மாட்டேன்." என்று கூறிக்கொண்டே கெவின் அவளருகே வந்து நின்றான்.

"அவ பாப்பா இல்லைடா. உன்னை விட ரெண்டு வயசாச்சும் பெரியவளா இருப்பாள். அவ உனக்கு அக்கா கெவின்."

"அவ தான் பாப்பான்னு சொன்னா."

"சரி அதை விடு. ஏன் அவ கூட விளையாட மாட்டே?"

"அவளுக்கு ஒண்ணுமே தெரியலை. ஹிந்தி, இங்கிலீஷ் ஒண்ணுமே தெரியலை."

"அதுக்கும் அவ கூட விளையாடுறதுக்கும் என்னடா சம்பந்தம்?"

"நான் ஹைட் அன்ட் சீக் விளையாடுவோமான்னு கேட்டேன். அதுக்கு அவ அப்பின்னா சொன்னாள்."

"ம்ம்ம."

"அதுக்கு அப்பறம் நான் 'லுகா சுப்பி' விளையாடு வோமான்னு கேட்டேன். அதுக்கும் அப்பின்னா சொன்னாள்."

'லுகா சுப்பி? அப்ப்டின்னா என்னன்னு எனக்கே தெரியலையே! ஹிந்தி வார்த்தைன்னு மட்டும் புரியுது. நீ அதை சரியா உச்சரிக்கிறியான்னு கூட தெரியலை' என்று சாருமதி விழித்தாள்.



"சாரும்மா உங்களுக்கும் தெரியாதா?" என்று கேட்டு அவன் வாய் பொத்தி சிரித்தான்.

அவனது சிரிப்பை கண்டவளுக்கு புன்னகை வந்த போதும் அவனது கேள்வியினால் அசடு வழிந்தாள்.

"ஏதாச்சும் தெரியலைன்னா அம்மாவும் இப்படி தான் முழிப்பாங்க." என்றவன் தான் கூறிய விளை யாட்டை சாருமதிக்கு விளக்க முயன்றான்.

"துணி வச்சு விளையாடுவோமே..."

"துணியா?" என்று சாருமதி மேலும் விழித்தாள்.

"இல்லைன்னா அம்மாவோட துப்பட்டா."

"துப்பட்டா வச்சு என்னடா விளையாட்டு விளை யாட முடியும்?"

"இப்படி கண்லை கட்டி..." என்று சாருமதியின் துப்பட்டாவை எடுத்து அவன் தன் கண்களை மூடிக் காட்டினான்.

"அட கண்ணாமூச்சி! அதை அப்படி சொன்னால் தான் எனக்கே தெரியுது." என்று அவள் அலுத்துக் கொள்ளவும்,

"என் சாரும்மா அவ எல்லாத்துக்கும் ஒரு வார்த்தை சொன்னாளே. அது ஒரு கேமா? அதை எப்படி விளை யாடுறது?" என்று கெவின் சந்தேகம் கேட்டான்.

'டேய்! அப்படின்னா என்ற வார்த்தையை தான் அவ அப்பின்னா என்று சொல்லி இருக்காள். ஊகும். நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து விளையாட ஆரம்பிச் சால் எனக்கு தான் கஷ்டம்' என்று நினைத்தவள்,

"நாம ஸ்நேக் அன்ட் லாடர் விளையாடுவோமா?" என்று கேட்டாள்.

"உங்ககிட்ட இருக்கா சாரும்மா?"

"உனக்காக நேத்து வாங்கிட்டு வரச் சொன்னேன். வா விளையாடலாம்." என்றவள் அந்தப் பரமபத அட்டையை எடுத்து விரித்தாள். அவர்கள் மூவரும் விளையாட ஆரம்பித்தனர்.

"சாரும்மா! உங்களை பெரிய ஸ்நேக் கொத்திடுச்சு. அச்சோ பாவம் நீங்க!" என்று கெவின் அவளை பார்த்துப் பரிதாபப்படும் போது சஞ்சய் வீட்டிற்குள் நுழைந்தான்.

பெரிய பாம்பு கொத்தியதால் சாருமதி வீழ்ச்சியை சந்தித்தது பரமபத விளையாட்டில் மட்டும் தானா? இல்லை பரிசோதனை முடிவு என்ற மிகப் பெரிய பாம்பு கொத்தி வாழ்க்கையிலும் வீழப் போகிறாளா?



## 17

பரிசோதனை முடிவை வாங்கச் சென்ற கணவன் வீடு திரும்பவும் சாருமதி விளையாட்டை கைவிட்டு விட்டு எழுந்தாள்.

சாருமதி அவனது முகத்தை ஆவலாகப் பார்த்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்த மலர்ச்சி அவனது முகத்தில் இல்லை. அவளது மனம் கவலை கொள்ள ஆரம்பித்தது.



ராதாகிருஷ்ணனும் வீட்டில் தான் இருந்தார். அவர்கள் அனைவரும் அலுவலக அறையில் ஒன்று கூடினார்கள்.

"என்ன ஆச்சு சஞ்சய்? ரிசல்ட் இன்னும் ரெடி ஆகலையா?" என்று ராதாகிருஷ்ணன் கேட்டார்.

பரிசோதனையின் முடிவு இன்று வராமல் கால தாமதமாக வரப் போவது தான் மகனது கவலைக்கு காரணமோ என்று அவர் நினைத்தார்.

'அப்படியும் இருக்குமோ?' என்ற எதிர்பார்ப்போடு சாருமதி தன் கணவன் முகத்தை ஏறிட்டாள். அவன் அவளையே தான் பார்த்துக் கொண்டு இருந்தான்.

"ரிசல்ட் வந்துடுச்சுப்பா."

"டி.என்.ஏ ரிசல்ட் என்ன சொல்லுது சஞ்சய்?"

"கெவின் என் பையன்னு சொல்லுது." என்று சஞ்சய் கூறவும் சாருமதியும் ராதாகிருஷ்ணனும் தங்களது கண்களை மூடி அமைதி காத்தார்கள்.

கணவனின் சொல்லுக்கு இணங்க அது வரை அமைதி காத்த கோமளம் 'இனி ஏன் நான் வாய் மூடி அமைதியாக இருக்க வேண்டும்' என எண்ணியவராய்,

"இப்ப என்ன சொல்லப் போறீங்க? நான் தான் சொன்னேனே! அவன் என் பேரன் தான்னு." என்று கணவரை பார்த்துக் கூறியவர்,

மகனை பார்த்து, "இப்பவும் அவன் உன் புள்ளை இல்லைன்னு சாதிக்க போறியாடா?" என்று கேட்டார்.

மருமகளையும் விட்டு வைக்கும் எண்ணம் அவருக்கு இல்லை என்பதாய் இருந்தது அவரது அடுத்த கேள்வி.

"அவன் ஏதோ சத்தியம் பண்ணிட்டான்னு அவன் பேச்சை நம்பிக்கிட்டு இருந்தியே! இப்போ என்ன சொல்லப் போறே மதி?"

தனது கண்களை திறந்து தன் மாமியாரை தீர்க்கமாகப் பார்த்த சாருமதி, "இப்பவும் சொல்லுறேன். நான் அவரை நம்புறேன். அவர் தப்பு பண்ணலை." என்று ஒரு வித அழுத்தத்துடன் கூறினாள்.

"இன்னமும் நம்புறியா?" என்று கோமளம் நம்ப முடியாத ஆச்சரியத்தோடு மருமகளைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமா அத்தை. நீங்க மட்டுமில்ல... மாமாவும் உங்க கூட சேர்ந்து அவரை சந்தேகிச்சாலும் நான் மட்டும் அவர் மேல சந்தேகப்பட மாட்டேன்."

"நீ எப்படி அவ்வளவு உறுதியா அவனை நம்புறே? பெத்தவ நானே என் மகன் தப்புப் பண்ணி இருப்பான்னு சொல்லுறேன்."

"அது உங்க அறியாமை."

"நான் படிக்காதவ. நீ படிச்சவள்னு சொல்ல வரியா? நீ சொன்ன யோசனைப்படி தானே அந்த சோதனை பண்ணினோம். அறிவியல் பொய்யாய் போகாதுன்னு நீ தானே அன்னைக்கு எனக்கே எடுத்துச் சொன்ன..."



"அறிவியல் பொய் சொல்லாது. அதே சமயம் உங்க புள்ளையும் பொய் சொல்லலை."

"எப்படி அவ்வளவு உறுதியா சொல்லுறே?"

"ரிசல்ட் வாங்கப் போனவர் அவர். ரிசல்ட் அவரை குற்றவாளின்னு சொல்லுது. பொய் சொல்ல நினைக்கிறவர் என்ன செஞ்சிருப்பார்? ஒண்ணு இன்னும் ரிசல்ட் ரெடி ஆகலைன்னு சொல்லி இருப்பார். இல்லைன்னா பணம் குடுத்து ரிசல்ட்டை மாத்தி எழுத வச்சிருப்பார். ஆனா அப்படி எதையுமே அவர் செய்யலையே. தன்னைக் குற்றவாளியா காட்டுற உண்மையான ரிசல்ட்டை தானே நம்மகிட்ட சொல்லிகிட்டு இருக்கார். அது ஒண்ணு போதாதா அவர் அப்பாவின்னு நீங்க நம்புறதுக்கு?"

சாருமதியின் வார்த்தைகளைக் கேட்ட சஞ்சயின் உடல் சிலிர்த்தது. மருமகளின் கேள்வியில் இருந்த உண்மை கோமளத்தை சுட்டது.

'மதி சொல்லுறது சரி தானே! தப்புப் பண்ணியவன் உண்மையை மறைக்கத் தானே பார்ப்பான்? இப்படி உண்மையைச் சொல்லிக் கொண்டு பரிதாபமாக விழித்துக் கொண்டிருக்க மாட்டானே!' என்று எண்ணிய கோமளம் மனம் தெளிந்தார்.

கோமளம் தன் மருமகளின் கைகளை பிடித்துக் கொண்டு, "என் புள்ளையை நான் பத்து மாசம் வயித்துல சுமந்தேன். இந்த இருபத்தெட்டு வருஷமா நெஞ்சிலே சுமந்தேன். ஆனால் என்ன பிரயோஜனம்?

எங்கிருந்தோ வந்த உனக்கு என் புள்ளை மேல இருந்த நம்பிக்கை எனக்கு இல்லாமல் போச்சே!'' என்று கண்ணீர் மல்க கூறினார்.

''இப்பச் சொல்லுறேன் மதி. என் பிள்ளை உனக்கு மட்டும் தான் புருஷன். எங்கே தப்பு நடந்துச்சுன்னு எல்லோரும் சேர்ந்து ஆராய்ச்சி பண்ணுவோம்.'' என்று அவர் கூறவும் அனைவரின் முகமும் பிரகாசமாகியது.

மகனின் அருகே சென்ற கோமளம், ''நியாயமா நான் பண்ணின தப்புக்கு உன் காலில விழுந்து மன்னிப்புக் கேட்கணும்...'' என்று ஆரம்பித்ததும்,

''அச்சோ அம்மா! எதுக்கும்மா பெரிய வார்த்தையெல்லாம் சொல்லுறீங்க.'' என்று சஞ்சய் இடைமறித்தான்.

''நான் ஏன்டா உன்னை நம்பாமல் போனேன்?'' என்று கோமளம் விரக்தியுடன் கேட்க,

''நீங்க நியாயமா நடந்துக்கணும்னு நினைச்சீங்கம்மா. தப்பு பண்ணினது உங்க பிள்ளையா இருந்தாலும் நியாயத்தின் பக்கம் தான் இருக்கணும்னு நினைச்சீங்க. அதோட பாதிப்பு தான் இது!'' என்று அவன் விளக்கினான்.

''மன்னிச்சிடுடா சஞ்சய்.''

''ப்ளீஸ்மா அப்படிச் சொல்லாதீங்க. நான் தப்பு செய்யலைன்னு நீங்க நம்பினால் எனக்கு அது போதும்மா. எனக்கு இப்ப யானை பலம் வந்துடுச்சு.'' என்றான்.



''நான் யானை சைஸ் இருக்கேன்னு என்னை குத்திக் காட்டுறியாடா?'' என்று கோமளம் கேட்டதும்,

''உண்மையை எதுக்கு கோமளா சத்தமா சொல்லுறே?'' என்று ராதாகிருஷ்ணன் மனைவியை கிண்டல் செய்தார்.

அனைவரின் முகத்திலும் புன்னகை தோன்றியது.

கடந்த மூன்று நாட்களாக அந்த வீட்டில் சோக கீதம் ஒலித்துக் கொண்டு இருந்தது. அனைவரின் முகத்திலும் கவலையும் குழப்பமும் காணப்பட்டது. கடந்து போன நாட்கள் அவ்வளவு மோசமானவை.

இன்று அதை விடக் கொடிய நாள். இது அழுவதற்கான நேரம். ஆனால் அனைவரின் முகத்திலும் புன்னகையும் நம்பிக்கையும் காணப்பட்டது. அது அவர்கள் நால்வரும் ஒரே அணியில் ஒன்று திரண்டதால் ஏற்பட்ட மனோபலம்.

ராதாகிருஷ்ணனும் கோமளமும் அறையை விட்டு வெளியேறினர்.

சஞ்சய் தன் மனைவியின் அருகே சென்று, ''இதே நம்பிக்கையோட இருடா சாரு. எனக்கு கொஞ்சம் டைம் குடு. என்ன நடந்திருக்கும்னு நான் கண்டுபிடிக்கிறேன்.'' என்றவன் அவளது உச்சியில் முத்தமிட்டான்.

அவனது மார்பில் சாய்ந்து கொண்டவள், ''அத்தை உங்களை புரிஞ்சுக்கிட்டாங்கன்னு நினைக்கிறப்போ எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குங்க.'' என்றாள்.

''அதுக்கு காரணம் நீ தான்டா சாரு.''

''இல்லைங்க. எது நடந்தாலும் உண்மையை மட்டுமே சொல்லணும்னு நீங்க நினைச்சது தான் காரணம். உங்க உண்மையான நடத்தைக்கு கிடைச்ச பரிசு.''

''நீ என்ன சொன்னாலும் சரி. நீ தான் காரணம். நீ என் மேல வச்சிருக்கிற நம்பிக்கை உண்மையானதுன்னு புரூவ் பண்ணுறது தான் இப்போதைக்கு என்னோட வேலை. நான் போய் கமிஷனர் அங்கிளை பார்த்துட்டு வரேன். நீ ரெஸ்ட் எடு.'' என்று கூறியவன் அவளை மென்மையாக அணைத்து பின் விடுவித்தான்.

அந்த அறையை விட்டு வெளியேறியவன் தன் தந்தையிடம் சென்று, ''நான் கமிஷனர் அங்கிளை பார்க்கப் போறேன்பா. அவரை மீட் பண்ண ஒரு அப்பாயின்மென்ட் வாங்கி தாங்க.'' என்றான்.

அவர் தன் நண்பரிடம் பேசிவிட்டு, ''உன்னை நேரா ஆபீஸ்கே வரச் சொன்னார்டா. அங்க போ. நானும் வரட்டுமா?'' என்று கேட்டார்.

''இல்லைப்பா. நீங்க ஆபிஸ்க்கு போங்க. உங்க ஹெல்ப் தேவைப்பட்டா நான் கூப்பிடுறேன்.''

''அம்மா வரேன்மா. வரேன் சாரு.'' என்று அனைவரிடமும் விடைபெற்று கமிஷனர் அலுவலகம் வந்தான்.

சஞ்சய் கமிஷனர் அறையின் முன்பு சில நிமிடங்கள் காத்திருந்தான். அதற்கு பின் அவரது அறைக்குள் அனுமதிக்கப்பட்டான்.



''வா சஞ்சய். வந்து உட்காரு. சாரி உன் விஷயமா என்னால தனிப்பட்ட முறையில் எந்த முயற்சியும் எடுக்க முடியலை. வேற ஒரு கேஸில ரொம்ப பிஸியா இருந்துட்டேன்.''

''இட்ஸ் ஓகே அங்கிள். என்னால புரிஞ்சுக்க முடியுது.''

''டி.என்.ஏ. ரிசல்ட் வந்துடுச்சா?''

''வந்துடுச்சு அங்கிள். அவன் என் பையன்னு புரூவ் ஆகி இருக்கு.''

''வாட்ட்ட்?!'' என்று அவர் அதிர்ந்து போய் கேட்டார்.

''ரிசல்ட் மாற்றப்பட்டிருக்குமா சஞ்சய்?''

''இல்லை அங்கிள். டெஸ்ட் பண்ணினது என்னோட ஃப்ரண்ட். அவனே தனி அக்கறை எடுத்து இந்த டெஸ்டை பண்ணி இருக்கான்.''

''உன் ஃப்ரண்டுக்கு உன் மேல முன்விரோதம் எதுவும் இல்லையே?''

''நீங்க என்ன கேட்க வரீங்கன்னு எனக்குப் புரியுது அங்கிள். கண்டிப்பா அவன் எனக்குத் துரோகம் செய்ய மாட்டான்.''

சில நொடிகள் யோசித்தவர், ''யாருக்காச்சும் ஸ்பெர்ம் டொனேட் பண்ணினாயா சஞ்சய்?'' என்று கேட்டார்.

''இல்லை அங்கிள். பண்ணினதில்லை. ஃபாரின் கன்ட்ரீஸ்ல அது சாதாரணமானது. ஆனா நம்ம

ஊரிலே அது அவ்வளவு சாதாரணமான விஷயம் இல்லையே அங்கிள். அதுவும் போக எங்க அம்மாவுக்கு தெரிஞ்சதுன்னா... அந்தக் குழந்தையை அவங்ககிட்ட இருந்து பறிச்சுக்கிட்டு வந்துடுவாங்க. அவங்க வீட்டு வாரிசு வேற எங்கேயோ வளருவதை அவங்களால நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது."

''அப்படின்னா வேற எப்படி இது சாத்தியம்?''

அங்கே ஒரு நிமிடம் அமைதி நிலவியது. சஞ்சய் அந்த அமைதியை கலைத்தான்.

''ஒரு நிமிஷம் அங்கிள்...'' என்றவன் தன் தந்தையை போனில் அழைத்து,

''அப்பா கொஞ்ச வருஷத்துக்கு முன்னாடி எனக்கு அம்னீசியா வந்துச்சா?'' என்று கேட்டான்.

''அம்னீசியாவா? என்னடா சஞ்சய் இப்படிக் கேட்கிற?''

''இல்லைப்பா. அப்படி ஏதாச்சும் ஏற்பட்டு குறிப் பிட்ட கால கட்டத்தை நான் மறந்துட்டு இப்ப நார் மலா இருக்கேனான்னு தெரிஞ்சுக்க தான் கேட் கிறேன்.''

''அப்படி ஒண்ணு இருந்திருந்தா... முதல்ல அதை தானேடா சொல்லி இருப்பேன். அப்படி எதுவும் இல்லை சஞ்சய்.''

''ஓகே பை. வச்சிடுறேன்பா.'' என்றவன் அழைப்பை துண்டித்தான்.



''என் பக்கம் இருக்கிற எல்லா வழியிலும் நான் யோசிச்சுப் பார்த்துட்டேன் அங்கிள்.''

''விரோதிங்க யாராவது...''

''அப்படி இருந்திருந்தா இந்நேரத்துக்கு எதை யாவது டிமாண்ட் பண்ணி எங்களை கான்டாக்ட் பண்ணி இருப்பாங்க அங்கிள்.''

''உன் வைஃப் என்ன சொல்லுறாள் சஞ்சய்?''

''அவளுக்கு மேரி என்ற பேரிலே யாரையும் தெரி யாதாம். என்னை தவிர வேற சஞ்சயும் தெரியாதாம்.''

''அப்ப இதுக்கு என்ன தான் தீர்வு?''

''நாம இது வரைக்கும் கெவின் இந்த வீட்டுப் பிள்ளையா இல்லையான்னே யோசிச்சுட்டோம் அங்கிள். இனி அவன் வேற யாரோ ஒருத்தரோட குழந்தை. அவங்க இவனை தொலைச்சிட்டாங்க என்ற கோணத்திலே ஆராய்ச்சி பண்ணுவோம்.''

''கடந்த மூணு நாளிலே மும்பையிலும் சரி சென்னையிலும் சரி அவனை காணோம்னு யாருமே புகார் பண்ணலையே சஞ்சய். அப்படி ஒரு புகார் வந்திருந்தா என்கிட்ட நேரடியா இன்ஃபார்ம் பண்ணச் சொல்லி இருந்தேன்.''

''அங்க தான் நாம தப்பு பண்ணிட்டோம் அங்கிள். நானும் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் ஒரு விஷ யத்தை மறந்துட்டேன். நீங்களும் உங்களோட வொர்க் டென்ஷனிலே ஒரு விஷயத்தை மறந்துட் டீங்க.''

"நீ என்ன சொல்ல வர சஞ்சய்?"

"எங்கப்பா கெவினை பார்த்ததென்னவோ தாம்பரத்திலே தான். ஆனா அவன் தாம்பரத்திலே அந்த பஸ்ஸிலே ஏறலை. அதே சமயம் திருச்செந்தூரிலும் ஏறலை. பஸ் கடைசியா எங்க நின்னதோ அங்க தான் ஏறி இறக்கணும்."

"யெஸ் யூ ஆர் ரைட் சஞ்சய். உன் அப்பாக்கு போன் போடு."

சஞ்சய் தன் தந்தையை அழைத்து ஸ்பீக்கர் போனை இயக்கினான். கமிஷனர் தன் நண்பருடன் பேச ஆரம்பித்தார்.

"கிருஷ்ணா! கெவின் உன் வண்டியில முதலில் இருந்தே வரலை தானே?"

"ஆமா. அவன் நடுவிலே தான் எங்க பக்கத்து சீட்டுக்கு வந்தான்."

"அப்படின்னா வண்டி வழியில நின்ன போது தானே கெவின் உன் வண்டியிலே ஏறி இருக்க முடியும்?"

"ஆமாப்பா. பாத்ரூம் போறதுக்காக வண்டியை நிறுத்தின இடத்திலே தான் அவன் எங்க வண்டிக்குள்ளே வந்து இருக்கணும்."

"அது எந்த ஊருன்னு தெரியுமா?"

"விழுப்புரம் பக்கத்திலே ஒரு மோட்டல்."

"ஓகே. தேவைப்பட்டால் உன்னை திரும்பக் கூப்பிடுறோம்." என்று சொல்லி அந்த அழைப்பை கமிஷனர் துண்டித்தார்.



சில நொடிகள் இருவருமே யோசனையில் ஆழ்ந்தனர்.

"தன் அம்மா மேரி தன் கூட வந்ததா கெவின் சொன்னான் அங்கிள். ஒரு வேளை எங்க அப்பா அம்மா டிராவல் பண்ணியதும் அவனோட அம்மா டிராவல் பண்ணியதும் ஒரே டிராவல்ஸை சேர்ந்த வேற வேற வண்டியா இருக்கலாமில்ல?"

"ஃபென்டாஸ்டிக் சஞ்சய். அதுக்கு சான்ஸ் நிறைய. தூக்கக் கலக்கத்திலே இந்த தப்பு நடந்திருக்கலாம். உங்க அப்பா எந்த டிராவல்ஸ்ல வந்தாருன்னு தெரியுமா?"

"தெரியும் அங்கிள். நான் தான் டிக்கெட் எடுத்துக் கொடுத்தேன்." என்றவன் அந்த டிராவல்ஸின் பெயரை சொல்லவும்,

"சஞ்சய்! இந்த டிராவல்ஸோட ஒரு வண்டி மூணு நாளைக்கு முன்னாடி விழுப்புரம் பக்கத்திலே ஆக்ஸிடெண்ட் ஆகிடுச்சு!" என்று கமிஷனர் பதட்டத்துடன் அறிவித்தார்.

"வாட்ட்ட்?! என்ன சொல்லுறீங்க அங்கிள்?"

"யெஸ் சஞ்சய். ஒரு வேளை கெவின் அம்மா அந்த ஆக்ஸிடெண்டிலே மாட்டி இருக்கலாம். அதனால தான் அவங்க கெவினை காணவில்லைன்னு இன்னும் கம்பளைண்ட் பண்ணாமல் இருக்கலாம்."

"இதுக்கு நிறைய சான்ஸ் இருக்கு அங்கிள். ரெண்டு நாளா இந்தப் பிரச்சனையால நான் நியூஸ் பேப்பர் கூடப் பார்க்கலை. அதான் எனக்கு விபத்து நடந்தது தெரியலை."

''இப்பவே விழுப்புரம் சர்க்கிளில் இருக்கிற எல்லா போலீஸ் ஸ்டேஷனுக்கும் கெவின் போட்டோவை அனுப்பி வைக்கலாம்.'' என்ற கமிஷனர் துரிதமாக செயல்பட்டார்.

இவர்கள் யூகிப்பது போல் மேரி அந்த விபத்தில் சிக்கி இருப்பாளா?

அப்படி மேரி விபத்தில் சிக்கி மாண்டு இருந்தால் அது சஞ்சய்க்கு விடுதலை ஆகுமா? மேரி மாண்டு விட்டால் கெவினின் பிறப்பின் ரகசியம் தெரிய வராது. கெவினின் பொறுப்பை சஞ்சய் ஏற்கும் படி ஆகும். அதனால் அது சஞ்சய்க்கு ஆயுள் தண்டனை ஆகுமா?



## 18

**மூன்று தினங்களுக்கு முன்...**

இரு பேருந்துகள் மோதிக் கொண்டதில் பயணிகள் அநேகம் பேர் காயமடைந்தனர். சிலர் படுகாயமடைந்தனர்.

அந்த விபத்தில் அடிபட்டவர்களில் கெவினின் தாய் மேரியும் அடக்கம். முதல் நாள் பகல் பொழுது முழுவதும் அவள் கண் விழிக்காமல் இருந்தாள்.

அன்று இரவு பதினொரு மணி அளவில் தான் அவள் கண்விழித்தாள். தான் விழுப்புரம் பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதை தெரிந்து கொண்டாள்.



விபத்து குறித்து தனக்கு வேண்டியவர்களுக்கு தெரிவிக்க விரும்பினாள். ஆனால் மருந்தின் மயக்கத் தாலோ என்னவோ அவளுக்கு ஒரு கைப்பேசி எண்ணும் நினைவிற்கு வரவில்லை.

கைப்பேசி வந்ததிற்கு பின்பு அநேகம் பேர் ஓரிரு எண்களை மட்டுமே மனதில் பதிய வைத்துக் கொள் கிறார்கள் என்பது தான் உண்மை!

'நேத்து அவசரத்தில் பேப்பர் கிடைக்கலைன்னு ஃபாதர் பிரான்சிஸோட நம்பரை என் உள்ளங் கையில் எழுதி வச்சேனே. அது அழியாமல் இருக்கா?' என்று தன் கையை தூக்கி ஆராய்ந்தாள்.

அது அழியாமல் இருந்தது. தான் விபத்தில் சிக்கிக் கொண்டதை பாதிரியாருக்கு தெரிவிக்க விரும்பி னாள்.

தன் அருகில் இருந்த செவிலியிடம், ''நான் சொல் லுற நம்பருக்கு போன் பண்ணி தரீங்களா சிஸ்டர்?'' என்று கேட்டாள்.

''கண்டிப்பாம்மா. நம்பர் சொல்லுங்க.''

மேரி தன் கையை பார்த்து நம்பர் சொல்லச் சொல்ல அந்த செவிலி தனது கைப்பேசியில் அந்த நம்பரை அழுத்தினாள்.

"ரிங் போகுதும்மா. பேசுங்க!" என்று கைப்பேசியை மேரியிடம் நீட்டினாள்.

மேரி போனை காதில் வைக்க, ''ஹலோ யார் வேணுங்க?'' என்று அந்தப் பக்கம் பாதிரியார் கேட்கவும்,

"ஃபாதர் நான் மேரி பேசுறேன்." என்றாள்.

"என்னம்மா மேரி மதுரைக்கு வரதா சொல்லிட்டு வரவே இல்லை. உன் போனும் கிடைக்கலை."

"ஃபாதர் நான் இங்க ஆக்ஸிடெண்டிலே மாட்டிக் கிட்டேன்."

"என்ன ஆக்ஸிடெண்டா? ஜீசஸ்! நீ எங்க இருக்க?" என்று அவர் பதட்டமடைந்தார்.

"விழுப்புரம் பக்கத்திலே... பஸ் ஆக்ஸிடெண்ட்."

"நேத்து நைட் நடந்த ஆக்ஸிடெண்டாம்மா?"

"ஆமா ஃபாதர்."

"ஆனா நீங்க டிரைனிலே இல்ல வருவதா இருந்தீங்க?"

"டிரைனை மிஸ் பண்ணிட்டதால பஸ்ஸிலே வந்தோம். நீங்க கொஞ்சம் இங்க வர முடியுமா?"

"நாளைக்கு மதியத்துக்குள்ளே கண்டிப்பா வந்துடு றேன்மா. டேவிட்டும் கெவினும் நல்லா இருக்காங் களா?"

"தெரியலை ஃபாதர். நான் இப்ப தான் கண் முழிச் சேன். எழுந்துக்க முடியலை." என்று அவள் கேவி னாள்.

"தெரியலையா?" என்று அதிர்ந்தவர், "நீ அழா தேம்மா. எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ... அவ் வளவு சீக்கிரம் வந்துடுறேன்மா." என்று கூறியவர்,

"இது யாரோட நம்பர்மா?" என்று கேட்டார்.



"இங்க ஒரு சிஸ்டரோட போனில் இருந்து பேசுறேன் ஃபாதர். நான் ஜி.ஹெச்சிலே இருக்கேன."

"சரிம்மா. நீ கவலைப்படாதே. நான் உடனே வரேன்." என்று கூறி அழைப்பை துண்டித்த ஃபாதர் பிரான்சிஸ் மதுரையில் இருந்து விழுப்புரம் செல்லத் தயாரானார்.

அந்த செவிலி மேரியிடம், "இந்த நம்பரை உங்க கையிலே நாங்க நேத்தே பார்த்தோம். ஆனா வெறும் அஞ்சு நம்பர் தான் இருந்துச்சா... அதனால இது போன் நம்பர்னு நினைக்கலை." என்றாள்.

"இல்லை. இது செல்போன் நம்பரோட முதல் அஞ்சு நம்பர். இதுக்கு பின்னாடி உள்ள நம்பர் 11220 என்பதால அது மனசிலே எனக்கு எப்பவுமே பதிஞ்சு இருக்கும். அதான் அதை என் கையிலே எழுதலை."

மேரி அந்த செவிலியிடம் விபத்து குறித்து விசாரித்தாள். கெவின் மற்றும் டேவிட் பற்றி.... அவர்களின் அடையாளங்களை கூறி விசாரிக்க ஆரம்பித்தாள்.

அந்த செவிலி அவள் கேட்கும் விபரங்களை விசாரித்துச் சொல்வதாகக் கூறினார். அதன்படி அடிபட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த பட்டியலையும் ஆட்களையும் ஆராய்ந்துவிட்டு வந்து அவளிடம் தகவல் தெரிவித்தார்.

'டேவிட் இங்க தான் இருக்கான். ஆனா கெவின்... ஐயோ கெவின்! நீ எங்கே இருக்கே?' என்று மேரி பயத்தால் அலறினாள்.

அவளை அடக்கப் படாதபாடு பட்டார்கள். மயக்க மருந்தை செலுத்தி உறங்க வைத்தார்கள். மேரி மீண்டும் தூங்கிப் போனாள்.

ஃபாதர் பிரான்சிஸ் மறுநாள் காலையில் பத்து மணி போல் அந்த அரசுப் பொது மருத்துவமனை வந்து சேர்ந்தார்.

''எப்படி இருக்க மேரி?''

''கொஞ்சம் பெட்டரா ஃபீல் பண்ணுறேன் ஃபாதர்.''

''டேவிட் பத்தியும் கெவின் பத்தியும் ஏதாச்சும் தெரிஞ்சதா?''

''டேவிட் இங்க தான் இருக்கான் ஃபாதர். அவனுக்கு என்னை விட கூடுதல் அடி. ஆனா கெவினை பத்தி தான் ஒண்ணுமே தெரியலை.'' என்று சொல்லும் போதே அவளது வாய் நடுங்கியது.

''நான் போய் விசாரிச்சுட்டு வரேன்மா. அதுக்கு முன்னாடி டேவிட்டையும் பார்த்துட்டு போறேன்.''

ஃபாதர் பிரான்சிஸ் காவல் நிலையம் சென்று விபத்துக்கு உள்ளானவர்களின் பட்டியலை சரி பார்த்தார். மூன்றரை வயது குழந்தை பற்றிய எந்தத் தகவலும் அந்தப் பட்டியலில் இல்லை என்றதும் குழம்பினார்.

திரும்பவும் மேரியிடம் வந்தார். தகவல் அறிந்த மேரி கண்ணீர் விடலானாள்.

''அச்சோ! என் பிள்ளை எங்க இருக்கான்னு தெரியலையே! என்ன செய்யுறானோ? எங்க போயிருப்பான் ஃபாதர்? எனக்கு ரொம்ப பயமா இருக்கே.'' என்று அவள் அழுதாள்.



''மேரி அழாதே. அவன் ஆக்ஸிடெண்டிலே மாட்டலை. எங்கேயோ சேஃபா இருக்கான்னு நம்பு. நாம முதல்ல போலீஸிலே அவனை காணோம்னு ஒரு புகார் கொடுக்கலாம். அதுக்கு அப்புறம் பிரைவேட் ஹாஸ்பிட்டலுக்கு உங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டுப் போறேன்.''

''டேவிட்டை ஷிஃப்ட் பண்ண முடியுமான்னு கேட்டீங்களா ஃபாதர்?''

''கேட்டுட்டேன்மா. போகலாம்னு சொல்லிட்டாங்க. மதுரைக்கு போயிடலாமா?''

''இல்ல ஃபாதர். நாங்க சென்னைக்கு போறோம். அங்க ஃப்ரண்ட்ஸ் நிறைய பேர் இருக்காங்க. எனக்கு நேத்து சட்டுன்னு எந்த போன் நம்பரும் நியாபகம் இல்லை. சென்னையில் இருந்து கிளம்பும் முன்னாடி உங்க போன் நம்பரை சார்லஸ்கிட்ட இருந்து வாங்கும் போது உள்ளங்கையில் எழுதினேன். அது அழியாமல் இருந்ததால் உங்களுக்கு போன் பண்ணி உங்களை வர வச்சுட்டேன்.''

''என்னை இங்க வா வச்சதிலே தப்பு ஒண்ணும் இல்லம்மா. எனக்கும் சென்னைக்கு போற வேலை இருக்கு. அடுத்த வாரம் போகலாம்னு நினைச்சேன். உனக்காக இன்னைக்கே போறதே நினைச்சுக்கிறேன்.''

''நான் டாக்டர்கிட்ட அனுமதி வாங்கிட்டு நானும் உங்க கூட போலீஸ் ஸ்டேஷன் வரேன் ஃபாதர்.'' என்றவள் மருத்துவரிடம் அனுமதி கேட்க.

''நடக்கிற தெம்பு உங்களுக்கு இருந்தா போயிட்டு வாங்கம்மா. உங்க பையன் பத்திரமா இருப்பான்.'' என்று அந்த மருத்துவரும் அவளுக்கு ஆறுதல் அளிக்க முயன்றார்.

யார் என்ன ஆறுதல் கூறினாலும் அவளது கண் ணீர் மட்டும் நின்றபாடில்லை. தாய் மனம் அன்றோ?

பொதுவாக அதிர்ச்சி ஏற்பட்டால் மூளை வேலை நிறுத்தம் செய்துவிடும். ஆனால் மேரியின் மூளையோ அதிவேகமாக வேலை செய்தது என்று தான் கூறவேண்டும்.

தன் குழந்தையை கண்டுபிடிக்க தான் என்னவெல் லாம் செய்ய வேண்டும் என்பது பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. அதனால் நேற்று மறந்து போன நண்பர்களின் கைப்பேசி எண்கள் இன்று மூளையில் உதயமாகின.

ஃபாதரின் போனில் இருந்து தோழி ஒருத்தியை அழைத்து விவரம் சொன்னாள்.

''நீ சென்னைக்கு வா. நான் மத்த ஏற்பாடு எல்லாம் பண்ணி வைக்கிறேன். நீ நேரா டேவிட்டை கூட் டிட்டு நான் சொல்லுற ஹாஸ்பிட்டலுக்கு வந்துடு. அந்த ஹாஸ்பிட்டல் சீஃப் டாக்டர் எனக்கு தெரிஞ் சவர். டேவிட்டை இங்க வச்சு பார்த்துக்கலாம்.



''நம்ம பாவனாக்கு விழுப்புரம் இன்ஸ்பெக்டர் சொந்த மாமா. அவளை அவர்கிட்ட பேசச் சொல்லுறேன். நீ போலீஸ் ஸ்டேஷன் போறதுக்குள்ள அவ பேசிடு வாள். நீ ஒண்ணும் கவலைப்படாதே. கெவின் கிடைச் சிடுவான்.'' என்று அந்த தோழி மேரிக்கு தெம்பூட்டி விட்டு அழைப்பை துண்டித்தாள்.

''என்னோட ஃபிரண்டு பாவனாவோட மாமா தான் இங்க போலீஸ் இன்ஸ்பெக்டராம் ஃபாதர். நாம போய் அவரை பார்க்கலாம்.''

''நல்லாதாப் போச்சு. வாம்மா போகலாம்.''

அவர்கள் இருவரும் ஆட்டோவில் விழுப்புரம் காவல் நிலையத்தை நோக்கிச் சென்றனர்.

''நீ வந்த பஸ்ஸை விட அந்த இன்னொரு பஸ் ஸிலே வந்தவங்க தான் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்காங்க. ஓவர் லோட் போல... அப்படியே கவுந்துடுச்சாம். பாவம்!'' என்று ஃபாதர் பிரான்சிஸ் பரிதாபப்பட்டார்.

விழுப்புரம் காவல் நிலையத்திற்கு சென்ற போது அந்த இன்ஸ்பெக்டர் இவர்களின் வரவிற்காக காத்திருந்தார்.

''இப்ப தான்மா பாவனா போன் பண்ணினாள். நீ கம்ப்ளைண்ட் எழுதிக் குடுத்திட்டு போம்மா. நான் பார்த்துக்கிறேன். உன் பிள்ளை சீக்கிரமே கிடைச் சிடுவான். அவன் போட்டோ ஏதாச்சும் உன்கிட்ட இருக்கா?''

''என் செல்போனிலே இருக்கும் சார். ஆனா என் லக்கேஜ், செல்போன் எதுவுமே இப்ப என்கிட்ட இல்லை.''

''அந்த ஆக்ஸிடெண்ட் நடந்த பஸ்ஸிலே இருந்த சில பொருட்கள் போலீஸ் ஸ்டேஷனில் தான்மா இருக்கு. விபத்து காலையில் நடந்திருந்தால் பொது மக்களே பாதியை தூக்கிட்டு போயிருப்பாங்க. ஆனா நடு ராத்திரியில நடந்ததால சேதம் ஆகாத சில பொருட்களை போலீஸ் இங்க கொண்டு வந்து வச்சிருக்காங்க.

''அடையாளம் சொல்லி கேட்கிறவங்ககிட்ட அவங்க பொருளை ஒப்படைக்கலாம் இல்லையா? எல்லா பொருளும் நல்ல நிலையில இருக்காது. ஏதாச்சும் முக்கியமானது இருக்கலாமில்ல... அதுக்கு தான் எடுத்து வச்சிருக்கோம் உன்னோட பையை அடையாளம் காட்டும்மா. முதல்ல உன் பை இருக்கான்னு பாரு.''

அவர் காட்டிய பொருட்களில் அவளது கைப்பை மட்டும் கிடைத்தது.

''இது போதும் சார்.'' என்று அவள் வேகமாக அதைக் கைப்பற்றி உள்ளே திறந்து பார்த்தாள்.

அவளது கைப்பேசி உடைந்த நிலையில் இருந்தது. சிம் கார்ட் சேதாரம் ஆகாமல் இருந்தது. பணம் மற்றும் ஏ.டி.எம் கார்டு அப்படியே இருந்தன. முக்கியமாக அவளுக்கு கெவினின் புகைப்படம் என்று கிடைத்தது.



''இது தான் சார் என் பையன் கெவின்.'' என்று அந்தப் புகைப்படத்தை அவரிடம் ஒப்படைத்தாள்.

''என்னோட செல்போன் நம்பர் எழுதித் தரேன். என்னோட சிம் கார்ட் நல்ல நிலையிலே இருக்கு. போற வழியிலே ஒரு போன் வாங்கிக்கறேன். ஃபாதரோட நம்பரும் தரேன். ஏதாச்சும் தகவல் தெரிஞ்சா உடனே எனக்கு சொல்லுங்க. பாவனாக்கு சொன்னா கூடப் போதும். எப்படியாவது என் பிள்ளையை கண்டுபிடிச்சு குடுங்க சார்.'' என்று இரு கரம் கூப்பி மன்றாடினாள்.

அவர்கள் புகாரை பதிவு செய்துவிட்டு டேவிட்டை அழைத்துக் கொண்டு சென்னை சென்று சேர்ந்த பொழுது இரவு ஆனது.

மறுநாள் காலையில்... அதாவது மேரி சென்னைக்கு வந்து சேர்ந்த மறுநாள் காலையில் தான் சஞ்சய் டி.என்.ஏ பரிசோதனை முடிவை வாங்கினான். மதியம் போல் கமிஷனர் அலுவலகம் வந்தான்.

அதனால் சஞ்சயும் கமிஷனரும் விழுப்புரத்தை தொடர்பு கொண்டு கெவின் பற்றிய செய்தியை தெரிவித்த ஐந்தாவது நிமிடத்தில் பாவனாவின் மாமா லைனில் வந்தார்.

''சார் கெவின் பத்தி இங்க புகார் பதிவாகி இருக்கு.'' என்று அவர் விவரம் அளித்தார்.

பரஸ்பரம் இருவரது தொலைப்பேசி எண்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

''முதல்ல நீங்க அவங்ககிட்ட தகவல் சொல் லிடுங்க இன்ஸ்பெக்டர். அதுக்கு அப்புறமா நான் பேசுறேன்.'' என்று கமிஷனர் சொல்லவும் பாவனா வின் மாமா ஒத்துக்கொண்டார்.

அவர் நேரே தன் மருமகளுக்கு போன் செய்து தகவலை கூறினார்.

''நான் ஹாஸ்பிட்டல்ல தான் மாமா இருக்கேன். ரொம்ப சந்தோஷம். ரொம்ப தாங்க்ஸ் மாமா. நான் இப்பவே போய் அவகிட்ட சொல்லுறேன்.''

''அந்தப் பொண்ணு குடுத்த நம்பர் வொர்க் ஆகுதா பாவனா?''

''வொர்க் ஆகுது மாமா.'' என்றவள் தன் தோழியிடம் சென்று விவரம் உரைத்தாள்.

கெவின் கிடைத்து விட்டான் என்ற தகவலை அறிந்த மேரிக்கு ஆனந்தத்தில் கண்கள் குளமாகின. சரியாக அதே நேரம் அவளது அலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்தது.

''நான் சென்னை கமிஷனர் பேசுறேன்மா.''

''சொல்லுங்க சார்.''

''மேரியா பேசுறீங்க?''

''ஆமா சார். கெவினோட அம்மா மேரி தான் சார் பேசுறேன்.''

''மூணு நாளா கெவின் என் ஃப்ரண்டு வீட்டிலே தான்மா பத்திரமா இருக்கான்.''



''அவனுக்கு அடி எதுவும் படலையே? என் பையன் நல்லா இருக்கான் தானே?'' என்று அவள் தவிப்புடன் கேட்டாள்.

ஒரு தாயின் தவிப்பை புரிந்து கொண்ட கமிஷனர், ''அவன் அந்த ஆக்ஸிடெண்டிலே மாட்டிக்கலைம்மா. அதனால நல்லா ஆரோக்கியமா இருக்கான்.'' என்றவர், கெவின் தன் நண்பனின் குடும்பத்தை வந்து சேர்ந்த விதம் பற்றி எடுத்துரைத்தார். அதற்கு மேல் நடந்த குழப்பங்களை அவர் போனில் விவரிக்க வில்லை.

''அவன் தன்னோட ஊர் மும்பை என்று சொன்ன தால நாங்க அங்க தேடிக்கிட்டு இருந்தோம்மா. இன் னைக்கு தான் ஒரு வேளை அவன் விழுப்புரத்திலே பஸ் மாறி இருக்கலாம்னு சந்தேகப்பட்டு அங்க தேடிப் பார்க்கலாம்னு தோணுச்சு.''

''ரொம்ப தாங்க்ஸ் சார். நான் உங்களுக்கும் உங்க ஃப்ரண்டு பேமிலிக்கும் ரொம்ப நன்றி கடன்பட் டிருக்கேன்.''

''நீ இப்ப எங்கம்மா இருக்க?'' என்று கேட்டு அவள் இருக்கும் மருத்துவமனையின் முகவரியை வாங்கிக் கொண்டார்.

''நான் சொல்லுற அட்ரஸுக்கு வரியாம்மா? உன்னால வெளியே வர முடியுமா? உன் ஹெல்த் நல்லா இருக்கா?''

''ஒண்ணும் பிரச்சனையில்லை சார். கண்டிப்பா வரேன். நேத்து விழுப்புரத்தில் இருந்தே வந்தேன்.''

என்றவள் அவர் கூறிய முகவரியை குறித்துக் கொண்டாள்.

அவர் அழைப்பை துண்டித்ததும், ''எதுக்கு அங்கிள் வீட்டுக்கு வரச் சொன்னீங்க?'' என்று சஞ்சய் கேட்டான்.

''இன்னும் நம்ம பிரச்சனை தீரலை சஞ்சய். கெவினோட அம்மா கிடைச்சுட்டாள். ஆனா அப்பா... அந்தப் பிரச்சனை அப்படியே தானே இருக்கு. வெளியில வச்சு பேசுறதை விட வீட்டிலே வச்சு பேசுறதே மேல்னு நினைச்சு தான் வீட்டுக்கு வரச் சொன்னேன்.''

''கரெக்ட் அங்கிள்.''

''நீ உடனே உன் அம்மாவுக்கு போன் பண்ணி வீட்டிலே வேலைக்காரங்க யாரும் இல்லாமல் பார்த்துக்க சொல்லு. நான் உன் அப்பாவுக்கு போன் பண்ணி வீட்டுக்கு வரச் சொல்லுறேன்.''

அவர்கள் இருவரும் தங்கள் கைப்பேசி மூலம் ராதாகிருஷ்ணனுக்கும் கோமளத்திற்கும் தகவலை தெரிவித்தனர்.

''மேரி அந்த ஹாஸ்பிட்டலில் இருந்து உன் வீட்டுக்கு வரதுக்குள்ளே நாம வீட்டுக்கு போயிட ணும். கம். லெட்ஸ் கோ!'' என்று கூறிய கமிஷனர் சஞ்சயுடன் வெளியேறினார்.

மேரியின் வரவு கெவினுக்கு புத்துணர்ச்சி தரும். ஆனால் சாருமதிக்கும் சஞ்சய்க்கும் புதுப் பிரச் சனையை தருமா?





# 19

அங்கே மருத்துவனையில்...

''இப்படி ஃப்ரண்ட்ஸ் யாருக்கிட்டயும் சொல் லாமல் கொள்ளாமல் மும்பையில் இருந்து சென்னை வந்து இருக்கியேன்னு எனக்கு நேத்து உன் மேல செம கோபம். நீ மட்டும் சொல்லி இருந்தால் ஆக்ஸிடெண்ட் ஆனா உடனே நாங்க அங்க வந்து நின்னிருப்போம் இல்ல.'' என்று பாவனா தன் தோழியை கடிந்து கொண்டாள்.

''சாரி பாவனா. மதுரைக்கு போய் ஃபாதரை பார்த் துட்டு சென்னைக்கு வந்து உங்க எல்லோருக்கும் சர்ப்ரைஸ் குடுக்கலாம்னு பார்த்தேன்.''

''நல்லா சர்ப்ரைஸ் குடுத்தே!''

''கமிஷனர் சார் ஒரு வீட்டு அட்ரஸ் குடுத்து என்னை அங்க வரச் சொல்லி இருக்கார் பாவனா.''

''நீ போய் கெவினை கூட்டிட்டு வா.''

''இல்ல... டேவிட்...'' என்று மேரி தயங்க,

''அவனை நான் பார்த்துக்கிறேன். நீ என் காரிலே கிளம்பிப் போ.'' என்று பாவனா கூறவும் மேரியும் கிளம்பினாள்.

சென்னை வந்து சேர்ந்ததும் மேரியின் நண்பர்கள் அவளை பார்த்துக் கொள்ள இருக்கிறார்கள் என்பதால்

ஃபாதர் பிரான்சிஸ் தன்னுடைய வேலைகளை பார்க்கச் சென்று விட்டார்.

அவருக்கு கெவின் கிடைத்து விட்ட தகவலை தெரிவிப்பதற்காக காரில் சென்று கொண்டிருந்த மேரி அவரை அழைத்தாள்.

''ஃபாதர் கெவின் கிடைச்சிட்டான்.''

''ஜீசஸ்! ரொம்ப சந்தோஷம்மா.'' என்று கூறிய ஃபாதர், ''எப்படி மேரி கிடைச்சான்?'' என்று கேட்டார்.

''பாவனாவோட மாமா போன் பண்ணி இருந்தார் ஃபாதர். சென்னை கமிஷனர் ஆபிஸில் இருந்து கெவின் போட்டோவை விழுப்புரத்துக்கு அனுப்பி வச்சு இருந்தாங்களாம்.

''கமிஷனரோட ஃப்ரண்டு வீட்டிலே தான் மூணு நாளா இருந்திருக்கான். கெவின் தன்னோட ஊரு மும்பை என்று சொன்னதால அவங்க மும்பையிலே இன்ஃபார்ம் பண்ணி இருப்பாங்க போல! அவன் விழுப்புரத்திலே பஸ் ஏறி இருக்கலாம்னு சந்தேகப் பட்டு இப்ப தான் விழுப்புரம் போலீஸ் ஸ்டேஷ னுக்கு தகவல் சொல்லி இருக்காங்க.''

''கெவினை கூட்டிக்கிட்டு வந்துக்கிட்டு இருக்காங் களா மேரி?''

''இல்ல ஃபாதர். ஒரு வீட்டு அட்ரஸ் குடுத்து அங்க வரச் சொல்லி இருக்காங்க.''

''தனியா போயிடுவியாம்மா? நான் வேணா வரட்டுமா?''



''ஒண்ணும் பிரச்சனை இல்லை ஃபாதர். கமிஷ னரும் அந்த வீட்டுக்கு வரதா சொல்லி இருக்கார். யாரோ சொல்லி நான் அந்த வீட்டுக்கு போகப் போறதில்லையே. பாவனாவின் மாமாவான போலீஸ் இன்ஸ்பெக்டர் சொல்லி தானே போறேன். அதனால் எந்தப் பிரச்சனையும் கிடையாது.

''அதுவுமில்லாமல் அவங்க கெவினை மூணுநாளா பத்திரமா பார்த்துக் கொண்டதுக்காக நான் நேரிலே போய் நன்றி சொல்ல வேண்டாமா? அவங்களை ஹாஸ்பிட்டலுக்கு வரச் சொல்லுறது அவ்வளவு மரியாதையா இருக்காதுன்னு தோணுச்சு ஃபாதர்.''

''சரிம்மா. ஜாக்கிரதையா போ. உன் உடம்பு இன்னும் தேறலை.''

''என் பையன் கிடைச்சதுமே எனக்குத் தெம்பு வந் துடுச்சு ஃபாதர். நீங்க ஊருக்கு கிளம்பும் முன்னாடி உங்களுக்கு டைம் கிடைச்சால் ஹாஸ்பிட்டலுக்கு வந்து கெவினைப் பார்த்துட்டுப் போங்க ஃபாதர்.''

''கண்டிப்பா மை சைல்ட்.'' என்றவர் அந்த அழைப்பை துண்டித்தார்.

'மூன்று நாட்களாக நான் இல்லாமல் என் பிள்ளை தவித்து திண்டாடிப் போய் இருப்பான். சாப்பிட் டானோ இல்லையோ? கண்டிப்பா சாப்பிட அடம் பண்ணி இருப்பான்.

புது மனுஷங்களை பார்த்து மிரண்டு போய் இருப்பான். புது இடத்திலே சரியா தூக்கம் வந்திருக்

காது. மூணு நாள் அவனை சமாளிச்ச அந்த குடும்பத்து ஆளுங்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் பததவே பத்தாது' என்ற நினைப்போடு மேரி காரில் பயணம் செய்து கொண்டிருந்தாள்.

மேரி வந்து சேரும் முன்பே சஞ்சய் கமிஷனருடன் தன் வீட்டை சென்று அடைந்தான். அவர்கள் வந்து சேர்ந்த ஐந்து நிமிடத்தில் ராதாகிருஷ்ணனும் வந்து சேர்ந்தார்.

கோமளம் மட்டும் கெவினுடன் வரவேற்பறையில் அமர்ந்திருந்தார்.

"மதி எங்கே கோமளா?"

"தூங்கிக்கிட்ட இருக்காள். எழுப்ப வேணாம்னு நினைச்சேன். இந்த மாதிரி நேரத்திலே அவ பதட்டமாகிறது நல்லதில்லைன்னு அவளை எழுப்பலை."

"இந்த மாரல் சப்போர்ட் உங்ககிட்ட இருந்து கிடைக்காமல் தான்மா நான் இந்த ரெண்டு நாளா ரொம்பக் கஷ்டப்பட்டேன்." என்று சஞ்சய் தன் தாயிடம் கூறினான்.

"மன்னிச்சிடு சஞ்சய்!" என்று அவர் கூறிக் கொண்டு இருக்கும் போதே மேரியின் கார் வந்து நின்றது.

கமிஷனர் சஞ்சயை மறைவாக நிற்கச் சொன்னார்.

காரில் இருந்து உள்ளே வந்த மேரியின் நெற்றியில் ஒரு கட்டு போடப்பட்டிருந்தது. அவளது கையிலும் ஒரு கட்டு இருந்தது. நொண்டி நொண்டி நடந்த



விதத்தால் அவளது கால்களிலும் நல்ல அடி ஏற்பட்டிருக்கலாம் என அவர்களுக்குப் புரிந்தது.

கமிஷனர் முன் நின்று அவளை வரவேற்றார்.

"நான் தான்மா சென்னை சிட்டி கமிஷனர்."

அவள் தனது கரங்களை கூப்பி வணக்கம் தெரிவித்துக் கொண்டிருக்கும் போதே, "மம்மி!" என்ற உற்சாகக் குரல் கேட்டது.

"கெவின்!" என்றவளுக்கு சுற்றி நின்ற யாருமே கண்ணுக்கு தெரியவில்லை. மகனை வாரி அணைத்துக் கொண்டாள்.

என்ன தான் கெவினிற்கு அடி எதுவும் படவில்லை என்று கமிஷனர் போனில் சொல்லி இருந்தாலும் அவனை நேரில் பார்க்கும் வரைக்கும் அவளது தாய் மனம் பதறிக் கொண்டே தான் இருந்தது.

மகன் நல்ல ஆரோக்கியமான நிலையில் இருப்பதைக் கண்டவளின் கண்களில் கண்ணீர் குளம் கட்டியது.

"மம்மி உங்களுக்கு அடிப்பட்டுச்சா?"

"நீங்க டாக்டர்கிட்ட போனீங்களா? ஆபீஸ் போகலையா?"

"அதான் கெவினை பார்க்க வரலையா?" என்று அவன் கேள்வி மேல் கேள்வியாக கேட்டுக் கொண்டிருந்தான்.

மேரியோ மகனது முகமெங்கும் முத்தங்களை வாரி வழங்கிக் கொண்டிருந்தாள். அவனது மேனியை

அவளது கைகள் வருடிக் கொடுத்துக் கொண் டிருந்தது.

"மம்மியை காணோம்னு அழுதியாடா செல்லம்?"

"இல்ல. கெவின் குட் பாய். கெவின் சாரும்மா கூட இருந்தேன்."

"சாருவா? இது சாருவோட வீடா?" என்று கேட்டுக் கொண்டே மேரி நிமிர்வதற்கும் சாருமதி வரவேற்பறைக்கு வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

சாருமதியை அந்த இடத்தில் கண்ட மேரி மகனை விட்டுவிட்டு அவளை நோக்கி கிட்டதட்ட ஓடினாள்.

"எப்படி இருக்க சாரு? இது உன் வீடா?"

"..........."

"என் பையன் கெவின் உன்கிட்ட தான் மூணு நாளா இருந்தானா?"

"..........."

"நீ கர்ப்பமா இருக்கியா? எத்தனை மாசம்?" என்று அவள் கேள்விகளை அடுக்கினாள்.

சாருமதிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியிலும் ஆச்சரியத் திலும் அவள் பேச மறந்து சிலையாய் நின்றாள்.

"சாரு!" என்று மேரி அவளை பிடித்து உலுக்கவும் தன்னிலை அடைந்த சாருமதி உதிர்த்த வார்த்தை, "மஞ்சுக்கா!" என்பது தான்.



ஆம் மேரி வேறு யாருமல்ல. சாருமதியின் உடன் பிறந்த அக்கா மஞ்சரியே!

சாருமதி கோமளாவின் புறம் திரும்பி, "எங்க அக்கா அத்தை. என் அக்கா மஞ்சரி. லவ் மேரேஜ் பண்ணுற துக்காக வீட்டை விட்டு போனதா சொல்லி இருக்கே னில்ல..." என்று சகோதரியை அறிமுகம் செய்ய முனைந்தாள்.

'அப்ப கெவின் என் அக்கா பையனா? அதான் என்னை சாரும்மான்னு கூப்பிட்டானா?' என நினைத்துப் பார்த்த சாருமதி,

"இத்தனை நாளா எங்களை எல்லாம் வந்து பார்க்கணும்னு உனக்குத் தோணலை இல்ல?" என்று தன் அக்காவிடம் செல்லச் சண்டையிட ஆரம்பித் தாள்.

அவளுக்கு நடந்து கொண்டிருக்கும் பிரச்சனை மறந்து போனது. சில வருடங்களுக்கு முன் பிரிந்து சென்ற தன் சகோதரி கிடைத்தவுடன் சாருமதியின் எண்ணம் முழுவதும் மஞ்சரியும் அவளது பிரிவுமே ஆக்கிரமித்தன.

"ஏன் இத்தனை நாளா என்னை வந்து பார்க்கலை?"

"இல்லை சாரு. அப்பா என்ன சொல்லுவாரோன்னு தான் வரலை." என்று தங்கையை மஞ்சரி சமாதானம் செய்து கொண்டிருக்கும் போதே சஞ்சய் அவர்கள் அருகே வந்தான்.

"இவர் தான் என் ஹஸ்பெண்ட் சஞ்சய்." என்று சாரு மதி தன் கணவனை அறிமுகம் செய்து வைத்தாள்.

"உன் ஹஸ்பண்ட் சஞ்சயா?" என்று அதிர்வுடன் கேட்ட மஞ்சரி அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

அனைவரும் ஸ்தம்பித்தனர்!

மயக்கம் தெளிந்த பின் மஞ்சரி கூறப் போகும் உண்மையால் அனைவரின் காதுகளிலும் தேன் பாயுமா? இல்லை அந்த உண்மை அவர்களின் காதுகளில் ஈயத்தை காய்ச்சி ஊற்றுமா?



## 20

மஞ்சரி மயங்கிச் சரிந்த பின்பே கடந்த மூன்று நாட்களாக நடந்து கொண்டிருந்த பிரச்சனை சாருமதியின் நினைவிற்கு வந்தது.

'இவரை பார்த்து எதுக்கு அக்கா மயங்கி விழுகிறாள்? அப்படின்னா இதுக்கு என்ன அர்த்தம்?' என்ற பயம் தோன்றவும் அவளுக்கு வியர்க்க ஆரம்பித்தது.

கீழே மயங்கிச் சரிந்த மஞ்சரியை அனைவரும் பார்வையிட சஞ்சய் மட்டும் தன் மனைவியை பார்த்துக் கொண்டான்.

"சாரு! இங்க பாருடா. ஒண்ணுமில்லை. டென்ஷன் ஆகாதே! இத்தனை நாள் என் மேல நம்பிக்கையா இருந்த இல்ல... இன்னும் கொஞ்ச நேரம் அந்த நம்பிக்கையை கெட்டியா பிடிச்சுக்கோ. நான் உனக்கு



மட்டும் தான்டா!" என்று அவளது காதுகளில் முணுமுணுத்து மனைவிக்கு தெம்பூட்ட முயன்றான்.

கோமளம் தண்ணீர் கொண்டு வந்து மஞ்சரியின் முகத்தில் தெளித்து அவளை தெளிய வைக்க முயன்றார்.

கெவின் ஒரு புறம், "மம்மி கெட் அப்!" என்று விடாது கூறிக் கொண்டு இருந்தான்.

மஞ்சரி மயக்கத்தில் இருந்து தெளிந்து மெல்ல கண் விழித்தாள்.

அவள் மெதுவாக எழுந்து அமர்ந்தாள். கோமளம் அவளுக்கு உதவி செய்தார்.

எழுந்து அமர்ந்தவளின் பார்வை சாருமதியை தன் மேல் சாய்த்துக் கொண்டு அவளது முதுகை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்த சஞ்சயின் மேல் பதிந்தது.

அக்கா எழுந்துவிட்டாள் என்பதை கண்ட சாருமதி அவளிடம் சென்று, "இவரை, நீ இதுக்கு முன்னாடி பார்த்து இருக்கியாக்கா?" என்று கேட்டாள்.

மஞ்சரியின் தலை முதலில் ஆமாம் என்பதாய் ஆடியது. அதன் பின் இல்லை எனும் விதமாய் ஆடியது.

'எனக்காக அக்கா பொய் சொல்ல நினைக்கிறாளா? எதுக்கு இப்போ எல்லா பக்கமும் தலை ஆட்டுகிறாள்?' என்று சாருமதி எண்ணிக் கொண்டிருக்கும் போதே மஞ்சரி ஒரு கேள்வி கேட்டாள்.

அது அங்கே இருந்தவர்களின் மனநிலையை அடியோடு மாற்றி அமைத்தது.

மஞ்சரி சஞ்சயை பார்த்து, "நீங்க எப்படி அச்சு அசலா என் டேவிட் மாதிரியே இருக்கீங்க?" என்று கேட்டாள்.

"அது யாரும்மா டேவிட்?" என்று கோமளம் விசாரிக்க,

"என் கணவன்." என்று மஞ்சரி சொன்னதும்,

அனைவருமே அப்பாடா என்று நிம்மதி அடைந்தார்கள். கமிஷனர் தன்னுடைய விசாரணையை மேற்கொள்ள ஆரம்பித்தார்.

"உன் கணவர் பெயர் டேவிட் என்று நீ சொல்லுற. ஆனா உன் பையன் தன் டாடி பேரு சஞ்சய் என்று சொன்னான்."

"டேவிட்டும் நானும் காலேஜ்மேட்ஸ். எங்க காலேஜிலே பசங்க அவரை செல்லமாய் சஞ்சய் என்று கூப்பிடுவாங்க. அது என்னா... நாங்க படிச்சுக்கிட்டு இருந்த காலத்திலே தான் கஜினி படம் ரிலீஸ் ஆச்சு. டேவிட் கொஞ்சம் மறதி கேஸ். அதனால அவரை மெமரி லாஸ் பேஷண்ட்னு எல்லோரும் கிண்டல் பண்ணி சஞ்சய் என்று நிக் நேம் வச்சுக் கூப்பிடுவாங்க."

"உன் பேர் எப்படி மேரி ஆச்சு?"

"எங்க கல்யாணத்துக்கு பின்னாடி நான் அவனோட மதத்துக்கு மாற நினைச்சேன். அதனால என் பேரை மேரி என்று மாத்திக்கிட்டேன். அப்படின்னா நான் உன்னோட மதத்துக்கு மாறிடுறேன்னு சொல்லி அவன் தன் பேரை சஞ்சய் என்று சொல்ல ஆரம்பிச்சான்.



"அவன் சாமி கும்பிட ஆரம்பிச்சான். நான் ஜீசஸை வழிபட ஆரம்பிச்சேன். ஆனா சர்டிபிகேட்டிலே எங்க ஒரிஜனல் பேர் தான் இருக்கு. சில பேருக்கு வீட்டிலே ஒரு பேர். வெளியிலே ஒரு பேர் இருக்கும்ல. அது போல எங்களுக்கும் ரெண்டு பேர்."

'நல்லா பேரை மாத்தினீங்க! அதனால எத்தனை பிரச்சனை! எவ்வளவு குழப்பம்!' என்று கமிஷனர் மனதில் அலுத்துக் கொண்டார்.

"டேய் கெவின்! உன் அம்மாவுக்கு ரெண்டு பேராடா? நீ சொல்லவே இல்லை. இல்லைன்னா அன்னைக்கே நான் கண்டுபிடிச்சு இருப்பேன்." என்று சாருமதி கெவினை கேட்க,

"நோ! எங்க மம்மிக்கு த்ரீ பேர்." என்றவன் தன் கை விரல்களை ஒவ்வொன்றாக நீட்டி சொல்ல ஆம்பித்தான்.

"மேரி, மஞ்சரி, அம்லு." என்றான்.

"அது என்னக்கா அம்லு என்று புது பேர் சொல்லுறான்?"

"டேவிட் என்னை அப்படி தான் கூப்பிடுவான்." என்ற மஞ்சரி மீண்டும் தன் தங்கையின் கணவரை பார்த்து,

"நீங்களும் என் டேவிட்டும் டிவின்ஸா? கொஞ்சம் கூட உங்களுக்குள்ளே வித்தியாசம் இல்லை." என்று கேட்டாள்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று சஞ்சய் விழித்துக் கொண்டு இருந்தான்.

''அவன் பார்த்தா ஆச்சரியமாகிடுவான்.'' என்று மஞ்சரி கூறவும்,

''நீ யாரைம்மா சொல்லுறே?'' என்று ராதாகிருஷ்ணன் கேட்டார்.

''என் ஹஸ்பண்ட் டேவிட் பத்தி பேசுறேன். சாரி. நானும் அவனும் க்ளாஸ்மேட்ஸ் என்பதால் அவன் இவன் என்று சொல்லியே பழக்கமாகிடுச்சு.''

''டேவிட் இப்ப எங்கேம்மா?'' என்று ராதா கிருஷ்ணன் கேட்க,

''அவன் ஹாஸ்பிட்டலில் இருக்கான். அவனுக்கு என்னை விட கொஞ்சம் அடி பலம். ரெண்டு நாள் கழிச்சு தான் பேசுற நிலைமைக்கு வந்திருக்கான்.''

''நாம போய் பார்க்கலாம்.'' என்று கோமளம் கூறவும் அனைவருமே மருத்துவமனைக்குச் செல்லலாம் என முடிவெடுத்தனர்.

கமிஷனர் மட்டும், ''மீதி விவரத்தை அப்புறமா போனிலே கேட்டுத் தெரிஞ்சுக்கிறேன்.'' என்று கூறி விடை பெற்றார்.

அனைவரும் அவருக்கு தங்கள் நன்றிகளை கூறினார்கள். அனைவரும் ஒரே காரிலேயே ஏறி மருத்துவமனைக்குக் கிளம்பினார்கள். பாவனாவின் கார் அவர்களைப் பின தொடர்ந்தது.



கெவின் கோமளத்தின் மடியில் அமர்ந்திருந்தான். சாருமதியும் மஞ்சரியும் அருகருகே அமர்ந்திருந்தார்கள்.

''இப்போ நாம எங்க மம்மி போறோம்?''

''டாடியை பார்க்க போறோம் கெவின்.''

''டாடி இங்க தானே கார் ஓட்டிக்கிட்டு இருக்கார்.'' என்று சஞ்சய் புறம் கைகாட்டிய கெவின்,

''நீங்க வந்த பிறகு தான் நான் அவரை டாடின்னு சொல்லணுமாம். அது வரைக்கும் சாருப்பான்னு தான் கூப்பிடணும்னு சாரும்மா சொல்லிட்டாங்க.'' என்றதும் மஞ்சரி விழித்தாள்.

''அச்சோ! இவன் உங்களை டாடின்னு கூப்பிட்டதால உங்க குடும்பத்திலே குழப்பம் வந்துடுச்சா?'' என்று பதறியபடியே அவள் கேட்க,

''டாடின்னு மட்டுமா சொன்னான்! எங்க அப்பா பேரு சஞ்சய் என்றும் சொன்னான்.'' என்று கோமளம் கிண்டலாக உரைத்தார்.

''ஓ மை காட்!'' என்று அதிர்ந்த மஞ்சரியால் மகன் என்னென்ன குழப்பங்களை தங்கையின் குடும்பத்தில் விளைவித்து இருக்கக் கூடும் என்பதை அனுமானம் செய்ய முடிந்தது.

''சாரி சாரு. ஐயம் வெரி சாரி.'' என்று மஞ்சரி மன்னிப்பு கேட்டாள்.

''நீ எதுக்குக்கா தேவையில்லாமல் சாரி சொல்லுறே?''

''ஒவரா பிரச்சனை பண்ணிட்டானா? இதனால உங்க ரெண்டு பேருக்கும் இடையிலே...'' என்று

ஆரம்பித்தவள், அதற்கு மேல் கேட்கத் தயங்கி நிறுத்தினாள்.

''அப்படி எதுவுமில்லை அண்ணி. எங்களுக்குள்ள எந்தப் பிரச்சனையும் வரலை. சாரு என் மேல அளவுக்கு அதிகமா நம்பிக்கை வச்சாள். எதுக்கு அப்புறமும் தெரியுமா? டி.என்.ஏ டெஸ்டிலே நான் தான் கெவினோட அப்பான்னு புருவ் ஆனதுக்கு அப்புறமாகவும்!'' என்ற சஞ்சய் தன் மனைவியை பாராட்டிப் பேசினான்.

''என்ன டி.என்.ஏ டெஸ்டா?! அச்சோ! அவ்வளவு தூரம் பிரச்சனை ஆகிடுச்சா?'' என்று அதிர்ந்த மஞ்சரி,

தன் தங்கையின் கணவனிடம், ''நான் அப்போ சந்தேகமா தான் கேட்டேன். ஆனா இப்போ கன்ஃபர்ம்டா சொல்லுறேன். நீங்களும் என் டேவிட்டும் கண்டிப்பாக ஐடன்டிகல் டிவின்ஸ் தான். என்னா identical twins share their dna. அதனால தான் டெஸ்ட் ரிசல்ட் அது மாதிரி வந்து இருக்கும்.'' என்று அவள் உறுதிபடக் கூறினாள்.

அவள் கூறியதை கேட்ட ராதாகிருஷ்ணனும், கோமளமும், 'எங்களுக்கு பிறந்தது ஒரே பையன் தான். எப்படி இவனை மாதிரியே இன்னொருத்தன் இருக்க முடியும்? அப்படி சஞ்சயும் டேவிட்டும் இரட்டையர்கள் என்றால்... சஞ்சய் யாரு? எங்க பையன் இல்லையா?' என்று குழம்பிப் போயினர்.



மகன் அவர்களிடம் வந்த பிறகு நடந்ததை கேட்டு அறிந்து கொண்ட மஞ்சரி, ''உங்களோட சாப்பாடு டேஸ்ட் கூட ஒத்துப் போறது இதனால தான். நீங்க டேவிட்டை பார்த்துட்டு அதுக்கு அப்புறமா சொல்லுங்க.'' என்று முடித்தாள்.

''மம்மி நாம எங்க போறோம்னு கேட்டேன்.'' என்று கெவின் மீண்டும் அதே கேள்வியை கேட்க.

''நம்ம டாடியை பார்க்கப் போறோம்டா. இவர் நம்ம டாடி இல்ல. இவர் சாருப்பா தான்!'' என்று மஞ்சரி எடுத்துக் கூறியும் அந்த மூன்றரை வயது குழந்தைக்குப் புரியவில்லை.

''சாரு! இவன் உன்னை சாரும்மான்னு கூப்பிட்டப்போ இவன் என் பிள்ளையா இருப்பானோன்னு நீ ஒரு தடவை கூட யோசித்துப் பார்க்கலையா?'' என்று மஞ்சரி கேட்டதும்,

''நான் அப்படி சந்தேகப்பட்டேன்கா. நீ திடீர்னு ஒரு நாள் எங்க யாருகிட்டவும் சொல்லாமல் ஒரு துண்டு சீட்டிலே நான் காதலிச்சவரையே கல்யாணம் பண்ணிக்கிட்டு அவர் கூட வாழப் போறேன்னு எழுதி வச்சுட்டு போயிட்ட. நீ காதலிச்ச விஷயமே எனக்கும் அம்மா அப்பாவுக்கும் அன்னைக்கு தான் தெரிஞ்சது.

''நீ காதலிச்சவர் பேரும் எனக்குத் தெரியாது. ஊரும் தெரியாது. உன் பிள்ளை கெவின் தன்னோட அம்மா பேரு மேரி என்று சொன்னான். ஒரு வேளை அக்கா கிறிஸ்டியனை லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணதால

மதம் மாறி இருப்பாளோன்னு நினைக்க வழியில் லாமல் தன் அப்பா பேரு சஞ்சய் என்று சொன்னான். நான் என்ன செய்யுறது?'' என்ற சாருமதி கேட்கவும் அதில் இருந்த நியாயம் மஞ்சரியை ஆமாம் என்று தலையாட்ட வைத்தது.

மருத்துவமனையில் அவர்களை பாவனா எதிர்கொண்டு வரவேற்றாள்.

''உன் சிஸ்டர் சாரு தானே? கெவின் அவ வீட்டிலா இருந்தான்?'' என்ற பாவனா கேட்க,

''ஆமா பாவனா. இவர் என் தங்கை ஹஸ்பண்ட்.'' என்று சஞ்சயை அவளுக்கு அறிமுகப்படுத்த,

''ஹேய்! இது எப்படி சாத்தியம்? அப்படியே நம்ம மெமரி லாஸ் சஞ்சய் மாதிரியே இருக்கார்.''

''பாவனா. இவர் பேரும் சஞ்சய் தான்.'' என்றதும்,

''வாட்ட்ட்?'' என்று அதிர்ந்த பாவனா, ''ஐடன்டிகல் டிவின்ஸ்?'' என்று கேள்வி எழுப்ப,

''நான் அப்படி தான் பாவனா கெஸ் பண்ணுறேன்.'' என்று மஞ்சரி கூறினாள்.

டேவிட்டையும் சஞ்சயையும் பார்த்த மஞ்சரியும் பாவனாவும் அவர்கள் இரட்டையர்கள் என்பதை உறுதிபடக் கூறினார்கள். டேவிட்டை பார்க்காதவர்கள் அந்த உருவ ஒற்றுமையை பார்க்க ஆவலாக இருந் தார்கள்.

''டேவிட் பக்கத்திலே யார் இருக்கா?''



''நம்ம ஃப்ரண்ட்ஸ் ரெண்டு பேர் இருக்காங்க.'' என்ற பாவனா அவர்களை டேவிட் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அந்த அறை வாயிலில் இருந்த நண்பர்கள் சஞ்சயை பார்த்து ஆச்சரியத்தில் வாய் பிளந்து நின்றனர்.

''டேய்! வாயை மூடுங்கடா. இந்த ஹாஸ்பிடல் ஆயா க்ளீன் பண்ண பினாயிலோட வந்துடப் போறாங்க.'' என்று பாவனா கிண்டல் அடிக்கவும் அவர்கள் இருவரும் அவளை முறைத்தனர்.

''நீங்க எல்லோரும் உள்ளே போங்க. நாங்க கீழ ரிசப்ஷனில் வெயிட் பண்ணுறோம்.'' என்று கூறிய பாவனா தன் நண்பர்களை அழைத்துச் சென்றாள்.

கட்டுடன் உள்ளே படுத்திருந்த டேவிட்டை கண்டவர்கள் ஆச்சரியத்தில் விழி விரித்து நின்றனர்.

டேவிட் கண்ணுக்கு கெவின் மட்டுமே தெரிந்தான்.

''கெவின் மை சைல்ட்!'' என்று அவன் அழைக்க...

தனக்கு பழக்கமான அழைப்பில் அவனருகே சென்ற கெவின் அங்கே படுத்திருந்த டேவிட்டை பார்த்துக் குழம்பினான். பின் சஞ்சயை அவன் திரும்பிப் பார்த்தான்.

''எனக்கு ரெண்டு டாடியா?'' என்று அவன் கேட்க...

'என்ன சொல்கிறான் இவன்?' என்று குழம்பிய டேவிட் அவன் பார்வை சென்ற திக்கை ஆராய்ந்தான்.

அங்கே நின்று கொண்டிருந்த சஞ்சயை கண்டு அவனுக்குமே அதிர்ச்சி. மஞ்சரி நடந்ததை கணவனுக்கு விவரித்தாள்.

''உங்களோட அப்பா அம்மா எங்கே இருக்காங்க டேவிட்?'' என்று ராதாகிருஷ்ணன் விசாரித்தார்.

''அவங்க உயிரோட இல்ல அங்கிள். நான் காலேஜ் கடைசி வருஷம் படிக்கும் போதே ரோட் ஆக்ஸிடெண்டிலே இறந்து போயிட்டாங்க.''

''நீ எங்க பிறந்தேன்னு தெரியுமா. ஐ மீன் எந்த ஹாஸ்பிட்டல்?''

''தெரியும் அங்கிள்.'' என்று கூறியவன் அவன் பிறந்த ஊரையும், மருத்துவமனை பெயரையும் கூறவும் ராதாகிருஷ்ணனும் கோமளமும் ஆச்சரியம் அடைந்தனர்.

''அதே ஹாஸ்பிட்டலில் தான் எங்க சஞ்சயும் பிறந்தான்.''

''என்ன தேதி?''

டேவிட் பதில் அளித்ததும் இருவரும் ஒரே தேதியில் ஒரே மருத்துவமனையில் பிறந்து இருக்கின்றனர் என்பது தெளிவானது. ராதாகிருஷ்ணன் அமைதியாகி விட...



''என்னாச்சு மாமா?'' என்று சாருமதி அவரிடம் விசாரித்தாள்.

''எங்க பிள்ளை இன்னொரு வீட்டிலே வளர்ந்தானா? இல்லை இன்னொருத்தரோட பிள்ளையைதான் இத்தனை வருஷமா நாங்க வளர்த்தோமான்னு தெரியலையே?'' என்று அவர் கவலைப்பட,

கோமளம் மயங்கி சரிந்தார். கடந்த மூன்று நாட்களாக ஏகப்பட்ட பிரச்சனைகளை சந்தித்ததின் விளைவாக அவரது இரத்த அழுத்தம் தாறுமாறாக எகிறியது.

அவரை அதே மருத்துவமனையில் இன்னொரு அறையில் சேர்த்து வைத்தியம் பார்க்க ஆரம்பித்தார்கள்.

மேரி ரிசப்ஷனில் காத்திருந்த தன் நண்பர்களிடம் பேசச் சென்றாள். அனைவரும் அவர்களது வருகையை ஏன் முன்கூட்டியே தங்களுக்கு தெரிவிக்கவில்லை என்று மஞ்சரியை திட்டினார்கள்.

''உங்களை எல்லாம் பார்த்து பல வருஷமாச்சுன்னு உங்களைப் பார்க்க சென்னைக்கு வரணும்னு ரொம்ப நாளாவே ப்ளான் பண்ணினோம். திடீர்னு டேவிட் எனக்கு ஒரு வாரம் லீவ் கிடைச்சிருக்கு. வா கிளம்பலாம்னு இழுத்துட்டு வந்துட்டான். நேரிலே வந்து நின்னு உங்களை எல்லாம் ஆச்சரியப்படுத்த நினைச்சோம்.''

''அட்லீஸ்ட் சென்னை வந்து இறங்கின உடனே போன் பண்ணி இருக்கலாமில்ல?'' என்று அந்த நண்பன் கேட்டதும்,

''டேவிட் முதல்ல மதுரைக்கு போய் ஃபாதரை பார்க்க நினைச்சான். மதுரைக்கு போக டட்கல் மூலமா டிரைன் டிக்கெட் கூட எடுத்தான். ஆனா நாங்க டிரைனை மிஸ் பண்ணிட்டோம். உங்களை எல்லாம் பார்த்துட்டு ரெண்டு நாள் கழிச்சு மதுரைக்கு போகலாம்னு சொன்னேன். ஆனா அவன் ஃபாதர்கிட்ட வருவதா சொல்லிட்டு வரலைன்னு சொல்ல சங்கடப்பட்டு எங்களை பஸ்ஸிலே கூட்டிட்டுப் போனான்.''

''ஒரு வார்த்தை எங்ககிட்டே சொல்லி இருக்கலாம். எப்படியோ மூணு நாள் கஷ்டப்பட்டாலும் இப்போ எல்லாம் சரியாப் போச்சே! அதுவே போதும்!'' என்றா பாவனா மஞ்சரியிடம் தயங்கியவாறே.

''உனக்கு அடிபட்டிருச்சுன்னு தெரிஞ்ச உடனே உங்க அப்பாவுக்கு இன்ஃபார்ம் பண்ணலாம்னு நேத்து உங்க வீட்டுக்கு போனேன். ஆனா வீடு பூட்டி இருந்துச்சு. சரி அப்புறமா திரும்பவும் போகலாம்னு நினைச்சேன். இன்னைக்கு நீ சாருவோட வந்து நிக்கிறே!'' என்றாள்.

நண்பர்கள் அனைவரும் மஞ்சரியிடம், ''என்ன ஹெல்ப் வேணும்னாலும் ஒரு போன் பண்ணு.'' என்று கூறிவிட்டு விடைபெற்றனர்.

மீண்டும் ஒரு டி.என்.ஏ பரிசோதனை செய்ய முடிவெடுத்தார்கள். இம்முறை ராதாகிருஷ்ணன், சஞ்சய் மற்றும் டேவிட் ஆகிய மூவரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.



ஃபாதர் ஃபிரான்சிஸ் மருத்துவமனைக்கு வந்தார். விஷயம் கேள்விப்பட்டு ஆச்சரியம் அடைந்தார். அனைவரையும் சந்தித்து விட்டு மதுரைக்கு சென்றார்.



## 21

சஞ்சய் கோமளத்தின் அருகே சென்று அவரது கைகளை பிடித்துக் கொண்டு, ''இப்ப எதுக்கும்மா தேவையில்லாம டென்ஷன் ஆகுறீங்க? என்னை உங்ககிட்ட இருந்து யாராலும் பிரிச்சு கூட்டிட்டு போக முடியாது. நான் உங்க பிள்ளை தான்! திடீர்னு யாரோ ஒருத்தர் வந்து நான் தான் உன் அம்மான்னு சொன்னா என்னால அதை ஒத்துக்க முடியுமா?'' என்று கேட்டான்.

''ஒரு வேளை நீங்க ரெண்டு பேரும் என் பிள்ளைங்கன்னு ரிசல்ட் சொல்லுச்சுன்னா... டேவிட் என்னை அம்மான்னு கூப்பிட மாட்டானா?'' என்று கோமளம் பரிதாபமாகக் கேட்க,

ராதாகிருஷ்ணன், 'இதுக்கு நீ பேசாமலே இருந்திருக்காலம்டா!' என்பது போன்று சஞ்சயை பார்த்தார்.

'எவ்வளவோ சமாளிச்சிட்டோம். இதை சமாளிக்க மாட்டோமா?' என்று தன் தந்தையை பதில் பார்வை பார்த்த சஞ்சய் தன் தாயிடம்,

''அவன் உங்களை அம்மான்னு கூப்பிடாமல் எங்கே போவான்? அவனுக்கு தான் வேற அம்மா இல்லையே? அதனால ரிசல்ட் எப்படி வந்தாலும் எங்க ரெண்டு பேருக்குமே நீங்க தான் அம்மா. மனசை போட்டு குழப்பிக்காம நிம்மதியா ரெஸ்ட் எடுங்க.'' என்றான்.

கமிஷனர் தன் அலுவல்களை முடித்துக் கொண்டு தன் நண்பரை பார்க்க மருத்துவமனைக்கு வந்தார்.

டேவிட்டை பார்த்தவர், ''அப்படியே அச்சு அசலா இருக்காங்களே கிருஷ்ணா!'' என்று நண்பரிடம் வியந்தார்.

சாருமதியிடம் அவள் அக்காவை பற்றி விசாரித்தார்.

''எங்க அக்கா இஞ்சினியரிங் முடிச்சதும் எம்.எஸ் படிக்க ஆசைப்பட்டு அமெரிக்கா போனாள் அங்கிள். டேவிட் மாமாவும் அமெரிக்காவுக்கு போனதா இப்ப தான் சொல்லுறாள்.

''தன்னோட இருபத்தி நாலு வயசிலே படிச்சு முடிச்சு திரும்பி வந்தவள் லெட்டர் எழுதி வச்சுட்டு சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு போயிட்டாள்.

''வீட்டை விட்டுப் போன ரெண்டாவது நாள் எங்க வீட்டுக்கு போன் பண்ணி சாரிப்பான்னு எங்க அப்பாகிட்ட மன்னிப்பு கேட்டிருக்காள். எங்கப்பா என் பொண்ணு செத்துட்டாள்னு சொல்லி போனை வச்சுட்டார். அதுக்கு அப்புறமா எங்க வீட்டிலே அவ பேச்சை பேச எங்கப்பா அனுமதிச்சதே இல்லை.



''அதுக்கு அடுத்த வாரம் என்கிட்டே பேச முயற்சி பண்ணினாள். 'அப்பாவை மீறி நான் உன்கூடப் பேச விரும்பலைன்னு' சொல்லி நானும் போனை கட் பண்ணிட்டேன். அதுக்கு அப்புறமா அவ என்னை கான்டாக்ட் பண்ணவே இல்லை.

''கெவின் பிறந்து ரெண்டு வருஷத்துக்கு மேலா எங்கக்கா அமெரிக்காவிலே தான் இருந்து இருக்காள். கடந்த ஒரு வருஷமா தான் மும்பையில தங்கி இருக்காங்க. இப்ப டேவிட் மாமா புனேயில் வேலை பார்க்கிறாராம். அதனால வீக் என்ட் மட்டும் தான் வீட்டுக்கு வருவாராம்.'' என்று சாருமதி தன் அக்காவின் கதையை கமிஷனருக்கு விளக்கினாள்.

இன்று ஒரு நாள் இரவு மட்டும் கோமளம் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருக்கட்டும் என்று மருத்துவர்கள் கேட்டுக் கொண்டதால் ராதாகிருஷ்ணன் அங்கேயே தங்கிக் கொண்டார்.

டேவிட் இன்னும் இரு தினங்களாவது மருத்துவமனையில் இருக்க வேண்டும் என்பதால் மஞ்சரியும் அங்கேயே இருந்து கொண்டாள். அவள் கெவினையும் தன்னுடனே வைத்துக் கொண்டாள்.

''சின்னக் குழந்தையை எதுக்குக்கா ஹாஸ்பிட்டலில் வச்சுக்கிட்டு... நான் என் கூட வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்.'' என்று சாருமதி தன் அக்காவிடம் கேட்க,

''இல்லை சாரு. மூணு நாளா என் பிள்ளையை பிரிஞ்சு இருந்துட்டேன். இன்னைக்கு என் பிள்ளை

என் கூடவே இருக்கட்டும் சாரு. காலையில வந்து கூட்டிட்டு போ. ஏன்னா இவன் அடங்கி ஒடுங்கி ஒரு இடத்திலே இருக்க மாட்டான்.. அதனால் ஹாஸ்பிட்டலில் வச்சுக்கிறது கஷ்டம்.'' என்றாள்.

''சரிக்கா இன்னைக்கு கெவின் இங்கேயே இருக்கட்டும்.''

''அம்மாவும்... அப்பாவும்...'' என்று மஞ்சரி தயங்கி இழுக்க...

''அவங்க ரெண்டு பேரும் நார்த் இந்தியாவுக்கு டூர் போய் இருக்காங்க. அமர்நாத், கேதார்நாத், காசி... இதெல்லாத்தையும் சுத்திப் பார்த்துட்டு வரோம்னு போயிருக்காங்க.''

''என்னை பார்த்துட்டு அப்பா என்ன சொல்வாரோன்னு பயமா இருக்கு சாரு.''

''அதைப் பத்தி நீ கவலைப்படாதேக்கா. நீ வீட்டை விட்டுப் போன போது அப்பா ரொம்ப மனசு ஒடிஞ்சு போய் இருந்தார். அதனால என்னால உனக்கு சப்போர்ட் பண்ண முடியலை. அப்போ நானும் பத்தொன்பது வயசு சின்னப் பொண்ணு. இத்தனை வருஷத்திலே கொஞ்சமாச்சும் அப்பாவோட கோபம் குறைஞ்சிருக்காதா? நாங்களெல்லாம் அப்பாகிட்ட பேசுறோம். இப்போதைக்கு நீ மாமாவை மட்டும் பாரு.'' என்று சாருமதியும்,

''சாரு சொல்லுறது சரி தான் அண்ணி. நீங்க டேவிட்டை மட்டும் பாருங்க. உங்க அப்பாகிட்ட நானும் எங்க அப்பாவும் பேசுறோம்.'' என்று சஞ்சயும் உறுதி அளித்தனர்.



சாருமதி தன் அக்காவிற்கு ஆறுதலாகப் பேச வேண்டும் என்பதற்காக பரந்தாமனின் கோபம் குறைந்திருக்கும் என்று கூறினாள். ஆனால் உண்மையில் அவரது கோபம் இம்மி அளவு கூடக் குறையவில்லை என்பதை சாருமதி நன்கு அறிவாள்.

மஞ்சரி வீட்டை விட்டுப் போன இந்த ஐந்து வருடத்தில் எத்தனையோ முறை பரந்தாமனிடம் மஞ்சரி பற்றிய பேச்சை சாருமதி எடுத்திருக்கிறாள்.

''அவ செத்துட்டாள். உனக்கு அவ வேணுமா இல்லை நானா?'' என்று கேட்டு சாருமதியின் வாயை பரந்தாமன் ஒவ்வொரு முறையும் அடைப்பார்.

தன் அக்கா தன் திருமணத்திற்கு வரவேண்டும் என்று சாருமதி ஆசைப்பட்டாள். அவள் தனது ஆசையை சஞ்சயிடம் பகிர்ந்த போது அவனும் தன் பங்கிற்கு பரந்தாமனிடம் முயன்று பார்த்தான்.

''மஞ்சரி பத்தின பேச்சு நமக்கிடையே வராமல் இருப்பது நம்ம உறவுக்கு நல்லது மாப்பிள்ளை.'' என்று கூறி பரந்தாமன் அவன் வாயை அடைத்து விட்டார்.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டதே! டேவிட் சஞ்சயின் உடன்பிறந்தவன் என்பதால் பரந்தாமன் அவனையும் மஞ்சரியையும் ஏற்றுக் கொள்ளக் கூடும் என சாருமதியும் சஞ்சயும் நம்பினார்கள்.

சாருமதியும் சஞ்சயும் வீட்டிற்கு சென்றனர். தங்களது அறைக்குள் நுழைந்ததும் மனைவியின் முகமெங்கும் சஞ்சய் ஆவேசமாய் முத்தங்களை பதித்தான்.

''என்னாச்சுங்க?'' என்று கேட்டவளிடம்,

''தாங்க் யூ. தாங்க் யூ சோ மச் சாரு. நீ என்னை நம்பாமல் போயிருந்தால் நான் இன்னைக்கு இல்லை.'' என்றதும்,

''ஏதாச்சும் தத்து பித்துன்னு உளறாதீங்க.'' என்று அவள் கடிந்து கொண்டாள்.

''தாங்க்ஸ் எ லாட் சாரு!'' என்று ஆத்மார்த்தமாக மொழிந்தவன் அவளது இதழ்களில் நீண்ட நெடிய முத்தத்தை பதித்தான்.

அதற்கு பின் அவளது வயிற்றிலே முத்தம் பதித்தவன், ''நான் சொன்ன மாதிரியே... நான் உனக்கு மட்டும் தான்டா அப்பா. தாங்க்ஸ் டா குட்டி!'' என்று தன் குழந்தையிடம் கொஞ்சினான்.

அடுத்த நாள் டேவிட் நன்றாக பேசும் நிலையில் இருந்தான். குழந்தை கெவின் எப்படி காணாமல் போனான் என்ற பேச்சு அவர்களிடையே எழுந்தது.

டேவிட் அன்று நடந்ததை விவரிக்க ஆரம்பித்தான்.

''அன்னைக்கு பஸ்ஸிலே எனக்கும் மஞ்சரிக்கும் பக்கத்து பக்கத்து சீட் கிடைக்கலை. நான் முன்னாடி இருக்கிற சிங்கிள் சீட்டிலே உட்கார்ந்து இருந்தேன்.



எனக்கு பின்னாடி அஞ்சு சீட் தள்ளி மஞ்சரிக்கு சீட் கிடைச்சிருந்தது. கெவின் அவ கூட இருந்தான்.

''அந்த மோட்டலில் வண்டி நின்ன போது பாத்ரூம் போகணும்னு கெவின் சொன்னதால நான் அவனை கூட்டிட்டுப் போனேன். திரும்ப பஸ் ஏத்தும் போது நான் தான் பஸ் நம்பரை சரி பார்க்காமல் மாத்தி ஏத்தி விட்டிருக்கணும்.

''அவனை பஸ்ஸுக்குள் அனுப்பிட்டு நான் வாட்டர் பாட்டில் வாங்கிறதுக்கு போயிட்டேன். திரும்ப உள்ள ஏறினதும் குழந்தை அவகிட்ட இருக்கானான்னு நான் செக் பண்ணலை.''

''டேவிட் கூட அனுப்பியதால கெவின் டேவிட் கிட்ட இருப்பான்னு நானும் நினைச்சுக்கிட்டேன். உன்கிட்டே தானே கெவின் இருக்கான்னு நாங்க ஒருத்தொருக்கு ஒருத்தர் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டு இருந்திருக்கணும். ஆனா அப்படி விசாரிக்காமல் போயிட்டோம்.'' என்று மஞ்சரி இடைபுகுந்தாள்.

''ஆனா நாங்க அப்படி விசாரிக்காததும் நல்லதா தான் போச்சு. வண்டி கிளம்பிய கொஞ்ச நேரத்திலேயே ஆக்ஸிடெண்ட் நடந்துடுச்சு. எங்க கூட இருந்திருந்தா அவனுக்கும் அடிபட்டிருக்கும். ஆனா நான் பஸ் மாத்தி ஏத்திவிட்டதால தான் என் பிள்ளைக்கு அடியும் படலை. நீங்க எல்லோரும் கிடைச்சிருக்கீங்க.'' என்று டேவிட் கூறினான்.

கோமளத்தோடு சேர்ந்து கெவினையும் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். மஞ்சரி மட்டும் டேவிட் உடன் மருத்துவமனையிலே இருந்தாள்.

டி.என்.ஏ பரிசோதனை முடிவு வரும் வரை கோமளம் ஒரு வித பதட்டத்துடனே காணப்பட்டார். அவரது தவிப்பை புரிந்து கொண்ட சாருவும் சஞ்சயும் தங்களால் முடிந்த அளவு அவருக்கு ஆறுதல் கூறினார்கள்.

டி.என்.ஏ முடிவும் வந்தது. இருவருமே ராதாகிருஷ்ணனின் பிள்ளைகள் தான் என்று வந்ததில் அனைவருமே உற்சாகமானார்கள்.

தன்னுடைய ரத்த சம்பந்தமான உறவு தங்களை வந்து அடைந்ததில் ராதாகிருஷ்ணன், கோமளம் மற்றும் சஞ்சய் மகிழ்ந்து போனார்கள்.

சாருமதியும் மஞ்சரியும் தாங்கள் ஒரே வீட்டில் வாழப் போவது குறித்து ஆனந்தம் அடைந்தார்கள்.

டேவிட்டின் எண்ணம் வேறு மாதிரியாக இருந்தது. நல்லவேளை! தன்னை வளர்த்தவர்கள் உயிரோடு இருக்கும் போது இந்த உண்மை வெளிப்படவில்லை என்று அவன் ஆனந்தப்பட்டான். அப்படித் தெரிந்திருந்தால் அது அவர்களுக்குப் பெரிய துன்பமாக அல்லவா இருந்திருக்கும்.

அதே சமயம்.. என்ன தான் கோமளம் தன்னை ஈன்றெடுத்த தாயாய் இருந்தாலும்... தன்னை வளர்த்த பெற்றோர் உயிரோடு இருந்திருந்தால் தன்னால் கோமளத்தை அம்மாவென்று உறுத்தல் சிறிதுமின்றி கூப்பிட்டு இருக்க முடியாது என்று நினைத்தான். அப்படி ஒரு இக்கட்டில் இருந்து தன்னைக் காத்த ஆண்டவனுக்கு நன்றி சொன்னான்.



குழந்தைகள் எப்படி இடம் மாறினார்கள் என்று அவர்கள் யாரும் ஆராய முற்படவில்லை. 'என் பிள்ளை என்னிடம் வந்து விட்டான்' என்ற நிலையிலேயே அவர்கள் சந்தோஷம் அடைந்தனர்.

திருச்செந்தூர் முருகன் தங்களை அவன் கோவிலுக்கு வர வைத்து முதலில் கஷ்டத்தை கொடுத்தாலும் அதற்கு பின்பு தன்னுடைய அருளை அள்ளி அள்ளி வழங்கிவிட்டதாக கோமளமும் ராதாகிருஷ்ணனும் அகம் மகிழ்ந்து போனார்கள்.

விஷயத்தை கேள்விப்பட்ட கமிஷனரும் ராதாகிருஷ்ணனுக்கு தன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

**என்னுரை :**

அன்பார்ந்த வாசகர்களே,

குழந்தை எப்படி மாறியது என்ற அக்கறை கதையின் கதாபாத்திரங்களுக்கு இல்லாமல் போகலாம். ஆனால் உண்மையில் என்ன நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கு விளக்கம் சொல்ல நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சென்னையில் வசிக்கும் கோமளத்தின் பிறந்த வீடு திருச்சியில் இருந்தது. அதனால் அவர் பிரசவத்திற்கு திருச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மதுரையை சேர்ந்த டேவிட்டின் வளர்ப்பு பெற்றோர் ஒரு திருமணத்திற்காக திருச்சி வந்திருந்தார்கள்.

வந்த இடத்தில் டேவிட்டின் அன்னை ஜெசிகாவிற்கு பிரசவ வலி எடுத்ததால் அதே மருத்துவமனையில் அவரும் சேர்க்கப்பட்டார்.

ஜெசிகாவிற்கு சுகப் பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையை ஜெசிகாவிடம் காட்டி விட்டு குளிக்க வைக்க எடுத்துச் சென்ற போது மருத்துவ மனையில் ஏற்பட்ட மின் கசிவினால் அந்தக் குழந்தை இறந்தது.

அது வெளியே தெரிந்தால் மருத்துவமனைக்கு கெட்ட பெயர் வந்துவிடும் என்று அந்த மருத்துவர் பயந்தார். அதே நேரம் அறுவை சிகிச்சை மூலம் இரு ஆண் குழந்தைகள் கோமளத்திற்கு பிறந்தது.

இக்காலத்தில் பிரவசத்திற்கு முன்பு மூன்று முறையாவது ஸ்கேன் எடுக்கும் பழக்கம் இருக்கிறது. ஆனால் இருபத்து ஒன்பது வருடங்களுக்கு முன்பு ஸ்கேன் எடுக்கும் வழக்கம் இல்லாத காரணத்தால் கோமளத்தின் வயிற்றில் இரட்டை குழந்தைகள் இருந்த விஷயம் அவருக்கு தெரியாமல் போனது.

சிசேரியின் செய்யும் பொழுது முதுகுத் தண்டு வடத்தில் மயக்க மருந்து (Regional Anaesthesia) செலுத்துவது வழக்கம். இதனால் நோயாளிகளுக்கு வயிற்றுப் பகுதியில் உணர்வு இருக்காது. ஆனால் அவர்களது நினைவு தப்பாது. நோயாளி விழித்துக் கொண்டு தான் இருப்பார்.

ஆனால் அறுவை சிகிச்சை நீண்டு கொண்டே போனாலோ வேறு சில மருத்துவ சிக்கல்



ஏற்பட்டாலோ General Anaesthesia கொடுப்பார்கள். அந்த முறையில் நோயாளி மயக்கம் அடைவார். அவரால் சுற்றி நடக்கும் எதையும் உணர முடியாது.

கோமளத்திற்கும் அப்படி ஒரு முறையை கையாண்டு இருந்ததால் அவர் மயக்கம் அடைந்தார். அதனால் கோமளத்தின் ஒரு குழந்தை ஜெசிகாவிடம் ஒப்படைக்கப்பட்டது அவருக்கு தெரியாமலே போனது.

கோமளத்தின் வீட்டினரை பொறுத்த வரையில் அவருக்கு அறுவை சிகிச்சை மூலம் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவ்வளவு தான்.

சுகப் பிரசவம் என்ற காரணத்தை காட்டி மறுநாளே ஜெசிகாவை மருத்துவமனையில் இருந்து அனுப்பி விட்டார்கள். அவரும் அன்றே மதுரை சென்று விட்டார். இது தான் நடந்தது.

'இப்படியும் நடக்குமா?' என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். இந்த உலகத்தில் எல்லாத் திருட்டுத்தனங்களும் நடக்கத் தான் செய்கின்றன. அதை விதி என்றும் சொல்லலாம். இல்லை இப்படி ஒரு கதையை உருவாக்குவதற்காக எழுத்தாளர் பிரேமா செய்த சதி என்றும் கூறலாம்.

Idential twins have the same DNA என்ற மருத்துவ உண்மை அடங்கிய இந்த வாக்கியமே இந்தக் கதை உருவாகக் காரணம்.

இந்தக் கதையை இந்த அத்தியாயத்தோடு நான் முடித்திருக்கலாம். ஆனால் காதல் கல்யாணத்தால்

பிரிந்து போன மஞ்சரி தன் குடும்பத்தோடு எவ்வாறு இணைந்தாள் என்பதை விளக்குவதற்காக மேலும் சில அத்தியாயங்களை எழுதி உள்ளேன்.

*கதையை தொடர்ந்து படியுங்கள்!*

*நன்றிகளுடன்,*

*பிரேமா*

# 22

அடுத்த இரு தினங்களில் டேவிட் மருத்துவ மனையில் இருந்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டான். அன்று வீடே விழாக் கோலம் பூண்டிருந்தது.

டேவிட்டை கெவினுடனும் மஞ்சரியுடனும் சேர்த்து நிற்க வைத்து ஆலம் சுற்றி வீட்டிற்குள் அழைத்துச் சென்றனர்.

டேவிட்டையும் சஞ்சயையும் ஒன்றாகக் கண்ட வேலையாட்கள் அனைவரும் வாய் பிளந்து நின்றனர்.

பெரியவர்கள் இருவராலும் டேவிட்டுக்கும் தங்கள் கூடவே வளர்ந்த சஞ்சய்க்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடிந்தது. அவரவர் மனைவியரும் வித்தியாசத்தை எளிதாக கண்டு கொண்டார்கள்.

இந்த உருவ ஒற்றுமையால் குழம்பித் தவித்தது கெவின் மட்டுமே. அவர்கள் அனைவரும் சஞ்சய்க்கும்



டேவிட்க்கும் எவ்வாறு வித்தியாசம் காண்பது என்று அவனுக்குச் சொல்லிக் கொடுக்க முனைந்து தோற்றார்கள். சில நாட்களில் அவனே கண்டு கொள்வான் என நினைத்து அப்படியே விட்டு விட்டார்கள்.

அன்று மாலை அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது டேவிட், ''நான் இனிமேல் என் பேரை சஞ்சய் என்று சொல்லிக்க முடியாது. அப்புறம் குழப்பம் வந்துடும். வேற ஒரு ஹிந்து பேர் கண்டு பிடிக்கணும்.'' என்று கூறினான்.

அதற்கு ராதாகிருஷ்ணன், ''நீ ஏன் ஹிந்துவா மாறணும்? மஞ்சரியும் சரி நீயும் சரி... நீங்க நீங்களாகவே இருக்கலாம். மதம் மாறி தான் உங்க காதலுக்கு நீங்க மரியாதை செய்யணும் என்ற அவசியம் இல்லை. மஞ்சரியை அப்படியே ஏத்துக்கிறது கூட அவ மேல நீ வச்சிருக்கிற காதலுக்கு மரியாதை செய்யுறதா தான் நான் நினைக்கிறேன்'' என்றவர்,

மஞ்சரியை பார்த்து, ''உன்னால உன்னோட இஷ்ட தெய்வத்தோட பேரை மறக்க முடிஞ்சதா?'' என்று கேட்டார்.

அவள் இல்லை என்னும் விதமாய் தலையாட்டினாள்.

''நீ டேவிட்..'' என்று மகனைப் பார்த்துக் கேட்டு நிறுத்த...

''இல்ல. என்னையும் அறியாமல் ஜீசஸ் என்று நான் பல முறை சொல்லி இருக்கேன்.''

''அதை தான் நானும் சொல்லுறேன். நீ டேவிட்டாவே இரு. நீ மஞ்சரியாவே இரு'' என்று அவர்கள் இருவரையும் பார்த்துக் கூறியவர்,

''இனிமே நம்ம வீட்டிலே தீபாவளியும் உண்டு. கிறிஸ்துமஸும் உண்டு.'' என்று அறிவித்தார்.

''நான் பூஜை அறையிலே ஜீசஸ் படம் வாங்கி வச்சுட்டேன்.'' என்று கோமளமும் அறிவிக்க, அனைவரும் புன்னகைத்தனர்.

சாருமதி தன் அக்கா கணவனிடம், ''உங்க ஃப்ரண்ட்ஸ் உங்களுக்கு சஞ்சய் என்று நிக் நேம் வைக்கிற அளவுக்கு உங்களுக்கு மறதி ஜாஸ்தியா மாமா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல மதி.'' என்றான்.

அவன் தன் தந்தையையும் தாயையும் பின்பற்றி அவளை மதி என்றே அழைக்கத் தொடங்கி இருந்தான்.

''அப்புறம் எதுக்கு உங்களுக்கு அப்படி ஒரு பேரு?''

''இந்த காலேஜ் பசங்களெல்லாம் ஒண்ணை பத்தாக்கி தானே பேசுவாங்க. நான் ஒரே ஒரு விஷயம் மறந்து போனேன். அதுக்கு தான் இந்த பேர்,'' என்று அவன் அலுத்துக் கொள்ளவும்,



''சார் அப்படி மறந்த விஷயம் என்னன்னு கேளு சாரு.'' என்று மஞ்சரி கிண்டலாக உரைத்தாள்.

''அப்படி எதை மாமா மறந்தீங்க?'' என்று சாருமதியும்,

''டிரஸ் போட மறந்துட்டு போயிட்டியாடா டேவிட்?'' என்று சஞ்சயும் கேட்க,

தம்பியை ஒரு முறை முறைத்துக் கொண்டே டேவிட் தன் செல்லப் பெயருக்கான காரணத்தைக் கூற ஆரம்பித்தான்.

''ஒரு செமஸ்டரில் எக்ஸாம் போக மறந்துட்டேன். அவ்வளவு தான்.''

''எக்ஸாமுக்கா?'' என்று அதிர்ந்த சாருமதி, ''அதை எப்படி மாமா மறந்தீங்க?'' என்று கேட்டாள்.

''நான் ஸ்டடி ஹாலிடேஸ்க்கு வீட்டுக்கு போயிருந்தேன். மதியம் எக்ஸாம்னு நினைச்சு காலையில் தான் சென்னை வந்து சேர்ந்தேன். என் டிரைன் வேற லேட். நான் ஹாஸ்டலுக்கு வந்து சேர்ந்த போது பத்து மணி ஆகிடுச்சு. என்னடா மொத்த ஹாஸ்டலும் சைலன்ட்டா இருக்கே. பயபுள்ளைக அவ்வளவு சின்சியராவா படிக்கிறாங்கன்னு நினைச்சு உள்ள போய் பார்த்தா... ஒருத்தனையும் காணோம். அப்புறம் தான் தெரிஞ்சது... எக்ஸாம் காலையிலன்னு.''

''காலையில நடக்கப் போற எக்ஸாம்க்கு முதல் நாள் நைட் வரைக்கும் ஹாஸ்டல் வந்து சேரலையான்னு ஒருத்தர் கூடவா உங்களுக்கு போன் பண்ணலை?''

''நான் நிறைய நாள் பஸ் டிராவல் பண்ணி அதிகாலையில வருவேன். அதனால நான் முதல் நாளே வராததை யாரும் பெருசாக் கண்டுக்கலை.''

''எப்படி மாமா எக்ஸாம் டைமிங்கை குழப்பி அடிச்சீங்க?''

''அதுக்கு முந்தின செமஸ்டர் எக்ஸாம் மதியம் தான் நடந்துச்சு மதி. அங்க தான் கொஞ்சம் குழம்பிப் போயிட்டேன்.''

இந்த இடத்தில் மஞ்சரி இடை புகுந்தாள்.

''ஆறு நாளைக்கு முன்னாடி கூட நான் காலையில எக்ஸாம்னு சொன்னேன். அது இவர் நினைவிலே இல்லையாம். ஆனா ஆறு மாசத்துக்கு முன்னாடி நடந்தது மட்டும் நினைவிலே நின்னுச்சாம். என்னே ஒரு மெமரி பவர்!'' என்று மஞ்சரி கிண்டல் பண்ண, அனைவரும் சிரித்தனர்.

''இவ பேச்சை கேட்டு என் மெமரி பவர் ரொம்ப மோசம்னு யாரும் தப்பா நினைச்சுக்காதீங்க. இவ பேச்சை நான் கேட்கலை. அதான் விஷயம்...'' என்று டேவிட் கூறினான்.

''என்னது என் பேச்சை கேட்கலையா?'' என்று மஞ்சரி கோபமாகக் கேட்க,

''நீயே சொல்லுடா சஞ்சய். லவ் பண்ணுற பொண்ணு நம்மகிட்ட வந்து அன்பா... ரொமான்டிக்கா பேசினா காது குடுத்துக் கேட்கலாம். எப்பப் பாரு இதைப் படிச்சியா... அதைப் படிச்சியா அப்படின்னு நொய் நொய்னு போஃன் போட்டா... போனை ஆன்



பண்ணிட்டு அவ பேச்சை காதில வாங்காம உம் கொட்டினா போதாது?'' என்று தம்பியிடம் நியாயம் கேட்ட கையோடு சாருமதியிடம் திரும்பி,

''உங்க அக்கா ஒரு ரேடியோ மாதிரி மதி. ஆன் மட்டும் பண்ணினால் போதும். எதிரே இருக்கிறவங்க நம்ம பேச்சை கேட்கிறாங்களா இல்லையாங்கிற கவலை எல்லாம் அவளுக்கு கிடையாது. ஆஃப் பண்ணுற வரைக்கும் நிக்காமல் பாடுவாள்... சே! சே! பேசுவாள்.'' என்று தன் மனைவியை நக்கல் பண்ணி னான்.

''உன்னை...'' என்று கையில் கிடைத்ததை தூக்கிக் கொண்டு அவனை மஞ்சரி அடிக்க வந்தாள்.

''ஹேய்! எவ்வளவு தைரியம் அம்லு உனக்கு? எங்க அப்பா அம்மா முன்னாடியே என்னை அடிக்க வர! பிச்சு புடுவாங்க பிச்சு!'' என்று அவன் ஒரு விரல் நீட்டி மிரட்ட,

மஞ்சரியை முந்திக் கொண்டு அவள் பெற்ற பிள்ளை தன் தந்தைக்கு பதில் அளித்தான். தனது பிஞ்சு விரலை நீட்டிக் கொண்டு,

''டாடி! மம்மியை மிரட்டினா... பிச்சு...'' என்று அதட்டினான்.

''ஒரு ஆறு மாசம்... ஆறே மாசம் புனேவுக்கு டிரான்ஸ்பர்ல வேலைக்கு போனேன். டெய்லி வீட்டுக்கு வராமல் வீக் எண்டிலே மட்டும் வந்துகிட்டு இருந்தேன். அதுக்குள்ள என் பிள்ளையை எனக்கு

எதிரா திருப்பிட்டாள்.'' என்று போலியாய் அலுத்துக் கொண்டவன்,

''இதுக்கு உனக்கு தண்டனை குடுத்தே ஆவேன் அம்லு.'' என்றான்.

''என்ன தண்டனை?'' என்று அவள் தெனாவட்டாய் கேட்க,

டேவிட் தனது பெற்றோர்கள் பக்கம் பார்த்தான். மகன் ஏதோ வில்லங்கமாக சொல்லப் போகிறான் என்பதை புரிந்து கொண்ட ராதாகிருஷ்ணன்,

''வா கோமளா... நாம கிளம்பலாம். அவங்க பேசட்டும்.'' என்று தன் மனைவியையும் பேரனையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து சென்றார்.

''தாங்க்ஸ்பா!'' என்று டேவிட் அவருக்கு நன்றி உரைத்து விட்டு,

''தண்டனை என்னன்னா... எனக்கு ஒரு பொண்ணை பெத்துக் குடு. அவளை என் கூட்டணியில் இணைச்சுக்கிறேன்.'' என்று மனைவியை பார்த்துக் கண்சிமிட்டினான்.

''உன் கூடப் பிறந்தவர் தானே சஞ்சய். அவர் இன்னும் முதல் ரிலீஸே பண்ணலை. ஐயா அதுக்குள்ள அடுத்த ரிலீஸ்க்கு ரெடி ஆகிட்டாரு.'' என்று மஞ்சரி நக்கல் பண்ணினாள்.

''அவனை மாதிரியெல்லாம் என்னால ஸ்லோவா இருக்க முடியாது அம்லு.'' என்று கூறி மனைவியின் முறைப்பை மட்டும் அல்ல தம்பியின் முறைப்பையும் சேர்த்தே பெற்றுக் கொண்டான்.



சஞ்சய் தீவிரமாக எதையோ யோசிக்க...

''என்னத்தைடா யோசிக்கிறே?'' என்று டேவிட் கேட்டான்.

''இல்ல... உனக்கு காலேஜிலே சஞ்சய் ராமசாமின்னு பேர் வச்சதுக்கு பதிலா வேற பேர் வச்சிருக்கலாமேன்னு யோசிச்சுப் பார்த்தேன்.''

''வேற பேரா? என்ன பேர்டா?''

''நீ கொஞ்சம் மென்ட்டலா அலைஞ்சிருந்தா உன்னை சேது விக்ரம்னு நினைச்சு உனக்கு சேதுன்னு பேர் வச்சிருப்பாங்க இல்ல.''

''ஏன்டா உனக்கு இந்த காண்டு? நான் மொட்டை போட்டு உடல் மெலிஞ்சு... எதுக்குடா இந்த கொலை வெறி? என் பெர்சனாலிட்டியை எதுக்குடா நாசம் பண்ணனும்னு நினைக்கிறே?''

''பெர்சனாலிட்டியா? நீயா?'' என்று சஞ்சய் கிண்டலாக வினவவும்,

''ஓய்!'' என்ற சப்தம் இருவரிடம் இருந்து கிளம்பியது.

அந்த இருவர் மஞ்சரியும் சாருமதியும்.

சஞ்சய் தன் மனைவியிடம் திரும்பி, ''அண்ணி சப்தம் போட்டதில் ஒரு அர்த்தம் இருக்கு. நீ எதுக்கு சப்தம் போட்டே?'' என்று கேட்டான்.

''மாமா பெர்சனாலிட்டி இல்லாத ஆள் என்று நீங்க சொன்னா... அவரை மாதிரியே இருக்கிற நீங்களும் பெர்சனாலிட்டி இல்லாத ஆள் என்று தானே அர்த்தம்

ஆகும்? என் ஹஸ்பண்டை யாராச்சும் குறை சொன்னா நான் எப்படி சும்மா இருப்பேன்?''

''இதுல இப்படி ஒரு பாயிண்ட் இருக்கா? இது தான் செல்ஃப் ஆப்பா?'' என்று சஞ்சய் புலம்ப,

''எதுக்குடா திடீர்ன்னு என் பேரை மாத்த நினைக்கிறே?'' என்று டேவிட் கேட்டான்.

''ம்ம்ம் அந்தப் பேரால நான் பட்ட அவஸ்தை கொஞ்ச நஞ்சமாடா?'' என்று சஞ்சய் இப்பொழுதும் அதை நினைத்து மிரள,

''சாரிடா சஞ்சய்!'' என்று டேவிட் மன்னிப்பு கேட்டான்.

''உன் சாரியை நீயே வச்சுக்கோ. மரியாதையா உன் பேரை உன் பிள்ளைக்கு ஒழுங்கா சொல்லிக் குடு!'' என்றான்.

''அதுக்கு மாமா எதுக்குங்க? நானே போதும். உங்களை டாடின்னு கூப்பிட்டுக்கிட்டு இருந்தவனை ஒரே செகன்டிலே சாருப்பான்னு கூப்பிட வச்சேனா இல்லையா?'' என்று சாருமதி பெருமை பீற்ற,

''அப்படி கூப்பிட்டா தான் அவன் கேட்டதெல் லாம் நான் வாங்கித் தருவேன்னு சிம்பிளா ஒரு விஷயத்தை சொல்லிட்டு நீ போயிட்ட... அவனுக்கு நான் எவ்வளவு செலவு பண்ணினேன் தெரியுமா?'' என்று சஞ்சய் எகிற,

''அண்ணன் புள்ளைக்காக இது கூடப் பண ணலைன்னா அப்புறம் நீங்க என்ன சித்தப்பா?'' என்று மஞ்சரி பதிலுக்கு எகிறினாள்.



சரியாக கெவின் அந்த நேரம் அவர்கள் அருகே வந்து, ''சாருப்பா! எனக்கு ஒரு டாய் வேணும். வாங்கித் தாங்க.'' என்று கேட்டான்.

''அதெல்லாம் வாங்கித் தர முடியாது. போடா!'' என்று சஞ்சய் கூறவும்,

''அப்ப டாடின்னு கூப்பிடுவேன்.'' என்று கெவின் மிரட்ட..

''கூப்பிடு. தாராளமாக கூப்பிடு.'' என்று சஞ்சய் தன் தோள்களை குலுக்கிக் கொண்டு கூற,

கெவின், ''டாடி! டாடி! டாடி!'' என்று மூன்று முறை அழைக்க,

அவனை இழுத்து அணைத்து அவனது கன்னத்தில் முத்தம் ஒன்றை பதித்த சஞ்சய், ''இனிமே டாடின்னு கூப்பிடாதே. டேவிட் தான் உனக்கு டாடி. என்னை அப்பான்னு கூப்பிடு.'' என்றவாறே அவனை தூக்கிக் கொண்டு அங்கிருந்து வெளியேறினான்.

செல்லும் அவர்களை மூவரும் முகம் கொள்ளாப் புன்னகையோடு பார்த்துக் கொண்டு இருந்தனர். சாருமதியின் கண்கள் ஆனந்தத்தால் நிறைந்தது.

''என்னாச்சு சாரு? இப்ப எதுக்கு கண்ணீர் விடுற?''

''இல்லக்கா ஆனந்தக் கண்ணீர் தான். கெவின் இந்த வீட்டுக்குள்ள நுழைஞ்சப்ப... அவனால விளைஞ்ச குழப்பங்களால் எங்க யாராலையும்

அவனை பாசமா கொஞ்ச முடியலை. அதே சமயம் நாங்க யாரும் அவனை வெறுக்கவும் இல்லை.

"அவன் ஒவ்வொரு தடவையும் அவரை டாடின்னு கூப்பிடறப்ப எல்லாம் அவர் முகம் அப்படி வாடும். ஆனா இன்னைக்கு அவரே என்னை டாடின்னு கூப்பிடுன்னு கேட்டு வாங்கி ஆசையா கொஞ்சிட்டு போறதை பார்க்கிறப்போ மனசு நிறைஞ்சு போச்சுக்கா. அந்த சந்தோஷம் தான் என் கண்ணுல தண்ணியா வருது." என்றதும், மஞ்சரி தன் தங்கையை அணைத்துக் கொண்டாள்.

"யாருமே இல்லாம தனியா சில வருஷத்தை கடத்தினோம் சாரு. இப்ப எங்களுக்குன்னு நீங்க இத்தனை பேர் இருக்கிறதை நினைச்சா எனக்கும் ரொம்ப சந்தோஷமா இருக்கு." என்று மஞ்சரி கூற,

"உங்க அப்பா அம்மாவும் எங்களை ஏத்துக்கிட்டா எங்க சந்தோஷம் முழுமை அடையும்." என்று கூறி டேவிட் பெருமூச்சு விட்டான்.

"கண்டிப்பா ஏத்துக்குவாங்க மாமா. நீங்க கவலைப் படாதீங்க." என்று சாருமதி உறுதி அளித்தாள்.



## 23

ஆன்மீகச் சுற்றுலாவுக்குச் சென்று இருந்த சாருமதியின் பெற்றோர் தன் மகளைக் காண வந்து இருந்தார்கள்.



அவர்கள் உள்ளே நுழையவும்... கெவின் ஓடிச் சென்று அவர்களது கால்களை கட்டிக் கொண்டு, "பாட்டி! தாத்தா!" என்று கூவினான்.

"டேய்! இதை நீ அன்னைக்கே செஞ்சிருந்தா நான் ஈஸியா கண்டுபிடிச்சு இருப்பேன்." என்று சாருமதி அலுத்துக் கொண்டாள்.

தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த இளைய மகளிடம் பரந்தாமன், "யாரு குட்டிம்மா இது? நம்ம மாப்பிள்ளை ஜாடையில இருக்கான்." என்று கேட்டார்.

"அவரோட அண்ணன் பையன்."

"என்னது மாப்பிள்ளையோட அண்ணன் பையனா?" என்று பரந்தாமனும்,

"அவருக்கு ஏதும்மா அண்ணன்?" என்று ஈஸ்வரியும் ஒருங்கே கேட்டனர்.

"இப்ப தான்பா கண்டு பிடிச்சிருக்கோம். அவரும் அவர் அண்ணன் டேவிட்டும் ரெட்டை பிள்ளைங்கன்னு. இவனோட அப்பா அண்ணனா இல்ல தம்பியான்னு தெரியலை. ஆனா இந்த குட்டி சார் முதல்ல பிறந்துவிட்டதால நான் அவரை அண்ணன்னு சொல்லுறேன்." என்று சாருமதி விளக்கியும் அவர்கள் ஒன்றும் புரியாது விழித்தனர்.

மஞ்சரி வெளியே வராமல் அறைக்குள்ளேயே அமர்ந்து கொண்டாள். டேவிட் மட்டும் வெளியே வந்து தன் மாமனார் மாமியாரை பார்த்து வணங்கினான். அவன் பின்னோடு சஞ்சயும் வந்தான்.

''அச்சு அசலா என் மாப்பிள்ளை போலவே இருக்கீங்க தம்பி!'' என்று பரந்தாமன் வியக்க,

''நானும் உங்க மாப்பிள்ளை தான்னு சொல்லுடா டேவி.'' என்று சஞ்சய் அவனது காதில் முணுமுணுத்தான்.

அவன் டேவிட்டை டேவி என்று செல்லமாகச் சுருக்கி அழைக்க ஆரம்பித்து இருந்தான்.

''டேய் சஞ்சய்! இப்ப மட்டும் நான் அதை சொன்னேன்... அவங்க இந்த வீட்டுப் பக்கமே தலை வச்சு படுக்க மாட்டாங்க.'' என்று டேவிட் பதிலுக்கு முணுமுணுத்தான்.

கெவின் பரந்தாமன் மடியினில் ஏறி அமர்ந்து கொண்டு, ''தாத்தா, நீங்க பிக் மேன் ஆகிட்டீங்க தானே?'' என்று சந்தேகம் கேட்டான்.

அவனது அழகிய பேச்சில் கவரப்பட்ட பரந்தாமன், ''ஆமாடா. நான் ரொம்ப பெரிய பிக் மேன்.'' என்றார்.

''அப்ப ஏன் நீங்க மீசை வச்சுக்கலை? என்னை மாதிரி பாய்க்கு தான் மீசை இருக்காது.''

''புடிச்சான்டா பாயிண்டை. அவன் யாரு பையன்?'' என்று டேவிட் மெல்லிய குரலில் தன் மகனின் பெருமை பேச,

''டேவி! ஒரு வேளை மாமியார்க்கு கஷ்டமா இருக்கும்னு தான் நம்ம மாமனார் மீசை வச்சுக்கலையோ?'' என்று சஞ்சய் முணுமுணுத்தான்.



''டேய்! நீ ஏற்கனவே மாப்பிள்ளைன்னு ஃபார்ம் ஆகிட்ட. அதனால என்ன வேணா ஜோக் அடிப்பே! ஆனா தம்பி... நான் இனிமே தான் உள்ள நுழையணும். நீ நடுவில புகுந்து கும்மி அடிச்சுட்டுப் போயிடாதே. கொஞ்சம் அடக்கி வாசி.''

''அடப் போடா டேவி! உனக்கான என்ட்ரி கார்டை உன் பையன் வாங்கித் தருவான்.''

''அப்படிங்கிற?''

''கண்டிப்பா. யூ ஜஸ்ட் வெயிட் அன்ட் வாட்ச்.'' என்று அவர்கள் இருவரும் மெல்லிய குரலில் பேசிக் கொண்டு இருந்தனர்.

கெவின் கேட்ட கேள்விக்கு பரந்தாமன் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு இருந்தார்.

''கெவின் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க தாத்தா.'' என்று அவன் மீண்டும் வலியுறுத்த,

''பதில் சொல்லுங்கப்பா. உங்க பேரன் கேட்கிறான் இல்ல.'' என்று சாருமதி கூறினாள்.

விழித்துக் கொண்டிருந்த தந்தையை காக்கும் பொருட்டு சாருமதியே பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

''தாத்தாவுக்கு ஜெயம் ரவின்னு நினைப்புடா கெவின்.''

''அப்படின்னா?'' என்று கெவின் புரியாது விழித்தான்.

''அவனுக்கு ஹீரோ பேரெல்லாம் தெரியாது மதி.'' என்று டேவிட் எடுத்துக் கொடுத்தான்.

''புள்ளையா மாமா வளர்த்து இருக்கீங்க.'' என்று சாருமதி தன் அக்காவின் கணவனை கிண்டல் பண்ணினாள்.

தன் கணவனுடன் பிறந்தவரை சாருமதி 'மாமா' என்று அழைக்கிறாள் என்று பரந்தாமன் தன் மனதில் நினைத்துக் கொண்டார்.

''நான் முழுசா சொல்லும் முன்னாடி நீ வார்த்தையை விடக் கூடாது மதி. கெவினுக்கு தமிழ் படம் தான் தெரியாது. ஹிந்தி படமெல்லாம் அத்துப்படி.''

''ஓ! அப்படியா மாமா?'' என்றவள் கெவினிடம் திரும்பி,

''தாத்தாக்கு ரன்பீர் கபூர் மாதிரி இருக்கணும்னு ஆசையாம் கெவின். அதான்!'' என்று அவனுக்கு புரியும்படியாக ஒரு இளம் ஹிந்தி கதாநாயகனின் பெயரைக் கூறினாள்.

''ரன்பீர் கபூர்? நோ! நோ! தாத்தா இஸ் தேவ் ஆனந்த்.'' என்று கெவின் வேகமாகக் கூற,

''நீங்க யூத் இல்லை. பழைய டெலிபோன் பூத்துன்னு சொல்லுறான்டா உன் பையன்.'' என்று சினிமா பட டயலாக்கை சஞ்சய் மெல்லிய குரலில் எடுத்து விட,

''நீ இப்ப உன் வாயை மூடலை நான் உன் வாயை தைக்க வேண்டி இருக்கும். ஜாக்கிரதை!'' என்று டேவிட் மிரட்டினான்.



பரந்தாமனோ தன் பேரனிடம், ''ஏன்டா கெவின் உன்னால என்னை ரன்பீர் கபூர்னு ஒத்துக்க முடியலைன்னா அவங்க அப்பா ரிஷி கபூர்னாச்சும் சொல்லலாம் இல்ல. எதுக்குடா ஒரேடியா ரொம்ப பழைய கால ஹீரோ பேரை சொல்லுற?'' என்று அழுகுரலில் கேட்க,

சாருமதியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

அவள் சிரிப்பதை பார்த்து அவள் தாய் மகளை அடக்க நினைக்க, அதற்குள் அந்த வேலையை கெவின் செய்து முடித்தான்.

தாத்தாவின் மடியில் இருந்து இறங்கி ஓடி வந்து தன் சித்தியின் முன் நின்றவன், ''சாரும்மா! இப்படி சிரிக்கக் கூடாது. பாப்பாக்கு வலிக்கும்னு பாட்டி சொன்னாங்க இல்ல.'' என்று ஒரு விரல் நீட்டி எச்சரித்தவன், அவளது வயிற்றை தடவிக் கொடுத்து அவளது வயிற்றில் ஒரு முத்தம் பதித்தான்.

சஞ்சயை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே சாருமதி, ''மாமா! இங்க கருகின ஸ்மெல் வருதே! உங்களுக்கு வருதா?'' என்று கேட்டாள்.

''என் பக்கத்தில் ஒரு பால் குக்கர் இருக்கு மதி. அது அப்போதிலே இருந்து பொங்கிக்கிட்டே இருந்துச்சு. நான் தான் அதை மிரட்டி பொங்கவிடாமல் பார்த்துக்கிட்டு இருந்தேன். இப்போ என் மகன் பண்ணின காரியத்தால அது தீஞ்சு போக ஆரம்பிச்சிருக்கு. அந்த ஸ்மெல் தான் உனக்கும் வந்திருக்கும்''

என்று அவனும் சாருமதியுடன் சேர்ந்து தம்பியை ஓட்டினான்.

''டேய் அண்ணா! உன் மச்சினிச்சியோட கூட்டு சேர்ந்து என்னை ஓட்டிட்டதா பெருமை பட்டுக்காதே. என் மாப்பிள்ளையவாடா ஓட்டுறே அப்படின்னு என் மாமனாரும் மாமியாரும் உன் மேல செம காண்டிலே இருக்காங்க. கொஞ்சம் அப்படிச் சூடு நைனா!'' என்று சஞ்சய் மெல்லிய குரலில் கிண்டல் பண்ண,

அவர்கள் புறம் திரும்பி பார்த்த டேவிட், ''ஆமாடா! என்னை முறைக்கிறாங்க.'' என்று பரிதாபமாகச் சொன்னான்.

''மாமனார் வீட்டுக்குள்ள நுழைய என்ட்ரி கார்டு வேணும்னு சொல்லிக்கிட்டு எக்ஸிட் கார்டு வாங்கிற வேலையை நல்லா பார்க்கிறியே டேவி! உச். உச்'' என்று சஞ்சய் தன் அண்ணனைப் பார்த்து பரிதாபப் பட்டான்.

அப்போது டேவிட்டின் கைப்பேசி கிணுகிணுத்தது.

''அண்ணியான்னு பாரு.'' என்று சஞ்சய் கூற, தன் கைப்பேசியை எடுத்துப் பார்த்த டேவிட், ''ஆமாடா! எப்படிடா கரெக்ட்டா சொன்ன?'' என்று கேட்டான்.

''ம்ம்ம் வெத்தலையில மை போட்டு பார்த்து... போடா டேய்! நீ மச்சினிச்சி கூட கூட்டணி வச்சே... எங்க அண்ணி கொழுந்தன் கூட கூட்டணி வச்சுக்க போறாங்க. போ. ரூமுக்குள்ள போய் அண்ணி தரப் போகும் தர்ம அடியை சத்தமே இல்லாமல்



வாங்கிக்கிட்டு சிரிச்ச முகமா திரும்பி வா!'' என்று கூற,

டேவிட் அங்கிருந்து எழுந்து மஞ்சரி இருந்த அறைக்குள் நுழைந்தான்.

தன் மகள் மேல் கொண்ட அக்கறையால் தான் செய்ய நினைத்ததை கெவின் செய்யவும் ஈஸ்வரிக்கு கெவினை ரொம்ப பிடித்து விட்டது.

''இங்க வா கெவின்.'' என்று அழைத்து அவனை தன் மடி மீது அமர்த்திக் கொண்டார்.

அவரது முகத்தை அருகில் இருந்து பார்க்கும் போது கெவினுக்கு அவரது முகம் தன் தாயின் சாயலை கொண்டு இருப்பதாகத் தோன்றியது.

அதனால் கெவின் தன் பாட்டியிடம், ''நீங்க அப்படியே என் அம்மா மாதிரி இருக்கீங்க பாட்டி.'' என்றான்.

பரந்தாமனால் தன் மனைவிக்கு கிடைத்த இந்த பாராட்டை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

''ஏன்டா நான் மட்டும் 1950களில் வந்த ஹீரோ மாதிரி இருக்கேன். ஆனா உன் பாட்டி மட்டும் உங்க அம்மா போல இருக்காளா?''

''யெஸ். பாட்டி எங்க மம்மி போல தான் இருக் காங்க.'' என்று அவன் மீண்டும் அழுத்தமாகக் கூறினான்.

''இது உனக்கே கொஞ்சம் ஓவரா இல்ல? என் தலையை பாரு. ஒரு முடி கூட நரைக்கலை. ஆனா

உன் பாட்டி தலையை பாரு.'' என்று பரந்தாமன் சிறுவனிடம் சரிக்கு சமமாக வாதாடினார்.

''நீங்க டை அடிச்சிருக்கீங்க.'' என்று கெவின் கூறவும் ஈஸ்வரிக்குப் பெருமை புரிபடவில்லை.

''இனிமே எனக்கு நரைக்கலை. உனக்கு தான் நரைச்சிருக்குன்னு சொல்லுவீங்க?'' என்று தன் கணவரை அவர் போலியாக மிரட்டினார்.

அப்போது டேவிட் மீண்டும் தன் தம்பி அருகே வந்து அமர்ந்தான்.

''என்னடா சேதாரம் பலமா?'' என்று சஞ்சய் அவன் காதில் கிசுகிசுக்க,

''கொஞ்ச நேரம் கழிச்சு உன் ரூமுக்கு போன உடனே மதியால உனக்கு ஏற்படப் போற சேதாரத்தை விட கம்மி தான்.'' என்றான் டேவிட்.

''அப்படியா சொல்லுறே?'' என்று சஞ்சய் போலி யாய் நடுங்க,

''வொய் ப்ளட்? சேம் ப்ளட் தம்பி.'' என்று டேவிட் நக்கல் செய்தான்.

ஈஸ்வரியின் தொப்பை விழுந்த வயிற்றை பார்த்த கெவின், ''சாரும்மாவுக்கு, இருக்கிற மாதிரி உங்க வயித்துக்குள்ளேயும் பாப்பா இருக்கா பாட்டி?'' என்று கேட்டான்.

''ஹேய்! இது நல்லா இருக்கில்லடா டேவிட்! அப்போ நம்ம அம்மா அப்பாவையும் மூணாவதா ஒரு



பையனை பெத்துக்க சொல்லுவோமா?'' என்று சஞ்சய் கேட்கவும், டேவிட் அவனை முறைத்தான்.

''இல்லடா எல்லோரும் ஒரே குடும்பமா இருக்க லாமே என்ற நல்லெண்ணத்திலே சொன்னேன்.'' என்று கிசுகிசுத்தான்.

பரந்தாமனோ தன் மனைவியிடம், ''அவன் கூட சேர்ந்து என்னை நக்கல் பண்ணின இல்ல... இப்ப உன்னையும் கீழ தள்ளிட்டானில்ல...'' என்றார்.

சாருமதி தன் கணவனை பார்த்து முறைத்தாள். என்ன என்று சஞ்சய் தன் கண்ணாலே ஜாடையாகக் கேட்க...

'எங்க அம்மா அப்பாகிட்ட மாமா பத்தி பேசுங்க!' என்று அவள் ஜாடை காட்டவும், சரி எனத் தலை யாட்டிய சஞ்சய் தன் மாமனாரிடம் பேசத் தயா ரானான்.



# 24

டேவிட் பற்றி தன் மாமனாரிடம் நல்லவிதமாக எடுத்துக் கூற விரும்பிய சஞ்சய் தன் மாமனாரிடம் பேச ஆரம்பித்தான்.

''மாமா! இது என் அண்ணன் டேவிட். நாங்க ரெண்டு பேரும் பிறந்த அன்னைக்கே ஹாஸ்பிட் டலில் பிரிஞ்சு போயிட்டோம். அவனை ஒரு

கிறிஸ்டியன் பேமிலி வளர்த்திருக்காங்க. பிறப்பால ஹிந்துவா இருந்தாலும் அவன் ஒரு கிறிஸ்டியனா வளர்ந்து நிற்கிறான். இவன் வந்த உடனே எங்க அம்மா எங்க வீட்டிலே ஒரு ஜீசஸ் படத்தை கொண்டு வந்து வச்சு எம்மதமும் சம்மதம்னு சொல்ல ஆரம்பிச் சுட்டாங்க.''

'இதை எதுக்கு மாப்பிள்ளை என்கிட்ட சொல்லு றார்?' என்று பரந்தாமன் விழித்துக் கொண்டு இருந் தார்.

''இவனுக்கும் எனக்கும் உருவத்திலே மட்டுமில்ல மாமா... குணத்திலே, சுவையிலே இப்படி எல்லாம் ஒத்துப் போகுது. உங்களுக்கு என்னைத் தெரியும். நானும் அவனும் வேற வேற இல்ல....''

''நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு எனக்குப் புரியலை மாப்பிள்ளை.''

''இல்ல மாமா... எங்க அண்ணி வீட்டிலே இவனை ஏத்துக்கலை. அதான் இவன் சார்பா பேசுறதுக்கு நானும் எங்க அப்பாவும் போகப் போறோம். உங்களை யும் துணைக்குக் கூப்பிடலாம்னு...'' என்று சஞ்சய் இழுத்தான்.

''அதுக்கென்ன மாப்பிள்ளை. தாராளமா வரேன். இப்படி ஒரு நல்ல பிள்ளையை மாப்பிள்ளையா ஏத்துக்க கசக்குதா உங்களுக்குன்னு கேட்கிறேன். கெவினை மாதிரி ஒரு பேரன் கிடைக்க நீங்க குடுத்து வச்சிருக்க வேண்டாமான்னு கேட்கிறேன்,'' என்று பரந்தாமன் வாக்கு கொடுத்ததும்,



''டேவி! அண்ணியை வரச் சொல்லு.'' என்று சஞ்சய் டேவிட்டின் காதில் கிசுகிசுத்தான்.

''அம்லு! இங்க வா.'' என்று டேவிட் உள்ளறையை நோக்கி குரல் கொடுத்தான்.

மஞ்சரி தயங்கியவாறு வெளியே வரவும் பரந்தாமன் அதிர்ந்தார்.

ஈஸ்வரியோ, ''நான் நினைச்சேன்.'' என்றார்.

''இந்த லேடீஸ் மட்டும் எப்படிடா டேவி புத்தி சாலியா இருக்காங்க?'' என்ற டேவிட்டின் காதில் சஞ்சய் முணுமுணுக்க... தமையனை திரும்பி டேவிட் முறைக்கவும் சஞ்சய் அமைதியானான்.

பெரியவர்கள் பேசும் போது கெவின் அங்கே இருக்க வேண்டாம் என நினைத்த சாருமதி அவனை தன் மாமனாரின் அறைக்குள் கொண்டு போய் விட்டு வந்தாள்.

''என்னை மன்னிச்சிடுங்கப்பா.'' என்று மஞ்சரி தன் தந்தையிடம் மன்னிப்பு கேட்க,

''நீ செஞ்ச தப்பு மன்னிக்க கூடியதுன்னு நினைக் கிறியா?'' என்று ஈஸ்வரி இடைபுகுந்தார்.

''டேவிட் ரொம்ப நல்லவன்மா.''

''இருந்துட்டுப் போகட்டும். அதுக்கு நாங்க என்ன செய்ய முடியும்?''

''அவனை நான் ரொம்ப லவ் பண்ணேன்.''

''அதை எப்ப வந்து எங்ககிட்ட சொல்லுறே? ஒரு புள்ளையை பெத்து அதை ஸ்கூலுக்கு அனுப்பும் போதா?''

''அவன் வேற மதம் என்பதால் நீங்க ஒத்துக்க மாட்டீங்கன்னு நினைச்சேன்.''

''நாங்க உன்கிட்ட அப்படிச் சொன்னோமா? நீயா எப்படி அப்படி ஒரு முடிவுக்கு வந்தே?'' என்று பரந்தாமன் கேட்டார்.

''உங்க ஃப்ரண்டு பொண்ணு வேற மதத்தை சேர்ந்த பையனை லவ் பண்ணினதை அவர் எதிர்த்த போது அதை கரெக்ட்னு சொன்னீங்க தானேப்பா. அதான் நீங்க ஒத்துக்க மாட்டீங்கன்னு...''

''நான் ஒத்துக்க மாட்டேன்னு நினைச்சு என்கிட்ட சொல்லவே வேண்டாம்னு நீ முடிவு பண்ணிட்ட. அப்படித் தானே?''

''நான் கேட்டு நீங்க மறுத்துட்டா.... அதுக்கு அப்புறம் உங்களை மீறும் துணிவு எனக்கு வராதுன்னு தான் சொல்லாமலே போயிட்டேன்.''

''நல்லா இருக்கும்மா உன் நியாயம். எங்க பேச்சை மீறக் கூடாதுன்னு நினைக்கிற அளவுக்கு எங்க மேல மரியாதை வச்சிருக்கிறவ... எங்களைத் தலை குனிய மட்டும் வைக்கலாமா?'' என்று படுநக்கலாக பரந்தாமன் கேட்க, பதில் சொல்ல முடியாமல் மஞ்சரி தலை கவிழ்ந்தாள்.

பெற்றோருக்கும் பெண்ணிற்கும் இடையில் இருக்கின்ற மனக்கசப்பு நீங்க வேண்டும் என்றால் மனதில் இருப்பதெல்லாம் வெளியே வரட்டும் என்று நினைத்த ராதாகிருஷ்ணனும் கோமளமும் தங்களது அறைக்குள்ளேயே அமர்ந்து இருந்தனர்.



''உயிரா காதலிச்சவ என்ன செஞ்சிருக்கணும்? இவரை தான் கல்யாணம் பண்ணுவேன். அதுவும் உங்க சம்மதத்தோட தான் கல்யாணம் பண்ணுவேன்னு எங்க கூட நீ போராடி இருக்க வேண்டாமா?'' என்று ஈஸ்வரி கேட்டார்.

''இல்லம்மா... டேவிட் அம்மா இறந்துட்டதால அவர் தனியா இருந்தார். அதான் அவசரமா கல்யாணம் பண்ணிக்க வேண்டியதா போச்சு.''

''சில வருஷங்களா பழக்கமான உன் காதலன் தனியா இருக்கக் கூடாதுன்னு நினைச்சு... உன்னைப் பல வருஷமா தூக்கி வளர்த்தவங்களை தனியா விட்டுட்டு போயிட்டே! அதாவது உன்னோட சில வருஷ காதலுக்காக அம்மா அப்பாவோட பாசத்தை தூக்கி எறிஞ்சிருக்க.''

டேவிட் குனிந்த தலை நிமிராமல் அமைதியாக இருந்தான்.

''நீ ஏன் டேவிட் தலை குனிஞ்சு நிக்கிற? எங்க அம்மா அப்பா சம்மதம் கேட்காமல் கல்யாணம் பண்ணிக்கலாம்னு நான் தானே உன்னை கம்பெல் பண்ணினேன். இன்னைக்கு இவங்க கேட்கிற எல்லாக் கேள்வியையும் அன்னைக்கு நீ என்னைப் பார்த்து கேட்ட தானே?'' என்று மஞ்சரி தன் கணவனிடம் கேட்க,

''கேட்டு என்ன பிரயோஜனம்? நீ உன் பிடிவாதத்தை விட்டுக் குடுக்கலையே.'' என்று டேவிட் புலம்பினான்.

''உன்னை என்னால எந்தக் காரணத்துக்காகவும் இழக்க முடியாதுன்னு தோணுச்சு டேவிட்.''

டேவிட் அமைதி காத்தான்.

''நீயும் சஞ்சயும் எல்லா விதத்திலும் ஒரே மாதிரி தானே இருக்கீங்க. சஞ்சயை சாருவுக்கு எங்க அப்பா தானே மாப்பிள்ளையா தேர்ந்தெடுத்தார். அப்ப உன்னையும் தன்னோட பெரிய மாப்பிள்ளையா அவர் ஏத்துக்கிறதுல என்ன பிரச்சனை?'' என்று மஞ்சரி வாதாட,

''அதுக்கான சான்ஸை நீ குடுக்கவே இல்லைன்னு தானே உன்னை குத்தம் சொல்லுறாங்க.'' என்று டேவிட் கூறினான்.

மஞ்சரி தனது கண்களை மூடி சில நொடிகள் அமைதியாக இருந்தாள். தன் கண்களை திறந்தவள் தன் தங்கையை இழுத்துக் கொண்டு பரந்தாமனின் முன் சென்று நின்றாள்.

''உங்களுக்கு நான் வேண்டாத பொண்ணா இருந்துட்டுப் போறேன். இவ உங்களோட செல்லப் பொண்ணு தானே?'' என்று கேட்டவள் தந்தையின் கையை எடுத்து சாருமதியின் தலையில் வைத்தாள்.

''சாரு தலையில கை வச்சு சத்தியம் பண்ணி சொல்லுங்கப்பா. அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி நான் உங்ககிட்ட வந்து, டேவிட் என்ற கிறிஸ்டியன் பையனை நான் காதலிக்கிறேன்னு சொல்லி இருந்தா நீங்க ஒத்துக்கிட்டு இருந்திருப்பீங்களா?''



பரந்தாமன் அமைதியாக மகள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தார்.

''என்னை வீட்டிலே பூட்டி வச்சு.. நீ அந்தப் பையனை மறக்கலைன்னா நானும் அம்மாவும் தற்கொலை பண்ணிக்குவோம்னு மிரட்டி என்னை பணிய வச்சு... என் மனசை மாத்தி.... இப்படி தானே செஞ்சு இருப்பீங்க?'' என்று கேட்டாள்.

மஞ்சரி சொல்வது உண்மை என்பதால் பரந்தாமன் தன் இளைய மகளின் தலையில் இருந்து தனது கையை எடுத்தார்.

''என்னால என் அப்பா அம்மாவுக்கு சில காலம் கழிச்சாவது என் நிலையைப் புரிய வச்சிருக்க முடியும்பா. ஏன்னா நீங்க என்னைப் பெத்தவங்க. நமக்குள் ரத்த சம்பந்தம் இருக்கு. ஆனா ஒரு வேளை நீங்க கை காட்டின வேற ஒருத்தனை நான் கல்யாணம் பண்ணி இருந்து அவனுக்கு என் லவ் மேட்டர் தெரிய வந்திருந்தா... அவன் என்னைச் சந்தேகப்பட்டுக் கேட்கிற கேள்விகளுக்கு எவ்வளவு வருஷம் ஆனாலும் அவனுக்குப் புரிய வச்சிருக்க என்னால முடியாதுப்பா.

''அவன் நல்லவனா இருந்தால்... நான் சொல்ல வருவதை புரிஞ்சுக்கலாம். ஆனா இதெல்லாம் என்னால டேவிட்டை மறக்க முடிஞ்சால் தான் நடந்திருக்கும். என்னால என் டேவிட் இடத்திலே வேற யாரையும் வச்சுப் பார்க்கக் கூட முடியாதுப்பா. என்னால என்

டேவிட்டை எதுக்காகவும் விட்டு விலக முடியா துப்பா.''

ஒருவரும் குறுக்கே பேசவில்லை. அங்கே நிலவிய அமைதியை மஞ்சரியே கலைத்தாள்.

''நான் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடிப் போனதால நீங்க பல பேர் முன்னாடி தலை குனிய வேண்டி இருந்திருக்கும். என்னால அதைப் புரிஞ்சுக்க முடியுது.

''ஆனா என் மனசிலே காதல் வந்தப்போ அதெல் லாம் என் கண் முன்னாடி தெரியலையேப்பா. டேவிட் நல்லவனா இல்லையான்னு மட்டும் தான் பார்க்க ணும்னு தோணுச்சு.

''அவனை லவ் பண்ணினா பெத்தவங்க என்ன சொல்லுவாங்கன்னு நான் யோசிக்கலை. காதல்... என் காதல் சுயநலமானது தான்பா. நான் ஒத்துக்கிறேன். உங்களை நோகடிச்சுட்டு போனது தப்பு தான்.

''ஆனா இப்பவும் சொல்லுறேன் என் டேவிட்டை செலக்ட் பண்ணின விஷயத்திலே நான் தப்புப் பண்ணலை.'' என்று ஆணித்தரமாய் கூறினாள்.

''இந்த ஜென்மத்திலே மட்டும் இல்ல.. இனி வரும் ஜென்மத்திலே கூட டேவிட் இதே குணங்களோட பிறந்தான்னா... நாங்க வேற வேற மதத்தை சார்ந்த வங்களா இருந்தாலும்... அத்தனை ஜென்மத்திலும் யாரைப் பத்தியும் கண்டுக்காமல் நான் அவனை தான் கல்யாணம் பண்ணுவேன்.'' என்று அழுத்தம் திருத்தமாய் கூறினாள்.



மஞ்சரியின் பேச்சை கேட்ட சஞ்சய்க்கு ஆச்சரிய மாக இருந்தது. 'என்ன மாதிரியான காதல் இது!' என்று அதிசயித்தான்.

சஞ்சய் பரந்தாமனிடம் பேச ஆரம்பித்தான்.

''நீங்க ஊருக்குப் போன போது இங்க என்ன பிரச்சனை நடந்துச்சு தெரியுமா?'' என்று கேட்டவன் நடந்தவற்றை விளக்கினான்.

அவர்கள் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போய் நின்றனர்.

''உங்க பொண்ணு சாரு என் மேல அசைக்க முடியாத நம்பிக்கை வச்சா... அவ மட்டும் என்னை நம்பலைன்னா நான் இன்னைக்கு இப்படி நின் னிருக்க மாட்டேன் மாமா. அப்படி ஒரு வைஃப் கிடைக்க நான் எத்தனை ஜென்மத்திலே எவ்வளவு புண்ணியம் பண்ணினேனோ தெரியலை.

''அடுத்தது அண்ணி... அவங்க டேவிட் மேல எவ்வளவு அன்பு வச்சிருக்காங்க! அவங்க கிடைக் கிறதுக்கு டேவிட் ரொம்ப குடுத்து வச்சிருக்கணும். நீங்க உங்க ரெண்டு பொண்ணுங்களையும் நினைச்சு பெருமைப்படணும் மாமா.'' என்று அவர் தலையில் பெரிய ஐஸ் கட்டியை தூக்கி வைத்தவன் மேலும் பேச ஆரம்பித்தான்.

''அண்ணி உங்ககிட்ட சொல்லாமல் கல்யாணம் பண்ணினது தப்பு தான். ஆனா அவங்க அந்தத் தப்பை ஏன் செஞ்சாங்க? உங்களை பத்தி நல்லா

புரிஞ்சு வச்சிருக்கிறதால... நீங்களே ஒத்துக்கிட்டீங்க. அவங்களோட லவ்வை ஒத்துக்கிட்டு இருந்திருக்க மாட்டேன்னு. அப்புறம் அவங்க என்ன செய்வாங்க?''

''அப்படின்னா அவ செஞ்சது சரின்னு சொல்லு நீங்களா மாப்பிள்ளை?''

''நான் அவங்க செஞ்சது சரின்னு சொல்ல வரலை மாமா. உங்களோட கோபத்தையும் நான் தப்பு சொல்லலை. இருபத்தி நாலு வயசுல ஓடிப் போய் கல்யாணம் பண்ணி இருக்காங்க. டேவிட் இடத்திலே வேற யாராச்சும் இருந்து... அவனால உங்க பொண்ணு வாழ்க்கை பாழாகி இருந்தா அவங்களால என்ன பண்ண முடியும்?

''அப்படி ஒரு நிலைமை வந்துடக் கூடாதுன்னு தான் உங்களை மாதிரி பெத்தவங்க லவ் மேரேஜை வெறுக்கிறீங்க. அந்த ரிஸ்க் அரேஞ்ட் மேரேஜிலும் இருக்கு. ஆனா அங்க ரிஸ்க் பேக்டர் கொஞ்சம் கம்மி. ஏன்னா அந்த பொண்ணை சுத்தி அவ சொந்தம் பந்தம்னு நூறு பேர் இருப்பாங்க.''

இதற்கு மேல் 'இவருக்கு என்ன சொல்லி புரிய வைக்க என்று சஞ்சய் யோசித்துக் கொண்டு இருந் தான்.

'எவ்வளவு நேரம் தான் மஞ்சரி தன் தந்தையுடன் வாதாடுவாள்? போதாத் குறைக்கு சஞ்சயும் சப்போர்ட் பண்ணி பேசுறான். நம்மளால மாமாகிட்ட பேச முடியலைன்னாலும் செஞ்ச தப்புக்கு மன்னிப்பாவது



கேட்போம்' என நினைத்த டேவிட் தன் மனைவியை இழுத்துக் கொண்டு தன் மாமனார் மற்றும் மாமி யாரின் கால்களில் விழுந்தான்.

''எங்களை மன்னிச்சு ஆசீர்வாதம் பண்ணுங்க.'' என்று அவன் கூற பரந்தாமன் அமைதியாக நின்றார்.

பல நொடிகள் கடந்தும் பரந்தாமன் பதில் சொல்லவில்லை என்றதும் மஞ்சரி தானும் நிமிர்ந்து தன் கணவனையும் நிமிர்த்தினாள்.

அறைக்குள் அடங்கி இருக்காமல் கெவின் வெளியே ஓடி வந்தான். சஞ்சய் கெவினின் காதில் சிலவற்றை ஓதி தன் மாமனாரிடம் அனுப்பினான்.

கெவின் தன் ஒற்றை விரலை நீட்டி, ''தாத்தா, ஓகே சொல்லுங்க. அப்ப தான் நான் உங்களை ரன்பீர் கபூரோட கசின் அர்மான் மாதிரி இருக்கிறதா சொல்லுவேன்.'' என்றான்.

அவன் கூறிய விதத்தில் அனைவரும் புன்னகைத் தனர்.

''டேய் கெவின்! அர்மானுக்கு இப்ப தான்டா இரு பத்து நாலு வயசாகுது. எங்க அப்பா வயசை ஒண்ணு ஓவரா ஏத்துறே இல்லன்னா ஓவரா இறக்குற... என்ன விஷயம்?'' என்று சாருமதி கேட்க,

''அப்பா தான் சொன்னார்.'' என்று சித்தப்பாவை அவன் போட்டுக் கொடுத்தான்.

சஞ்சய் அசடு வழிந்தான்.

ராதாகிருஷ்ணன் தன் சம்பந்தி முன்பு வந்து, ''சம்பந்தி! என்னோட இன்னொரு பையனை உங்களோட பெரிய மருமகனா ஏத்துக்கோங்க. அவங்க ரெண்டு பேருமே தப்பு பண்ணிட்டாங்க. செஞ்ச தப்பை இல்லைன்னு மாத்தக் கூடிய சக்தி நம்ம யாருக்குமே இல்லை. நீங்க மனசு வச்சா... அவங்களை மன்னிச்சு ஏத்துக்கலாம்'' என்று வேண்டினார்.



## 25

தன் சம்பந்தி தன்னிடம் வந்து அப்படிக் கேட்கவும் என்ன சொல்வதென்று தெரியாது பரந்தாமன் விழித்தார்.

''இங்க வா டேவிட்.'' என்று ராதாகிருஷ்ணன் தன் மகனை அழைக்க,

''இன்னமும் ஏன் டேவிட் என்று கூப்பிடுறீங்க? உங்களுக்கு ஒரு நல்ல ஹிந்து பேர் கிடைக்கலையா?'' என்று பரந்தாமன் கேட்டார்.

அவரின் கேள்விக்கு ராதாகிருஷ்ணனை முந்திக் கொண்டு சஞ்சய் பதிலளித்தான்.

''ஒரு விஷயத்தை நீங்க நல்லாப் புரிஞ்சுக்கணும் மாமா. அவன் டேவிட்டா தான் என்னைக்குமே இருப்பான். அவனை உங்களால டேவிட்டா ஏத்துக்க முடிஞ்சா ஏத்துக்கோங்க. இல்லைன்னா விட்டுவிடுங்க.''



''அவர் ஹிந்து குடும்பத்திலே பிறந்தவர் தானே?''

''இருக்கலாம். பிறவி குடுத்தவங்க ஹிந்துவா இருக்கலாம். ஆனால் இன்னைக்கு இப்படி வளர்ந்து நிக்கிறதுக்கு காரணம் அந்த ஹிந்து குடும்பம் இல்லை.

''அண்ணி சொன்னதை கவனிச்சீங்க இல்ல... எல்லா ஜென்மத்திலும் யார் எதிர்த்தாலும் டேவிட்டை தான் கல்யாணம் பண்ணுவேன்னு சொன்னாங்க. அது எதனால? அவனோட குணத்தால! அந்தக் குணம் யாரால வந்தது? அவனோட அந்த அப்பா அம்மா வளர்ப்பினால.

''இன்னைக்கு அவங்க இல்லைங்கிறதுக்காக அவனை நாங்க ஹிந்துவா மாத்தினா எங்களை விட மனசாட்சியை கொன்னவங்க வேற யாருமே இருக்க மாட்டாங்க.''

''அப்படின்னா அவர் ஒரு கிறிஸ்துவரா தான் இருப்பாரா?''

''கண்டிப்பா. அவனும் சரி கெவினும் சரி மாற மாட்டாங்க. டேவிட் எப்படி அவங்ககிட்ட போய் சேர்ந்தான்னு எங்க யாருக்கும் தெரியாது. அதை பத்தின அக்கறையும் எங்களுக்கு இல்லை. ஆனா அவனை ஒரு நல்ல பிள்ளையா வளர்த்த அந்த தாய் தந்தையருக்கு அவங்க பிள்ளையை அவங்க பிள்ளையாவே கடைசி வரைக்கும் இருக்கவிடுறது தான் அவங்க ஆத்மாவுக்கு நாங்க செய்யுற மரியாதையா நான் நினைக்கிறேன்.''

பரந்தாமன் ராதாகிருஷ்ணனை பார்த்தார். சஞ்சய் சொல்வது சரி தான் என்பது போல் அவர் அமைதியாக நின்று கொண்டிருந்தார்.

''டேவிட் ஒண்ணும் அண்ணியை தன்னோட கடவுளை கும்பிடுன்னு கம்பெல் பண்ணலையே. ஹிந்து கோவிலுக்கு வரத் தயக்கம் காட்டவும் இல்லை. எம்மதமும் சம்மதம்னு இருக்கான். இதை விட ஒரு மனுஷன் வேற எப்படி நடந்துக்க முடியும்? நீங்க டேவிட்டையும் அண்ணியையும் ஏத்துக்கிறதை பத்தி உங்க வீட்டிலே உட்கார்ந்து நல்லா யோசிச்சே முடிவு பண்ணுங்க.'' என்று சஞ்சய் கூற,

அனைவரும் அமைதி காத்தனர். தன் வாய் திறந்து பேசப் போன ராதாகிருஷ்ணனை எதுவும் பேச வேண்டாம் என்று ஜாடை காட்டி சஞ்சய் தடுத்தான்.

''இவ்வளவு சொல்லியும் உங்களுக்கு என் டேவிட்டை ஏத்துக்க மனசு வரலையாப்பா?'' என்று மஞ்சரி தன் தந்தையைப் பார்த்துக் கேட்டாள்.

''பெத்த பிள்ளையைப் பிரியுறதுன்னா என்னன்னு உனக்குத் தெரியலை. அதான் இப்ப கூட இவ்வளவு தெனாவட்டா பேசுறே!'' என்று பரந்தாமன் மஞ்சரியை குற்றம் சாட்டினார்.

''மூணு நாளா என் பிள்ளையை பிரிஞ்சு தான்பா இருந்தேன். அதோட வலி என்னன்னு எனக்கும் தெரியும்பா.''

''என் பொண்ணைப் பிரிஞ்சு நான் தான் கஷ்டப் பட்டேன். ஆனா அவ என்னைப் பிரிஞ்சதைப் பத்திக் கொஞ்சம்கூட வருத்தப்படலைன்னு நினைக்கிறப்போ...'' என்று பரந்தாமன் விரக்தியாய் கூற,



''இப்ப என்னப்பா சொல்ல வரீங்க? அன்னைக்கு நான் செஞ்ச தப்பை உணரவே இல்லைன்னா... ஒரு புள்ளையைப் பிரிஞ்சா தான் என்னோட தப்பு எனக்குப் புரியும்னா சொல்லுறீங்க. ஒரு டீலுக்கு வருவோம்.

''உங்க பொண்ணை உங்ககிட்ட இருந்து நானும் டேவிட்டும் பிரிச்சிட்டோம்னு நீங்க நினைக்கிறதால பதிலுக்கு நாங்களும் எங்க பிள்ளையைப் பிரியுறோம்பா. கெவினை உங்க கூட கூட்டிட்டுப் போங்க. நீங்களா கூட்டிட்டு வந்து என் கண்ணிலே காட்டினால் தவிர அவனைப் பார்க்க நான் எந்த முயற்சியும் செய்ய மாட்டேன்.'' என்று மஞ்சரி உறுதியாகச் சொல்ல,

''அக்கா என்ன சொல்லுறே?'' என்று சாருமதி பதறினாள்.

''டேவிட்க்கு எப்படி பெத்த அம்மாவோட வளரக் குடுத்து வைக்கலையோ... அதே மாதிரி அவர் பிள்ளைக்கும் எங்க கூட வாழக் குடுத்து வைக்கலைன்னு நான் நினைச்சுக்கிறேன்'' என்று மஞ்சரி கூறினாள்.

''மாமாவைக் கேட்காம நீயா எப்படி இது மாதிரி ஒரு முடிவெடுக்கலாம்?''

''எங்க கல்யாண முடிவையும் நானா தான் எடுத்து டேவிட் மேல திணிச்சேன். அவனுக்கு நம்ம அப்பா கிட்ட சம்மதம் கேட்காமல் கல்யாணம் பண்ணுறதிலே துளியும் விருப்பமில்லை. நான் தான் பிடிவாதம் பிடிச்சேன். இத்தனை வருஷத்திலே ஒரு நாள் கூட

அவன் அதுக்காக என்னைத் திட்டினதில்லை. இன்னைக்கு தான் முதல் முறையா கேள்வி கேட்டான்.

''இப்பவும் இந்த முடிவை அவன் மேல திணிக்கிறேன். அதையும் அவன் பதில் பேசாமல் ஏத்துக்குவான். என் டேவிட்டை எனக்கு தெரியும்.'' என்றவள் கெவினை தன் அருகே அழைத்து,

''கெவின், தாத்தா கூட அவர் வீட்டுக்குப் போறியா?'' என்று கேட்டாள்.

''கெவின் மட்டுமா? மம்மி வர மாட்டீங்களா?''

''நான் அப்புறமா வரேன்.'' என்றதும்,

''ஓகே மம்மி.'' என்றவன் பரந்தாமனின் கை பிடித்து,

''வாங்க தாத்தா போலாம்'' என்றான்.

பரந்தாமன் மகளைத் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தார். அதன் பின் தன் மனைவியையும் பேரனையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து சென்றார்.

''என்னம்மா இப்படி பண்ணிட்டே!'' என்று கோமளம் புலம்ப,

''அவனோட தாத்தா வீட்டுக்கு தானே கோமளம் போய் இருக்கான். எதுக்குப் புலம்புறே?'' என்று ராதாகிருஷ்ணன் மனைவியை அதட்டினார்.

''எங்கப்பாவோட ஈகோ காயப்பட்டு இருக்கு அத்தை. எங்க அப்பாக்கு நான் ரொம்ப செல்லப் பொண்ணு. நான் அவரை விட்டுப் பிரிஞ்சதை அவரால தாங்கிக்க முடியலை. அதை விட, இத்தனை வருஷம் கழிச்சு பார்க்கிற போது எனக்கு டேவிட் தான்பா முக்கியம்னு நான் சொல்லுறதை தாங்கிக்க முடியலை. அது தான் பிரச்சனை.''



''ஒரு வார்த்தை உங்க அப்பாட்ட சொல்ல வேண்டியது தானேம்மா. என்னைக்கு இருந்தாலும் எனக்கு நீங்க ரொம்ப முக்கியம்னு...'' என்று கோமளம் மருமகளிடம் கூறினார்.

டேவிட்டை எதற்காகவும் தன்னால் விட்டுக் கொடுக்க முடியாது என்பதை உணர்ந்த மஞ்சரி அமைதி காத்தாள்.

சஞ்சய் மஞ்சரியிடம், ''நீங்களும் ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கணும் அண்ணி. உங்களுக்கு டேவிட்டோட அருமை தெரியுது. அதனால இப்படி சொல்லுறீங்க. ஆனா உங்க அப்பாவுக்கு டேவிட் பத்தி என்ன தெரியும்? அவனைப் புரிஞ்சுக்கிறதுக்கான சந்தர்ப்பத்தை நீங்க அவருக்கு குடுக்கவே இல்லையே அண்ணி.

''அவர் கண்ணு முன்னாடி நீங்க வாழ்ந்து காட்டி இருந்தீங்கன்னா அவர் டேவிட் பத்தி புரிஞ்சுக்கிற சந்தர்ப்பம் அவருக்கு கிடைச்சிருக்கும். எங்கே இருக்கோம்னு கூடச் சொல்லாமல் இருந்துட்டீங்க.

''இத்தனை வருஷத்திலே ஒரு முறையாவது அவரை வந்து பார்த்து இருக்கீங்களா? அதுவும் இல்லை. அப்படின்னா அவரோட கோபம் நியாயமானது தானே?'' என்று கேட்டான்.

மஞ்சரி பதில் சொல்ல முடியாமல் அமைதி காத்தாள்.

''நீங்க ஒண்ணும் சுயம்பு இல்லையே அண்ணி? உங்களோட படிப்பு, இந்தத் தெளிவு, இந்த நிமிர்வு எல்லாம் உங்க அப்பா தந்தது தானே? படிச்சு முடிச்சு வேலைக்குப் போக ஆரம்பிச்ச உடனே உங்க அப்பா உங்களுக்குத் தேவையில்லாமல் போயிட்டாரா?

''உங்க அப்பாவோட பெர்மிஷன் இல்லாமல் நீங்க டேவிட்டை கல்யாணம் பண்ணினதை கூட என்னால ஏத்துக்க முடியுது. உங்க அப்பா மறுத்துடுவாருன்னு உறுதியா தெரிஞ்சதால அப்படி ஒரு கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க என்பதை நான் ஏத்துக்கிறேன்.

''ஆனா அதுக்கு அப்புறமா வந்து உங்க அப்பாக்கு டேவிட் எப்படிப்பட்டவன்னு நீங்க ஏன் புரிய வைக்கலை? உங்க கல்யாணம் முடிஞ்ச பிறகு உங்களைப் பிரிக்கிற அளவுக்கு உங்க அப்பா கெட்டவரா அண்ணி? இதுக்கு பதில் சொல்லுங்க!'' என்று சஞ்சய் அழுத்தத்துடன் கேட்கவும்,

அவள் இல்லை என்னும் விதமாய் தலை அசைத்தாள்.

''என்னால உங்களுக்குப் புரிய வச்சிருக்க முடியும்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி உங்க அப்பாகிட்ட சொன்னீங்க இல்ல... ஆனா இந்த நாலரை வருஷத்திலே ஏன் எந்த முயற்சியும் எடுக்கலை?'' என்று அவன் கேட்கவும்,

''என்னங்க...போதும்!'' என்று சாருமதி தன் கணவனின் பேச்சிற்கு அணை போட முயன்றாள்.

''நான் உங்க அக்காகிட்ட பேசலை சாரு. என் அண்ணிகிட்ட பேசுறேன். எங்க அண்ணனை உங்க அப்பா மறுத்துட்டுப் போயிட்டாருங்கிற ஆத்தாமையில எங்க அண்ணியை கேள்வி கேட்டுக்கிட்டு இருக்கேன். உனக்கு உங்க அக்கா திட்டு வாங்குவதைப் பார்க்கக் கஷ்டமா இருந்தா ரூமுக்கு போ!'' என்று சஞ்சய் உறுதியுடன் கூறினான்.



''ஏன் எங்க அக்காவை மட்டும் கேள்வி கேட்கிறீங்க? மாமாவும் தானே எந்த முயற்சியும் எடுக்கலை. அவரையும் கேள்வி கேட்க வேண்டியது தானே?'' என்று சாருமதி அப்போதும் தன் சகோதரிக்கு ஆதரவாக வாதாட,

''நான் ஏற்கனவே டேவிட்கிட்ட விசாரிச்சுட்டேன். அவனை உங்க அக்கா தான் தடுத்து இருக்காங்க. உண்மையா இல்லையான்னு நீயே கேட்டுக்கோ.'' என்றதும்,

சாருமதி தன் அக்காவைப் பார்க்க அவள் ஆமாம் என்பதாய் தலையாட்டினாள்.

''உங்க அம்மா நிலையையும் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க அண்ணி. இப்ப சாரு கர்ப்பமா இருக்கிறதால அவங்க இந்த ரூருக்கு போக மாட்டேன்னு அடம் பிடிச்சாங்க.

''ஆனா நாங்க தான் அவங்களை கம்பெல் பண்ணி அனுப்பி வச்சோம். பேரப் புள்ளை பிறக்கும் முன்னாடியே அதை விட்டு விலகக் கூடாதுன்னு நினைக்கிறவங்க கிட்ட இருந்து மூன்றரை வருஷமா கெவினை பிரிச்சு வச்சு இருக்கீங்களே.... இது எப்படி நியாயம் ஆகும்?''

கோமளத்திற்கு மருமகள் பேரனை அனுப்பிவிட்டாளே என்ற கோபம். அதனால் சஞ்சய் மஞ்சரியை கேள்வி மேல கேள்வியாய் கேட்பதை ஆதரித்து அமைதியாக இருந்தார்.

ராதாகிருஷ்ணனோ தன் மகன் கேட்பதெல்லாம் நியாயமான கேள்விகளே என்பதால் அமைதியாக வேடிக்கை பார்த்தார். அதனால் சஞ்சய் தொடர்ந்து பேசினான்.

"அப்புறம் சாரு... உங்களை மாதிரி தான் அவளும் இஞ்சினியருக்குப் படிச்சாள். நீங்க வேலைக்குப் போறீங்க. ஆனா அவ வேலைக்குப் போகலை. ஏன் தெரியுமா? நீங்க ஓடிப் போனதால உங்க அப்பா தன்னோட இன்னொரு பொண்ணை வீட்டோடு பூட்டி வச்சுட்டார். ஆக உங்களால அவ வீட்டிலே கிட்டதட்ட சிறை வைக்கப்பட்டாள்."

தன்னால் தன் தங்கை பட்ட கஷ்டத்தை கேள்விப் பட்ட மஞ்சரியின் மனம் மேலும் வருந்தியது.

"காதல் கல்யாணம் பண்ணுறவங்க தன் வாழ்க்கையை தான் பார்த்துக்க முடியும். இது மாதிரி பின் விளைவுகளை யோசிச்சுப் பார்த்தால் காதல் பண்ணவே முடியாதுங்கிறதை நான் ஒத்துக்கிறேன். ஆனா இவங்க மூணு பேரும் என்ன செய்யுறாங்கன்னு கூட நீங்க தெரிஞ்சுக்க விரும்பாமல் தானே இருந்து இருக்கீங்க.

"நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைச்சுக்காதீங்க அண்ணி. ஒரு பேச்சுக்கு சொல்லுறேன். இவங்க மூணு பேரிலே யாராச்சும் செத்திருந்தா கூட உங்களுக்குத் தெரிஞ்சிருக்காது."

"சஞ்சய்!" என்று டேவிட் அதட்டல் போட,

"நோ!" என்று வீறிட்ட மஞ்சரி, "நீங்க சொல்லுறதை நான் ஒத்துக்கிறேன் சஞ்சய். இவங்களை நான் நேரில் வந்து பார்க்கலை. ஆனா நான் இவங்களைச் சுத்தமா விசாரிக்காமல் இருக்கலை. சாருவுக்கு கல்யாணம் ஆனது கூட எனக்குத் தெரியும்." என்றாள்.

"இன்னைக்கு டெக்னாலஜி எவ்வளவோ முன்னேறி இருக்கு. உலகத்திலே எங்கோ ஒரு மூலையில் நடக்கிற விஷயத்தை கூட நாம இருக்கிற இடத்திலே இருந்து தெரிஞ்சுக்க முடியுது. அன்னைக்கு ஒரு போனை போட்ட உடனே உங்க ஃப்ரண்ட்ஸ் எல்லோரும் அடிச்சு பிடிச்சு ஹாஸ்பிட்டலுக்கு வந்தாங்க இல்ல. அவங்களை வச்சாவது நீங்க உங்க வீட்டிலே நடக்கிற விஷயங்களை தெரிஞ்சுக்கிட்டு இருந்திருக்கலாம்."



"நான் அவங்க மூலமா தெரிஞ்சுக்கிட்டேன்னு தான் சொல்லுறேனே..."

"இல்ல அண்ணி. நீங்க சரியா விசாரிச்சுத் தெரிஞ்சுக்கலை. உங்க தங்கச்சி எப்படி இருக்காள்? அவளோட கணவன் யாரு? அவர் என்ன பண்ணுறாரு? அப்படி முழுசா விசாரிச்சு இருந்தா... என்னை பத்தி உங்களுக்கு எப்பவோ தெரிஞ்சு இருக்கும்."

'சஞ்சய் சொல்வது சரி தானே? சஞ்சயை ஒரு முறை நேரில் பார்த்து விசாரித்து எனக்கு சொல்லுங்கள் என்று என் நண்பர்களிடம் சொல்லி இருந்தால் அப்பொழுதே இந்த உருவ ஒற்றுமை எனக்குத் தெரிய வந்திருக்குமே? ஏன் நான் விசாரிக்கத் தவறினேன்?' என்று மஞ்சரி யோசிக்க ஆரம்பித்தாள்.

"ஆனா சாரு எத்தனையோ நாள் உங்களைப் பத்தி என்கிட்ட புலம்பி இருக்காள். அவளுக்காக நான் உங்களைத் தேடித் தரதா சொன்னேன். ஆனா உங்க அப்பாவுக்கு தெரிஞ்சா மனசு ஒடிஞ்சு போயிடுவார்னு வேணாம்னு மறுத்துட்டாள். உங்க காலேஜ் பேரை கூட என்கிட்ட சொல்ல மாட்டேன்னு சொல்லிட்டாள். அவ தினமும் கடவுள்கிட்ட வேண்டுறதே நீங்க சீக்கிரமா திரும்பி வரணுங்கிறது தான்!"

மஞ்சரி தன் தங்கையிடம் திரும்பி, "உனக்கு கல்யாண மான்னு மட்டும் தான் சாரு நான் விசாரிக்க நினைச் சேன். உன்னோட கணவரை அப்பா தான் தேர்ந்தெடுத் தாரு என்பதால அவர் உனக்கு எல்லா விதத்திலும் பொருத்தமானவரா தான் இருப்பாருன்னு நினைச்சேன். அதான் அவரைப் பத்தி தெரிஞ்சுக்க முயற்சிக்கலை. தினமும் உங்க எல்லோருக்காகவும் தான் சாரு நானும் வேண்டிக்குவேன்." என்று கூறவும்,

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியும்கா. புதுசா வந்தவங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று சாருமதி தன் கணவனை முறைத்துக் கொண்டே கூறினாள்.

"சஞ்சய்! உன் லெக்சரை நிறுத்து. அவ உன் அண்ணி!" என்று கோமளமும் மகனை அதட்டல் போட்டார்.

மஞ்சரி மேல் இருந்த கோபத்தால் மகன் திட்டியதை ஆதரித்தவரால் ஒரு கட்டத்துக்கு மேல் சும்மா இருக்க முடியவில்லை. அவரது நியாய புத்தி விழித்துக் கொண்டதில் மகனைத் திட்ட ஆரம்பித்தார்.

தன் மனைவியை தன் உடன் பிறந்தவன் கேள்வி மேல் கேள்வியாய் கேட்பதில் டேவிட்டிற்கு உடன் பாடு இல்லை. ஆனால் சஞ்சய் திட்டுவது தங்களின் நல்லதிற்கு எனும் போது சஞ்சயை தடுத்து நிறுத்தவும் டேவிட்டிற்கு வழி தெரியவில்லை.

"அண்ணி, உங்களைத் திட்டுறது என் நோக்கம் இல்லை. அப்படி திட்டணும்னா உங்க அப்பா முன் னாடியே இதையெல்லாம் சொல்லி இருப்பேன். நடந்த தப்பை சரி பண்ணணும். அதான் என் ஒரே நோக்கம்.



"ஒண்ணு எங்க அம்மா அப்பா பேசணும். இத்தனை மாசத்திலே சாருவையே அவங்க எதுவும் சொல்லல மாட்டாங்க. புதுசா வந்த உங்ககிட்டவா இந்த அளவுக்கு பேசுவாங்க? நோ! நெவர்.

"அடுத்தது டேவிட்... அவன் பேசுறதா இருந்தால்... ஐ மீன் அவன் பேசுறதை நீங்க கேட்பதா இருந்தால் பிரச்சனை என்னைக்கோ சரி ஆகி இருக்குமே. அத னால தான் நான் பேசினேன். உண்மையை எடுத்துச் சொல்லுறேன்னு உங்க மனசைக் காயப்படுத்திட் டேன்னு எனக்குத் தெரியுது. ஆனா வேற வழி இல்லை. என்னை மன்னிச்சிடுங்க அண்ணி." என்று உணர்ந்து மன்னிப்புக் கேட்டவன்,

"உன் முன்னாடியே அண்ணியை நிக்க வச்சு கேள்வி கேட்டதுக்கு ஐயம் சாரி டேவிட்" என்று அவனிடமும் மன்னிப்புக் கேட்டான்.

சாருமதி கோபமாய் அந்த இடம் விட்டு நகர்ந்து போனாள்.

டேவிட் நடப்பவற்றை ஒரு கையாலாகாத தனத் துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

எத்தனையோ முறை அவன் பரந்தாமனை பார்க்க நேரில் போகலாம் என்று மஞ்சரியை கேட்டுப் பார்த் திருக்கிறான். ஆனால் அவள் பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

'மனைவியின் பேச்சுக்கெல்லாம் சரி என்று தலை யாட்டி இருக்கக் கூடாதோ? அவளை போலவே என் னுடைய கருத்தில் நானும் பிடிவாதமாக இருந்திருக்க வேண்டுமோ?' என்று நினைத்துப் பார்த்தான்.

டேவிட் அமைதியாக தனது அறை நோக்கிச் செல்ல சஞ்சய் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. மஞ்சரி தன் கணவனைப் பின் தொடர்ந்து தங்களது அறைக்குள் நுழைந்தாள்.

"டேவிட்!" என்று அவன் மேல் சாய்ந்து கொண்டு அவள் அழ அவன் அவளது முதுகை தடவிக் கொடுத்து ஆறுதல் அளிக்க முயன்றான்.

"ஐயம் சாரி டேவிட்!" என்பதையே அவள் திரும்பத் திரும்பக் கூறினாள்.

"போதும் அம்லு. சஞ்சய் கேட்டது சரி தானே? இனி மேலாச்சும் நாம மாமாவை அவாய்ட் பண்ணாமல் இருப்போம்."

"கெவின்.. உன்னை கேட்காமல்..." என்று அவள் திக்க,

"ப்ச்.... கஷ்டம் தான். பிள்ளையை பிரியணும்னா ரொம்ப ரொம்ப கஷ்டம் தான். அன்னைக்கு அவர் பொண்ணை அவர்கிட்ட இருந்து பிரிச்சுட்டேனே. அதுக்கு பரிகாரம் பண்ண வேண்டாமா? உங்க அப்பாவோட கோபம் இத னால அட்லீஸ்ட் மறையும்னா நாம அந்தக் கஷ்டத்தை தாங்கித் தானே ஆகணும்? தப்பு பண்ணிட்டோம். அதை சரி பண்ணுவோம்." என்று கூறினான்.



## 26

சஞ்சய் தன் அறைக்கு சென்ற போது சாருமதி ஜன்னலோரத்தில் சாய்ந்து நின்று கொண்டு வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள்.



அவள் தன் மீது கோபமாய் இருப்பதைப் புரிந்து கொண்ட சஞ்சய் அவளைச் சமாதானம் செய்ய விரும்பி அவளது கன்னத்தில் முத்தமொன்றை பதிக்க... அவள் அவனைத் தள்ளிவிட்டாள்.

அவன் குனிந்து அவளது மேடான வயிற்றில் முத்தம் பதிக்க... அதற்கும் அவனை தள்ளிவிட்டாள்.

"இங்க பாரு... உனக்கு வேணாம்னு தள்ளி விட்ட... அதுல ஒரு நியாயம் இருக்கு. என் பிள்ளைக்கு குடுக்கிறதை வேணாம்னு சொல்லுறதுக்கு நீ யாரு? நான் அப்படி தான் குடுப்பேன்" என்றவன்,

அவளது மணி வயிற்றில் அழுத்தமாய் ஒரு முத்தத்தை பதித்தான். பின் நிமிர்ந்து மென்மையான குரலில் பேச ஆரம்பித்தான்.

"உன் கோபம் எனக்குப் புரியுது சாரு. டேவிட்டை வளர்த்தவங்க இறந்த பிறகு அவனுக்குச் சொந்த பந்தங்களோட வாழுற வாழ்க்கை கிடைக்காமல் போயிடுச்சு. நான் அவன் கூடப் பேசிப் பார்த்ததில் அவன் அதுக்காக ஏங்கிறது எனக்குப் புரிஞ்சது. தன் னோட காதல் தன் மனைவியை அவங்க குடும்பத்தில் இருந்து பிரிச்சு வச்சிட்டதா கில்டியா ஃபீல் பண்ணுறான்."

சாருமதி அவன்புறம் திரும்பவும் இல்லை. குறுக்கே பேசவும் இல்லை.

"உங்க அக்காவை காயப்படுத்துறது என் நோக்கம்னா நான் இதையும் உங்க அக்காகிட்டவே சொல்லி இருப்பேன். உங்க அக்கா தன் மனசிலே தான் ஒரு நல்ல மனைவியா வாழ்ந்துக்கிட்டு இருக்கிறதா

நினைச்சுக்கிட்டு இருக்காங்க. நான் இதை உங்க அக்காகிட்ட சொன்னா... நான் என் ஹஸ்பண்டைக் கூட சரியாப் புரிஞ்சுக்கலையான்னு மனசு ஒடிஞ்சு போயிடுவாங்கன்னு தான் சொல்லலை.

''எனக்கு கிடைச்ச எல்லாமும் டேவிட்டுக்கும் கிடைக் கணும்னு நான் ஆசைப்படுறேன். அது நியாயமான ஆசை தானே சாரு? யோசி!'' என்று கூறிவிட்டு படுக் கையில் சென்று கண் மூடி சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

அவனுடைய பேச்சில் இருந்த உண்மை சாரு மதிக்கு புலப்பட்டது. அவள் கணவன் அருகே சென்று அவன் தோள் மீது சாய்ந்து கொண்டாள்.

அவளது இடுப்பில் கைகொடுத்து இழுத்து தன் மீது சாய்த்துக் கொண்டவன் அவளது உச்சியில் அழுத்தமாய் ஒரு முத்தம் பதித்தான். அவள் தன் கண வனுடன் இன்னும் அதிகமாய் ஒன்றிக் கொண்டாள்.

''சாரு மேடம்க்கு என் மேல இருந்த கோபம் போயி டுச்சா?''

''எதுக்கு திட்டணும்... அப்புறம் எதுக்கு சாரி கேட்கணும்னு தோணுச்சு. யோசிச்சுப் பார்த்ததிலே நீங்க செஞ்சது சரி தான்னு புரிஞ்சுக்கிட்டேன்.''

''நான் உனக்குப் புதுசா வந்தவனா சாரு?'' என்று அவன் கேட்டதும் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'உனக்கு உன் அக்கா தான் முக்கியமா? நான் நேற்று வந்தவனா?' என்ற கருத்து அவனது கேள்வியில் மறைந்திருப்பதை சாருமதி உணர்ந்தாள்.



அவனது மனதை தான் காயப்படுத்தி விட்டது அவளுக்குப் புரிந்தது.

''நான் சொன்னதுக்கு அப்படி அர்த்தம் எடுத்துக்க கூடாதுங்க.''

''வேற எப்படி எடுத்துக்கணும்?''

''நீங்க தினம் தினம் புதுப் புது அவதாரம் எடுக் கிறீங்க இல்ல.... நான் அதைத் தான் அப்படிச் சொன்னேன்.''

''புதுப் புது அவதாரமா?''

''கல்யாணத்துக்கு முன்னாடி பல்பு பல்பா வாங்கின அப்பாவி சஞ்சயா ஒரு அவதாரம். அப்புறம் உங்க ஆபிஸ்க்கு வந்து பார்த்தா... வெரி ஸ்மார்ட் ஆன பிசினெஸ் மேனா ஒரு அவதாரம். பிறக்காத பிள்ளை மேல ஓவரா பாசம் வச்சிருக்கிற அப்பாவா ஒரு அவதாரம். இப்போ கூடப் பிறந்தவருக்காக...''

''ஹலோ! ஸ்டாப்! ஸ்டாப்! முக்கியமான ஒண்ணை விட்டுட்டியே.''

''முக்கியமானதா? அது எது?'' என்று ஒன்றும் தெரியாதவள் போன்று அவள் நடிக்க,

''தன் மனைவி மீது உயிரையே வச்சிருக்கிற லவர் பாயா ஒரு அவதாரம். அதான் மேடம் முக்கியமானது.'' என்றான்.

''லவர் பாயா? அது யாரு?'' என்று அவள் சீண்டவும்,

''அது நான் தான்னு நிருபிக்கிறது தான் இப் போதைக்கு என்னோட முக்கிய வேலையே.'' என்

றவன் மனைவியிடம் காதல் விளையாட்டுக்களில் ஈடுபட்டான்.

மறுநாள் காலை கெவினைப் பார்த்து வருவதற்காக சஞ்சயும் சாருமதியும் சாருவின் வீட்டிற்கு கிளம்பிச் சென்றார்கள். பூட்டு தொங்கிய கதவே அவர்களை வரவேற்றது.

அன்று மட்டுமல்ல அடுத்த நாளும் அவர்களால் அவனைப் பார்க்க முடியவில்லை.

பரந்தாமனுக்கு சாருமதி போன் செய்து பேசினாள். அவர் மகளிடம் ஊர் கதை எல்லாம் பேசத் தயாராய் இருந்தார். ஆனால் கெவின் பற்றி மட்டும் ஒன்றும் சொல்ல மறுத்தார்.

கெவின் வீட்டை விட்டுச் சென்றதில் இருந்து வீட்டில் ஒரு வித சோகம் இழையோடியது.

ராதாகிருஷ்ணன் தன் மகனிடம், ''டேவிட்! நீ ஒண்ணு சென்னையில வேற வேலை தேடிக்கோ. இல்ல உனக்கு பிசினஸிலே இன்ட்ரஸ்ட் இருந்தா சொல்லு. அப்பா அதுக்கு ஏற்பாடு பண்ணுறேன்.'' என்று கூறி இருந்தார்.

அதனால் அதன் முதல் கட்ட நடவடிக்கையாக சஞ்சயும் டேவிடும் மும்பை சென்று அங்குள்ள வீட்டை காலி பண்ணும் வேலையை பார்த்தனர்.

சாருமதி ஒரே ஒரு முறை மட்டும் கெவினை சந்தித்தாள். சந்தித்து விட்டு வீட்டிற்கு வந்தவள் தன் அக்காவிடம் பொரிந்தாள்.



''பிள்ளையா பெத்து வளர்த்து வச்சிருக்க? நான் மம்மிகிட்ட போகணும்னு அழுது அடம் பிடிச்சா தானே அப்பா அவனை இங்க கொண்டு வந்து விடுவார். உன் பிள்ளை என்ன சொல்லுறான் தெரியுமா? சாரும்மா! நான் ஹாப்பியா இருக்கேன். மம்மியை நிம்மதியா ஆபிஸ் போகச் சொல்லுங்கன்னு சொல்லுறான்.''

''என் பிள்ளை தானே சாரு. அதான் அப்பா அம்மா பிரிவு அவனை பாதிக்கலை.'' என்று மஞ்சரி கூற சாருமதிக்கு சங்கடமாக இருந்தது.

''சாரிக்கா... நான் தெரியாமல் சொல்லிட்டேன்.'' என்று சாருமதி தன் சகோதரியிடம் மன்னிப்பை வேண்டினாள்.

ஒரு வாரம் கழிந்த நிலையில் பரந்தாமன் மட்டும் தனித்து தன் மகள்களின் புகுந்த வீட்டிற்கு வந்தார். அவரை வரவேற்று சோபாவில் அமர வைத்தனர்.

மஞ்சரி நேராக தன் தந்தையின் அருகே சென்று அமர்ந்து அவரது கைகளை பிடித்துக் கொண்டு, ''சாரிப்பா!'' என்று கண்ணீர் மல்க கூறினாள்.

''ஒரு வாரம் மகனை பிரிஞ்சு இருந்த உடனே அப்பாவுக்கு தெரியாமல் கல்யாணம் பண்ணினது தப்புன்னு புரிஞ்சுக்கிட்ட போல?'' என்று பரந்தாமன் நக்கலாகக் கேட்க,

மஞ்சரி தன் தந்தையை தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டே, ''கண்டிப்பா இல்லைப்பா. என் டேவிட்டை கல்யாணம் பண்ணினதுக்காக நான் என்னைக்கும்

ஃபீல் பண்ண மாட்டேன். பிரிவு.. ஹும்'' என்று விரக்தியாகச் சொன்னவள்,

''கெவினை மட்டும் இல்லைப்பா. நான் இன்னொரு குழந்தையை கூடப் பெத்து அதையும் உங்ககிட்டவே தரேன். அப்பவும் நான் டேவிட்டை கல்யாணம் பண்ணினதுக்காக உங்ககிட்ட வந்து சாரி கேட்க மாட்டேன்,'' என்று ஒரு நிமிர்வுடன் கூறினாள்.

''அப்புறம் எதுக்கு சாரி சொன்னே?''

''எங்க கல்யாணம் முடிஞ்சதுக்கு அப்புறமா உங்களை எல்லாம் வந்து பார்க்காமல் பல வருஷமா விலகியே இருந்துட்டேனே! உங்க பாசத்தை எல்லாம் வேண்டாம்னு ஒதுங்கி இருந்துட்டேனே! அதுக்கு தான்பா சாரி கேட்கிறேன்.

''என் டேவிட் எவ்வளவு நல்லவன்னு நான் உங்களுக்குப் புரிய வச்சிருக்கணும். அந்தக் கடமை எனக்கு இருந்ததை நான் மறந்துட்டேன்பா. உங்களை பார்க்கப் போகணும்னு எத்தனையோ தடவை டேவிட் கேட்டும் நான் தான் பிடிவாதமா மறுத்துட்டேன். நீங்க அவனை அவமானப்படுத்தி விடுவீங்களோன்னு நினைச்சேன்.''

பரந்தாமன் மகள் பேசி முடிக்கட்டும் என்று நினைத்து அவளையே இமைக்காது பார்த்துக் கொண்டு இருந்தார்.

''ஆனா தள்ளி நின்னதால என் டேவிட்டை தப்பா நினைச்சு ஏத்துக்க மறுப்பீங்கன்னு தெரிஞ்சிருந்தால் நான் மட்டுமாச்சும் அடிக்கடி வந்து பார்த்து உங்களோடு போராடி இருப்பேன்.



''இப்பவும் நான் அதை தான்பா செய்யப் போறேன். நாங்க இங்கேயே வந்துட்டோம். உங்க கண்ணு முன்னாடி தான் வாழப் போறோம். இனி வரும் காலத்தில் என் டேவிட் பத்தி உங்களுக்குப் புரிய வைப்பேன். சாரிப்பா. இதை முன்னாடியே செய்யத் தவறியதுக்கு.'' என்றவள் விறுவிறுவென்று எழுந்து சென்றுவிட்டாள்.

கெவின் பற்றிக் கூட எதுவும் கேட்காமல் சென்ற மகளை பார்த்துக் கொண்டு பரந்தாமன் அமைதியாக அமர்ந்திருக்க...

சஞ்சய் அவரருகே சென்று, ''ஒரு விஷயம் கவனிச்சீங்களா மாமா? சில நாட்களா பார்த்த கெவினை பிரிஞ்சிருக்க முடியாம நாங்க தவிக்கிறோம். ஆனா அண்ணி அடுத்த குழந்தையை கூடப் பிரிய தயாரா இருக்காங்க. யாருக்காக? டேவிட்காக!

''அந்த அளவுக்கு அவனை லவ் பண்ணுறவங்க உங்க பேச்சைக் கேட்டு வேற யாரையாவது கல்யாணம் பண்ணி இருப்பாங்கன்னா நினைக்கிறீங்க? கண்டிப்பா சூசைட் பண்ணி இருப்பாங்க. அது உங்களுக்கு சந்தோஷம் தந்திருக்குமா மாமா?'' என்று கேட்டான்.

பதிலொன்றும் பேசாமல் பரந்தாமன் மடமடவென்று வீட்டை விட்டு வெளியேறினார்.

தடுக்க நினைத்த ராதாகிருஷ்ணனையும் சஞ்சய் அமைதியாக இருக்கும்படி கூறினான்.

''டேய் சஞ்சய்! ஏன்டா எப்பப் பார்த்தாலும் சம்பந்திகிட்ட என்னைப் பேசவே விட மாட்டேங்கிற? உங்க அம்மா பேரனை கூட்டிட்டு வாங்கன்னு ஒரு

வாரமா என் காதை ஓட்டை போடுறாள். நீ என்ன டான்னா எப்பப் பாரு என்னைத் தடுத்துக்கிட்டே இருக்க... உன் மனசிலே என்ன தான்டா ஓடுது?''

''அப்பா, மாமாவை பொறுத்தவரை சம்பந்தி என்பவர் வீட்டோ (veto) பவர். சம்பந்தி சொல்லிட் டாரேன்னு வேற வழியில்லாமல் இவங்க ரெண்டு பேரையும் ஏத்துக்குவார். அது சரிப்படாதுப்பா. அவர் எந்த உறுத்தலும் இல்லாமல் அவங்களை முழுசா ஏத்துக்கணும்.

''நான் எந்த அளவுக்கு உரிமையோட மாமாகிட்ட பேசுறேனோ அதே அளவு உரிமையோட டேவிட்டும் பேசணும். அவரா மனசு மாறி வரட்டும்பா.'' என்றவன் பெருமூச்சை வெளியேற்றினான்.

அன்று மாலை, ''மம்மி!'' என்ற குரல் கேட்டு மஞ்சரி வேகமாக தன் அறையை விட்டு வெளியே வந்தாள்.

தன்னை நோக்கி ஓடி வரும் மகனை நோக்கி ஓடாமல் தன் தந்தையின் அனுமதிக்காக அவர் முகம் பார்த்து நின்றாள்.

அவர் தலை அசைத்ததும் குழந்தையை ஆரத் தழுவி முத்தங்களை அள்ளி வழங்கினாள்.

அனைவரும் கெவினையே கொஞ்சிக் கொண்டு இருக்க சஞ்சயும் டேவிட்டும் தங்கள் மாமனார் மாமியாரை உட்காரச் சொல்லி உபசரித்தனர்.

டேவிட் பரந்தாமன் அருகில் நின்று கொண்டிருந் தாலும் அவனது பார்வை என்னவோ கெவினையே வட்டமடித்தது.



பரந்தாமன் ராதாகிருஷ்ணனையே பார்த்துக் கொண்டிருப்பதை கண்ட சஞ்சய், ''அப்பா! இங்க வாங்க!'' என்று அழைத்தான்.

பேரன் அருகே நின்று கொண்டிருந்த ராதாகிருஷ் ணன், ''சாரி சம்பந்தி. பேரன் வந்ததிலே உங்களை கவனிக்க மறந்துட்டேன்.'' என்றார்.

''பரவாயில்லை சம்பந்தி.'' என்ற பரந்தாமன் ஒரு பெரிய கவரை அவரிடம் ஒப்படைத்தார்.

''இது என்ன சம்பந்தி?'' என்று கேட்டுக் கொண்டே ராதாகிருஷ்ணன் அதை பிரித்துப் பார்த்தார்.

அதில் அழைப்பிதழ்கள் இருப்பதை கண்டவர் ஒன்றை பிரித்து வாசிக்க ஆரம்பித்தார். சஞ்சய் தானும் ஒன்றை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

டேவிட் தனக்கு அந்த அளவிற்கு உரிமை இல்லை என நினைத்து அமைதியாக நின்றிருந்தான்.

அது சாருமதியின் வளைகாப்பு நிகழ்ச்சிக்கான பத்திரிக்கை. அதைப் படித்த ராதாகிருஷ்ணனின் முகம் மலர்ந்தது.

சஞ்சய் ''யாஹூ!'' என்று சப்தம் எழுப்பிவிட்டு டேவிட்டை ஆரத் தழுவிக் கொண்டான்.

''ஐயம் சோ ஹாப்பிடா டேவி!'' என்றவன் அவனை விட்டு விலகி,

தன் மாமனார் முன் நின்று, ''தாங்க் யூ சோ மச் மாமா!'' என்று கை கூப்பி தன் நன்றியை தெரிவித் தான்.

சஞ்சயின் ஆனந்தக் கூச்சலைக் கேட்டு பெண்கள் அனைவரும் அங்கே வந்தனர். விஷயமறிந்த அவர்களின் முகமும் பிரகாசமாகியது.

பரந்தாமன் தன் பெரிய பெண்ணை ஏற்றுக் கொண்டதை அறிவிக்கும் விதமாக அவர்கள் மூவரின் பெயரையும் சீமந்தப் பத்திரிக்கையில் இடம்பெறச் செய்திருந்தார்.

அதுவே அவர்களின் சந்தோஷத்திற்கு காரணம்!

மஞ்சரி தன் தந்தையின் தோளில் உரிமையுடன் சாய்ந்து கொண்டு கண்ணீர் வடித்தாள்.

''தாங்க்ஸ்பா. சாரிப்பா. ஐ மிஸ் யூப்பா'' என்றதும்,

''என்ன சொன்ன? திரும்பச் சொல்லு.'' என்று பரந்தாமன் கேட்க,

''ஐ ரியலி மிஸ் யூ சோ மச் டாடி. அதுல உங்களுக்கு என்ன சந்தேகம்?'' என்று கண்ணீரோடும் சிணுங் கலோடும் மஞ்சரி கேட்க,

''பார்த்தீங்களா சம்பந்தி... என் பொண்ணோட சாமர்த்தியத்தை. மாப்பிள்ளையை நான் ஏத்துக் கிட்டதுக்கு அப்புறமா தான் இந்த அப்பா அவ கண் ணுக்கு தெரியுறேன்.'' என்று கிண்டல் பண்ணியவர், டேவிட்டின் கைகளை பிடித்துக் கொண்டார்.

''சாரி மாப்பிள்ளை.'' என்று பரந்தாமனும்,

''தாங்க்ஸ் மாமா!'' என்று டேவிட்டும் ஒரு சேரக் கூற அனைவரும் புன்னகைத்தனர்.



மஞ்சரியும் ஈஸ்வரியும் அணைத்துக் கொண்டார்கள். தன் அன்னையிடமும் மஞ்சரி தன் மன்னிப்பை வேண்டினாள்.

''அது என்ன எப்பப் பாரு மாப்பிள்ளையை அவன் இவன்னு சொல்லுறே? அவரை மரியாதையா கூப்பிட்டுப் பழகு!'' என்று ஈஸ்வரி மகளை ஒரு அதட்டல் போட்டார்.

''எ மாம் இஸ் ஆல்வேஸ் எ மாம்'' என்று முணு முணுத்த மஞ்சரி, ''அப்படியே சொல்லி பழகிடுச் சும்மா.'' என்றாள்.

''உங்களுக்குள்ள என்ன வேணா சொல்லிக்கோ. ஆனா எங்ககிட்ட பேசும் போது அவர்னு மரியாதையா சொல்லு!'' என்று உத்தரவு பிறப்பித்ததும்,

''உங்க பொண்ணு திருந்திட்டாம்மா. இந்த நிமிஷத் திலே இருந்து என்னை நான் மாத்திக்கிறேன்.'' என்று மஞ்சரி அறிவித்ததும் அனைவரும் புன்னகைத்தனர்.

''எப்படிப்பா திடீர்ன்னு மனசு மாறினீங்க?'' என்று சாருமதி கேட்க,

''அதை நான் சொல்லுறேன் சாரும்மா. எங்கே பேரன் தன் அம்மாகிட்ட போகணும்னு சொல்லிடு வானோன்னு பயந்து தினமும் உங்க அப்பா அவனை தீம் பார்க் தீம் பார்க்கா கூட்டிட்டு போய் டயர்டா கிட்டாரு. இதுக்கு மேல தாக்குப் பிடிக்க முடியாதுன்னு தான் கூட்டிட்டு வந்துட்டாரு.'' என்று ஈஸ்வரி கிண்டல் பண்ணவும், அனைவரும் வாய்விட்டு நகைத்தனர்.

மனைவியின் கிண்டலை ரசித்து அனைவருடன் சிரித்த பரந்தாமன் தான் மஞ்சரியை ஏற்றுக் கொண்ட காரணத்தைக் கூற ஆரம்பித்தார்.

''என் பேரனுக்காக அவளை ஏத்துக்கலாம்னு நினைச்சிருந்தேன். அதாவது என் பேரனோட அம்மாவை மன்னிக்கலாம்னு நினைச்சேன். ஆனா இன்னைக்கு காலையில மாப்பிள்ளைக்காக இன்னொரு பிள்ளையை பெத்து அதையும் என்கிட்டயே குடுக்குறேன்னு சொன்னா இல்ல...

''அப்ப தோணுச்சு... பெத்த பிள்ளையை விட என் பொண்ணு தன் கணவனை உயர்வா நினைக்கிறான்னா... அவர் எப்படிப்பட்டவரா இருக்கணும்னு. அவரை விட ஒரு பெஸ்ட் மாப்பிள்ளையை என்னால தேடிக் கண்டுபிடிச்சிருக்க முடியாதுன்னு தோணுச்சு. அதான் என் மகளை ஏத்துக்க முடிவு பண்ணிட்டேன்.'' என்று விளக்கினார்.

''சூப்பர்பா!'' என்று சாருமதி தன் தந்தையின் கன்னத்தை பிடித்துக் கொஞ்ச,

''கருகின ஸ்மெல் வருது தானே டேவிட்?'' என்று மஞ்சரி சஞ்சயை கிண்டல் பண்ண,

''ஓய்!'' என்று அதட்டிய சாருமதி தன் கணவனின் அருகே சென்று அவனது இரு கன்னத்தையும் பிடித்துக் கொஞ்சினாள். சஞ்சயின் முகம் பிரகாசமாகியது.

''பப்ளிக் மதி.'' என்று டேவிட்டும்,

''இப்ப திடீர்னு சஞ்சய்க்கு ஜாக்பாட் அடிக்க காரணம் என்ன சாரு?'' என்று மஞ்சரியும் வினவ,



''என் சமத்து சக்கரை கட்டி தானே அப்பாகிட்டவும் உன்கிட்டவும் பேசி உங்களை வழிக்கு கொண்டு வந்தார். அதுக்கு தான்.'' என்று சாருமதி கூறியதை மஞ்சரி ஏற்றுக் கொண்டாலும் தங்கையையும் அவளது கணவரையும் கிண்டல் செய்யும் நோக்குடன்,

''நீ அப்பா சொன்னதை நல்லா கேட்டியா சாரு? என்னால தான் மனசு மாறினதா அப்பா சொன்னார்.'' என்றாள்.

''அம்லு! நீ கொஞ்சம் சும்மா இருக்கியா!'' என்று டேவிட் அதட்டல் போட்டான்.

''இதை நீ...'' என்று தொடங்கிய மஞ்சரி தாயின் ஆணைக்கு ஏற்ப கணவனை மரியாதையாய் அழைக்க எண்ணி,

''இதை நீங்க முன்னாடியே செஞ்சிருந்தா எங்க அப்பா கூட நாம எப்பவோ சேர்ந்திருக்கலாம். நீங்களும் உங்க குடும்பத்தை கண்டுபிடிச்சு இருந்திருக்கலாம்.'' என்று மஞ்சரி வாய்விட்டுப் புலம்பினாள்.

டேவிட் அருகே சென்று கிசுகிசுப்பாய், ''ஆறு மாசம் பெரியவனான உன்னை போய் நீங்க வாங்கன்னு கூப்பிடச் சொல்லுறாங்க எங்க அம்மா. முடியலைடா. கொடுமையா இருக்கு.'' என்றாள்.

டேவிட்டின் அருகில் நின்றிருந்த சஞ்சய்க்கு மஞ்சரி கூறியது தெளிவாகக் கேட்டது.

''அதைக் கொஞ்சம் சத்தமா சொல்லுங்களேன் அண்ணி.'' என்று மெல்லிய குரலில் அவளைக் கிண்டல் பண்ண.

''உங்களுக்கு எதுக்கு இந்த கொலைவெறி? இன்னைக்கு முழுசும் எங்கம்மா என் காதை ஓட்டை போடணுமா?'' என்று நடுங்கினாள்.

சஞ்சயிடம், ''ரொம்ப ரொம்ப தாங்க்ஸ். கெவின் காணாமல் போனதில் இருந்து இப்ப வரைக்கும் உங்களோட பங்கு ரொம்ப அதிகம்'' என்று உணர்ந்து நன்றி உரைத்தாள்.

டேவிட் சஞ்சயை அணைத்து, ''தாங்க்ஸ் டா. தாங்க்ஸ் ஃபார் எவ்ரிதிங்.'' என்று தனது நன்றிகளை தெரிவித்தான்.



## 27

வளைகாப்பு நாளும் விடிந்தது. பட்டுப்புடவை அணிந்து கொண்டு தலையை உலர்த்திக் கொண்டிருந்த மனைவியை சஞ்சய் பின்னிருந்து அணைத்தான்.

அவளது கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்தவன், ''சாரு மேடம் அம்மா வீட்டுக்குப் போகப் போறதால ரொம்ப ஹாப்பியா இருக்காங்க போல!'' என்று கேட்டான்.

''அப்படின்னு நான் சொன்னேனா?''

''நீ சொல்லலைனாலும் உன் முகம் சொல்லுதே! சஞ்சய் இல்லாமல் இருக்கிறதிலே உனக்கு அவ்வளவு சந்தோஷம்? ம்ம்ம்...''



''நீங்க இல்லாமலா? ஏன் அப்படி சொல்லுறீங்க? மொத மொதல்ல கர்ப்பமா இருக்கிறது தெரிஞ்சப்போ நான் எங்க அம்மா வீட்டுக்கு போன போது... எங்க அம்மா வீட்டுக்கு நீங்க டெய்லி நைட் வந்த மாதிரி இப்பவும் வர மாட்டீங்களா?''

''அப்போ பத்து நாள் போனே! ஆனா இப்போ மாசக் கணக்கா இல்ல போகப் போறே? அதனால டெய்லி எப்படிடா சாரு என்னால வர முடியும்?''

''அப்போ வர மாட்டீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே அவள் படுக்கையில் போய் அமர்ந்தாள்.

அவளது வாடிய முகத்தை கண்டவன், ''ஹேய் சாரு! எதுக்குடா இப்ப இவ்வளவு வருத்தப்படுறே? உனக்கு என்னைப் பார்க்கணும்னா எனக்கு ஒரு போன் பண்ணு. நான் உடனே வரேன்.'' என்றான்.

''எனக்கு உங்களை டெய்லியும் தான் பார்க்கணும். அப்ப டெய்லி வாங்க.''

அது முடியாது என்று சொல்ல வந்தவன் அதைச் சொல்ல முடியாமல் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டு அவளருகில் அமர்ந்தான்.

''அப்ப இன்னைக்கு போயிட்டு ரெண்டே நாளில் நான் திரும்பவும இங்கேயே வந்துடட்டுமா?''

''உங்க அம்மா வருத்தப்படுவாங்கடா சாரு.''

''நான் வருத்தப்பட்டா பரவாயில்லை. ஆனா உங்க மாமியார் வருத்தப்படக் கூடாது. அப்படித் தானே?'' என்று அவள் சிணுங்கினாள்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று நினைத்து அவன் அமைதி காத்தான்.

''நீங்க எல்லோரும் இங்க ஒண்ணா இருப்பீங்க. நான் மட்டும் அங்க தனியா இருக்கணுமா? எனக்கு போர் அடிக்கும். பேசாமல் அக்காவையும் என் கூட கூட்டிட்டு போகட்டுமா?''

''எதுக்கு டேவிட் என்னை கட்டி வச்சு உதைக் கிறதுக்கா?''

''ஆமா இல்ல. மாமா திட்டுவார். ப்ச்...'' என்று அவள் சலித்துக் கொள்ளவும்,

''சரிடா. ஒரு நாள் விட்டு ஒரு நாள் வரேன். வீக் என்ட் நீ இங்க வந்துடு.'' என்றான்.

''யெஸ். இது சூப்பர் ஐடியா!'' என்றவள் கணவனின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அவளது உச்சியில் முத்தம் பதித்தவன் அவளை மென்மையாய் அணைத்துக் கொண்டான். அறைக் கதவு தட்டப்படவும் சஞ்சய் எழுந்து சென்று கதவை திறந்து கொண்டே,

''எதுக்குடா டேவி இப்போ பூஜை வேளை கரடியா கதவை தட்டுறே?'' என்று கேட்டவன் திகைத்து போய் நின்றான்.

ஏனெனில் கதவை தட்டியது அவனது மாமனார் பரந்தாமன். அவரைப் பார்த்த சஞ்சய் அசடு வழிந்தான்.

''சாரி மாமா டேவிட் என்று நினைச்சேன்.''



''சாரி மாப்பிள்ளை. நீங்க உள்ள இருக்கீங்கன்னு தெரியாது. சாருவை கிளம்பச் சொல்லலாம்னு தட்டி னேன்.'' என்று பரந்தாமன் விளக்கம் கூறும் போதே சாருமதி வெளியே வந்தாள்.

''மண்டபத்துக்கு கிளம்பலாமாப்பா?'' என்று கேட்டு சாருமதி கிளம்பினாள்.

சஞ்சய் தவிர அனைவரும் இரு கார்களில் கிளம்பி னார்கள். அவன் மட்டும் தனியாக வருவதாகக் கூறினான்.

அவர்கள் மண்டபத்தை வந்து அடைந்தனர். சாருமதிக்கு மிதமான ஒப்பனை செய்தனர். சஞ்சய் ஒரு பஞ்சாபி சிங் போல் வேடமணிந்து கொண்டு மண்டபத்திற்கு வந்து சேர்ந்தான்.

வாயிலில் நின்று கொண்டிருந்த பரந்தாமனிடம் சென்று, ''நமஸ்தேஜி! ஆப் கேசி ஹே?'' என்று கேட்டான்.

பரந்தாமனுக்கு தன் மருமகனை அடையாளம் தெரியவில்லை. அவர் திருதிருவென விழித்துக் கொண்டே,

''நீங்க யாரைப் பார்க்க வந்திருக்கீங்க?'' என்று கேட்டார்.

'அப்பாடா! இன்னைக்கு வேஷத்தை சரியா போட் டிருக்கோம்!' என்று அகமகிழ்ந்து போன சஞ்சய், ''நான் தான் மாமா சஞ்சய். உங்களுக்கு என்னை அடையாளம் தெரியலையா?'' என்று கேட்டான்.

''மாப்பிள்ளை நீங்களா?!'' என்று ஆச்சரியப்பட்ட பரந்தாமன், ''சுத்தமா அடையாளம் தெரியலை மாப் பிள்ளை.'' என்றார்.

''என்னை கூட்டிட்டு போய் சாருகிட்ட உங்க பிசினஸ் ஃப்ரண்டுன்னு அறிமுகப்படுத்துங்க.'' என்றதும்,

பரந்தாமன் மருமகனது விளையாட்டை புரிந்து கொண்டவராய் ஒரு சிரிப்புடனே அவனை தன் மகளிடம் அழைத்துச் சென்றார்.

வழியிலேயே தன் மகளைக் கண்டவர், ''ஒரு இடத் திலே உட்காராமல் இங்க எங்கேம்மா சுத்திக்கிட்டு இருக்க?'' என்று கேட்டார்.

''அவரை இன்னும் காணோம்பா. அவர் வந்ததுக்கு அப்புறமா தான் என்னால நிம்மதியா ஒரு இடத்திலே உட்கார முடியும். போன் பண்ணினா எடுக்க மாட் டேங்கிறார்.''

''நீ டென்ஷன் ஆகாதேடா குட்டிம்மா.'' என்று மகளை சமாதானம் செய்தவர், ''சார் என்னோட பிசினஸ் ஃப்ரண்டு.'' என்று சஞ்சயை கை காட்டிக் கூறினார்.

சஞ்சய் கை குலுக்குவதற்காக தன் கையை அவள் முன் நீட்டினான். அவள் அவனைச் சரியாக நிமிர்ந்து பார்க்காமல் தன் கைகளை குவித்து வணங்கிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

''மாமா, நான் அவ கண்ணிலே படாமல் மறைஞ்சு நின்னு அவ கூட போன் பேசிட்டு வரேன். நீங்க



அவசரப்பட்டு எதுவும் சொல்லக் கூடாது!'' என்று சஞ்சய் தன் மாமனாருக்கு கட்டளை பிறப்பித்து விட்டுச் சென்றான்.

கைப்பேசியில் மனைவியை அழைத்தவன், ''என்ன சாரு? எதுக்கு இத்தனை தடவை போன் போடுறே?'' என்று கேட்டான்.

'''எங்கே இருக்கீங்க? உங்களுக்கு இன்னும் நேரம் ஆகலையா?'' என்று சாருமதி கோபமாக கேட்டாள்.

''அங்க தான்டா வந்துகிட்டு இருக்கேன்.''

''எல்லோரும் வர ஆரம்பிச்சிடுவாங்க. நீங்க முன் னாடி நின்னு அவங்களை வரவேற்க வேணாமா?''

''நீ போனை வை. இன்னும் அரை மணி நேரத் திலே வந்துடுறேன்.''

''என்னது அரை மணி நேரமா?'' என்ற அவளின் கேள்விக்கு பீப் பீப் என்ற ஒலியே பதிலாகக் கிடைத்தது.

''கட் பண்ணிட்டாரா?'' என்று திட்டியவள் சில நொடிகள் ஆழ்ந்து யோசித்தாள்.

பின் நேராக பரந்தாமன் அருகில் நின்று பேசிக் கொண்டிருந்த அந்த சிங் இளைஞனிடம் சென்று, ''சாரி. அப்போ நீங்க ஹேண்ட் ஷேக் பண்ண வந்தீங்க. நான் ஏதோ ஞாபகத்திலே கை குடுக்கலை.'' என்றவள்,

தன் வலக்கையை அவன் முன் நீட்டினாள். சஞ்சய் ஒரு வித திகைப்புடனே அவளிடம் தன் கையை

குடுத்தான். அவளோ அவனது கையை விடாமல் பற்றிக் குலுக்கினாள்.

விட்டால் தன் கையை வைத்துக் கொண்டு அவள் சப்பாத்தி மாவே பிசைந்து விடுவாள் என்று சஞ்சய்க்கு தோன்றியது. அவள் தன்னை கண்டு கொண்டாள் என்பது அவள் தன் கையை விடாது குலுக்குவதில் இருந்தே புரிந்தது.

அதற்குள் மொத்த குடும்ப உறுப்பினர்களும் அந்த இடத்தில் ஆஜராகி விட்டார்கள்.

''எப்படிடா சாரு கண்டுபிடிச்சே?'' என்று அழு குரலில் கேட்ட சஞ்சய் தன் தலைப்பாகை மற்றும் ஒட்டு தாடியை கழட்டினான்.

''ஹேய்! இதென்னடா வேஷம்?'' என்று டேவிட் கிண்டல் பண்ணினான்.

''எப்படி சாரு கண்டுபிடிச்சே? நான் இந்த வாட்டி என் மோதிரம் பிரேஸ்லெட் இப்படி எதுவுமே தெரியக் கூடாதுன்னு கழட்டி வச்சுட்டு தான் வந்தேன். அவ்வளவு ஏன்... என்னோட பெர்ஃப்யூம் கூட யூஸ் பண்ணலை. அப்புறமும் எப்படி கண்டுபிடிச்சே?''

''எங்கப்பா தான்...'' என்று அவள் தொடங்கவும்,

''உங்களை சொல்லக் கூடாதுன்னு சொன்னேனில்ல மாமா!'' என்று சஞ்சய் கேட்க,

''அப்பா என்கிட்ட சொல்லலை. உங்களை அறிமுகப்படுத்த வந்தப்போ உங்களை காட்டி ஏதோ கண்



ஜாடை காட்டினார். அப்போ எனக்குப் புரியலை.'' என்றாள்.

''அப்புறம்...''

''உங்ககிட்ட போனிலே நான் பேசினேன் இல்ல... அப்போ பின்னணியிலே 'இன்னுமா சஞ்சய் வரலை? போன் பண்ணி பார்த்தியா டேவிட்?' என்று மாமா குரல் கேட்டுச்சு. அதை கேட்டதும் எனக்குப் புரிஞ்சு போச்சு. இந்த மண்டபத்துக்குள்ள தான் எங்கேயோ இருக்கீங்கன்னு.''

சஞ்சய் பரிதாபமாக நின்று கொண்டு இருந்தான்.

''ஒண்ணும் ஒண்ணும் ரெண்டுன்னு கால்கு லேட்டர் இல்லாமலே கணக்கு போட என் ஹஸ்பெண்ட் எனக்கு ஏற்கனவே சொல்லிக் குடுத்து இருக்காரா... அதான் ஈஸியா கண்டு பிடிச்சுட்டேன்.''

''அப்பா! மாமா!'' என்று அவன் அவர்களை பார்த்துக் கடுப்புடன் கூறினான்.

''சாரு நீங்க வரலைன்னு ரொம்ப டென்ஷனா இருந்தா மாப்பிள்ளை. அதான்...'' என்று பரந்தாமன் கூறினார்.

''என் மேல பாயாதேடா சஞ்சய். எனக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை. உன்னை யார் என் பக்கத்திலே நின்னு போன் பேசச் சொன்னா?'' என்று ராதாகிருஷ்ணன் கூறினார்.

ஈஸ்வரியோ தன் பங்கிற்கு, ''உங்களுக்கு தான் நடிக்க வரலையில்ல. அப்புறம் எதுக்கு மாப்பிள்ளை வீணா டிரை பண்ணுறீங்க?'' என்று கேட்டதும் அனைவரும் வாய்விட்டு நகைத்தனர்.

''யூ டூ அத்தை?'' என்று சஞ்சய் அழுதுவிடும் குரலில் கேட்டான்.

''இதெல்லாம் போங்காட்டம். நான் ஒத்துக்க மாட்டேன். நான் இப்பவே வெளி நடப்பு செய்யுறேன்.'' என்று சஞ்சய் அறிவித்தான்.

''டேய் சஞ்சய்! வெளிநடப்புன்னா இந்த மண் டபத்தை விட்டு போகணும். மேடையை விட்டு இல்ல.'' என்று ராதாகிருஷ்ணன் கிண்டல் பண்ண,

''என் திட்டத்தை கெடுத்ததோட இல்லாமல் கிண்டலா பண்ணுறீங்க?'' என்று சஞ்சய் அவரை பார்த்து கடுப்புடன் கேட்க,

''வெளியே போகாதே சஞ்சய். பந்தி முடிஞ்சதும் கழுவி விட ஒரு லாரி தண்ணி வாங்கிறதா இருந் தாங்க. நான் தான் எதுக்கு வேஸ்டா காசு குடுத்து தண்ணி வாங்கப் போறீங்க. எங்க சஞ்சய் மதியை பார்த்து விடுற ஜொள்ளே ரெண்டு லாரி வரும்னு சொல்லி இருக்கேன். நீ பாட்டுக்கு வெளியே போயி டாதே!'' என்று டேவிட் கிண்டல் பண்ணினான்.

பெண்கள் அனைவரும் சிரித்தனர். அவர்கள் அனைவரையும் முறைத்துக் கொண்டே சஞ்சய்



அங்கிருந்த அறை ஒன்றிற்குள் புகுந்து கொண்டான். சாருமதியும் அவன் பின்னோடு சென்றாள்.

அவன் அமைதியாக தனது உடையை மாற்றினான். பேன்ட் சட்டையில் இருந்து பட்டு வேஷ்டி சட் டைக்கு மாறினான்.

''சஞ்சய் சார் ரொம்ப வருத்தமா இருக்காரா?'' என்று கேட்ட சாரு, ''நான் தான் முன்னாடியே உங்க கிட்ட என்ன சொன்னேன்... உங்க ப்ளான் சக்சஸ் ஆகணும்னா என்கிட்ட முன்னாடியே சொல்லிடுங் கன்னு சொன்னேனில்ல...'' என்றாள்.

அவன் ஒன்றும் கூறாமல் அமைதியாக இருக்க...

''டேய் குட்டி! அம்மாவால அப்பாவை சமாதானம் செய்ய முடியலை. நீங்க அப்பாவுக்கு ஒரு கிஸ் குடுத்து அப்பாவை சமாதானம் செய்யுங்க!'' என்று கூறிக் கொண்டே தனது வயிற்றை மென்மையாக கிள்ளி அவனது உதட்டுக்கு கொண்டு போனாள். அவன் அவளது விரல்களில் முத்தம் பதித்தான்.

''ஏன்டா குட்டி! அப்பாவை சமாதானம் செய்ய உங்க அம்மா கிஸ் குடுக்க மாட்டாளாமா?'' என்று கேட்டுக் கொண்டே அவளது உதடுகளில் ஒரு முத்தம் பதித்தான்.

அவள் அவனது மார்பில் சாய்ந்து கொண்டாள். அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான்.

''எதுக்கு வீணா வேஷம் போட்டு என்னை ஏமாத்தி ஜெயிக்க நினைக்கிறீங்க? நீங்க தான் என் மனசை

எப்பவோ ஜெயிச்சுட்டீங்களே?''

''உன்னை ஜெயிக்கிறதுக்காக இல்லைடா சாரு. சும்மா ஒரு திரில்லுக்காக பண்ணினேன். ஆனா ஒவ் வொரு முறையும் சொதப்புது.'' என்றவன், ''வெளியே போகலாம் சாரு. அப்புறம் யாராவது வந்து கதவை தட்டுவாங்க.'' என்று கூறியதும் அவர்கள் இருவரும் வெளியே வந்தார்கள்.

தன்னை நோக்கி ஓடி வந்த கெவினை சஞ்சய் தூக்கிக் கொண்டான்.

''அப்பா! பாப்பாக்கு நாம என்ன பேர் வைக்க லாம்?'' என்று கேட்டான்.

''அதுக்கு இன்னும் நாள் இருக்குடா கெவின்.''

''எவ்வளவு நாள்?''

''ம்ம்ம்... சரி நாம இப்பவே பாய் நேம் ஒண்ணும் கேர்ள் நேம் ஒண்ணும் செலக்ட் பண்ணி வைப்போம். நீ உனக்கு தெரிஞ்ச பாய்ஸ் நேம் சொல்லு.''

''பாய் நேமா?'' என்று கேட்ட கெவின் பலமாக யோசிக்க ஆரம்பித்தான்.

''சரிடா உனக்கு தெரிஞ்ச கேர்ள்ஸ் நேம் சொல்லு.''

''பிங்கி, ஸ்வாதி, ரூபி, ப்ளோரா, அனுஷ்கா, மஹிமா, ரேஷ்மா...'' என்று அவன் அடுக்கிக் கொண்டே போக,

''டேய் நிறுத்துடா! பசங்க பேரை சொல்லச் சொன்னா முழிக்கிறே! பொண்ணுங்க பேரை கேட்டதும் அடுக்கிக்கிட்டே போறே! உன் கேர்ள் ஃப்ரண்டு



லிஸ்ட் ரொம்பப் பெருசா இருக்கேடா! நீ எதிர்காலத் திலே நல்லா வருவடா!'' என்று கிண்டல் பண்ணி னான்.

''என்ன நேம் வைக்கலாம்னு சொல்லுங்க.''

''அதை அப்புறமா முடிவு பண்ணலாம்டா.''

''நான் பாட்டிகிட்ட போய் கேட்கிறேன்.'' என்றவன் அவன் கைகளில் இருந்து நழுவி ஓடினான்.

சஞ்சய் ஒரு குறுந்தகடை எடுத்துக் கொண்டு செல்வதை கண்ட சாருமதி, ''பாட்டா போடப் போறீங்க? என்ன பாட்டு?'' என்று கேட்டாள்.

''கேட்டுப் பாரு!'' என்றவன் அந்த குறுந்தகடை ஒலிக்கச் செய்தான்.

**வண்ணக்கிளி சூழ்கொண்டு**
**சின்னக்கிளி வருக!**
**வயிற்றுக்குள் வளர்கின்ற**
**வளர்பிறையே வருக!**
**பூமிக்கு வருகின்ற புது மலரே வருக!**
**பூவுக்குள் வளர்கின்ற புதையலே வருக!**
**உயிருக்கு உயிர் தந்த உத்தமியே வருக!**
**பயிருக்கு பால் வார்க்கும் பௌர்ணமியே வருக!**
**விண்மீனை மனமோட்டி பூவாக்குங்கள்**
**வெற்றி மகள் கூந்தலுக்கு பூச்சூடுங்கள்**
**மின்னல் சரம் எடுத்து வளை செய்யுங்கள்**
**மின்னியனாள் கையிரண்டில் வளை சூடுங்கள்**

சாருமதி மேடையில் அமர்ந்தாள். பெண்கள் அவளுக்கு நலங்கு வைத்து வளையல் அணிவித்தனர். சஞ்சய் அவளை கண் இமைக்காமல் பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தான். அவளும் அவனை அவ்வப்போது நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்துக் கொண்டே இருந்தாள்.

அவர்களது புன்னகை என்றும் வாடாது. அவர்களுக்கு இடையே இருக்கும் புரிதலும் நம்பிக்கையும் அதை வாடவிடாது.

# எங்கிருந்தோ வந்தான்...



பிரேமா